113

ஜப்பான சாக்கிச் கதைகள்

DIGITIZED

YH2
N03
118492

1 (1)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
8 AUG 1903
MADRAS

113
1903 III

# A SHORT HISTORY
## of
## JAPAN.

# ஜப்பான் சரித்திரச்சுருக்கம்.

2(3)

113
3-1903

9524(1)
2254

# A SHORT HISTORY OF JAPAN

With an account of her history
from ancient times
AND
of the circumstances that led to her
present greatness.

BY

**G. SUBRAMANIA IYER,**
*Editor of the "Swadesamitran".*

---

# ஜப்பான் சரித்திரச்சுருக்கம்.

அதின் பூர்வசரித்திரமும்
தற்காலப் பெருமையின் வரலாறும்.

---

"சுதேசமித்திரன்" பத்திராதிபர்.
ஜி. சுப்பிரமணிய ஐயர்
இயற்றியது.

---

THE SWADESAMITRAN PRESS, MADRAS.
சென்னை
"சுதேசமித்திரன்" அச்சுக்கூடம்.
1903.

விலை ரூபாய் ஒன்று. தபாற் கூலி வேறு

(Copyright Registered.)

118992

V42
N03

3-

# PREFACE.

# நூன் முகம்.

இந்த நூல் முகவுரையில் சற்று விஸ்தாரமாக எடுத்தெழுதியிருக்கும் எண்ணங்களும் உணர்ச்சிகளும் நம் தேசத்துத் தற்கால நிலைமையையும் உலகத்து மற்றத் தேசங்களது நிலைமையையும் ஒப்பிட்டுக் கருதுவோர் மனதில் ஜனிக்கின்றன. தமிழுலகத்தாரும் இவ்விதம் ஒப்பிட்டுக் கருதும்படியாகத் தங்கள் ஜனனபூமியாகிய இந்தியாவின் சரித்திரத்தையும் மற்றத் தேசங்களின் சரித்திரங்களையும் படிக்கத் தருணங்களுண்டாக வேண்டுமென்ற விருப்பத்தைக் கொண்டே ஜப்பான் தேசத்தின் சரித்திரத்தை யொருவாறு சுருக்கமாக வரையத் துணிந்தோம். இந்தியாவைப்போல் ஜப்பானும் ஆசியா கண்டத்துக் கீழ்நாடாயிருப்பதும், இந்தியாவைப் போலவே அதுவும் சமீபகாலம் வரையில் அறியாமையாகிய இருள் மூட்டம் படரப்பெற்றிருந்ததும், அது அன்னியர்கள் மேலதிகாரத்துக்குள் அகப்பட்டுக் கொள்ளும்போ லிருந்த சமயத்தில், தலைவர்களின் தேசாபிமானத்தைப் பாராட்டி, தீர்க்க புத்தியுடனும் தைரியத்துடனும் தேசத்து நன்மைக் கவசியமான புதுமைகளை யங்கீகரித்துப் பயப்படாமல் முன் நின்று முன்னேறு சீர்பெற்றதாகையால், அத்தேசத்தின் சரித்திரத்தை முதலில் எழுதினோம். இந்தச் சரித்திரத்தைத் தமிழோர் சாரமறிந்து படிப்பதோடு,

இவ்வித நூல்கள் பிறவும் படிப்பதில் அவாக்கொண்டிருப்பதாகத் தெரியவந்தால், இந்தியாவின் சரித்திரத்தையும், இங்கிலண்ட், பிரான்ச, ஜர்மனி, இடலி, ருஷியா, அமெரிக்கா—இத்தேசங்களின் சரித்திரங்களையும் நம்மவர் புத்திக்குப் புலப்படும்படி சுருக்கமாக எழுதிப் பிரசுரிக்கவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறோம்.

15-வ ஜுலை-மீ 1903, சென்னை. } ஜி. சுப்பிரமணிய அய்யர்.

A (7)

CONTENTS.

# பொருளடக்கம்.

பக்கம்.

முகவுரை ... 1—38

I. அதிகாரம்:—

ஜப்பான் நிலை—மங்கோலிய ஜாதியினர் [illegible] ஜப்பான் [illegible]—பரங்கியர் [illegible] ஜப்பானி ஜப்பான் [illegible]—[illegible] செய்துகொண்டது—ஐரோப்பிய [illegible]—[illegible]ர்களின் போட்டி—ஜப்பான் சரித்திரத்தை [illegible]—ஜப்பானின் [illegible] ஜனத்தொகை ஜீவனோபாயங்கள் முதலியன. ... 1—7

II. அதிகாரம்:—

பௌத்தமதம் இந்தியாவிற் பிறந்தது—பௌத்த மதக் கொள்கைகள்—அதன் பரப்பும், தெய்வமும் மறையும்—பௌத்தமதம் ஆர்ய தேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டது—ஜப்பானுக்கு அது புகுந்து வளர்ந்த வரலாறு. ... 8—14

III. அதிகாரம்:—

சித்தரசர்கள் [illegible], ஜப்பானியரும், இந்தியர்களும்,—ஜப்பான் அரசாட்சி [illegible]—[illegible] மதப் பிரவேசமும் [illegible]—[illegible]யாவின் மேற் படையெடுத்ததும் [illegible] முயற்சியும், [illegible] ராஜாங்கமுறை—சமுராய் வகுப்பாரும் அவர் குணவிசேஷங்களும். ... 15—30

IV. அதிகாரம்:—

[illegible] இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் [illegible]—ஜப்பானுக்கு அன்னியர் சம்பந்தமான [illegible]—[illegible] பக்தம் பெருகியது—[illegible] அவர் செய்த சாஸ்திரங்களும்—ஜப்பானின் பூர்வீக உன்னதம். ... 31—42

**V. அதிகாரம்:—**

அன்னிய நாட்டார்கள் தேசத்தின் வரவொட்டாமல் தடுத்த ஜப்பானின் இராஜரீகமுறை—[illegible]—பல்லியர், ஈஜிப்டு, சீனா, இந்தியா தேசங்களில் விளைந்தது—மேற்சொன்ன முறையை நீக்கி ஜப்பானில் புக அமெரிக்கர் முயன்றது—அப்போது ஜப்பானின் நிலையும் யோசனையும்—ருஷியக் கப்பல்களும், ஆங்கிலேயக் கப்பல்களும் ஜப்பானின் வியாபாரத்தைக் கோரி வந்தது—அமெரிக்கப்படைகளும் வந்த ஜப்பானின் பீதி—முதலில் அமெரிக்கரோடும், பிறகு பிரிடிஷார், ருஷியர், டச்சுக்காரருடனும் உடன்படிக்கையாகி, ஜப்பான் திறக்கப்பட்டது—இதனாலுண்டான விவாதம்—ஹாரிஸ் என்ற அமெரிக்கன் கான்ஸல் ஜப்பானில் வந்து ஏறியது—அவர் கண்ட விசேஷங்கள்—புது உடன்படிக்கையும், அமெரிக்கரும் மற்ற அன்னிய தேசத்தார்களும் ஜப்பானில் நிலை பெறலும்—அன்னியச் சரக்குகளுக்கு வரியும் அதனால் கஷ்டமும்—அன்னியர்களுக்கும் ஜப்பானியருக்கும் சேரும் வியாபாரமுக்குகளுக்கு ஏற்பாடு—பிறகு இதைப்பற்றிய விவாதமும் மனஸ்தாபமும். 43—56

**VI அதிகாரம்:—**

வெள்ளையர்களுக்குத் தனி நியாய ஏற்பாடுகளும், அவற்றின் அக்கிரமும்—அன்னியர் புகுந்து நிலை பெறலைக் கண்டு ஜப்பானியர் கலகம் செய்ததும், அதன் விளைவுகளும்—ஜப்பானியத் தூதர்கள் அன்னிய தேசங்களுக்குப் போனதும், அதன் பலன்களும்—அன்னியவாசிகளைத் தொலைசெய்ததும், அதன் பயன்களும்—அன்னியர்களுக்கும் ஜப்பானியருக்கும் விரோதமும் சண்டைகளும், கடைசியில் உடன்படிக்கையும்—இவ்வுடன்படிக்கையின் அபிப்ராயமும், "பலமே நியாயம்" என்னும் அன்னியர் கோட்பாடும். ... 57—72

**VII. அதிகாரம்:—**

ஷோகனுக்கும் சக்கிரவர்த்திக்கும் மனஸ்தாபம் பெருகியது—சக்கிரவர்த்தி கட்டளை அன்னியரைத் துரத்தும்படி செய்த வீண் முயற்சிகள்—சக்கிரவர்த்தியும் மந்திரிகளும் அன்னியரோடு உடன்படிக்கையை அங்கீகரித்தது—கடைசி ஷோகன் நியமிக்கப்பட்டதும் சக்கிரவர்த்தி பிறந்ததும், சக்கிரவர்த்தி அதிகாரத்தைப் பலப்படுத்தத் தேசாபிமானிகள் உத்தேசித்ததும்—இதற்கிணங்கி ஷோகன் விலகியது—மகாணத் தலைவர்கள் இராஜ்யபாரம் தாங்க முன்வந்து நடத்தியது—விலகிய ஷோகனும் கட்சிக்காரரும் கலகஞ்செய்தது—ஷோகன் சமாதானப்படுத்தப்பட்டுக் கியோடோவுக்கழைக்கப்பட்டது.—ஷோகன் படை யோடோவை தோற்கடித்தது—அன்னிய தேசவாசிகள் எதிர்த்துத் தோற்கடித்தது.—பிரிடிஷ் ன் சக்கிரவர்த்தியை நேரில் பார்த்தது.—பிரிடிஷ் ஸ்தானிகர் பரிவாரம் எதிர்க்கப்பட்டது; அதனால் ஏற்பட்டதும்—ஷோகன் போர்க் கப்பல்கள் கலகஞ்செய்ய எதிர்க்க, அடிக்கப்பட்டது. ... 73—88

**VIII. அதிகாரம்:—**

ஏகாதிபத்தியத்தைக் காலத்துக்கேற்கச் சீர்ப்படுத்த முயன்றது—இந்தியாவிலும் மற்றக் கீழ்த்திசைத் தேசங்களிலும் அரசர்கள் தன்மை—ஏகாதிபத்திய ஸ்தானம் கியோடோவிலிருந்து யடோவுக்கு மாற்றப்பட்டது—சக்கிரவர்த்தியின் திருமணம்—கிரஸ்து மதத்துக்கு விரோதமாய் விளம்பரம் செய்யப்பட்டது—ஐந்து நிபந்தனைகளடங்கிய இராஜாங்க சாசனமும் ஆலோசனைச் சபை கூட்டப்பட்டதும்—மகாணத் தலைவர்களின் புகழத்தக்க நடத்தை—அவர்களுக்குத் தக்க உத்தியோகங்கள்—அவர்களுக்குப் பென்ஷன்—ஸ்தல சபைகள் சேர்த்து ஜனப்பிரதிநிதிகளைப் பயிற்றல்—இராஜாங்க அமைப்பின் ஏழு அங்கங்கள்—மோரியென்னும் தேசாபிமானி கொலையுண்டது. ... 89—104

**IX. அதிகாரம்:—**

கீழ்த்திசையாருக்கும் மேற்றிசையாருக்கும் இராஜரீகத்தில வித்தியாசம்—ஜப்பான் மேற்றிசை இராஜரீகத்தை யனுசரித்து முற்பட்டதற்குக் காரணங்கள்—இந்தியா ஜப்பான்போல் முற்படாததற்குக் காரணங்கள்... 105—114

**X. அதிகாரம்:—**

ஜப்பானின் சக்கிரவர்த்தியின் ஸ்தானமும், அதன் அதிகாரம், மகிமை, பெருமையும்—ஜப்பானியருக்குச் சக்கிரவர்த்தியாற் பக்தி, விசுவாசம், அபிமானமும். 115—120

**XI.** அதிகாரம்:—

ஷோகூன் அந்தஸ்து, அதன் தன்மை, உற்பத்தி வரலாறும், முடிவும் — ஜப்பானியரின் தேசாபிமானம். ... 12—136

**XII.** அதிகாரம்:—

ஜப்பானியத் தலைவர்கள்—மார்க்கிஸ் ஹிரோ பூமி இடோ, அவருக்குள்ள மதிப்பும் பெருமையும், அவர் சரித்திரமும் ஜப்பானுக்குச் செய்த நன்மைகளும் ...137—148

**XIII.** அதிகாரம்:—

ஜப்பானில் இன்னொரு தேசாபிமானி—பாரன் ஷிபுஸாவா அவர் நோக்கங்களும் உழைப்பும், அன்னியதேசம் போனதும்—வேறு சிலர். ... 149—157

**XIV.** அதிகாரம்:—

ஜப்பானின் வியாபாரம், அதன் பெருக்கமும் தற்கால நிலையும்—இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் வித்தியாசம்—செயற்கைச் சரக்குகளை விருத்திசெய்ய முயற்சியும், சாதக பாதகங்களும். .... 158—163

**XV.** அதிகாரம்:—

காலத்துக் கிணங்கக் கல்வி அபிவிருத்தி செய்ய ஜப்பானியரின் முயற்சிகள்—ராஜாங்கச் செலவில் ஜப்பானியரை வெளித்தேசங்களுக்கனுப்பியதும், புது வித்தியாசாலைகள் ஸ்தாபித்ததும்—அன்னியருதவியை நாளடைவிற் குறைத்துச் சுதேசிகளை முற்படுத்தினது, இவ்விஷயத்தில் இந்தியாவில் மாறுபாடு. .. 164—172

**XVI.** அதிகாரம்:—

கீழ்த்திசையில் ஜப்பானின் உன்னதம்—மேனாட்டாருக்குத் தடையாயும் கீழ்நாட்டாருக்குக் காப்பாயும் ஜப்பான் நிற்பதும், அதன் நியாயமும் பொருத்தமும்—இப்படி நிற்பதில் ஜப்பானுக்குள்ள இயற்கை வசதிகளும் சாதகங்களும். ... 173—184

# INTRODUCTION.

## முகவுரை.

### அன்னியர்களின் சகவாசம் அவசியம்.

எப்போதுமே ஹிந்துக்கள் அன்னியதேச சம்பந்தமற்றிருக்கவில்லை. ஆஷியாவின் மேற்குத் திக்கிலும், கிழக்குத் திக்கிலும் உள்ள தேசங்களில் ஹிந்துக்களின் சம்பந்தம் உண்டாயிருந்ததைக் காட்டும்படியான அடையாளங்கள் காணப்படுகின்றன. அன்னியர் இந்தியாவுக்கு வருவதும், இந்தியர் அன்னியதேசம் செல்லுவதும், சாதாரணமாயிருந்தன. இந்தியாவில் பௌத்த மதம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில், அம்மதாசாரியர்கள் எத்திக்கிலும் சென்று தங்கள் மதத்தைப் போதித்து வந்ததாகத் தெரிகின்றது. மேற்கே ஈஜிப்ட் தேசம் வரையில் அவர்கள் போனதாகச் சரித்திர பூர்வமாயறிகிறோம். பிறகு கிறிஸ்து மதமும் மகமதிய மதமும் பிரபலமாகி, மேற்குத் தேசங்களில் பௌத்த மதம் நிலைக்காமற் போயிற்று. மற்றத் தேசங்களிலோ இந்த அன்னிய மதங்கள் பிரபலம் பெறாமல், தெற்கே ஸிலோனென்ன, வடக்கே டிபெட்டென்ன, கிழக்கே பர்மா, இந்தோ-சீனா, சீனா, ஜப்பான் என்ன—இந்தப்புறத

தேசங்களில் பௌத்த மதாசாரியர்கள் புகுந்து இந்தியாவிற் பிறந்த பௌத்த மதத்தை ஸ்தாபித்தார்கள். அத்தேசங்களி லிருந்து மதாபிமானிகள் இந்தியாவுக்கு வந்து, ஹிந்து பண்டிதர்களிடம் அறிவைத் தேட, நம் பண்டிதர்களும், இப்போதைப்போலப் பிறநாட்டாரிடத்தில் அசூசையும் அவமதிக்கையும் காட்டாமல், தங்களைத் தேடிவந்தவர்களின் கோரிக்கையை மனப்பூர்வமாக நிறைவேற்றிக் கொடுத்தார்கள். ஸிலோன் தேசத்துக்கு அசோக சக்கிரவர்த்தியின் சகோதரியேபோய், அங்கு பௌத்தமதம் ஸ்தாபித்தவர்களில் ஒருவரா யிருந்தாரென்றால், அக்காலத்துக்கும் இக்காலத்துக்கும் ஹிந்துக்களின் குணகுணங்களின் வித்தியாசம் வெளிப்படுகிறதல்லவா?

மேலும், கீழ் நாடாகிய கம்போதியாவில் வெகு நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஹிந்து அரசர்கள் அரசாட்சி செய்து வந்ததைக் காட்டும் சின்னங்களாக, அங்கே வெகு உன்னதமான அரண்மனைகளும், தேவாலயங்களும், ஹிந்து தேவதைகளின் பிரதிமைகளும் இப்போதும் காணப்படுகிறபடியால், அவைகளைப் பார்க்கும் ஐரோப்பிய யாத்திரிகர்கள் மூக்கில் கைவைத்துத் திகைக்கிறார்களாம். அவ்வாறே ஜாவா என்ற பஸிபிக் கடல் தீவிலும் ஹிந்துக்களின் நாகரிகம் ஒரு காலத்தில் மேம்பாடுற்றிருந்ததற்கு அறிகுறிகளான அனேக பாழான கட்டிடங்களும் கோவில்களும் காணப்படுகின்றன. இவ்வாறு ஒரு காலத்தில் ஹிந்



துக்கள் ஊக்கப் பிரியர்களாய்க் கடல் கடந்து தூர தேசம் போய் ராஜாங்க ஸ்தாபனம் செய்தும், பிற்காலத்தில் தாய்த் தேசமாகிய இந்தியாவில் நேரிட்ட அனேக கேடுகளால், ஜனங்கள் ஊக்கமும் பேராண்மைகளு மிழந்து, தூரதேசம் சென்றிருந்த தம்மினத்தாரை யாதரிக்காமல் கைவிட்டுவிடவே, அங்கு மகமதியர்கள் ஆக்கிரமித்து ஹிந்து நாகரிகத்தை யிருந்தவிடந் தெரியாம லழித்துவிட்டார்கள்.

இதுவுமன்றி, வியாபாரசம்பந்தமாய்ப் பூர்வகாலத்தில் ஹிந்துக்கள் சாதாரணமா யன்னியதேசங்கள் போய் வந்ததாகச் சரித்திர பூர்வமாக அறிகிறோம். இந்தியச் சரக்குகள் ஐரோப்பிய நாடுகள் சென்றதாகத் தெரிகின்றது. மத்திய தரைக் கடலைச் சுற்றியிருந்த இடலி நாட்டுக் குடியரசுகள் இந்தியச் சரக்குகளையே வாங்கி விசேஷமாக வியாபாரம் செய்து வெகு திரவியம் சம்பாதித்ததாகச் சொல்லப்படுகின்றது. பதினைந்தாம் நூற்றாண்டில் தென்னாபிரிகாவின் முனையைச் சுற்றிக் கடல் மார்க்கமாய் இந்தியாவுக்கு வரலாமென்று போர்த்துகியர் கண்டுபிடித்த காலம் வரையில், இந்தக் குடியரசுகள் இந்தியச் சரக்கு வியாபாரத்தால் வெகு செழிப்பும் கீர்த்தியுமாய் வாழ்ந்தன. அவ்வாறே கீழ் நாடுகளுடனும் இந்தியாவானது இன்னும் விசேஷமாக வியாபாரம் செய்ததாகத் தெரிகின்றது. கப்பல்களிற் சரக்குகளையேற்றி அவைகளுடன் ஹிந்து வியாபாரிகள் ஜாதி வித்தியாச மில்லாமற் கூடச்

சென்று, சென்ற இடங்களில் கிடைக்கும் சரக்குகளை வாங்கித் திரும்பி வந்ததாகக் காண்கின்றது. சீன தேசத்துக்கு இவ்வாறு வியாபார நோக்கத்துடன் ஒரு பிராமணன் சென்றதாகவும், மத்தியில் புசல் வந்து கப்பல் உடைந்து போனதாகவும், அப்போது அந்தப் பிராமணன் சில சீனர்களின் உதவியால் தப்பிப் பிழைத்து அச்சீனக் கப்பலில் இந்தியாவுக்கு வந்ததாகவும், எங்கோ நாம் கதை வாசித்ததாக ஞாபக மிருக்கின்றது.

இவ்வாறு பல உத்தேசங்களைக் கொண்டு ஆதி காலத்தில் ஹிந்துக்கள் அன்னிய நாட்டாருடன் சகவாசம் வைத்துக் கொண்டிருந்ததால், அவர்களுக்கு நல்லறிவும் ஊக்கமும் பெருகி, மனக்குறுக்க மான வீண் மாற்சரியங்களும் சிறு சிந்தைகளு மில்லாமல் வாழ்ந்தனர்.

இந்தியர்களாகிய நாம் வெகு காலத்துக்கு முன்னாலேயே அன்னிய தேசத்தாரை யறிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தை விட்டும், அப்படி யறிந்து கொள்ள முகாந்திரங்கள் ஏற்படாமல் செய்து கொண்டும், கெட்டோம். அப்படிக்கின்றி மேலே நாம் சொன்னபடி ஆதிகாலத்து ஹிந்துக்களுடைய வழிகளை யனுசரித்து அன்னியநாட்டாருடைய சகவாசத்தை விருத்தி செய்துகொண்டே வந்திருப்போமானால், இப்போது நாமும் நம் முன்னோர்களைப்போல



வாழத் தடையில்லை. நமது தேசத்துக்குக் கெட்ட காலம் வந்தபடியால்தான் கொஞ்சம் கொஞ்சமாய் அன்னிய நாடு செல்வதையும், அன்னியர்களிடத்தில் கபடமில்லாமல் கூடிப்பழகுவதையும் விடத் தலைப்பட்டோம். கடலைத் தாண்டி அன்னிய தேசம் போகிற ஹிந்துவைச் சாதிவிலக்குப் படுத்தப்படுமென்று நம் முன்னோர் விதி விதித்தார்கள். இவ்விதமாக வரவர ஹிந்துக்கள் தங்கள் தேசத்தைத் தவிர, வேறு தேச மிருக்கின்றதென்பதையே யறியாதவர்களாகிவிட்டார்கள். தங்கள் மனதில் புண்ணிய பூமியென்று கருதப்பட்ட இந்தப் பரதக்கண்டத்திற்கு அப்பாலிருக்கும் ஜனங்களை மிலேச்சரென்றும் மூடர்களென்றும் நினைக்கத் தலைப்பட்டார்கள். தாங்களே சகலமும் அறிந்தவர்களென்றும் தங்களுக்குத் தெரிந்ததைப் பிறருக்குச் சொல்லக்கூடாதென்றும், மூட அபிப்பிராயங்களைக் கொண்டார்கள்; கொண்டு தங்கள் தேசத்தார்களையே, அவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்ட ஜாதியார்களாயிருந்தால், இகழப் புகுந்தார்கள்.

இந்த ஸ்திதியில்தான் கஜினி மகம்மது என்ற மகமதியன் இந்தியாவின்மீது 12 முறை படையெடுத்து வந்ததாகச் சொல்லப்படுகின்றது. அவனுடன் இந்தியாவுக்கு வந்த ஆல்புருனி (Alburini) என்ற மகமதிய வித்துவான் ஹிந்து சாஸ்திரங்களைப் பல வருஷகாலம் கற்று அந்தச் சாஸ்திரங்களிலுள்ள

சர்த்தைக் கொகித்தவராயினும், பிராமணருடைய
மனக்குறுக்கமும், கர்வமும், அறியாமையும், அவர்கள்
அன்னியர் பழக்கத்தை விட்டுவிட்ட காரணத்தினாலே
யே உண்டாயிற்றென்று, பாதி துக்கத்துடனும் பாதி
இகழ்ச்சியுடனும் கூறியிருக்கிறார்.

இக்காலத்தில் இந்தியர்களுக்கும் மற்ற உல
கத்து ஜனங்களுக்கும் இந்த விஷயத்திலேயே விசேஷ
வித்தியாச மிருக்கின்றதல்லவா? எந்தத்தேசத்தார்
நம்மைப்போல அன்னிய தேசம் செல்லுதல் கடவுள்
சம்மத மற்ற காரியமென்று மடத்தனமாக நினைத்
திருக்கிறார்கள்? எத்திக்கிலிருந்தும் மனிதர்கள் இந்
தியாவுக்கு வந்து வியாபாரம் செய்தோ வேறெந்த
விதமோ சம்பாதித்துச் செல்ல, நாம்மட்டும் ஏமாந்த
மத்தர்களாய் அன்னிய தேசங்களை வெறுத்து அற்ப
ஜீவனம் செய்வோராயினோம். இப்படி எவ்வளவு நாள்
அற்ப ஜீவனம் செய்யக் கழியும்? சர்க்கார் உத்தி
யோகங்களில் அமர்ந்தோ, வேறுவிதச் சிறு தொழில்
கள் செய்தோ மாதம் ரூபா 15 அல்லது 20 சம்பா
திப்பதை நம்மவர்கள் தாங்கள் ஏதோ மிகப் பெரிய
சம்பாத்தியம் செய்வதாகக் கருதுகிறார்களே. இப்பதி
னைந்து ரூபாயை ஆங்கில வியாபாரிகள் ஒரு நொடிப்
பொழுதில் சம்பாதித்துக் குப்பாயப் பையிற் போட்
டுக்கொண்டு போய்விடுகிறார்கள். அவர்களுக்கும்
நம்மவர்களுக்கு முள்ள உண்மையான வித்தியாச
மென்ன? அவர்களிடம் ஊக்கமும், தீர்மானமும்



மிருந்தியா யிருக்கின்றன. நம்மவர்களிடம் அவை
யிரண்டும் பூச்சியமே. எக்காரியம் செய்யப்புகுந்தா
லும் அதைரியம் மேற்கொள்ளுகின்றது. செய்யப்
புகுந்த காரியம் என்னவாய் முடிகின்றதோ என்ற
பெருங்கவலையே மேலிட, நினைத்தபடி செய்தே தீர
வேண்டுமென்ற உறுதிப்பாடு கிடையாது.

எத்தேசத்தாரானாலும் எல்லோருக்குமே அன்
னிய தேச யாத்திரை செய்தல் சாத்தியப்படாது.
அப்படி சாத்தியப் படாதவர்கள், படிப்பாளிகளா
யிருந்தால், சரித்திர புஸ்தகங்கள் மூலமாக அனேக
விஷயங்களைத் தெரிந்துகொண்டு, தங்கள் புத்திப்
பயிற்சிக்கு உதவி பெறலாமன்றோ? இந்தியாவில்
முதல் கவர்னர் ஜனரலாயிருந்த வாரென் ஹேஸ்டிங்ஸ்
(Warren Hastings) பொருளாசையால் தேச மன்
னர்களுக்கும் ஜனங்களுக்கும் வெகு கொடுமைகள்
செய்தானென்றும், ஆகையால் பிரிடிஷ் ராஜாங்கத்
தார் அவனுக்குக் கொடுத்த அதிகாரத்தை யவன்
தகாத விதமாய் உபயோகித்தானென்றும், அவன்
மீது பிரிடிஷ் பார்லிமெண்டில் குற்றங்கூறி, அவன்
செய்ததை யெல்லாம் அணுஅணுவா யெடுத்து உத
கரித்து, கேட்டோர் "இப்போர்ப்பட்ட துஷ்டனு
முண்டோ!" என்று திகைக்கும்படியாய், தாமெப்
போதும் கண்டிராத இந்தியர்கள்மீது மகா தயாள
ஒக்காரயும், இந்தியாவில் ஆயுளெல்லாம் வசித்தவ

ருக்குந் தெரியாத நுட்பமான விஷயங்களைக்கூட அறிந்தவராகவும் காட்டி, வாதம் செய்து என்று மழியாப் புகழ்பெற்ற எட்மண்ட் பர்க் (Edmund Burke) இந்தியாவுக்கு வராமலே நூல்களை வாசித் தன்றோ அவ்விதத் திறமையும் ஒற்றுணர்ச்சியும் பெரும் புத்தியும் அன்னியராகிய நம்மிடத்தில் பாராட்டும் குணத்தின ராயினர்? அவருக்கு வெகுகாலத்துக்குப் பின்னால் ஜான் ப்ரைட், ஹென்றி பாஸெட், போன்ற இந்தியாவுக்கு ஆப்த நேசர்களான இருவரும் இந்தியாவைப் பார்த்தவர்களேயல்லர். பார்த்தவர்களே யல்லராயினும், இந்தியாவைப்பற்றி இந்தியர்களுக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவுக்கு மேலாகவே யவர்கள் அறிந்து வைத்துக்கொண் டிருந்தார்கள்.

அதுபோல இந்தியர்களாகிய நாம் இப்பொழுது என் செய்யவேண்டும்? காலதேச வர்த்தமானங்களுக் குத் தக்கபடி தங்களைச் சீர்படுத்திக்கொண்டு, தினே தினே விருத்தியடைந்துகொண்டுபோகும் ஜப்பானியர்கள் போன்ற சாதியார்களது சகவாசத்தை யவர்களுடைய தேசத்துக்கு யாத்திரைபோய்ச் செய்யா விட்டாலும் அவர்களுடைய சரித்திர புஸ்தகங்களின் மூலமாயாவது செய்து, அவர்களுடைய வழிகளைப் பின்பற்றி நம்முடைய தேசத்தை முன்னுக்குக் கொண்டுவரும் வழிகளைத் தேட வேண்டும்.

# II.

## இந்தியாவும் மற்றத் தேசங்களும்.

சீன ஏகாதிபத்தியம் ஒன்றில் மட்டும் 40-கோடி ஜனங்கள் வசிப்பதாகச் சொல்லப்படுகின்றது. அதைத் தவிர மற்றெந்தத் தேசமும் இந்தியாவைப்போல விஸ்தீரணமும் ஜனத்தொகையும் உள்ளதா யிருக்க வில்லை. இந்தியாவின் விஸ்தீரணம் 15-லட்சம் சதுர மைல்; ஜனத்தொகையோ 30 கோடி. இவ்வளவு பெரிய தேசத்தில் அவசியமான சிலவுபாயங்களும் ஜனங்களது மனப்பயிற்சி, ஒழுக்கப் பயிற்சி, சுக சௌக்கியாதிகள்—இவைகளும் தக்கபடி அமைக்கப் பட்டிருக்கவேண்டுமல்லவா? அப்படி அமைத்து வைப்பது விசேஷமாய் ஆளுவோரின் கடமையாகும். தேசத்தில் கடவுள் திருவடியினாலேயே அமைந்திருக் கும் மலைகள், ஆறுகள், பூசாரங்கள், சீதோஷ்ணங் கள், இவைகளைக் கவனித்து, ஜனங்களுக்கு ஆகாராதி களை எப்படிப் போதுமான அளவு விவசாயம் முதலான உபாயங்களால் கிடைக்கக்கூடியனவோ அப்படி வேண்டிய சகாயஞ் செய்து, விவசாயத் தால் உண்டாகும் பொருள்களைக் கைத்தொழிற் பிரயோகத்தாற் சுகத்துக் கிசைந்த செயற்கைப் பொருள்களாக மாற்றுவதிலும் வேண்டியபடி ஒத் தாசை செய்து, அநாதிகாலமாக ஜனங்களனுப வித்து வரும் உரிமைகளைப் பலாட்டியரான அன்னி யர்கள் பறிக்காமற் காப்பாற்றி, படிப் படியாய் ஜனங் களின் நிலைமையை யுயர்த்துவது ராஜாங்கத்தாரின்

கடமை. இந்தக் கடமையை வகித்த ராஜாங்கத்தாருடன் ஜனங்களில் தலைவராயிருப் பேர்களும் ஒத்துழைக்கவேண்டும். எப்படி ஒரே நாட்டில் ஒருவர் பேரில் மற்றொருவர் போட்டி போட்டு அநியாயமாயும் கபடமாயும் ஒருவரை யொருவர் கெடுத்துவிடலாமோ, அப்படியே தந்திரமும் பலமும் படைத்த ஒரு ஜாதியார் அக்குணங்களில்லாத மற்றொரு ஜாதியாரைக் கெடுத்துவிடலாம். இக்காலத்தில் ரயில்பாதைகள், புகைக் கப்பல்கள், மின்சார விசையால் தந்தியடித்தல், முதலான உபாயங்களால் காலம் தூரம் என்கிற வித்தியாசங்கள் மறைந்துபோ யிருக்கின்றன. சீனாவுக்கும் இங்கிலண்டுக்கும் எத்தனை ஆயிரம் மைல் தூரமோ இருக்கும். இருந்தா லென்ன? ஒரு மாசத்தில் இங்கிலண்டிலிருந்து போர்க்கப்பல்களும் சரக்குக் கப்பல்களும் வந்துவிடுகின்றன. தந்தி மூலமாய்ச் சீனாவுக்கும் இங்கிலண்டுக்கும் அரைமணி நேரத்தில் எந்தச் சமாசாரமும் அனுப்பப்படக்கூடும். இப்படித் தற்காலத்தில் ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாரைச் சூழ்ந்து நெருக்கி லாபங்கள் பெறுவது எளிதாயிருப்பதா லல்லவோ, சீனா, இந்தியா, முதலான அநாதியான தேசங்களை யன்னியர் தாங்கள் நன்மை யடையும் பொருட்டுக் கீழ்ப்படுத்தலாயிற்று? ஆகையால் எத்தேசமானாலும் அதை யன்னியர்கள் பலவந்தமாய் மேல்விழுந்து நஷ்டப்



படுத்தாமல் ராஜாங்கத்தார் காப்பாற்றவேண்டும். இவ்வாறு கோடானுகோடியான ஜனங்களின் காலங் கடந்த உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு எவ்வளவு புத்தி, ஊக்கம், தோள்வலி, மனவலி, தைரியம், ஒற்றுமை, தன்னஷ்டம் ஆகிய பெருங்குணங்கள் தேவை! ஆளுவோருக்கு மாத்திரமல்ல, பொது ஜனங்களுக்கும் இக்குணங்கள் அவசியம். இவைகள் இருந்தால் மட்டும், அன்னியருக் கடிமைக ளாகாமல் சுதந்தரம் சுவாதீனம் இவைகள் நிலைக்கப்பெறுவார்கள்.

இப்பேர்ப்பட்ட குணங்கள் மேல் நாட்டாரிட மிருப்பதனாலேயே யவர்கள் உயர்ந்தும், அவைக ளில்லாமலேயே கீழ்நாட்டாராகிய நாமுட்பட்ட ஆஷியா ஜாதியார்கள் தாழ்ந்தும், இருக்கிறார்கள். உயர்ந்த ஸ்திதியி லிருக்கும் மேல் நாட்டாருள்ளும், மேற்குறித்த அருங்குணங்கள் சிலரிடத்தில் குறைந்து இருக்கின்றன. வெகுகாலம் வரையில் பிரிடிஷ் நாட்டார் இத்தகைய பெருங்குணங்களாலேயே மற்றெல்லா நாட்டார்களையும் விட ராஜதந்திரப் பிரயோகத்தில் மேம்பாடுற்றிருந்ததுமன்றி, உலகத்தாருக்கு வேண்டிய செயற்கைப் பொருள்களைக் கைத்தொழில் ஊக்கத்தால் தங்கள் நாட்டிற் செய்து உலகத்தாருடன் வியாபாரம் நடத்திப் பொருட்செல்வத்தில் ஒப்புயர் வற்றவரா யிருந்தனர். ஆனால் மற்றத் தேசத்தார் கண்ணை மூடிக்கொண்டு சமாதியில் ஆழ்ந்தவர்கள் போலச் சும்மா இருக்கவில்லை. அவர்கள் தாங்கள் பிற்பட்டதற்குக்

காரணங்களை வெகு கவலையுடன் ஆராய்ந்தறிந்து, அவசியமான முயற்சிகள் செய்துவர, படிப்படியாக பிரிடிஷ் நாட்டாரை யெட்டிப் பிடிக்க வல்லவர்களாயினர். சென்ற பத்து வருஷத்துக்குள், ஜர்மனியும் அமெரிக்காவும் இவ்வாறு எட்டிப் பிடித்து, பிரிடிஷாரை மீறிச்செல்ல ஆரம்பித்துவிட்டன. பிரிடிஷாரை விட அதிகமாக யந்திரோபாயப் பிரயோகங்களைக் கற்று வியாபாரச் சரக்குகளை நல்லவைகளாயும் மலிவாய் விற்கக்கூடியனவாயும் செய்து, பிரிடிஷார் வியாபாரம் செய்துகொண்டிருந்த இடங்களிலவர்களுக்குப் போட்டியாகத் தோன்றி அவர்கள் வியாபாரத்தைத் தாங்கள் கைப்பற்றிக்கொள்ள லாயினர். இந்தியா பிரிடிஷ் ச[illegible]பு பெற்றிருந்தும், இங்கும் ஜர்மானியரும் அமெரிக்கரும் பிரிடிஷாரை மிஞ்சி வியாபாரம் நடத்திவருகிறார்கள்.

இப்படி பிரிடிஷாருக்கு இளப்பமும் நஷ்டமும் நேரிடத்தொடங்கி யிருப்பதை அவர்கள் பார்த்து, நம்மவர்களைப்போல மூக்கைப் பிடித்துக்கொண்டு, "போகிறான் துஷ்டன், நமக்குக் கடவுள் கொடுத்தது போதும்," என்று சும்மா இருக்கிறார்களோ, இல்லவேயில்லை. தென்னாபிரிகா யுத்தம் நடந்த மூன்று வருஷ காலத்தில் பிரிடிஷார் இந்த வியாபார விஷயத்தில் கவனம் செலுத்த இசையாமல், யுத்த நடப்பிலேயே மனஞ் செலுத்தினவர்களா யிருந்துவிட்டார்கள். யுத்தம் முடிந்ததும், பிரிடிஷ் ராஜாங்கத்தாரும், வியா



பாரிகளும், முதலாளிகளும், தேசாபிமானிகளும் ஒரே மாதிரியாய் மனங்கொதிப்புக் கொண்டு, இனி நிமிஷநேரம் சும்மா விருந்தால் தேசவாழ்வுக்கே கேடென்று, முயற்சிமேல் முயற்சிசெய்து வருகிறார்கள். ராஜாங்கத்தாரைவிட, வியாபாரிகள் தங்கள் சொந்த முயற்சிகளாலேயே முன்னிற்கும் அபாயத்தைத் தடுக்கவேண்டுமென்று நிச்சயித்திருக்கிறார்கள். எவ்வளவு பணச் செலவானாலும், சரீரப் பிரயாசை வேண்டியிருந்தாலும், அவைகளைப் பொருட்டாவெண்ணாமல், அமெரிக்கா முதலான தேசங்களுக்குத் தங்கள் காரியஸ்தர்களையும் வேறு தக்க புத்திமான்களையு மனுப்பி, அங்கு எந்தக் காரணங்களால் கைத்தொழி லபிவிருத்தியாகி வியாபாரமும் பலத்து வருகின்றதென்பதைத் தெரிந்துகொண்டு வரும்படி அனுப்பி வருகிறார்கள். மிஸ்டர் ஆல்ப்ரெட் மோஸ்லி யென்ற ஒருவர் பிரிடனில் எப்பாகத்திலிருந்தும் சில வியாபாரிகளையும் தொழில் செய்வோரையும் ஒரு கூட்டமாகச் சேர்த்துக்கொண்டு அமெரிக்காவுக்குப் போய், அங்கே அமெரிக்கர் அவர்களிடத்தில் அசூயையைக்காட்டாமல் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்க, அங்குள்ள அநேக தொழிற்சாலைகளைப் பரிசோதித்துப் பார்த்து, பொருள் ஆக்கத்தில் முதன்மை பெற்ற தனவான்கள் புத்திசாலிகள் அனுபோகஸ்தர்கள்—இவர்களோடு கலந்துபேசி, திரும்பித் தம்

நாட்டுக்கு வந்து, ஒரு விஸ்தாரமான ரிப்போர்ட்டைப் பிரசுரம் செய்திருக்கிறார்.

எப்பேர்ப்பட்ட காரணங்களால் அமெரிக்கர் உலகத்தாரைத் தம்முன் நிற்காமல் விரட்டியடிக்கிறார்கள் என்று பிரிடிஷார் இப்போது அறிந்துகொண்டார்களானதால், அப்பேர்ப்பட்ட காரணங்களால் தாங்களும் முதல் நிற்க எல்லா முயற்சியும் செய்யத் தலைப்படுவார்கள். இவ்வாறு ஜனங்களும் ராஜாங்கத்தாரும் அப்போதைக்கப்போது ஏற்படும் நிலைமைக்குத் தக்கபடி சோம்பலில்லாமல் ஊக்கத்துடன் முயற்சிகளைப் புதியனவாகச் செய்து தங்கள் நன்மையைச் சோர்வின்றிக் காத்துவந்தாலல்லவோ, தேசம் முன்னிற்றல் சாத்தியமாகும்? நமது தேசப்பொருள்களை அன்னியர் கப்பல் கப்பலாக வாரிக்கொண்டுபோக, நம்முள் புத்திமான்கள் புராணம் படிப்போருக்குத் தங்கத் தோடாப் போடுவதிற் கவலையையும், பணத்தையும், காலத்தையும் செலவு செய்தால், சிலநாளில் பௌராணிகருக்கு வெகுமதி செய்யப் பணந்தான் அகப்படுமோ?

## III.

### புது உபாயங்களும் பொருள் தேடுதலும்.

இந்தியாவுக்கும் மற்றத் தேசங்களுக்கும் முக்கியமான வித்தியாச மென்னவென்றால்: மற்றத் தேசங்களில் ஏதேனும் அபிவிருத்திக் கவசியமான உபாயங்களைத் தக்கவரொருவர் சொன்னால், உடனே அவைகளை ஜனங்கள் அங்கீகரித்து நிறைவேற்றும்படியா



கிருஷிகளைச் செய்கிறார்கள். செய்து கொஞ்சக் காலத்தில் விருத்திக்கு வந்துவிடுகிறார்கள். இந்தியாவிலோ அப்படி நடப்பதில்லை. ஜப்பான் தேசத்தில், நமது தேசத்திலெப்படியோ அப்படியே, அநாதிகாலந் தொட்டுத் தொழில்கள் கைப்பலத்தாலும் சூட்சுமத்தாலும் செய்யப்பட்டனவேயன்றி யந்திரங்களால் செய்யப்பட்டதில்லை. சுமார் 60 வருஷத்துக்கு முன்னால் அங்கே பெருங் குழப்பமுண்டாகி, ஏற்கெனவே யிருந்த ராஜாங்க ஏற்பாடுகள் மாற்றப்பட்டு, இங்கிலண்டு முதலான ஐரோப்பிய தேசங்களைப்போல, பார்லிமென்டென்றும், ஜனங்கள் நியமன கர்த்தர்களென்றும், புது ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அந்த நாள் முதல் ஜப்பான் ஐரோப்பிய அமெரிக்க தேசங்களைப் போலவே எல்லா விஷயங்களிலும் நடந்துகொண்டு வருகின்றது. ராஜாங்கத்துக்கும் ஜனங்களுக்கும் வேண்டிய சாமான்கள் பழைய காலங்களிற் போலக் கையினால் செய்யப்படாமல், யந்திரங்களைக்கொண்டே செய்யப்படவேண்டும் என்று அறிந்துகொண்டு, உடனே அப்படிச் செய்ய ஆரம்பித்தார்கள். வர்த்தகர்கள், தொழிலாளிகள் அனைவரும் யந்திரங்களைக் கொண்டே சாமான்கள் செய்து, தங்கள் சொந்தத் தேசத்திலேயே விற்றதுமன்றி, பிரிடிஷார், ஜர்மானியர் முதலாருடன் போட்டி போட்டு அன்னிய தேசத்திலும் விற்கத்தலைப்பட்டார்கள். இந்தியாவில் இப்போது ஜப்பான் தேசத்திற்

செய்யப்படும் இப்பெட்டிகளை விசேஷமாகச் செலவாகின்றன.

இவ்வாறு நமது தேசத்திலும் புதிய யுக்திகளை யெவராவது சொன்னால், அவற்றை ஜனங்கள் அநுசரித்துத் தங்கள் நன்மையைத் தேடிக்கொண்டாலல்லவோ அபிவிருத்தி யுண்டாகும்? கைப்பலத்தாலும் உபாயத்தாலும் செய்யப்படும் சாமான்கள் இக்காலத்தில் உபயோகப்படமாட்டாவென்றும், யந்திரங்களாற் செய்யப்படும் சாமான்களே நிலைக்குமென்றும் நம்மவர்களுக்கு இப்போது தெளிவாய்த் தெரிந்திருந்தும், ஒருவரேனும் பெரும் முதல்கள் வைத்து யந்திரங்களைத் தருவித்து வேண்டிய சாமான்களை "நான் செய்வேன்" என்று முன்னுக்கு வரக்காணோம். பெரும் முதல்கள் வைக்கும்படியான தனவான்கள் நமது தேசத்தில் விசேஷமாக இல்லையாயினும், அப்பேர்ப்பட்டவர்கள் முற்றிலு மில்லாமற் போகவில்லை. முக்கியமாய் நமது ஜமீன்தார்கள் இப்பேர்ப்பட்ட புதுமையான காரியங்களிற் பிரவேசித்துத் தாமும் லாப மடைந்து தேசத்துக்கும் நன்மைசெய்து ஜனங்களுக்குக் காட்டவேண்டும். இந்த ஜமீன்தார்களுக்கு இப்பேர்ப்பட்ட காரியங்களில் சில பொருள் நஷ்டம் நேரிட்டாலும் பாதகமில்லை. ஒரு தடவை இரண்டு தடவையாகச் செய்து சித்திபெற்று உலகத்தாருக்கு வழியைக் காட்டலாம். இப்பேர்ப்பட்ட நல்ல காரி



யங்களிலேயே இவர்கள் பிரவேசிக்க வேண்டியது நியாயமா யிருக்க, பல வகைகளில் வீண் செலவுகள் செய்து சொத்தைச் சின்னாபின்னமாகப் பறக்கச் செய்துவிடுகிறார்கள்.

ஜமீன்தார்களன்றி, வர்த்தகர்கள் உத்தியோகஸ்தர்கள் இவர்களைப் பற்றிப்பேசுவோமானால், இவர்களுக்கும், மற்ற வகுப்பு ஜனங்களைப்போல, அளவுகடந்த பொருளாசை இருக்கின்ற தென்பதற்குச் சந்தேகமில்லையாயினும், பொருள் சம்பாதிக்கும் உபாயங்களை நன்றாய் அறிந்து அவைகளைக் கையாளுகிறார்களா? இக்காலத்தில் எத்தொழிலும் யந்திரங்களின் உபயோகத்தாற் செய்யப்படவேண்டு மென்றும், அப்படிச் செய்வதற்குப் பெரும் முதல்கள் வேண்டுமென்றும், இவர்களுக்குத் தெரிந்திருந்த போதிலும், தங்கள் மிகுந்த பணத்தை நகைகள் செய்வதிலும், கலியாணம் முதலான சமயங்களில் வீண் டம்பச் செலவுகள் செய்வதிலும், தாசிக்கச்சேரிகள் வைப்பதிலும், செலவு செய்வார்களேயன்றி, பணத்தைக் கஷ்டப்பட்டேனும் மிகுத்து, தொழிற் சாலைகள் ஸ்தாபிக்கச் செய்யப்படும் முயற்சிகளில் தாம் பணம்போட்டு உதவி செய்வோமென்கிற பெருந்தன்மை இவர்கள் மனதில் ஜனிப்பதில்லை. வெகு சொற்பமான முதல் வைத்துப் பெரும் லாபம் பெறும்படியாக எத்தனையோ தொழில்களை யித்தேசத்திற் செய்யக்கூடும். நாம் நடத்தி வரும் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் இப்

பேர்ப்பட்ட தொழில்கள் இன்னின்னவையென்று குறிப்பிட்டுப் பலமுறை எழுதியிருக்கிறோம். சமயத்துக்குத் தகுந்தாற் போல, நம்முடைய இயலையும் ஆசாரத்தையும் கூசாமல் மாற்றிப் "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" யாகையால், முதலில் வேண்டியமட்டும் பொருள் தேடி, தமக்கும் தமது குடும்பத்துக்கும் சாப்பாட்டுக்குக் கவலையை நீக்கிவிட்டு, பிறகு கடைக்காலத்தில் ஆத்மவிசாரமோ, வேறெந்த விதமான காலக்ஷேபமோ, அதைப் பின்பற்றினாலல்லவோ நாம் முன்னுக்கு வரத்தக்க ஏதுவாகும்? நம் நாட்டில் அன்னியர்கள் ஆடுமாடுகளின் எலும்பைக் கண்டவிடத்தில் பொறுக்கிச் சேர்த்து லட்சக்கணக்கான விலைக்கு மேல் நாடுகளுக்குக் கப்பலேற்றிவிடுகிறார்கள். நாய், நரி, ஆடு மாடு, குதிரை—இவைகள் இறக்கும் இடங்களைத் தேடிச்சென்று, இவைகளின் தோலைப் பதனிட்டு அதனால் வெகு உபயோகமான பலவிதச் சாமான்கள் செய்கிறார்கள். இன்னும் சில இடங்களில், பட்டணங்களிற் சேரும் குப்பைகளையும் மாடு மனுஷர்களின் மலங்களையும் கைகூசாமற்சேர்த்து வேண்டிய பக்குவஞ்செய்து பயிர்களுக்கு எருவாக உபயோகப்படுத்துகிறார்கள். இவ்வாறு, பொருளுக் காசைப்பட்டு முயற்சிசெய்யும் ஜனங்கள், இந்தவேலை உயர்ந்தது என்றும் இந்த வேலை இளப்பமென்றும் பாராமல், எந்தவேலையானாலும் இரந்துகுடிப்பதையும் திருடுவதையும்விட மேலானதென்று



தைரியப்பட்டு உழைத்துவர, நாம் மட்டும் ஜாதிக்கட்டுப்பாடுகளைத் தழுவி இந்திந்த ஜாதியார் இந்திந்தத் தொழிலைச் செய்யக்கூடாதென்று நிர்ப்பந்தங்கள் உண்டாக்கிக்கொண்டிருக்கிறோம். இப்பேர்ப்பட்ட நிர்ப்பந்தங்களையொழித்துக் காலத்துக்குத் தக்கபடி புது உபாயங்களையங்கீகரித்துப் பற்பல புதுத்தொழில்கள் ஸ்தாபித்து இந்தியர்கள் தனவான்களாகப் போகிற காலமும் வருமோவென்று இந்தியாவின் நண்பர்கள் விசனப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட நிர்ப்பந்தங்களை ஜப்பானியத் தலைவர்கள் கவனித்ததேயில்லை. கொஞ்சமேனும் அஞ்சா நெஞ்சினராய்ப் புது உபாயங்களை, பலசியமான மட்டும் அனுஷ்டித்து வந்தார்கள்; இன்னும் வருகிறார்கள்.

## IV.

### தேசாபிமானத்தால் மீளலாம்.

ஜப்பானியரின் சரித்திரத்தை வாசிப்பவர் அவர்கள் முன்னுக்கு வந்ததற்கு அவர்களுடைய ஒற்றுமையும் தேசாபிமானமுமே காரணங்களாயிருந்தனவென்று அறிந்து கொள்ளுவார்கள். நம்மவர்கள் தங்கள் சொந்த நன்மைக்குங்கூட உழைக்கச் சோம்பற்பட்டு வறுமையை யனுபவிக்கிறவர்களாயிருக்கையில், தேச நன்மைக்கெப்படிப் பாடுபடுவார்கள்? ஆயினும், சோம்பலைவிட்டுப் பொருள் தேடுதலுக்கு வேண்டிய தந்திரோபாயங்களைக் கற்றுச் சுறுசுறுப்பாய் உழைத்தாலன்றி அவனவன் பொருள் சேர்த்து வாழ்

வது கஷ்டமென்று யாரறியமாட்டார்? சோம்பல் மேலிட்டிருந்தால், தேசத்தின் மொத்த நிலைமையும் இப்போதிருப்பதுபோலவே வறுமையும் துன்பமும் வியாதியும் மேற்பட்டிருக்கும். இவ்வளவு விஸ்தாரமான தேசத்தில், 30-கோடி ஜனங்கள் வசிக்க, ஆயிரம் தேசாபிமானிகள் இல்லாமற் போகிறார்களா? இந்த 1000 - தேசாபிமானிகளும் தேசத்தின் வறுமையை நீக்க என்னென்ன முயற்சிகள் செய்யவேண்டுமோ அன்னன்ன முயற்சிகளிற் பிரவேசித்து ஏற்றுக்கொண்ட காரியத்தைச் செய்து முடித்தே தீருவோமென்று கங்கணம் கட்டிக்கொண்டு வெளிவரவேண்டும். நமது தேசத்தை முன்னுக்குக் கொண்டுவருவதில் எத்தனையோ கஷ்டங்களிருக்கின்றன. முதலாவது, நமக்கு ராஜாங்கத்தாரின் ஆதரவு போதுமான அளவில்லை. இல்லாததோடு, அவர்கள் ஆங்கிலேயரின் வியாபாரம், வர்த்தகத்தொழில்—இவைகள் பிரபலப்பட வேண்டுமென்று கோருகிறார்களேயன்றி, இந்தியர் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டியதிற் கவலைக் குறைவாகவே யிருக்கிறார்கள். இரண்டாவது, ஆங்கிலேயர்கள் நமக்குப் போட்டியாய் உழைப்பதால், அவர்கள் தங்கள் அபரிமிதமான முதல்களையும், சாமர்த்தியத்தையும், ஐக்கியத்தையும், இன்னும் மற்ற உபாயங்களையும், உபயோகப்படுத்தி, நம்மைத் தலையெடுக்க முடியாமற் செய்துவிடுவார்கள். இவர்கள் போட்டியையெதிர்க்க நமக்கு



வகையில்லை. நமக்குப் பொருள் கிடையாது; அறிவு கிடையாது; ஊக்கம் கிடையாது; இன்னும் இக்காலத்திற்பொருள் சேர்ப்பதற்கு மேற்குத்தேசத்தார் உபயோகிக்கும் நானாவித தந்திரங்களும் யந்திரங்களும் நமக்குக் கிடையா. நாம் எவ்விதமாய்ப் போட்டி போட்டு நம் சொத்துக்களைக் காப்பாற்றல் இயலும்? புலியோடு பசு எதிர்த்துப் போட்டி செய்தல் சாத்தியப்படுமா? சாமானியமாய்ப் படாதாயினும் சில சமயங்களில் சாத்தியமேயாகின்றது. காடுகளில் மாடுகள் பலசேர்ந்து ஓரே கும்பலாய்ப் படுத்து, புலி வரும்படியான வழியை நோக்கி முகத்தைத்திருப்பிவைத்துக்கொண்டிருக்குமாம். ஏதேனும் அபாயம் நேரிட்டால், இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து தம் விரோதியைத் தாக்கி விரட்டித் தப்பித்துக்கொள்ளும் என்று சொல்லப்படுகின்றது. இவைகளைப்போலவே, நாம் நமக்கு நேரிட்டிருக்கும் வறுமையெனும் மகா ஆபத்தினின்று தப்பிக்கொள்ளல் வேண்டும். ஒற்றுமையும் தேசாபிமானமுமே இந்தியர்களுக்குத் தற்சமயம் கைக்கெட்டின ஆயுதங்கள். இவைகளைத் தவிர வேறு ஆயுதங்கள் நமக்கில்லையாயினும், இவைகள் சாமானியமான ஆயுதங்களல்ல. எப்பேர்ப்பட்ட பலவானான சத்துருவையும் இவைகளைக் கொண்டு வென்றுவிடலாம். ஆகையால் நம் தேசத்தார் இந்த ஆயுதங்களைக் கையிலேந்திச் சண்டைக்குத் தயாராக வேண்டும். இப்படி ஒரு லட்சம் இந்தியர்கள் தயாராகி, மேற்சொன்ன ஆயிரம் தலைவர்களைக்

நடத்தப்பட்டு, ஊக்கத்துடனும் தைரியத்துட
னும் போர் செய்வார்களாயின், நமக்குப் போட்டி
யாக நம் சொத்துக்களை யபகரிக்கும் அன்னிய வியா
பாரிகளின் உயர்த்தியைத் தாழ்த்திவிடலா மென்று
பூராவாக நம்பலாம். இப்படியேனும் நாம் செய்யா
விடின் நமது தேசம் சொற்ப காலத்தில் பாழடைந்து
போகுமென்பதை நாம் நிச்சயமாய் அறிய வேண்டும்.
நமது காலத்தில் அரைவயிற்றுக்காவது ஏழை
ஜனங்கள் தின்று ஜீவிக்கிறார்கள். இருக்கிற நிலைமை
யைப் பார்த்தால் சிலகாலத்தில் இதுவும் போய்விடும்
போ லிருக்கின்றது.

தினத்துக்குத் தினம் நமது தேசத்துச் சொத்து
கள் வெளியேறிக்கொண் டிருக்கின்றன. வியாபாரம்,
தொழில், இவைகளால் கிடைக்கும் லாபத்தைக்
கொண்டு போவதுமன்றி, ஆங்கிலேயர் நமது சுரங்கங்
களைக் கிண்டிப் பொன், இரும்பு, நிலக்கரி, காரீயம்,
அப்பிரகம் முதலிய சொத்துக்களைக் கட்டி கட்டி
யாகக் கப்ப லேற்றிக் கொண்டுபோகிறார்கள். நிலத்தில்
உண்டாகிற பயிரானால், இவ்வருஷத்து விளைச்சல்
போனாலும், அடுத்த வருஷம் மறுபடியும் விதை
விதைத்துச் சாகுபடி செய்தால் அப்போதும் விளை
யும். அன்னியர் பாதி கொண்டுபோனாலும் பாதியா
வது நமக்கு மிதம். சுரங்கங்களி லுள்ள வஸ்துக்களைக்
கட்டி கட்டியாகக் கொண்டுபோனார்களானால் எப்
படி இவைகள் சுரங்கங்களில் மறுபடியும் உண்டாகும்?



உண்டாகா.உண்டாகாமல் சுமார் 10-வருஷத்தில் நமது
பொன் சுரங்கங்களிற் பொன்னை அற்றுப்போய்க் கல்
லும் மண்ணுந்தான் காணப்படும். இப்படி நமது தேசத்
தின் நிலைமை கேவலம் அபாயமா யிருப்பதால், நம்மவர்
கள் சும்மா கையைக் கட்டிக் கொண்டு, "எப்படி
யோ ஜீவனம் செய்கிறோம், மரம் வைத்தவன் தண்ணீர்
வார்க்காமற் போவானோ," என்று வேதாந்தம் பேசி
னார்களானால், இந்தியர்கள் கொஞ்சக்காலத்துக் கெல்
லாம் தங்கள் பூர்விக நாகரிகங்களை யிழந்து, வேத
சாஸ்திர இதிகாசங்க ளெல்லாம் இருந்த இடந் தெரி
யாமற்போய், தேவாலயம் பிரமாலயங்களும் பார்ப்பா
ரில்லாமல் இடிந்து பாழாய்ப்போய், வித்தை,
கலை, நூல், வியாபாரம் எதுவும் தெரியாத மிலேச்
சர்களாகி, ஆங்கிலேயருக்கோ வேறு எந் தே
சத்தார் இந்தியாவை வெல்லுகிறார்களோ அவர்
களுக்கோ, ஆபிரிகா கண்டத்துக் காட்டு ஜனங்
களைப்போல, அடிமைக ளாகிவிடுவார்கள். நாம்
இந்தத் தேசத்துப் பூர்விகவாசிக ளென்றும், இது
நமது தேசமென்றும், இதற்கு நாமே சுதந்தர
வாளிகளென்றும், இதில் உண்டாகும் சொத்துக்கள்
நம்மவையே யன்றி அயலாருடையன வல்லவென்
றும், நம திஷ்டப்படி தேசம் ஆளப்படுமென்றும்,
நமது பூர்விக ஆசாரங்களும் ஸ்தாபனங்களும் நூல்
களும் காக்கப்படுமென்றும், வரவரச் செல்வமும்,
கல்வியும், அதிகாரமும், சுதந்தரமும், பெருமையும்

பெறுவோமென்றும், நினைக்க ஏதேனும் நியாயம் எவருக்கேனும் தோன்றினால், அவர்கள் நமக்கு அதையறிவித்தால், பொதுஜன உபகாரமாயிருக்குமல்லவா? ஆனால் நமக்கு ஒருவிதத்தில் மட்டும் விசேஷ சாதகம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது பிரிடிஷ் ராஜாங்கம் நமக் கேற்பட்டிருப்பதால், ராஜாங்கத்தாரால் நமக்கு எவ்வித இடையூறும் உண்டாகாதென நிச்சயமாயிருக்கலாம். பிரிடிஷ் ராஜாங்கத்தார் நமது வறுமையை ஓட்டிச் செல்வத்தைப் பெருக்கி நிலைநிறுத்த முயற்சிகள் செய்ய முந்தாராகிலும் விரோதம் செய்யமாட்டார்கள். இந்தச் சகாயத்தைக்கொண்டு நாம் நம்மால் கூடிய முயற்சிகளை செய்தால், அவைகள் பயன்படுவதில் தடைகள் செய்வார் ஒருவருமில்லை. ஆகையால், இந்தச் சமயத்தைக் கைவிடாமல், இனி நம் தேசத்துக்கு வரப்போகிற லாபநஷ்டங்களை மனதிற்கொண்டு, ஐக்கியத்துடனும் தேசாபிமானத்துடனும் நம் பின்னோரின் க்ஷேமத்துக்காக நாம் தற்காலம் நஷ்டப்பட்டும் கஷ்டப்பட்டும் உழைக்கவேண்டும்.

தேசாபிமானமும் ஐக்கியமுமே நம் தேசப் போர் புரிவதில் நாம் கையில் வைத்துக்க ஆயுதங்களென்று சொன்னோம். எந்த என்ன செய்[illegible]ன்று இந்நூலைப்படிப்போர் கேட்கக்கூடும். சொல்[illegible] பலதடவைகளில் நமது சுதேசமித்திரன் பத்திரிகையில் நமது கைத்தொழில்கள் போய்விட்டனவென்



றும், வியாபாரம் வர்த்தகங்கள்கூட ஆங்கிலேயர்கள் அபகரித்துவருகிறார்க ளென்றும், சொல்லியிருக்கிறோம். ஆயினும், இன்னும் சில தொழில்கள் நமது தொழிலாளிகள் கையிலேயே இருக்கின்றன. அவர்கள் எங்கெங்கோ மூலைகளில் மறைந்து வசித்துப் பழைய காலத்து வித்தையைக் கைவிடாமற் சொற்பச் சாமான்கள்செய்துஉபரீயமாகச்சீவித்துவருகிறார்கள். அவர்களைக் கவனிப்பாரில்லாமல் வரவரத் தேய்ந்து போய்க்கொண்டு வருகிறார்கள். அவர்கள் செய்யும் சரக்குகளை வாங்குவோரில்லை. எவரேனும் அவசரமாயாவது உற்சாகத்தாலாவது அந்தச் சாமான்கள் வேண்டுமென்று விரும்பி முன்பணங் கொடுத்தால், இந்த முன்பணத்தையும் இந்தத் தொழிலாளிகள் சாப்பாட்டுக்குச் செலவு செய்துவிட்டு, சாமான் செய்வதில் வெகு தாமதம் செய்து பணங் கொடுத்தவருக்குக் கோபம் உண்டாக்கிக், கடைசியிற் சாமான் செய்து கொடுக்கிறார்கள். அவர்கள் நாணயமற்ற மோசக்காரர்க ளென்று அவர்கள் மீது கோபங்கொள்ளக்கூடாது. வறுமையால் அப்படிச்செய்கிறார்களேயன்றி வேறு காரணத்தாலல்ல. இப்படி முன்பணங் கொடுப்போருக்குச் செய்யும் சாமான்களைத் தவிர, வேறு தம் கைப்பணத்தைப் போட்டுச் சாமான்கள் செய்து தூரமான பட்டணங்களுக்கனுப்பிக் கிராக்கி சம்பாதித்து விற்கச் சாமர்த்திய மில்லாதவர்கள். எவர் தங்கள் சாமான்களைக்

கேட்பார்கள், எங்கு விற்கலாம், என்ற விஷயம் அவர்களுக்குத் தெரியவே தெரியாது. இப்படித் தெரியாமற் கெட்டுப்போகிற தொழிலாளிகளில் முக்கியமானவர்கள் துணிநெய்யும் வகுப்பார். இவர் இக்காலத்திலுங்கூட அருமையான துணிகளும் முரட்டுத்தனமான துணிகளும் செய்து வருகிறார்கள். மான்சேஸ்டர் (Manchester) போட்டியால் இனப்படி உடைக்கு வேண்டிய சாமானிய நாணைத் துணிகள் இங்கு செய்யப்படாமற் போனாலும், சேலைத் துப்பட்டாக்கள், உருமாலைகள், தலைக் குட்டைகள் இவைகள் செய்யப்படுகின்றன. ஏழைகள் கட்டிக் கொள்ளக்கூடிய முரட்டுத் துணிகளும் இங்கே நம்மவர்களாற் செய்யப்படுகின்றன. உத்தியோகஸ்தர்கள் உடுக்கக்கூடிய உயர்ந்த கம்பளித் துணிகளும் இந்தியாவிற் செய்யப்படுகின்றன. இவைகளன்றி, நேற்றுவரையில் நமது ஸ்திரீகள் நம்மவர்கள் செய்த துணிகளையே கட்டி வந்தார்கள். இப்போது சீமைச் சீட்டித் துணிகள் என்று இங்கிலண்ட், ஜர்மனி, பிரான்சு முதலான தேசங்களிலிருந்து வரும் துணிகளை, அவைகளின் சரசமான விலைகளைக் கண்டும் பகட்டான தோற்றத்தைக்கண்டும், அவர்கள் வாங்கி உடுக்கிறார்கள். இப்போது இந்த இரண்டு வழக்கங்களையும் இந்தியர்கள் தொலைத்துவிடல் வேண்டும். அன்னிய தேசங்களிலிருந்து இறக்குமதியாகி வரும் எந்தத் துணிகளையும் இந்திய புருஷர்



வது இந்திய ஸ்திரீகளாவது உடுக்கக்கூடாது. உடுப்பதில்லையென்று விரதம் செய்துகொள்ள வேண்டும். ஸ்திரீகள் விஷயத்தில் நமது குரநாடு, காஞ்சீபுரம், மதுரை இந்த இடங்களிற் செய்யப்படும் துணிகளைவிட உயர்ந்த துணிகள் எங்கு கிடைக்கும்? ஏழைகளுக்குத் தக்கபடி நாட்டுப்புறங்களிற் கெட்டியான துணிகள் சாயம் போகாதபடி செய்யப்படுகின்றன. புருஷர்களும் இடுப்பிற் கட்டிக்கொள்ள உள்ளூர்த் துணிகளையே வாங்கக்கூடும். சீமைத் துணிகளைப்போலப் பார்வைக்கு நமது உள்ளூர்த் துணிகள் பகட்டாயிராவிட்டாலும், நெடுநாள் உடை தாளுமானதால், உள்ளூர்த்துணிகளை வாங்குவதில் நஷ்டமொன்றுமில்லை. சொக்காய்த்துணிகளும் சற்று முரட்டுத்தனமானவைகளாய்க் கிடைக்கின்றன. அவைகளை வாங்கியே நம்மவர்கள் உபயோகிக்க வேண்டியது. இவ்வாறு துணிகளைத் தவிர, அநேக சில்லறைச் சாமான்கள் இங்கேயே செய்யப்படுகின்றபடியால், அவைகளையும் நம்மவர் விரதமாய் வாங்கி உபயோகிக்க வேண்டியது. பேனாக்கத்திகள், பூட்டுகள், மண் சாமான்கள், விநோதப்பொருள்கள் இப்போர்ப்பட்டவைகள் செய்யப்படுகின்றன. சீமைச் சாமான்களை வாங்காமல் இவைகளையே நம்மவர்கள் வாங்கும்படியாக மனதில் உறுதி செய்துகொள்ள வேண்டியது. கல்கட்டாவிலும் காகிநாடாவிலும் ஆமி பொருட்காட்சிகள் நடந்ததில், நமது தாபாத்திலும்

தேசத்தில் நமக்குபயோகமான பல சாமான்கள் இங்கே செய்யப்படுகின்றனவாகத் தெரிகின்றன. இவைகளை நம்மவருள் சிலர் ஓரிடத்திற் சேர்த்து வைத்து விற்பார்களானால், சாமானிய ஜனங்கள் தங்கள் விருப்பப்படி வாங்கி உபயோகித்தல் எளிதாகும். இப்படி இந்தச் சாமான்களுக்காக ஒரு கடை ஸ்தாபிப்பது நமது தேசாபிமானிகளின் முதற்கடமையாகும்.

## V.

## சோம்பலே நம்மைக் கெடுக்கின்றது.

எப்படி ஒரு மனுஷனுடைய நன்மையானது அன்னியரின் சகாயம் தன்னுடைய முயற்சி யாகிய இரண்டு காரணங்களாலும் உண்டாகக்கூடுமோ, அப்படியே ஒரு ஜனக்கூட்டத்தினது நன்மையும் இந்த இரண்டு காரணங்களாலும் உண்டாகக் கூடும். இந்தியாவில் வசிக்கும் ஜனங்களுடைய நன்மை முக்கியமாய் அன்னிய ராஜாங்கத்தாராகிய பிரிடிஷாரால் உண்டாகவேண்டி யிருக்கின்றது. ஜனங்கள் சாமர்த்தியமும் அனுபோகமும் இல்லாதவர்களா யிருக்கிறார்கள். அவர்களிடத்தில் திரவியமும் ஒற்றுமையு மில்லை. அவர்கள் தங்கள் முயற்சியாலேயே பெருங்காரியங்கள் செய்வார்களென்று எதிர்பார்ப்பது சரி யன்று. ஆகையால், ராஜாங்கத்தாரே ஜனங்களுக்கு வேண்டும் வேண்டாதவைகளை யறிந்து அவைகளைச் செய்து கொடுக்கவேண்டும். இப்பேர்ப்பட்டவைகளில் ராஜாங்கத்தார் தலையிடக்கூடாதென்பது



இங்கிலண்ட் தேசத்தாருடைய கொள்கையே யன்றி, மற்ற ஜர்மானியர், பிரெஞ்சுக்காரர், அமெரிக்கர், ஜப்பானியர் ஆகிய இன்னோர், கவர்ன்மெண்டார் நன்மை செய்யவேண்டு மென்கிற எண்ணத்துடன் பிரவேசிப்பதற்கு எல்லை யில்லை யென்றும், எந்தெந்த விஷயம் ஜனங்களில் வெகு பேருக்கு நன்மை செய்யத்தக்கதா யிருந்து ஜனங்களாற் செய்து முடித்தல் சாத்தியமா யிருக்கின்றதோ, அதையெல்லாம் ராஜாங்கத்தார் செய்துகொடுக்கக் கடமைப்பட்டவர்களென்றே கொள்கிறார்கள். இங்கிலண்டிலுங்கூட மேற்கண்ட பழைய கொள்கைகள் மாறி, வரவரத் தாழ்ந்த வகுப்பைச்சேர்ந்த ஜனங்களை யுயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் இம்சிக்காமலும், பலமில்லாதவர்களைப் பலவான்கள் வாயடி கையடி அடித்து மோசஞ்செய்யாமலும், தாங்களே யறியாமையால் தங்களுக்கு விரோதஞ் செய்துகொள்ளாமலு மிருக்கும் நோக்கங்களுடன் ஜனங்களது சொந்த விஷயங்களில் ராஜாங்கத்தார் தலையிடலாமென்று ஏற்பட்டுவருகிறது. இந்தியாவில் அப்படி யேற்பட்டு வரவில்லை. இந்தியாவில் ஏழைகளைப் பணக்காரர்கள் பிடுங்கித்தின்று வருகிறார்கள்; அதிகாரிகள் சாமானிய ஜனங்களை யிம்சித்துத் தங்கள் பெருமையைக் காட்டிவருகிறார்கள். வெள்ளைக்காரர் கருப்பு மனிதரை யிளப்பமாக நடத்திவருகிறார்கள். இவ்விதங்களான அக்கிரமங்களைத் தடுக்க இந்தியாவில் ராஜாங்கத்

தார் பிரவேசிப்பதில்லை. அக்கிரமங்களைத் தடுப்பது மாத்திரமல்ல, சகாயங்கள் செய்து கொடுப்பதும் ராஜாங்கத்தாரின் கடமையாயினும், அதையும் செய்கிறதில்லை. உதாரணமாக, இந்தியாவில் என்னென்ன பொருள்கள் பூமியிலும் சுரங்கங்களிலும் மரங்களிலும் விளைகின்றன, இவை என்னென்ன விதங்களாக உபயோகப் பொருள்களாய்ச் செய்யப்படலாம், என்ற விஷயங்களை நுட்பமான விவரங்களுடன் பிரசுரம் செய்தால் ஜனங்களுக்கு வெகு உபயோகமாயிருக்கும். இம்மாதிரியாக மற்றெந்தத் தேசங்களிலும் ராஜாங்கத்தார் செய்துவருகிறார்கள். இந்தியாவில் மட்டும் செய்கிறார்களில்லை.

இப்படி ராஜாங்கத்தார் தேச நன்மைக்காகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாதிருக்க நமது ஜனங்களே நமக்குச் செய்யக்கூடிய நன்மைகளைச் செய்துகொள்ள முயலுகிறார்களா என்று கவனிப்போம். ஜனங்களே ஜனங்களுக்குச் செய்யக் கூடிய நன்மைகள் பல "உண்டென்று" யாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். முதலாவது, பிரதி மனுஷனும் தன் தன் நிலைமையை யெப்படி விருத்தி செய்துகொள்ளலா மென்று ஊக்கத்துடன் அறிந்து, வேண்டிய முயற்சிகள் செய்யலா மல்லவா? தேசத்தாருக்கு அவசியமான நன்மைகளைச் செய்து தாமும் லாபம் பெறக்கூடிய காரியங்கள் நேரிட்டால் அவைகளைச் செய்யலாமே. தனக்கு எவ்வித லாப



மும் உண்டாகாவிடினும் தேசத்துக்கு நன்மையைச் செய்யும் காரியங்களையும் செய்யலா மல்லமா? இப்பேர்ப்பட்ட காரியங்களைச் செய்ய நம்மவர்க்குச் சமயங்கள் நேரிடுவதில்லை யென்றாவது, அவகாச மில்லை யென்றாவது, சொல்லுதல் சுத்தப்பொய் யாகும். அனேக மிராசுதார்கள், வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், ஸ்கூல் வாத்தியார்கள், வைத்தியர்கள்—இப்பேர்ப்பட்டவர்கள் அடிக்கடி சிலகாலம் வேலையில்லாமல் ஒழிந்திருக்கிறார்கள். ஒழிந்த நேரத்தில் என்ன செய்கிறார்கள்? தமக்கு நன்மையை யாவது பிறர்க்குஉபகாரத்தையாவது செய்யும் விஷயங்களிற் கவனம் செலுத்துகிறார்களா? இல்லை. ஒழிந்த நேரத்தில் தூங்குவார்கள்; ஆடுவார்கள்; வம்பு பேசுவார்கள்; அல்லது தங்கள் சுகத்தை நாடிப் பல வேலைகள் செய்வார்கள்; இப்படிக் காலத்தை வீண் போக்காமல், இவர்க ளெல்லோரும் எந்த விதமாகவாவது, தங்களுக் கிசைந்தபடி, தேசநன்மைக்காகப் பாடுபடுவதை விரதமாகக் கொள்வார்களாயின், தேசம் எவ்வளவு விதத்தில் க்ஷேமப்படும்! கிராமங்களில் முக்கியஸ்தர்களான மிராசுதார்கள் ஒழிந்த நேரத்தில் கிராமத்தார்களைக் கூட்டிவைத்துப் பத்திரிகைகளை வாசிக்கச்சொல்லிப் பொதுக் காரியங்களைக் கவனிக்கச் சொல்லலாம். அல்லது, கிராமத்தில் எவையேனும் வழக்கு வியாச்சியங்கள் நேரிட்டால், வீணாக வக்கீல்களுக்கும், சாட்சிகளுக்கும், கோர்ட்டுச்

சேவகர்களுக்கும் பணத்தைக் கொட்டிக் கொடுக்காமல், கிராமத்துப் பஞ்சாயித்தார் சொல்லுகிறபடி ஒழிந்துபோகும்படி சொல்லி முயற்சி செய்யலாம். சிறிய பாங்கிகள் ஸ்தாபித்து, அவைகளிலிருந்து குடிகளுக்குச் சொற்ப வட்டிக்குக் கடன் கொடுத்தும், கடன் வாங்காத பங்காளிகளுக்குச் சொற்ப வட்டி கொடுத்தும் நடத்திவரலாம்.

கிராமங்களைத் தாண்டிப் பட்டணங்களுக்குப் போனாலோ அங்கே வக்கீல்கள், வாத்தியார்கள், வைத்தியர்கள், வியாபாரிகள்—இவர்களெல்லோருங் கூடத் தங்களுக்கு விசேஷமாகக் கிடைக்கும் ஒழிவு நேரத்தைப் பாழ்செய்கிறார்களே யன்றி விருத்தி செய்கிறதில்லை. இவர்கள் படித்தவர்களாயிருந்தாலும், பத்திரிகைகள் படிக்கிறதில்லை; உலக விவகாரங்களும் தெரியா; படிப்பும் அறிவும் உள்ளவை கூட மறந்துபோகின்றன. இவர்கள், முதலாவது, தாம் வசிக்கும் ஜில்லாவின் நிலைமை யின்னமாதிரி யென்று அறிந்து தங்களுக்குத் தோன்றினதைப் பத்திரிகைகளுக்கு எழுதலாமே. ஊர் ஜனங்களுக்கு நன்மை செய்ய முனிசிபாலிடிகளில் அக்கறை யெடுத்துக்கொண்டு பரோபகாரிகளாக நாள் கழிக்கலாம். இஷ்ட மித்திரர் அக்கம் பக்கத்தினர், சுற்றார் உறவினர் இவர்களுக்குள் உண்டாகும் வழக்குகளைத் தாம் மத்தியஸ்தம் செய்து தீர்க்கலாம். தொழிற் சாலைகள் வைத்து நடத்தலாம். முதல் திரட்டிக் கைத்



தொழில்கள் செய்யலாம். இன்னும் எத்தனையோ காரியங்களும் செய்யலாம். ஆங்கிலேயர் அமெரிக்கர்—இவர்கள் காட்டும் சுறுசுறுப்பும், பரபரப்பும், நம்மவர்களிடத்திற் பத்தி லொருபங்குகூட இல்லை. சதா சர்வகாலமும் ஏதோ பலன் கொடுக்கும்படியான காரியத்தைச் செய்யவேண்டுமே யன்றி, மனுஷன் சோம்பலால் நாறக்கூடாது என்கிற நிச்சய புத்தி நம்மவர்க் கில்லை; எப்போது உண்டாகுமோ!

## VI.

### தேசத்துக்குத் தலைவர்வேண்டும்.

பிரிடிஷ் தேசத்திலுங்கூட பொதுவிஷயங்களைப் பற்றிக் கவனித்துச் செய்யப்படும் முயற்சிகளில், ஜனங்களைத் திரட்டிச் சரியான வழிகளில் நடத்தத் தலைவர்கள் ஏற்படுத்தப்படுகிறார்கள். ராஜாங்கச் சம்பந்தமாய் அத்தேசத்தில் ஏற்கெனவே வெகு காலமாக இரண்டு கட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு கட்சி கன்ஸர்வேடிவ் அல்லது டோரி யென்றும், மற்றொரு கட்சி லிபரல் அல்லது ராடிகல் என்றும், சொல்லப்படுகின்றது. இவ்விரண்டும் யூனியனிஸ்ட் என்றும் ஹோம் ரூலர் என்றும் சில நாளாகப் பெயர்கள் பெற்றிருக்கின்றன. பிரிடிஷ் தேசத்து ஜனங்கள் ராஜாங்கச் சம்பந்தமான எந்தப் பொது விஷயத்திலும் இந்த இரண்டு கட்சிகளில் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். பார்லிமெண்டுக்கு அங்கத்தினர்களை அப்போதப்போது ஜனங்கள் நியமிக்கும்போது, ஒவ்

வொருவரும் தம் தம் கட்சியைச் சேர்ந்தவரையே மெம்பராக நியமிக்க, பார்லிமெண்ட் மொத்த மெம்பர்களிற் சிலர் ஒரு கட்சியையும், மற்றோர் மற்றக் கட்சியையும் சேர்ந்தவர்களாயிருப்பார்கள். இவ்விரு கட்சிகளில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையோராக இருக்கின்றனரோ அந்தக் கட்சியிலுள்ள முக்கியஸ்தர்கள் மந்திரிகளாக மகாராஜாவால் நியமிக்கப்படுவார்கள். இவ்வாறு நியமிக்கப்படும் மந்திரிகள் அவர்கள் கட்சிக்குத் தலைவர்களாகத் தேசத்தாரெல்லோராலும் அங்கீகரிக்கப்படுவார்கள். அவ்வாறே மற்றக் கட்சியில் முக்கியஸ்தர்களாக முந்தியொரு தடவை மந்திரிகளாக நியமிக்கப்பட்டவர்கள் தேசத்தில் மற்றக் கட்சி ஜனங்களுக்குத் தலைவர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். இவ்வாறு ராஜாங்க விஷயங்களில் புத்திமானான எவனானாலும் தலைவர் இன்னாரென்று அறிந்துகொண்டு, அவர் தெரிவிக்கும் அபிப்பிராயங்களை யொப்புக்கொண்டு அவர் சொற்படியும் விருப்பப்படியும் நடந்துகொள்வான். ஒருமுறை தலைவராக ஒருவர் ஏற்பட்டுவிட்டால் அவர்பேரில் அசூயையும் விரோதமும் காட்டி, அவரை அகௌரவப்படுத்திப் பேசிக் கீழே தள்ள ஒருவரும் பார்க்க மாட்டார்கள். தலைவரானவர் இரண்டொரு அம்சங்களிற் குறைவுள்ளவராயிருந்தாலும், தெரிந்தவர்களான மற்றவர்கள் அவருக்கு ஒத்தாசை செய்து அவருடன் கலந்து பொது வேலையைச் செய்வார்கள். ஒருக்கால்



அப்பேர்ப்பட்ட தலைவர் வரவரத் தகாதவரென்று காட்டிக்கொள்ளும் பட்சத்தில், வேறொரு சமயத்தில் அவரை நீக்கி, தக்க மற்றொருவரை ஜனங்கள் நியமித்துக்கொள்ளுவார்கள். தலைவராக நியமிக்கப்பட்டவரைத் தினத்துக்குத் தினம் 'பரீட்சை' பார்த்து, அவர்பேரிற் கோளும், அவதூறும் சொல்லி, அவருடைய அந்தஸ்தைக் குறைத்து, பலவாறாக இம்சை செய்ய ஒருவரும் சம்மதிக்கமாட்டார்கள். இவ்வாறு ராஜாங்கவிஷயங்களில் தலைவர்கள் ஏற்படும் போது, மதவிஷயத்தைத் தவிர மற்ற லௌகிக விஷயங்கள் எல்லாவற்றிற்கும் தலைவர்கள் ஏற்பட்டுவிடுகிறார்கள். சட்டதிட்டங்கள் செய்வதிலும் வரிகள் விதிப்பதிலும் ராஜாங்கத்தார் இத்தலைவர்களின் அபிப்பிராயங்களையும் அவைகளை யொட்டி ஜனங்கள் தெரிவிக்கும் அபிப்பிராயங்களையும் கவனிப்பார்கள். மற்ற வியாபாரம், வர்த்தகம், கைத்தொழில், தேசத்துச் சம்பத்து, விபத்து, செல்வம், வறுமை, நியாயாநியாயம் முதலான சகல விஷயங்களிலும் ஜனங்களைச் சரியான வழிகளில் நடத்தி அவர்களுக்கு நன்மையையே செய்விக்கத் தலைவர்கள் ஏற்பட்டுப்போகிறார்கள். தலைவர்களுடைய முயற்சியால் ஜனங்கள் வரவர அறிவும் பொதுநலப் பிரியமும் உண்டாகப்பெற்று, தங்களுடைய லாப நஷ்டங்களை நன்றாயறிந்து, ராஜாங்கத்தாரால் மோசம் போகாமலிருக்கக்

கற்றுக்கொள்ளுகிறார்கள். இந்த ஏற்பாட்டால் பிரிடி ஜனங்களின் அபிவிருத்திக்குக் கிடைத்திருக்கும் வசதி யளவற்றது. பிரிடிஷ் நாட்டில் எப்படியோ அப்படியே மற்ற நாகரிகமான நாடுகளிலும் ஜனங்களுக்குத் தலைவர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். ஜப்பா னிராச்சியத்தில் இப்பேர்ப்பட்ட தலைவர்கள் தோன்றியே அது இப்போதைய உன்னத நிலைமையை யடைந்த தென்பதை யிப்புஸ்தகத்தை வாசிப்போர் தெரிந்து கொள்ளுவர்கள்.

இந்தியாவிலும் இப்படித் தலைவர்கள் ஏற்படுதல் மகா அவசியம். நம்மவருக்குள் இப்போது பொது நலப்பிரியமும், அறிவும், தேசாபிமானமும், கொஞ்சங் கொஞ்சமாய் உண்டாய்க்கொண்டு வருகின்றன. புத்திமான்களாகிய நம்மவர்களைக் கண்டு தனித்தனியே நாம் பேசினால், அவர்கள் தேச நன்மைக்குத் தாங்கள் பாத்தியப்பட்டிருப்பதை யேற்று, தம்மால் கூடிய வரையில் வேலை செய்யத் தயாரா யிருப்பதாகவே சொல்லுகிறார்கள். ஆனால் இன்ன விதமாய் உழைப்ப தென்றும், இன்ன நோக்கங் கொண்டு, இன்ன பொருளுக்காக, இன்ன சமயத்தில், உழைப்ப தென்றும் தெரியாமல் அவர்கள் சும்மா இருந்து விடுகிறார்கள். மேலும், நாம் ஒருவருக்கும் தாட்சணியத்தால் கட்டுப்பட்டவர்களாகவும் இருக்கவில்லை. முக்கியஸ்தர்களில் ஒருவர் ஒரு விதமாய்ச் சொன்னால், மற்றவர் வேறு விதமாய்ச் சொல்லு



கிறார். எதை ஜனங்கள் அங்கீகரிப்பார்கள்? தேசத்திற் பெரிய மனுஷர்களும் புத்திமான்களும் பலர் இருக்கக்கூடும். இவர்களில் அபிப்பிராய பேதம் நேரிட்டால், இன்னார் சொல்லுகிறபடி ஜனங்கள் செய்ய வேண்டுமென்று ஒரு கட்டுப்பாடு உண்டாயிருக்க வேண்டும். இப்படித் தலைவராக நியமிக்கப்படுவோர் சாமர்த்திய சாலியாயும் தேசாபிமானியாயும் தைரியஸ்தராயும் வாக்குச் சாதுரியமுள்ளவராயும் சுறுசுறுப் புள்ளவராயும் திடகாத்திரராயும் இருத்தல் மகா அவசியம். அப்படி இருந்தால்மட்டும் அவர் அதிகாரமும் புத்தியும் ஜனங்களிடத்திற் செல்லும். சாமர்த்தியமும் தேசாபிமானமும் இருந்து ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களைப் பார்த்துப் பயப்படுகிறவரா யிருந்தால், அவரால் யாது நன்மை விளையும்? சுறுசுறுப்பும் திடகாத்திரமும் இல்லாவிட்டால், தேசத்திற் பல பாகங்களுக்கு அடிக்கடி போய் ஜனங்களை யுற்சாகப்படுத்திவர முடியாது. சற்று வாக்குச் சாதுரியமும் உடையவராயு மிருக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட தலைவர்கள் இந்தியா முழுமைக்கும் ஒருவர் இருவ ராக இராமல், ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ் வொருவர் ஏற்பட்டிருக்கவேண்டும். இப்படி யேற் பட்டாலன்றி நமது ஜனங்களுக்குள் ஒற்றுமையும், பரஸ்பர நம்பிக்கையும் பொதுநலப்பிரியமும் உண்டாக வெகுகாலம் செல்லும். ஏற்கெனவே இந்தியர்கள் ஜாதி வித்தியாசங்களாற் பிரிவுபட, மதாசார

ஐக்கியமும் நேசமும் இருக்கவேண்டிய இடத்தில் விரோதமும் பொறாமையும் இருக்கின்றன. முப்பது கோடி ஜனங்கள் சேர்ந்த இந்தியர்கள் ஒற்றுமையுடன் உழைப்பார்களானால், இவர்களால் வெல்ல முடியாத காரியமென்ன இருக்கக்கூடும்? மற்றெவ்விதக் குணங்களிலும் இந்தியர்கள் குறைந்தவர்களல்லர், அல்லாயினும் ஒற்றுமையும் முன்யோசனையுமில்லாததனால், 30-கோடி இந்தியர்களாகிய நாம் 30 கோடி காக்கைகளுக்குச் சமானமாகிறோம்.

## CHAPTER I.

## முதல் அதிகாரம்.

ஜப்பான் நிலை—வெள்ளைச்சாதியினர் கறுப்புச்சாதியினரைக் கீழ்ப்படுத்தி நடத்தல்—பாக்ஸர் கலகத்தில் ஜப்பான் காட்டிய சௌரியம்—இங்கிலேயர் ஜப்பானியரோடு உடன்படிக்கை செய்துகொண்டது—ஐரோப்பிய ராஜ [illegible]களின் போட்டி—ஜப்பான் சரித்திரத்[illegible] [illegible]புகுந்த காரணம்—ஜப்பானின் விஸ்தீரணம் ஜனத்தொகை ஜீவனோபாயங்கள் முதலியன.

இந்தியா தேசத்துக்குக் கிழக்குப்புறமாய் வங்காளக் குடாக் கடலில் சிங்கப்பூர் பினாங் முதலான துறைமுகங்களைக் கடந்து, பஸிபிக் சமுத்திரத்தை யடைந்து, வடதிசையிற் சீன ஏகாதிபத்தியக் கடலையும் தாண்டி மொத்தம் சுமார் 13-நாட் கப்பல் யாத்திரைசெய்து ஜப்பான் தேசத்திற்குப் போகவேண்டும்.

இந்த ஜப்பான் தேசமானது இப்பொழுது விசேஷமான கீர்த்தியையடைந்து சைன்யபல பராக்கிரமங்களில் அதிசயமான வல்லமையைக் காட்டி, பொதுவாய்த் தற்கால நாகரிகத்துக்குற்ற சகலப் பிரவர்த்திகளிலும் ஊக்கமும் சாமர்த்தியமும் அடைந்து, ஐரோப்பிய தேசங்களுக்குச் சமமாக மதிக்கப்பட்டு வருகிறது. ஐரோப்பிய ஜாதியார்களும், அமெரிக்க

தேசத்தாரும் தாங்கள் வெள்ளைச் சனங்களானபடி
யால் தங்களுக்கொப்பாயினோர் இதர வருணச்சாதி
யினருள் இல்லையென்றும், தாங்களே உலகஜனங்க
ளனைவர்களுக்கும் தலைவர்களாகி அவர்களுடைய
பொருணிலை, தொழில், வர்த்தகம், அரசியல் ஆகிய
இவைகளைவகிக்கும் பொறுப்பாளிகளென்றும், அவர்
கள் தங்களுக்குக் குற்றேவல் செய்யும் உரிமையன்றி
வேறே எவ்விதச் சுதந்திரத்துக்கும் பாத்தியமுள்ள
வர்களல்லவென்றும், நினைத்திருக்கிறார்கள். ஐரோப்
பியரும் அமெரிக்கரும், ஆஸ்திரேலியா, தென்
னாப்பிரிக்கா முதலான விடங்களிற் குடியேறி
யிருக்கும் அவர்களினத்தாரும், வெள்ளைச்சாதியினர்க
ளென்றும், உலகத்து மற்றத் தேசங்களில் வசிக்
கும் இந்தியர், சீனர், ஜப்பானியர், பார்ஸீகர், மகம்
மதியர் இவர்கள் இதரவருணச் சாதியாரென்றும், இர
ண்டு பிரிவுகளாக இயற்கையாகவே அமைந்திருந்தும்,
வெள்ளைச்சாதியார்கள் தங்களுடைய சைன்னியபலத்
தாலும் சாஸ்திர அறிவாற் கற்ற தந்திரோபாயங்க
ளாலும், தொழில், வியாபாரம் முதலானவைகளிற்
காட்டிவரும் ஊக்கத்தாலும், மற்றச் சாதியார்களைக்
கீழ்ப்படுத்தி அவர்களது கீழ்ப்பட்ட சம்பந்தங்களால்
பல வகைகளில் ஊதியம் பெற்றுவருகிறார்கள். உலகத்
தில் ஜப்பானைத் தவிர, துருக்கி, ஈஜிப்டு, பெர்ஷியா, இந்
தியா, சீனா, ஆபிரிக்கா, தென்அமெரிக்கா, இன்னும்
சமுத்திரங்களில் அங்கங்குள்ள தீபாந்தரங்கள், இவை
களெல்லாம் ஐரோப்பியர் அல்லது அமெரிக்கரு



டைய மேற்பார்வையிலாவது அல்லது அதிகாரத்திற்
குட்பட்டாவ திருக்கின்றன. இந்த வெள்ளைச்சாதி
யார்கள் புகுந்து தங்களுடைய ஒருமையையாவது
அதிகாரத்தையாவது வியாபாரத்தையாவது ஸ்தாபிக்
காதவிடம் உலகத்திலெந்த மூலைமுடுக்கிலு மில்லை.
இவ்வாறு மேற்குத் தேசத்தார்களது வலிமை எப்பக்
கத்திலும் பெருகிவர, அவ்வெள்ளைச் சாதியார்களில்
சேராத ஜப்பான் தேசத்தார்மட்டும் தங்கள் சுவாதீ
னத்தைக் காப்பாற்றிவருவதுமன்றி அவர்களுக்குச்
சமானஸ்தர்களாக அங்கீகரிக்கப்பட்டும் வருகிறார்கள்.

சமீபத்தில் சீன தேசத்தில் பாக்ஸர்களென்ற
முரட்டுக்கூட்டத்தார் தங்கள் தேசத்தில் அன்னிய நாட்
டாரின் நடமாட்டம் கூடாதென்று வெறுத்து, அவர்
களைக் கொலைசெய்தும் இம்சித்தும் கலகங் கோலங்
கொண்டு கிளம்ப, ஐரோப்பிய ராஜாங்கத்தார் தங்
கள் தேசத்தாருக்கு நேரிட்ட கொடுமையையும் தங்க
ளுக்குண்டான அவமதிப்பையும் முனைந்துகொண்டு
பழிவாங்கும் நோக்கத்துடன் சீனர்கள்மீது சைன்னி
யங்களையனுப்பிப் பாக்ஸர்களை யுத்தத்தில் மடித்தன
ரன்றோ? அப்பொழுது ஜப்பானியரும் ஐரோப்பியச்
சைன்னியங்களுடன் சேர்ந்து போர்செய்து அவர்களை
விடப் போர்க்குணங்களிற் குறைந்தவர்களல்லவெ
ன்று கீர்த்திபெற்றார்கள். தரைச்சண்டையிலும் கடற்
சண்டையிலும ஜப்பானியர் காட்டின சாமர்த்தியத்
தை ருஷியரும் ஜர்மானியருங்கூடக் கண்டு வியந்து
புகழ்ந்தனர்.

ஐரோப்பிய நாகரிகம் குணகோளார்த்தப் பிரதேசங்களில் வியாபித்துக் கொடுக்கல், வாங்கல், வியாபாரம், தொழில் முதலியவைகளால் லாபகஷ்ட ஹேதுக்கள் ஏற்பட்டுவருகிறபடியால், ஐரோப்பிய ஜாதியார்களுக்குள்ளேயே போட்டியும் பொறாமையுமுண்டாகி, எவருக்கு விசேஷ லாபங்கள் கிடைக்குமோ வென்று அன்னோர் முயலும் நிலைமையில், ஜப்பான் தேசத்தினது சிநேகத்தாற் கிடைக்கக்கூடிய வலிமையாவது அதன் விரோதத்தாற் கிடைக்கக்கூடிய வலிக்குறைவாவது ஐரோப்பியர் அசட்டைசெய்யக்கூடியவர்களா யிருக்கவில்லை. இதை உத்தேசித்தே பிரிட்டிஷார் ஜப்பானியருடைய சிநேகத்தைக் கோரி அவர்களோடு சென்றவருஷ (1902) ஆரம்பத்தில் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

ஜப்பானை அடுத்திருக்கும் சீன ஏகாதிபத்தியம் பூர்வீக நாகரிகங்களையே பின்பற்றித் தற்கால ஐரோப்பிய நாகரிக முறைகளை அறியாமல், அறிவு ஒழுக்கத்தாலும் ராஜரீகச் சீர்கேடுகளாலும் கட்டுப்பாடின்மையாலும் தன்னைத்தானே காக்குஞ் சக்தியற்றுளது. ஆனதுபற்றி, அது ஐரோப்பியர்களுடைய பேராசைக்கு இரையாகக்கூடுமென்று தோன்றினதால், இந்த ஐரோப்பியர்களுள் எவர் எக்காலத்தில் மற்றச்சாதியார்கள் விழிப்புக் குறைவாயிருக்கிற சமயம்பார்த்துச் சீனாவைக் கட்டிக்கொள்ளுவார்களோ வென்று கவலைப்பட்டுச், சீன ஏகாதிபத்தியம் தற்காலம் எவ்வளவு



ன்தலையில் இருந்துகொண்டிருக்கிறதோ அதுவே எக்காலமும் நிலைநிற்குமென்னும், ஐரோப்பிய ராஜாங்கத்தார்கள் ஒத்துப்பேசிக்கொண்டிருக்கிறார்கள். இருந்தும், ஒரு ராஜாங்கத்தார் மற்ற ராஜாங்கத்தாரிடத்தில் நம்பிக்கையற்றவராகிப் பிற்காலத்தில் என்ன நடக்குமோவென்று அஞ்சிப் பிரிட்டிஷார் ஜப்பானியருடன் மேற்கண்டபடி உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறார்கள். சீனாவையும் ஜப்பானையும் அடுத்திருக்கும் ருஷியர் சீனாவின் வடபாகத்தைக் கட்டிக்கொண்டு சீனக்கடற்கரையில் தங்கள் வியாபாரத்துக்கும் கடற்போர் வசதிக்கும் ஒரு துறைமுகம் வேண்டுமென்று அதிலேயே கண்ணாயிருந்து வருகிறார்கள். இப்படியிவர்கள் செய்து நிறைவேற்றுவண்ணம் ஆங்கிலேயரும் அமெரிக்கரும் வெகு விழிப்புடன் கவனித்து வருகிறார்கள். ஆகையால் சீனாவும் அதையடுத்த கொரியாவென்ற மற்றொரு தேசமும் இப்போது அனுபவித்து வரும் சுவாதீனத்தை எப்போதுமே பெற்றிருக்க வேண்டுமென்பது ஆங்கிலேயரின் கருத்து.

இவ்வாறு மேற்றேசத்தாராகிய ஐரோப்பியர்கள் கீழ்த்தேசங்களை வசப்படுத்தும் முயற்சிகளில், ஜப்பான் தேசத்தின் சார்பை ஒரு பொருட்டாகக் கருதும்படியான பெருந் தகைமையைச் சென்ற 35 வருஷங்களுக்குள்ளாக அந்தத் தேசம் அடைந்திருக்கிறது. இத்தகைமையை அத்தேச மடைந்த வரலாற்றை இந்திய ரசிகர் அறியுமென நினைத்து

நாம் இந்த ஜப்பான் தேசத்தின் தற்கால சரித்திரத்தைச் சுருக்கமாய் எழுதப்புகுந்தோம்.

ஜப்பான் ஏகாதிபத்தியம் ஸ்தல விஸ்திரணத்திலும் ஜனத்தொகையிலும் இந்தியாவை விட மிகக் குறைந்தது. அது பல தீவுகள் ஒரே ராஜாங்கத்துக்குள்ளடங்க அமைந்துள்ளது. இவ்வாறு உள்ளடங்கிய தீவுகள் 411 எனப்படுகின்றது. ஸ்தல விஸ்திரணம் சுமார் 1,50,000 சதுர மைல். அதாவது இந்தியாவின் ஸ்தல விஸ்திரணத்தில் பத்தில் ஒன்று. ஜனத்தொகையோ சுமார் 43,80,000. அதாவது சென்னை ராஜதானியிலுள்ள ஜனத்தொகை (38,00,000) யைவிடக் கொஞ்சம் அதிகம். ஆகிலும் ஜனங்கள் மிகவும் நெருங்கி வசிக்கிறார்கள். சென்னை ராஜதானியில் ஒரு சதுரமைல் விஸ்திரணத்தில் சராசரி 270 பேருக்குமேல் வசிக்காமலிருக்க, ஜப்பான் ஏகாதிபத்தியத்தில் சதுரமைல் ஒன்றுக்கு 880 ஜனங்கள் வசிக்கின்றனர். ஆகையால் உலகத்திலுள்ள எத்தேசத்தையும்விட ஜப்பான் அதிக ஜனநெருக்கங் கொண்ட தேசம். இந்தியாவைப்போல அதுவும் விவசாயமே ஜனங்களுக்கு முக்கிய ஆதாரமாகக் கொண்டது. சென்னை ராஜதானியானது ஜப்பானைவிட அதிக விஸ்தாரமுள்ளதாகிலும் வட இந்தியாவிலும் ஐரோப்பிய தேசங்களிலும் இருப்பதைப்போல இங்கு வியாபாரங்கள் மும்முரமாய் நடந்து தொழில்களும் சுறுசுறுப்பாய் நடத்தப்படுகிற பட்டணங்களில்லை. லக்ஷம் ஜனங்களுக்குமேல் வசிக்கும் பட்-



டணங்கள் இச்சென்னை ராஜதானியில் மூன்றுக்குமேல் இல்லை. அவ்வாறே ஜப்பான் ஏகாதிபத்தியம் முழுமையிலும் லக்ஷம் ஜனங்களுக்குமேல் வசிக்கும் பட்டணங்கள் எட்டேயுள. ஜனங்கள் அதிக நெருக்கமாக வசித்தாலும் நம் தேசத்திலெப்படியோ அப்படியே, ஜனத்தொகை இவ்வருஷத்தில் நூறாயிருந்தால் அடுத்த வருஷம் நூற்றொன்றேகாலாகப் பெருகிவருகின்றது. இவ்வாறு பெருகிவருவதால் காலாந்தரத்தில் ஜனங்களுக்கு வேண்டிய அளவு விவசாயத்தால்மட்டும் ஜீவனம் கிடைக்காமற் போகும். நமது தேசத்திலும் இக்காரணத்தினால் ஜனங்களுக்கு ஜீவனோபாயங்கள் குறைந்து வருகின்றனவல்லவா! ஆனால் ஜப்பானில் வியாபாரம் வர்த்தகங்களும் கைத்தொழில்களும் வெகு தீவிரமாய்த் தற்காலத்தில் பெருகிவருகிறபடியால், விவசாயத்தாற் கிடைக்கிற ஜீவனோபாயத்தைத் தவிர மேற்கண்டபடி உள்நாட்டு வர்த்தகமும் அயல்நாட்டு வர்த்தகமும் இருந்து கைத்தொழில்களும் புதிதுபுதிதாய்ப் பெருகிவருவதால் ஜனங்களுக்குள் மென்மேலும் பொருட்பெருக்குண்டாகிப் பல துறைகளிலும் அவர்கள் சீர்ப்பட்டு வருவார்களென்பது நிச்சயமாகச் சொல்லப்படுகின்றது.

# CHAPTER II.

## இரண்டாம் அதிகாரம்.

*பௌத்தமதம் இந்தியாவிற் பிறந்தது—பௌத்தமதக் கொள்கைகள்—அதன் பரப்பும், தேய்வும் மறைவும்—பௌத்தமதம் அந்நிய தேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டது—ஜப்பானுள் அது புகுந்து வளர்ந்த வரலாறு.*

இந்த ஜப்பானியர் பௌத்த மதத்தை அநுஷ்டிக்கிறவர்கள். பௌத்த மதம் நம் தேசத்தில் சுமார் 2,600 வருஷங்களுக்கு முன் வட இந்தியாவில் தற்காலம் அஸாம் எனப்படுகிற பிரதேசத்தில் சேர்ந்திருந்த கபிலவஸ்து என்கிற க்ஷத்திரிய ராஜ்யத்துக்கு அரசனாயிருந்த ஒரு பெரியவரால் ஸ்தாபிக்கப்பட்ட மதமென்று நம்மனோர் அறிவர். இவர் சக்கியமுனியென்றும், பிற்பாடு பௌத்த முனி என்றும் சொல்லப்பட்டுத், தசாவதாரங்களில் ஒன்பதாவது அவதாரமாக ஏற்கப்பட்ட கௌதம ஆரிய வம்சத்தில் உதித்தவர். இந்த மதமானது ஆரிய தேசத்தில் சிந்து, கங்கை, யமுனை, நர்மதா, தப்தி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, இப்பேர்ப்பட்ட புண்ணிய நதிகள் பாயும் எப்பாகங்களிலும் மற்றப் பாகங்களிலும் பல்லாண்டுகள் பிரபலமாக வியாபித்திருந்து, அந்த மதத்தின் பற்பல கோட்பாடுகளையும் ஆசாரங்களையும் இந்து மதாசாரியர்கள் பிற்காலங்களில் அங்கீகரிக்க, நமது மதாசாரங்களில் அவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றமையால், அந்தப் பௌத்த மதத்தின் பூர்விக சரித்திரத்தையும் நம்மவர்கள் ஒருவாறு அறிதல் தகுதியாமென்போம். ஆயினும், இந்தச் சிறு புஸ்தகத்



தில் அதைப்பற்றி விஸ்தாரமாய் வரைதல் அமையாததுபற்றி யொருவாறு சுருக்கியுரைப்போம்.

இந்த மதம் இந்தியாவில் 1500வருஷக்காலம் பற்பல இடங்களில் அநுஷ்டிக்கப்பட்டு வந்தது. ஆதியில் பௌத்த முனிவர் காலத்திலும் பிறகு அவர் சிஷ்ய பரம்பரையினரின் காலத்திலும் இது வெகு மும்முரமாய் ஜனங்களுக்குப் போதிக்கப்பட்டு இந்து மதாசாரங்களிற் பற்பல வேற்றுமைகளுக்குக் காரணமாயிருந்தது. அநேக அரசர்கள் இந்த மதத்தை ஆதரித்ததால் அது பிரஜைகளுக்குள்ளும் பரவலாயிற்று. பௌத்தர்கள் நமது வேதங்கள் அநாதியென்றாவது ஸத்தியமென்றாவது நம்புகிறவர்களல்லர். ஆயினும் உலகம் மாயையென்றும், சம்சாரம் துக்கஹேதுவென்றும், லௌகீக சுகதுக்கங்களில் பற்றின்மையே ஜன்ம சார்த்தக ஹேதுவென்றும், ஆத்மாவுக்குப் பல ஜன்மங்களுண்டென்றும், தர்மாநுஷ்டானத்தினாலேயே மறுபிறப்பு ஒழிந்து முடிவில் நிர்வாணம் சித்திக்கிறதென்றும், இவ்வாறு நமது வேதாந்த சாஸ்திர உண்மைகளையே பற்றினவர். ஆயினும் விக்கிரகாராதனை, வர்ணாசிரம பேதங்கள், யாகயக்ஞாதி சில நித்திய நைமித்திக வைதிக கருமங்கள், இவைகளை அம்மதம் ஆதரிக்காமல் விரோதித்தபடியால், பௌத்த மதம் வேறாகவும், வைதிகமதம் வேறாகவும் தனித்து வழங்கின. சில அரசர்கள் பௌத்த மதத்தையும் சில அரசர்கள் வைதிகமதத்தையும் பரிபாலித்ததால், மற்ற மேனாடுகளில் மதபேதங்களாற் சண்டை, சச்சரவுக

ளுண்டாகி உயிர்ச்சேதம் பொருட்சேதம் நேரிட்டது போல, நேரிடாமற் சமாதானமாகவே அவை யிருந்து வந்தன.

சுமார் 2200 வருஷங்களுக்கு முன், அதாவது பௌத்தமதம் சாக்கிய முனிவரால் ஸ்தாபிக்கப்பட்டு 250 வருஷங்களுக்குப் பிறகு, மகத தேசத்தை யாண்ட அசோக சக்கிரவர்த்தி வைதிக மதத்தைவிட்டுப் பௌத்தமதத்தை மேற்கொண்டு அதையே வெகு பிரபலமாக்கி வந்தனர். மதுமாம்சாதிகளை உண்ணலும், யாகயக்ஞங்களில் பசுக்களைக் கொல்லலும், தேவதைகளுக்குப் பிராணிகளைப் பலி கொடுத்தலும், கீழ்ச்சாதிகளைக் குரூரமாய் நடத்தலும், ஸ்திரீ ஜாதிகளுக்குச் சன்னியாசம் முதலான நிவர்த்தி மார்க்கங்கள் தகாதனவென வருத்தலுமாகிய இவ்வாசாரங்கள் பிராம்மண மதஸ்தருட் சாமானியமாயக்காலத்தி லிருக்க, அவற்றை இந்தப் பௌத்த மதங் கண்டித் தடக்கிற்று. ஆகையால் பிராம்மண பௌத்த மதங்களுக்குள் வேற்றுமை முற்றிப் பௌத்தமதம் தலையெடுத்தல் வைதிக மதத்துக்கே கேடாய் முடியுமெனவறிந்த பிராம்மண க்ஷத்திரிய சிரேஷ்டர்கள், பூர்விக ஆசாரங்களைப் பௌத்த மதத்துக்கிசைய ஒருவாறு மாற்றி, யெப்போதும்போலச் சனங்களுக்கு வைதிகமதத்தி லபிமானம் பிறக்கும்படி செய்யப் பார்த்தனர். ஹிந்து மதாசாரிய சிரேஷ்டர்களான சங்கரர், ராமானுஜர் முதலியவர்களும் பௌத்தர்களோடு வாதப்பிரதிவாதங்கள் செய்து பிராம்மண மதத்தை அங்கங்கு ஸ்தாபித்தனர்.



இப்படி யிருக்கப் பௌத்த மதத்தினரும் வரவரத் தம்முள் பற்பல பிரிவுகளை யேற்று நீசாசாரங்களைப் பின்பற்றி லௌகிகப் பெருமையையும் ஆசைகளையும் கோரினவர்களாயினர். பௌத்தமதப்படி சன்னியாசமே விசேஷ மார்க்கமாகக் கொள்ளப்பட்டிருந்தபடியால் லக்ஷக்கணக்கான ஜனங்கள் சமுசார வாழ்க்கையைத் துறந்து ஊருக்கு வெளியே ஸ்தாபிக்கப்பட்டிருந்த மடங்களில் வசித்துப் பிக்ஷையெடுத்துப் புசித்துவர, தேசத்தில் பொருளீட்டலுக்குச் சாதகங்களான பற்பல தொழில்களைச் செய்கிறவர்களிருப்பினும் ஆதரிக்கிறவர்க ளிலராயினர். பௌத்த சன்னியாசிகளும் தங்கள் ஒழுக்கங் குன்றித் தங்க ளாசிரம தர்மங்களைவிட்டு லௌகிக வின்பங்களை நாடி நல்லோர் மனதில் வெறுப்பை யுண்டாக்கினர். இவ்வாறு இந்த மதம் வரவரச் சீர்கெட்டுப் போனபடியாலும், ஹிந்து மதாசாரியர்களின் பிரயத்தனங்களால் பிராம்மண மதம் ஓங்கத்தலைப்பட்டபடியாலும், பௌத்தமதம் வரவர சனஸ்திதியை யடைந்திருந்த நிலையில், தற்காலத்துக்குச் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன் மகம்மதியர்களும் பிறநாடுகளிலிருந்து இந்தியாவின் மீது படையெடுத்துவர வாரம்பித்தனர். மகம்மதியர்கள் அன்னியமதத் துவேஷிகளானதால், இந்தியாவில் தங்கள் ஆட்சியை நிலைபெறுவிக்கவும், தங்க ளியல்புக்குற்றவாறு ஹிந்து பௌத்த மதஸ்தர்களை விரோதித்து, அவர்களின் ஸ்தாபனங்களை யழிக்கவும் தலைப்பட்டனர். அக்காலந் தொடங்கிப் பௌத்தமதம் நமதிந்தியா

தேசத்தில் வரவர க்ஷீணமுற்றுக் கடைசியில் முற்றிலுமே மறைந்து போயிற்று.

தற்காலம் இந்தியாவில் 71,30,000 பௌத்தமதத்தினர்களிருப்பதாகக் கணக்கிடப்படுகிறது. ஆயினும் முற்றிலும் பௌத்தர்களேயாகிற பர்மா தேசத்தார் 69 லக்ஷம் ஜனங்களையும் கழித்துப் பார்த்தால், இந்தியாவிலிருக்கும் பௌத்தர்களின் தொகை 2,30,000த்துக்கு மேலில்லை. இவர்கள் பெரும்பாலும் வங்காளம், ஆஸாம், ஆண்டமான் தீவுகள், காஷ்மீரம் இவைகளில் வசிப்பவர்கள். சென்னை ராஜதானியில் மட்டும் 1,056 பௌத்தர்களிருக்கிறார்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. பௌத்தமதம் இந்தியாவில் சிறப்புற்றிருந்த காலத்தில் பௌத்தமதாசாரியர்கள் அன்னிய தேசங்களுக்குச் சென்று அங்கங்கு இந்த மதத்தை ஸ்தாபித்தனர். சிலோன், பர்மா, ஸையாம், கம்போடியா, சுமத்திரா ஜாவா தீவுகள், டிபட், சைனா, கொரியா, ஜப்பான், என்ற கிழக்குத் திக்கிலுள்ள இத் தேசங்களிலும், இந்தியாவுக்கு மேற்குத் திக்கிலுள்ள ஆப்கானிஸ்தான், பர்ஷியா, ஈஜிப்டு முதலான தேசங்களிலும் இந்த மதமானது போதிக்கப்பட்டு வந்ததுமன்றி, அங்கும் பிற்காலத்தில் புதிதாக மதப்பிரதிஷ்டை செய்தவர்களுடைய கொள்கைகளை ஒருவாறு வேற்றுமைப்படுத்தியும் வந்தது. கிறிஸ்துமதமும் மகம்மதியமதமும் இத்தேசங்களில் பிற்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டுப் பிரபலமானபடியால், பௌத்தமதாசார அடையாளங்கள் ஒன்றுமிப்பொழுது காணப்படு



கின்றனவல்ல. ஐரோப்பியர்கள் அனுஷ்டித்து உலகெங்கும் பரவிவரும் கிறிஸ்துமத ஸ்தாபகரான ஏசு கிறிஸ்து பௌத்த மத தருமங்களை யறிந்திருந்தவரென்று அபிப்பிராயப்படும் கல்விமான்கள் இப்போது சிலருளர். ஆயினும் தற்காலம் சிலோனிலும் மேற்குறிக்கப்பட்ட மற்றக் கிழக்குதேசங்களிலும் இந்தப் பௌத்தமதமே முக்கிய மதமாகச் சுமார் 40 கோடி ஜனங்களுக்குமேல் இதை யனுஷ்டித்துவருகிறார்கள்.

சுமார் 1350 வருஷங்களுக்கு முன் ஜப்பானுக்கடுத்த கொரியா ராச்சியத்திலிருந்து ஜப்பான் தேசத்திற்கு வந்திருந்த ராஜதூதர் ஒரு பௌத்தமதப் பிரதிமையையும் பௌத்தமதத் தருமங்களை யனுசரிக்கும் சில நூல்களையும் ஜப்பான் சக்கிரவர்த்திக்கு வெகுமதியாகக் கொடுத்தனர். அக்காலத்தில் சீனா, கொரியா இத்தேசங்களிற் பௌத்தமதம் ஏற்கெனவே ஸ்தாபிதமாகி, அந்த இரண்டு தேசங்களும் பொதுவாய் நாகரிகத்தில் மேம்பாடு பட்டவைகளாகக் கருதப்பட்டபடியால், அங்கு என்ன ஸ்தாபனங்கள் நிலைபெற்றிருக்தனவோ அவைகள் தாங்களும் ஏற்கத்தக்கனவென்று கம்பும் ஸ்திதியில் ஜப்பானியரிருந்தனர். சக்கிரவர்த்தியும் அவருடைய மந்திரிகளிற் சிலரும் இந்தப் புது மதத்துக்குச் சார்பாக விருந்தனர். ஆகிலும், எந்தேசத்திலாயினும் கடின ஆசாரங்கள், முக்கியமாய் மத விஷயமான வேற்றுமைகள், பொதுவாய் விரோதத்தைக் கிளப்பக்கூடியனவேயன்றி உடனே அங்கீகரிக்கப்படுவன வல்லவாகையால், இந்தப் பௌத்த

மதமும் ஆரம்பத்திற் சாமானிய ஜனங்களிடமும், மேற்குலத்தோர் உத்தியோகஸ்தர் இவர்களிடமும், விரோதத்தையே பெற்றுவந்தது. ஆயினும் காலக்கிரமத்தில் கொரியாவுக்கும் ஜப்பானுக்கும் போக்குவரத்து அதிகப்படக், கொரியாவினின்றும் பௌத்த மத சம்பந்தமான கல்வியும் அதன் பெருமையும் ஜப்பானிற் பெருகிவந்தன. சக்கிரவர்த்தியும் மேற்குலத்தோரும் அதைப் பலமா யாதரிப்பாராயினர். இந்தியாவில் எவ்வாறு அசோக சக்கிரவர்த்தி ஆரிய மதானுஷ்டானபரராயிருந்து பிறகு பௌத்த மதத்தைத் தழுவி அதை இந்தியா முழுமையிலும் பிரபலப்படச் செய்தனரோ, அவ்வாறே ஜப்பானில் ஷோடோகு தாயிஷி என்ற அரசர் பௌத்தமதத்தை நிலைநிறுத்தினர். ராஜாங்கமே இந்த மதத்தை யாதரிக்கத் தலைப்பட்டபடியால், அது ஜனங்களுக்குள் பரவுவதற்கு அவசியமான கருவிகளும் சாதனங்களும் சொற்பக் காலத்தி லுண்டாய்வந்தன. ராஜாவும் ஒரு பௌத்தரைக் கொரியாவிலிருந்து வரவழைத்துத் தமக்கு ஆசாரியராக நியமித்துக்கொண்டு, அவரிடம் திருடல், பொய்சொல்லல், கள்ளுண்டல், கொலை, விபசாரம் ஆகிய இவை பஞ்சமா பாதகங்களென்று உபதேசம் பெற்றனர். பௌத்தப் பிரதிமைகள் பல செய்வித்துச் சிறப்பான உற்சவங்கள் நடப்பித்தனர். ஜப்பானிற் பற்பலவிடங்களில் ஆலயங்கள் கட்டப்பட்டன. இந்த ஷோடோகு தாயிஷி கிறிஸ்து பிறந்த 622-ஆம் வருஷம் இறக்க, இவருக்குப் பிறகு வந்த சக்கிரவர்த்திகளும் இந்த மதத்தை மிகு பக்தி சிரத்தையுடன் பரிபாலனம் செய்துவந்தபடியால், ஜப்பானியரது குணவிசேஷங்கள், சாஸ்திரங்கள், கலைகள், தொழில்கள் முதலியனவும், பொதுவாய் நாகரிகமும் பௌத்த மதானுஷ்டானச் சார்பு கொண்டனவாய் வளர்ந்துவந்தன.

## CHAPTER III.

## மூன்றாம் அதிகாரம்

சிற்றரசர்கள் [illegible], ஜப்பானிலும், இந்தியாவிலும்,— ஜப்பான் அரசாட்சி [illegible] — கிறிஸ்து மதப் பிரவேசமும் — [illegible] — கொரியாவின் மேற் படையெடுத்ததும் அதின் [illegible], [illegible] போர்க்களங்களும் முயற்சிகளும், [illegible] இரட்டை ராஜாங்கமுறை — [illegible] அவர் குணவிசேஷங்கள்.

பூர்வகாலங்களில் உலகில் எத்தேசத்திலும் அரசன் ஒரு நாயகனாயிருப்ப, அவனைச் சுற்றி, நமது தேசத்திய பாளையக்காரர்கள் [illegible] போலப், பல சிற்றரசர்கள் தோன்றி அவனுடைய ஆதரவைப் பெற்று அவனுக்கு வேண்டிய சமயங்களிற் பொருள் சைன்னியம் முதலியவைகளைக் கொடுத்துதவி வந்தனரென்பது சரித்திர சித்தாந்தமாகச் சொல்லக்கூடும். அவ்வாறே ஜப்பானிலும் சக்கிரவர்த்தியொருவர் ஏகாதிபத்தியத்தின் பரிபாலகராக ராஜஸ்தானத்தில் விளங்கினும், அவருக்குச் சமீபத்திலும் தூரமான உள்பிரதேசங்களிலும் சிற்றரசர் பலர் கிளம்பினார். இவர்களும் தங்கள் பிரஜைகளிடம் வரி வாங்கிச் சைன்னியங்கள் சேர்த்துக் கோட்டைகள் கட்டி நீதிபரிபாலனம் முதலிய ராஜகிருத்தியங்கள் செய்துவந்தார்கள். சில சமயங்களில் இவர்களி லொவ்வொருவர் [illegible] காட்டியும், பலவாறுபட்ட அக்கம்பக்கத்துச் சிற்றரசர்களைப் பயப்படுத்துவதன்றிச் சக்கிரவர்த்தியையே தமக்கு அடிமையாக்கியும் வந்தனர். இவ்வாறு 12-ஆம் நூற்றாண்டின்

கடைசிப்பாகத்தில் யோரிடோமோ வென்ற சிற்றரசன் வெகு பிரபலஸ்தனாகி சக்கிரவர்த்தியைத் தன் வசப்படுத்தி, அவர்பேரால் தானே உண்மையாய்ச் சக்கிரவர்த்திபோலச் சகல ராஜாங்க அதிகாரங்களையும் செலுத்திவந்ததோடு, அக்காலமுதல் 1868-ஆம் வருஷத்தில் நேரிட்ட கலகம்வரையில், சுமார் 700 வருஷம், இவன் சந்ததியாரே உண்மையான சர்வ அதிகாரத்தையும் செலுத்தப் பெருக்குமாத்திரம் ஓர் சக்கிரவர்த்தியைச் சிம்மாசனத்திலமர்த்தல் ராஜாங்க முறையாகக் கொள்ளப்பட்டு வந்தது.

இவ்வாறே இந்தியாவிலும் நடந்ததுண்டு. மொகலாயச் சக்கிரவர்த்திகள் டெல்லி நகரில் ஏகாதிபத்தியம் ஸ்தாபித்து, அநேகமாய் இந்தியாதேசம் முழுமையையும் ஏகாதிபத்தியத்துடன் சேர்த்து, அவர்களது சிறப்பும் பெருமையும் ஐசுவரியமும் கீர்த்தியும் உலகெலாம் பரவ ஆண்டுவந்தபோது, 17-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மொகலாய சக்கிரவர்த்தியாகிய அவுரங்கசீப் மகமதிய மதத்தில் அடங்காத அபிமானம் வைத்து ஹிந்துக்களை ஹிம்சிக்க ஆரம்பிக்கவே, அவர் காலத்திலேயே அந்த மொகலாய வம்சத்தாரின் அதிகாரமும் பலமும் ராஜ்ய விஸ்தீரணமும் குன்றினபின், அவுரங்கசீபுக்குப் பிற்கு சக்கிரவர்த்தியாக வந்த அவர் சந்ததியார் ஏகாதிபத்தியத்திற் பலபாகங்களிலுண்டான கலகங்களையடக்கி அதிகாரத்தை ஸ்தாபித்து ஒருங்கே அரசியற்றச் சாமர்த்திய மற்றவர்களாக, வரவரத் தென்னிந்தியா நீங்கலாக ஏறக்குறைய இந்தியாமுழுமையு மடங்கியிருந்த மொகலாய ஏகாதி



பத்தியம் சுருங்கிக், கடைசியில் 18-ம் நூற்றாண்டின் மத்தியில் டெல்லிநகரமும் அதைச்சுற்றின சில ஸ்தலங்களுமே உண்மையில் மொகலாய ஏகாதிபத்தியத் திருந்தன; மொகலாய சக்கிரவர்த்தி, தனக்கு மந்திரிகளாக ஏற்பட்ட சைன்னியபதியும் செல்வாக்குங் கொண்ட பலவான்களுக்கு அடிமையாகி, அப்பலவான்களே நினைத்தபோது சக்கிரவர்த்தியை நியமிப்பதும் நீக்குவதுமாக, மொகலாய ஏகாதிபத்தியம் இருந்தவிடம் தெரியாம லழிந்தது. இந்த மொகலாய ஏகாதிபத்தியத்திற் போலவே மைசூர் சமஸ்தானத்திலும் 17,18-ம் நூற்றாண்டுகளில் சம்பவித்தது.

வெகு காலமாக மைசூரை இந்து அரசர்கள் ஆண்டுவர 17-ம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் தோன்றின மகம்மதியர்களின் அதிகாரப் பெருக்கை மைசூரரசன் எதிர்க்க நேரிட்டபோது, ஹைதராலி என்ற ஓர் சிராணுவவீரன் தனது சாமர்த்தியத்தாலும் சூதினாலும் தான் அரசனது ஊழியனாக நடத்திவந்த சைன்னியங்களைத் தன் வசப்படுத்தி அரசனை அடிமையாக்கி ஒரு மூலையில் ஒதுக்கினான். ஹைதராலி காலமெல்லாம் அரசன் அந்த நிலைமையிலேயே வைக்கப்பட்டிருந்ததுமன்றி, ஹைதராலி இறந்தபிறகும் அவன் மகன் திப்புசுல்தான் மைசூர் ராஜ்யத்துக்கு அதிபதியாக நியமிக்கப்பட்டானேயன்றி ஹிந்து அரசனுக்கு ஹைதராலிவைத்த நிலைமையினின்றும் விமோசனம் கிடைக்கவில்லை. திப்புசுல்தான்

பிரிட்டிஷாரோடு யுத்தஞ்செய்து யுத்தத்தில் உயிரையிழந்து மைசூர் சமஸ்தானத்தைப் பிரிட்டிஷாரே கட்டிக்கொண்டபொழுது அதைப் பழைய ஹிந்து ராஜவம்சஸ்தரும் அப்போது வாலிபருமாயிருந்த மஹாராஜா கிருஷ்ணராஜ உடையாருக்கு ஒப்புவித்தனர். அக்கிருஷ்ணராஜஉடையாரினுடைய பேரனே தற்காலத்தில் மைசூர் சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றனர்.

இவ்வாறே ஜப்பான் தேசத்திலும் சக்கிரவர்த்தியை ஒருமூலையிலிருத்திப் பேர்மட்டும் அவரதாயிருக்க யோரிடோமோவினுடைய வம்சஸ்தர்களும், அவனுடைய வம்சம் அற்றுப்போன பிறகு அவனுக்குப் போட்டியாக வெகுகாலம் போராடிக் கொண்டிருந்த மற்றொரு பலவானுடைய வம்சஸ்தர்களும், அவ்வாறே அப்போதப்போது எவன் பலவானாகக் கிளம்பித் தன் அதிகாரத்தை ஸ்தாபிக்க வல்லவனாயிருந்தானோ அவன் வம்சஸ்தர்களும் ஷோகூன் என்கிற பட்டம் பெற்று ஜப்பானை ஆளுவோர்களாயினர்கள். இப்படியாளுவோர்களானவர்கள்கூடக் காலவளவில் ராஜாங்க அதிகாரத்தைத் தங்கள் வசமே வைத்துக்கொள்ளாமல் பேரைமட்டும் வைத்துக்கொண்டு, சர்வ அதிகாரங்களையும் சுற்றி நெருக்கித் தம்மை வசப்படுத்தின பலவான்களுக் கொப்புவித்து, அப் பலவான்கள் தங்களிஷ்டப்படி நியமிப்பதும் நீக்குவதுமாக ஷோகூன்களின் நிலைமை யிகழ்ச்சிக் கேதுவாயிற்று. இவ்வாறு சக்கிரவர்த்தியும் முற்றிலும் அதிகாரமிழந்தவராய் ஷோகூனும் அவ்வாறே தாழ்மைப்



பட்டு நிலைபான ராஜாங்கமில்லாமற் போனபடியால், ஜப்பான் தேசத்தில் அங்கங்கே ராணுவத் தலைவர்களாயேற்பட்டிருந்தவர்கள் பலவான்களாகித் தங்கள் சைன்னியங்களை ஆதரிக்கும்பொருட்டுப் பயிரிடுங் குடிகளை வருத்திப் பொருள் பறிப்பவர்களானார்கள். தேசத்தின் ஸ்திதி இவ்வாறு நிலைபற்றுக் கலங்கிக் கிடந்த போதிலும், இபல்பாகவே சாந்தகுணமுடைய ஜனங்கள் அதிகாரிகளிடத்தில் பயம் வைத்தவர்களாயிருந்தபடியால் அமரிக்கையாகவே ஜீவித்து வந்தார்கள். வந்தும் கிருஷித்தொழிலாவது மற்றக் கைத்தொழில்களாவது செழிக்க வகையற்று ஜனங்கள் மகா தாரித்திரர்களாய்விட்டார்கள்.

இப்படியிருந்த நிலைமையில் இந்தியாவில் மொகலாய ஏகாதிபத்தியம் பலங்குன்றிப் பங்காளம், அயோத்தி, கூர்ச்சரம், ஹைதராபாத், கர்னாடகம் முதலான பிரதேசங்களை மொகலாய சக்கிரவர்த்தியின் பேரால் ஆண்டு வந்த நவாபுகள் எங்ஙனம் சக்கிரவர்த்தியின் அதிகாரத்தை உதறி ஸ்வாதீனஸ்தர்களாக ஆட்சி புரிந்து வந்தார்களோ, அவ்வாறே ஜப்பானில் சக்கிரவர்த்தி யொருவரிருந்தும் அவரை மீறி ஷோகூனென்கிறவர்கள் ஏற்பட்டும், அவர்களையும் மீறி அங்கங்கே உள்நாடுகளில் மாகாணங்களுக்கு நிர்வாகஸ்தர்களாக நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகஸ்தர்கள் சுவாதீனஸ்தர்களாயும், அவரவர் மாகாணத்தை அவரவருடைய சொந்த ராஜ்யம் போல ஆண்டுவந்தார்கள். 1568ம் வருஷத்தில் நோபுநாகா வென்றவொரு பலவான்

ஷோகன்பட்டரிக்கும் பிரதிநிதியாகச் சக்கிரவர்த்
தியால் நியமிக்கப்பட்டுத், தன்னுடைய சைன்னிய பலத்
தாலும் தைரியத்தாலும் சர்வ அதிகாரத்தையும் தன்
கையில் பெற்று ஜப்பான் தேசமுழுமையையும் தன்
னதிகாரத்துக் குட்படுத்தித் தானே சக்கிரவர்த்தியாய்
ஆளவேண்டுமென்ற பேராசையுள்ளவனாகித், தன்னை
யெதிர்த்த மற்றத் தலைவர்களுடன் போர் புரிந்து,
கடைசியில் 1582-ம் வருஷத்தில் இவனை ஒரிடத்தில்
இவன் விரோதிகள் மடக்கி வளைத்துக்கொள்ளத்
தானிருந்த கட்டிடத்தைச் சுற்றி நெருப்பை வைத்து
விட்டுத் தற்கொலை செய்துகொண்டான்.

இவன் காலத்தில் ஸேண்ட் ஜேவியர் (St. Xaviers) என்ற உலகப் பிரசித்தரான கிரஸ்துவ மதா
சாரியார் ஜப்பானில் வந்திருந்து அனேக ஜனங்களைக்
கிரஸ்துவர்க ளாக்கினது மன்றி, மாகாணத் தலைவர்
களான சிற்றரசர்களும் தம்மதத்தைத் தழுவச் செ
ய்து, "போப்" எனப்படும் லோககுரு வீற்றிருக்கும்
ரோமாபுரிப் பீடத்துக்கு இச்சிற்றரசர்களிற் சிலரை
யனுப்ப, அங்கே போப்பாசாரியர் இவர்களை வெகு
மரியாதையா யுபசரித்து வெகுமதிகளுடன் விடுத்த
னர். நோபுநகா காலத்திலே எப்படி இந்தக் கிர
ஸ்துவர்கள் இவர் சார்பு பெற்றுச் செழித்து வந்தார்
களோ, அப்படியே அவர் காலத்துக்குப் பிறகும் அவர்
மந்திரியாகவே பேராசையும் சைன்னியபலமும் கொ
ண்ட ஹிதேயோஷி காலத்திலும் கிரஸ்துவர்கள் நற்
காலம் பெற்றவர்களாய்ச் செழித்து வந்தார்கள்.



இப்படியிருக்க, ஸெண்ட் ஜேவியரால் ஸ்தாபிக்கப்
பட்ட கிரஸ்துமதப் பிரவர்த்தனையானது ஸ்பெயின்
தேசத்திலும் போர்த்துகல் தேசத்திலு மிருந்த மற்றக்
கிரஸ்துவ வகுப்பார்களின் பொறாமையைத் தூண்டி
விட்டது. போர்த்துகீயர்கள் ஏற்கெனவே ஜப்பானு
டன் விசேஷமாய் வியாபாரஞ்செய்து வந்ததைப் பார்
த்து ஸ்பெயின் தேசத்தார் பொறாமைப்பட்டு அப்
போது ஸ்பெயின் தேசத்துக் குட்பட்டிருந்த பிலிப்
பைன் தீவுக்கு முக்கியப் பட்டணமாகிய மனிலாவி
லிருந்த ஸ்பானியத் தலைவர் ஜப்பானுடன் வியாபாரம்
செய்ய அநுமதி கேட்டுத் தூது விடுக்க ஹிதேயோஷி
யும் அநுமதி கொடுத்தனர். உடனே ஸெண்ட் ஜேவி
யரைச் சேர்ந்த கிரஸ்துவர்களுக்கும் ஸ்பானியர்களுக்
கும் விரோதம் நேரிட்டு, ஒருவர் பேரில் மற்றொரு
வர் ஹிதேயோஷி காதிலோதின அவதூறுகளால்
ஹிதேயோஷிந்து இந்தக் கிரஸ்துவர்கள் கேவலம்
மதப்பரப்பின் நோக்கமாய் வந்தவர்களல்லரென்றும்,
கடைசியில் ஜப்பானையே தங்கள் வசமாக்கி ஆள
வேண்டுமென்ற கருத்துக் கொண்டவர்க ளென்
றும், சந்தேக முண்டாயிற்று. "என் பிரபுவாகிய அர
சன் அயல் ஜனங்களை வசப்படுத்துமாறு முதலில் மதா
சாரியரையனுப்பி அவர்களைக் கிரஸ்துவர்களாக்கிப்
பிறகு துருப்புகளை யனுப்பி அக்கிரஸ்துவ ஜனங்களு
டன் சேர்ந்து தேசத்தையே சுலபமாய் வென்று விடு
வாரென்று" போர்த்துகீயக் கடற்றலைவன் 1587-ம்
வருஷத்தில் சொன்ன சில வார்த்தைகள் இச்சந்தேகத்

மை உண்மைப்படுத்த, அதை ஹிதேயோஷி மனதில்
ஆழச்சிந்தித்து, அந்தப் பிரசங்கிகளைத் தன் தேசத்
தில் ஒரு நிமிஷமேனு மிருக்க விடுவது பேராபத்தாக
முடியுமென்று நிச்சயித்து, 20 நாட்களுக்குள்ளாக ஜப்
பானிலிருக்கும் அன்னிய மதாசாரிகளில் எவராகு
லும் ஜப்பானைவிட்டுப் போகாமலிருந்தால் அவர்
கொலை செய்யப்படுவாரென்று கண்டிப்பான உத்
தரவு பிரசுரம் செய்தார். அந்த உத்தரவுப்படி
அநேக மதாசாரியர்கள் நீங்கின போதிலும்,
1593-ம் வருஷத்தில் இவர்களில் அறுவர் அகப்
பட்ட அவர்கள் நாகசாக்கி யென்ற ஜப்பான் துறை
முக மொன்றுக்குக் கட்டிக்கொண்டு போகப்பட்டு
அங்கு தீக்கிரையாக்கப்பட்டார்கள். ஜப்பானில் கிறிஸ்
து மதத்தை வேரறுக்க வேண்டுமென்ற எண்ணத்
துடன் அம்மதத்தாரைக் கொன்றது இதுதான்
முதற் றடவை.

இது இப்படியிருக்க, ஹிதேயோஷி கலகம் செ
ய்த அநேக மாகாணங்களை வென்று சக்கிரவர்த்தியி
னுடைய அதிகாரத்தைப் பலப்படுத்தினதாகப் பேர்
வைத்துத் தம் அதிகாரத்தையே பலப்படுத்திக்கொண்
டார். இந்த ஹிதேயோஷி கொண்டிருந்த பேராசைக்
குத் தக்கபடி சாமர்த்தியவானாயு மிருந்தாரென்று மு
ன்னமே சொன்னோம். "ஜப்பான்முழுதையும் ஐக்கி
யப்படுத்தி ஒரே குடைக்கீழ் அமர்த்தி, அப்போது
உண்டாகும் அரசிறைப் பலத்தால் போர்க் கப்பல்
கள் செய்து, மற்ற அவசியமான தளவாடங்களைச்



சித்தப்படுத்திக் கொரியா தேசத்தை ஜெயிப்பேன்;
அப்படி ஜெயிப்பதற்கு வெகுமதியாக அந்தக் கொரி
யாவை என் வசப்படுத்துவீரானால் அந்தப் பலத்
தால் கொரியாவிலிருந்து துருப்புகளை நடத்திச்
சீனாவையும் ஒருங்கே என்காற் கீழ்ப்படுத்துவேன்.
கொரியா, சீனா, ஜப்பான் இம்மூன்றையு மொரா
ட்சியி லமைப்பேன். இவை யெல்லாம் ஒருவன் ஒரு
கோரைப்பாயைச் சுருட்டி மடக்கி அக்குளில் வை
த்துச் செல்லுவதுபோல அவ்வளவு எளிதாய்ச் செ
ய்யமாட்டுவேனா" னென்றார். இப்படிச் சொன்னதற்கே
ற்ப ஹிதேயோஷி ஜப்பான் தேசமுழுவதையும் ஒரு
வசப்படுத்திவிட்டபடியால், கொரியா சீனா தேசங்களை
வென்று தம்முடைய பேராசையைப் பூர்த்தி செய்ய
வேண்டியது பாக்கி நின்றது. எந்தப் போர்வீரன்
அன்னிய தேசத்தைத் தன் சைன்னிய பலத்தால் வெ
ன்று கட்டியாள ஆசைப்படுகிறானோ, அவனுக்கு
ஏதோ ஒரு விதமான சாக்கு அகப்படாதிருப்பதில்லை
யென்பதைச் சரித்திரத்தில் அநேக திருஷ்டாந்தங்க
ளாலறிகிறோம். ஹிதேயோஷிக்கும் இப்போர்ப்பட்ட சா
க்கு அகப்படாமற் போகவில்லை. வெகு காலமாகக் கொ
ரியா வரசன் ஜப்பான் சக்கிரவர்த்திக்கு வெகுமதிகள்
அனுப்புகிறது வழக்கமாயிருந்து, சில காலமாக அந்த
வழக்கம் நிறுத்தப்பட்டுப் போனபடியால், ஹிதே
யோஷி அதை ஒரு காரணமாகக்கொண்டு கொரியா அர
சனுடன் முறையிடக் கொரியா வரசன் தன் மந்திரிகளை
ஜப்பானுக் கனுப்பிச் சமாதானத்துக்கு விரோதம் நேரி
டாமற் செய்யப் பார்த்தும் பயன்படாமற் போயிற்று.

ஹிதேயோஷி 3 லக்ஷம் ஜனங்களடங்கிய சைன்னியங்களைத் தயார்செய்தும் அவைகளைத் தாமே நேராக நடத்தாது தக்க சேனாபதிகளை நியமித்தனுப்பினார். கொரியா வாசன் ஜப்பானியப் படைகளை யெதிர்க்கச் சக்தியற்றவனாயிருந்தபடியால், சீன சக்கிரவர்த்தியினுடைய உதவியை மிக வருந்திக் கேட்கக், கொஞ்சம் உதவியும் வந்தது. பலவிடங்களில் சண்டைகள் நேர்ந்து ஜப்பானிய துருப்புகள் பெரும்பாலும் வெற்றி பெற்றனராயினும், அவர்களும் கொரியர் சீனர்களைப்போலவே இந்தப் பலனற்ற யுத்தத்தில் மனச்சலிப்புக் கொண்டு அதை எவ்வாறாயினும் முடித்தலே நலமென்று நினைத்தார்கள். சமாதானமும் அப்படியே செய்யப்பட்டது. கொரியாவில் யுத்தத்துக்குச் சென்ற துருப்புகள் ஜப்பானுக்குத் திரும்பிவந்தன. இவ்வாறே உலகத்தில் ஆதிகாலம் முதல் தற்காலம் வரையில் அரசர்கள் பேராசைகொண்டு சண்டைவிளைத்து உயிர்ச்சேதம், பொருட்சேதம், பஞ்சம், வறுமைமுதலியவைகளை உண்டாக்குகிறார்கள். இந்த யுத்தத்தை ஆரம்பித்தவன் ஒருவிதமான லாபத்தையுமடைந்தவனல்லன். கொரியாவில் யுத்தம் நடந்த காலமெல்லாம் ஜப்பானில் தன் வாசஸ்தானத்தின் அரண்மனையில் வீற்றிருந்து தன் சைன்னியங்கள் வெற்றிக்கொடியை விரித்துக் கீர்த்தி பெற்றுத் திரும்பிவரக் காணவில்லையேயென்று கவலையுடன் பார்த்திருந்த ஹிதேயோஷிக்குப் படிப்படியாய் வெற்றிகளுண்டாயின வென்றாவது அல்லது புதிதுபுதிதாய்த் தேசங்கள் ஜெயிக்கப்பட்டன வென்றாவது செய்திவராமல், தம் சேனாபதிகள் யுத்தநடப்பில் வேற்றுமைப் படுகின்றனரென்றும் தமது துருப்புகள்



பட்டினியாலும் மற்றத் துக்கங்களாலும் வருந்தினரென்றும் அழிந்து முழுகிப்போகும் கொரியா தேசத்தார் தம்மை வெறுத்துச் சாபமிடுகின்றனரென்றுமே செய்திகள் வந்தன. ஆயினும் ஒருவிதத்தில்மட்டும் இந்த யுத்தத்தால் ஜப்பானுக்கு நன்மை கிடைத்தது. கொரியாவிலிருந்து ஜப்பான் துருப்புகள் திரும்பின போது அங்கிருந்து சில தொழிலாளிகள் ஜப்பானுக்கு வந்து அங்கேயே குடியேறி நாளது வரையில் ஜப்பான் தேசத்தார் அழகான பீங்கான் சாமான்கள் செய்யும் கீர்த்திக்குக் காரணமாயிருந்து வருகிறார்கள்.

ஹிதேயோஷி 1598-ம் வருஷம் இறக்க, அவர் மகன் சிறுபருவமுள்ளவனாயிருந்தபடியால் டோகுகாவா ஐயியேயு என்பவர் ஷோகன் பட்டத்தை வகித்து, 1616-வருஷம் மரித்த காலம் வரையில் அவர் ராஜாங்கத்தை வெகு திறமையாயும் தேசாபிமானத்துடனேயும் நடத்திவர, அவரது சந்ததியார்கள் சுமார் 250 வருஷம் வரையில் அத்தேசத்தின் க்ஷேமலாபாதிகளின் பொறுப்பை வகித்துவந்தார்கள். ஹிதேயோஷியைப்போலவே அங்கங்கு மாகாணங்களில் சுவாதீனஸ்தர்களாய் அரசு புரிந்துவந்த இராணுவ வீரர்களைத் தம் சைன்னியபலத்தால் கீழ்ப்படுத்தித் தேசத்தில் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் நிலைநாட்டவேண்டியதாயினும், இந்த ஐயியேயு மூர்க்க குணமும் பழிவாங்கும் நாட்டமுமில்லாதவராய் நிதானமும் காரியசாமர்த்தியத்தில் திருஷ்டியுள்ளவராயுமிருந்தி

படியால், அக்காலத்தில் மாகாணத் தலைவர்களாயிருந்த 260 சிற்றரசர்களையும் தம்மிடத்தில் பக்தியும் விசுவாசமுமுள்ளவர்களாகச் செய்தனர். எப்போதும் அனுஷ்டானத்திலில்லாத புது வழக்கங்களையாவது ஒரு காலமாய் ஏற்கெனவே வேரூன்றியிருந்த ஸ்தாபனங்களுக்கு விரோதமான புதியவைகளையாவது தேசத்தில் புகட்டல் நிறைவேறத் தக்கதல்லவென்றறிந்து, இருக்கிற வழக்கங்களையும் ஸ்தாபனங்களையும் மாறிவரும் நிலைமைகளுக்குத் தக்கவாறு சீர்திருத்துவதே ராஜதந்திரமென்ற மேற்கோளைப் பின்பற்றினவராயினர். ஆகையால் ஜப்பான் தேசத்தில் யோரிடோமோ காலந்தொடங்கி வெகு நூற்றாண்டுகளாகச் சக்கிரவர்த்தி யெனவும் ஷோகுனெனவு மிரண்டாகப் பேதப்பட்ட ராஜாங்க முறையைத் திடமென மாற்றுதல் விவேகமன்றென வுணர்ந்தனர். ஆகையால் சக்கிரவர்த்தி யொருவரிருக்கின்றாரென்றும், அவர் தெய்வ அவதாரமாய்ச் சூரியனையே ஆதிபிதாவாகக் கொண்டவரென்றும், அவரையே பிரஜைகள் வணங்கவேண்டுமென்றும், சகல வெகுமதிகளும் கௌரவங்களும் அவர் கொடுத்தே கிடைக்கவேண்டுமென்றும் ஜனங்கள் ஒரு பக்கம் நம்பியிருக்க, மற்றொரு பக்கத்தில் ராஜாங்க நிர்வாகத்தைச் சேர்ந்த சர்வ அதிகாரங்களும், ஜனங்களை யாளுவதும் கட்டுவதும் நிலைக்கச்செய்வதும் காப்பாற்றுவதுமான கடமைகள் ஷோகுனென்ற இராணுவத் தலைவரின் பொறுப்பாகி, ஏகாதிபத்திய பரிபாலனம் நடந்து வந்தது. யோரிடோமோ முதலாவது ஷோகுன் அந்தஸ்தைப் பெற்ற காலம்



முதல் அயியேஸு அதே அந்தஸ்துக்குச் சக்கிரவர்த்தியால் நியமனம் பெற்றவரையில் ஜப்பான் சரித்திரமானது பல்லாண்டுகளாக யுத்தமும் கலகமும் துஷ்டத்தனமும் நிறைந்திருந்ததேயன்றி, விசேஷ அபிவிருத்தி யடையவில்லையென்று அயியேஸு மனதில் துக்கித்தவராயினும் மேற்குறித்தபடி இரட்டைப் பான்மை பெற்ற ராஜாங்க முறையே ஜப்பானுக் குற்றதென் றுணர்ந்து அந்த ராஜாங்க முறையையே யெவ்வாறு சீர்திருத்தி இடையூற்ற ஜனநன்மைப் பெருக்கத்துக்கு ஹேதுவாக்கலாமெனச் சிந்தை கொண்டவராயினர். இவ்வாறு சிந்தை கொண்டதற் கிசையக் கொரியா தேசத்துக்கும் தமக்கும் பூர்வம் யுத்தத்தாலுண்டாயிருந்த விரோதத்தைச் சமரசப்படுத்துமாறு கொரியாவரசனும் தாமும் நேசநிருபங்கள் மாற்றிக்கொண்டு ஒருமைப்பட்டனர். ஆயினும் கொரியா தேசத்துக்கு அந்த யுத்தத்தால் நேரிட்ட கஷ்டநஷ்டங்கள் எளிதில் நீங்கினவல்ல. அதின் நாடுநகரங்களழிந்தன. தொழில்கள் குன்றின. பழையான கழனிகளும் காடாகின. ஒரு காலத்தில் இந்தக் கொரியவானது கற்பக விருக்ஷத்தினின்றும் ஜப்பான் தனக்கு வேண்டிய கலைகள், தொழில்கள் முதலிய நாகரிகக் கனிகளைப் பறித்ததாயினும், தற்காலம், அதாவது ஹிதேயோஷி நடத்தின யுத்தத்திற்குப் பிறகு, யுத்தக் கொடுமைகளாற் காய்ந்து தீய்ந்து கழிந்து சிறகும் கிளைகளற்ற அடிமரம்போல் கொரியா ஆயிற்று.

இவ்வாறு அயியேஸு மாகாணத் தலைவர்களைப் பெரும் போரி லடக்கித் தம் வசப்படுத்தியும், கௌரி

ப்ப, சீன தேசங்களுக் குண்டாயிருந்த வித்தியாசங்களைச் சரிப்படுத்தியும், ராஜாங்க முறையைத் தாமும் சம்பின் தம் வம்சஸ்தரும் எவ்வாறு நடத்தல் தக்கதென்று சிந்தித்து நிச்சயித்தும், இங்ஙனம் பலவாறுக தேசாதிபத்தியத்தின் க்ஷேமக் கருத்திலேயே ஆழ்ந்தவ ராயினர். ஹிதேயோஷியைப் போல இவர் யுத்த வீரராகப் பேர் பெற்றவ ரல்லர். பலரை ஒன்று சேர்த்தலிலும், சட்டதிட்டங்கள் கற்பனை செய்வதிலும், குழப்பம் பரவியிருக்கு மிடத்தில் ஒழுங்கை நாட்டுதலிலும் பேர்பெற்றனர். இவைகளன்றி இவரே கல்விமானும் கல்வி பயிற்சியில் விருப்பங் கொண்டவராயு மிருந்தனர். அக்காலத்தில் ஜப்பானியர், சீனதேசத்தைக் கல்வியிலும் நாகரிகத்திலும் சிறந்த தேசமாக நினைத்து, அத்தேசத்து நூல்களையும் நாகரிகத்தையும் ஸ்வீகரிப்பவரா யிருந்தனர். அவ்வாறே ஜப்பானில் பலவிடங்களில் வித்தியாலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அவைகளில் யுத்தப் பயிற்சியோடு, புத்தி, ஒழுக்கம் இவைகளின் பயிற்சியும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தனர். சீன நூல்கள் முக்கியமாய்க் கற்பிக்கப்பட்டனவாயினும் சீனப் புஸ்தகங்களைப் படிப்பதும் பார்த் தெழுதுவதும் கஷ்டமா யிருந்தன. ஏனெனில், உலகத்தில் மற்றெல்லாப் பாஷைகளுக்கும் ஏற்பட்டிருக்கு மெழுத்துகளில் ஒவ்வோ ரெழுத்தும் ஒவ்வோ ரொலிக்குக் குறியாயிருப்பதுபோ லிராமல், சீனபாஷையில் ஒவ்வோரெழுத்தும் தன் உருவத்தால் ஒவ்வொரு வஸ்துவைக் குறிப்பதா யிருந்தது. அதாவது, பக்ஷியைக் குறிப்பதற்குப் பக்ஷி



போ லெழுத் தமைந்திருக்கும்; மரத்தைக் குறிப்பதற்கு மரம்போ லமைந்திருக்கும். இவ்வாறு சீனப் புஸ்தகத்தைப் படிப்பவன் ஆயிரம் பத்தாயிரக் கணக்கான குறிப்புகளை யறியவேண்டியவனாவன். தற்காலத்திலும் சீன பாஷை யிந்த ஸ்திதியிலேயே யிருக்கின்றது. ஜப்பான் தேசத்திற்கூட இந்தச் சீனவெழுத்தே அனுஷ்டானத்தி லிருந்தாலும், மற்ற ஐரோப்பிய பாஷைகளைப்போல எழுத்துக்க ளுண்டாக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றனவென்று அறிகிறோம்.

இவ்வாறு அயியேயஸு கல்வி அபிவிருத்தியிற் பிரவர்த்தித் திருந்ததுமன்றி, ராஜாங்கத்தின் கட்டுப்பாட்டு நிமித்தம் மாகாணத் தலைவர்களின் அந்தஸ்துகளையும் அதிகாரங்களையும் நிச்சயப்படுத்தி அவர்களைக் கல்விப்பயிற்சி பெறுவிக்கவும் முயன்றனர். சாமானிய ஜனங்களுள்ளும் வர்த்தகர், தொழிலாளிகள், விவசாயிகள் என்றும், இவர்களுக்கு மேலாகச் சாமுராய் என்ற வகுப்பாரையும் ஏற்படுத்தினர். இந்தச் சாமுராய் வகுப்பினர், நம்தேசத்தில் பிரம்மக்ஷத்திரிய வகுப்பினர்களுக்குச் சமமானவ ரெனலாம். எப்படி யெனில், இவர்களே போர்த்தொழில் புரிவோரும் கல்விப்பயிற்சி செய்வோரு மாயினர். ஜப்பான் ஐரோப்பிய தேசங்களோடு சமத்துவம் பாராட்டி ஐரோப்பிய நாகரிகத்தில் வெகு பரபரப்புடன் முற் செல்லும் காலமாகிய இப்போதுங்கூட இந்தச் சாமுராய் வகுப்பாரே முதலணியில் நின்று மற்றச் சனங்களை நடத்திவருகின்றனர். இவர்கள் முக்கியமாய்ப்

பட்டணங்களில் வசித்துவந்தார்கள். இவர்களுக்கென்று குறிப்பான தொழில்கள் ஏற்படாதிருந்தபடியால், காலவரிசையிற் சோம்பேறிகளாகி மற்றவகுப்பார்களுடன் கர்வமும் பொறாமையு முள்ளவர்களாய் ஜீவித்து வந்தார்கள். ஆயினும் நாகரிகத்தில் எதெது நன்மை பயக்கத்தக்கதாயும் பெருமைகொண்டதாயும், கல்வியின்பயனையு மிருந்ததோ, அதெல்லாம் இவர்களிடத்திலேயே யிருந்துவந்தது. சமீபத்தில் ஜப்பான் தேசத்தில் நேரிட்டுவரும் மாறுதல்களுக்கும் சீர்திருத்தங்களுக்கும் இவர்களே காரணபூதர்களாகச் சொல்லப்படவேண்டும். இவர்களே உலகத்தில் மற்றப் பாகங்களுக்குச் சென்று சாஸ்திர வித்தைகளைக் கற்றுத் தம் தேசத்தினருக்குப் போதிப்பவ ராயினர். மத்தியகாலத்தில் அராஜகமாகச் சிதறிக்கிடந்த ராஜாங்க அதிகாரத்தை மறுபடியும் கட்டுநிலைப் படுத்தினதும், பிரதிநிதித் துரைத்தன ஜப்பானில் இயலுமோவென்று சோதனை செய்ததும், பிரதி மனிதனுக்கும் சுதந்தரமும் மதத்துவேஷ மின்மையும் ராஜரீகப் பிரமாணங்களும் தற்காலம் ஏற்கப்பட்டிருப்பதும் இவர்கள் முன்னின்று முயன்றதாலேயே சாத்தியமாயினவெனல் வேண்டும். ஜப்பானில் தற்காலத்தில் ஐரோப்பிய தேசங்களிற்போலத் தினசரிப் பத்திரிகைகளும் மாதாந்தப் பத்திரிகைகளும் அதிகரித்துப் பரவிவருவது இவர்களாலேயே. சரித்திரம், பொருளாதார நூல், அரசியல் சட்டதிட்டங்கள், வியாபார ஒழுங்குகள், இவைகளை இந்தச் சாமுராய்வகுப்பாரே தங்கள் சாமர்த்தியத்தால் விருத்தி செய்து வந்தனர். இவர்கள் கல்விமான்களாயிருந்ததுமன்றிப் போர்வீரர்களாயு மிருந்தபடியால் போர்ப்பயிற்சியையும் மற்றக் கல்விப்பயிற்சியைப்போல் இளமையிற் கற்றுவந்தனர். குதிரைச் சவாரி அஸ்திர சஸ்திரப் பயிற்சி யிவைகளையும் பயின்றனர்.

# CHAPTER IV.

## நான்காம் அதிகாரம்.

ஆசாரத்தில் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் பொதுவான அம்சங்கள்—ஜப்பானுக்கு அன்னியர் சம்பந்தம் பெருகியது—அயியேயஸுவின் கடைசிகாலமும், அவர் செய்த சாஸ்திரமும்;—ஜப்பானின் பூர்வீக உன்னதம்.

சீன தேசத்தைப்போல ஜப்பான் தேசத்திலும் பெரியோர்க்குச் சிறியோர் அடங்கி நடப்பதே குலாசாரமாகக் கொள்ளப்பட்டு வந்தது. தகப்பனுக்குப் பிள்ளையும், புருஷனுக்குப் பெண்சாதியும் எஜமானனுக்கு வேலைக்காரனும் முற்றிலும் அடங்கிநடக்க வேண்டுமென்பது ஜப்பானிய சாஸ்திரங்களில் முக்கியமாய் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இந்தியாவிலும் இதே ஆசாரமே பூர்வகாலம் முதல் அனுஷ்டிக்கப்பட்டு வந்தபோதிலும், தற்காலத்தில் பிரிடிஷ் நாகரிக வியாபகத்தின் பயனாக இந்த வழக்கம் குறைந்து வருகின்றது. ஜனங்களிற் பெரும்பாலார் தங்கள் தங்கள் பிறப்பிடங்களிலேயே நிலையாய் வசித்து, விவசாயத்தைத் தவிர வேறு தொழில்கள் செய்யாதவர்களாய்த், தூரதேசங்களுக்குப் போக்குவரத்துச் செய்தல் அவசியமின்றி வசிக்கிற காலங்களில் இவ்வாறு பெரியோர்க்குச் சிறியோர் முற்றிலும் அடங்கி நடத்தலும், எஜமானும் வேலைக்காரனும் பாரம்பரையாய்

ஒட்டிச் சேர்த்தலும் சாத்தியமாகுமேயன்றி, எப்போது ஒரு தேசத்தில் விவசாயமேயன்றி வியாபாரம், வர்த்தகம், கைத்தொழில் உத்தியோகம் முதலான ஜீவனோபாயங்கள் பலவகைப்பட்டுப் பெருகி ஜனங்கள் ஒரே இடத்தில் ஸ்திரமாக வசிக்காமற் சுயேச்சையாய்ப் பலவிடங்களுக்குப் போய்ப் பொருள் சம்பாதிக்க முயலுகிறார்களோ, அப்போதுதான் எல்லோரும் தம் பெரியோர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அவர்களுடைய விருப்பப்படி நடத்தல் சாத்தியமாகாதென்பது நாம் சொல்லாமலே விளங்குகின்றதல்லவா? அவ்வாறே இப்போது இந்தியாவில் நடந்து வருகின்றது. முன்போல இப்போது ஊக்கமும் கல்வியும் முள்ளவர்கள், தாம் பிறந்த ஊரிலேயே ஒரே குடும்பத்தில் அமர்ந்து விவசாயத்தையே நம்பியிருத்தல் சாத்தியப்படவில்லையல்லவா? ஆகையால் இந்தியச் சிறுவர்கள் பெரியோர்கள் சொல்லைமீறி நடக்கிறார்களென்று அச்சிறுவர்களுடைய குற்றமாகச் சிலர் முறையிடுகிறதுபோல் முறையிடல் முற்றிலும் சரியல்ல. அவ்வாறே வேலைக்காரர்களும் ஒரே யஜமானனை நம்பி அவனையொட்டியிருத்தலில் நன்மையில்லையென்று எங்கெங்கு தங்கள் ஜீவனத்துக்கு விசேஷ வசதிகள் தோன்றுகின்றனவோ அங்கங்கு தங்கள் சுயேச்சையைப் பின்பற்றிச் செல்லுகிறார்கள். இன்னும் வரவர ஐரோப்பிய நாகரிகம் பரவப்பரவ இந்த இயல்பு அதிகப்பட்டுவருமேயன்றிக் குறையாது.

ஜப்பானில் முற்காலத்தில் ஜனங்கள் அங்கங்கு நிலைபெற்றிருந்த தலைவர்களுக்குட்பட்டுத் தலைவர் சொற்படி அவருக்குக் கீழ்ப்படியிலிருந்து உயர்வகுப்பார் நடப்பதும், அந்த உயர் வகுப்பார் சொற்படி அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்த குடிகள் நடப்பதும், அவர்களுள் குடும்பத் தலைவர் சொற்படி குடும்பச் சிறுவர்கள் நடப்பதும், புருஷர் சொற்படி பெண்கள் நடப்பதும், எஜமான் சொற்படி வேலைக்காரன் நடப்பதும் சதாசாரமாகக் கொள்ளப்பட்டு வந்தபடியால் ஜனசமூகங்கள் ஒரே கட்டுப்பாட்டுக்குட்பட்டு அமரிக்கையுடன் வாழ்ந்துவந்தனர்.



இன்னொரு விஷயத்திலும் ஜப்பானிய ஆசாரம் இந்தியாவில் பூர்வம் அனுஷ்டிக்கப்பட்டுவந்த ஆசாரத்தை ஒத்திருந்தது. அமியேஸுக்கு இரண்டாம சக்கிரவர்த்தியென்று சொல்லக்கூடிய ஷோகூன் அந்தஸ்தைச் சக்கிரவர்த்தியானவர் கொடுத்தபோதிலும்அவர் அதை வகிக்காமல் தம் பிள்ளைக்கு அதைக் கொடுத்துவிட்டு அந்தப்பிள்ளையை அதில் ஸ்தாபித்துத் தமக்கு உத்தியோகப் பொறுப்புகள் வேண்டாமென்று விலகினார். அப்படி விலகுதல் அக்காலத்தில் ஜப்பானில் வழக்கமாயிருந்தது. வெகுகாலம் லௌகிக விவகாரங்களிலுழன்று வார்த்திகத்தில் ஆரண்யம் முதலான ரகஸ்ய ஸ்தலங்களில் ஆத்மவித்தை பயிலுவதும் நிஷ்டைசெய்வதும் ஆரியர்களின் பூர்வ வழக்கமல்லவா? அரசர்களன்றிச் சாமான்யக் கிரகஸ்தர்களும், பிரம்ம க்ஷத்திரிய வர்ணத்தார்களாயிருந்தால் சம்சாரத்தைத் துறந்து துறவற மேற்றல் வழக்கமென்பது நம்மனோர் அறிவர். அவ்வாறே ஜப்பானில் அமியேஸு செய்தாராயினும் துறவறத்திலும்கூடத் தாம் முன்னே செலுத்திவந்த அதிகாரத்தை முற்றிலும் கைவிட்டனரல்லர். ஷோகூன் அந்தஸ்து தம் வம்சத்திலேயே பரம்பரையாய் ஊன்றியிருக்கவேண்டுமென்பது இவருடைய ஆசை. அதற்குத் தக்கபடி

வேண்டிய ஏற்பாடுகளைத் தம் ஆயுட்காலத்தே செய்தனர்.

உள்நாட்டு ராஜாங்க வர்த்தமானங்கள் இவ்வாறிருக்க, ஜப்பானுக்கும் அன்னிய தேசங்களுக்கும் இடையே ஏற்கனவே உண்டாயிருந்த சம்பந்தமானது விரிந்து வளரத் தலைப்பட்டது. ஏற்கனவே போர்த்துகீசியர்களும், ஸ்பானியர்களும் அத்தேசத்தில் புகுந்து கிறிஸ்து மதஸ்தாபனம் செய்ய முயன்று வந்தனரென்று கூறினோம். இவர்களோடு ஹாலண்டு தேசத்தாராகிய டச்சுக்காரர்களும் சேர்ந்தனர். ஆயினும் டச்சுக்காரர்களுடைய எண்ணங்கள் கிறிஸ்துமதஸ்தாபனமாயில்லாமல், ஹாலண்டுக்கும் ஜப்பானுக்கும் வர்த்தகப் போக்குவரத்தைப்பற்றியனவாயிருந்தன. தங்கள் தேசத்தில் மதிப்புப்பெற்றவும் உபயோகமுள்ளவுமான சாமான்கள் பலவுண்டென்றும் அவைகளைக் கொடுத்து ஜப்பானிலுள்ள சாமான்களை வாங்கிப்போக விருப்பமுற்றிருக்கிறார்களென்றும் டச்சுக்காரர்கள் வற்புறுத்தினர். இவ்வாறு டச்சுக்காரர்களை முதல் முதல் ஜப்பானுக்கு அழைத்துவந்தவன் ஆடம்ஸ் என்ற ஒருவன். அவன் அயியேஸுவினுடைய பிரியத்தைச் சம்பாதித்து, அக்காலத்தில் ஜப்பான் ராஜாங்கத்தாருக்கு அன்னியதேசங்களைப்பற்றி யறியவேண்டிய விஷயங்களை யறிவித்து, ஜப்பானின் ராஜஸ்தானத்துக்குப் பக்கத்தில் சில பூஸ்திதிகளை அயியேஸுவினால் கொடுக்கப்பெற்று, ஒரு ஜப்பானிய ஸ்திரீயை விவாகஞ் செய்துகொண்டு, அங்கே 1620-ம் வருஷத்



தில் மரித்துப்போனான். இவனைக்கொண்டு சில ஜப்பானியர் சில கப்பல்களைச் செய்வித்தார்கள். இதற்குமத்தியில் அயியேஸு ஹாலண்டு தேசத்தரசனுக்கு 1610-ஆம்வருஷத்தில் அநுப்பி, அந்த ஹாலண்டு தேசத்தார் ஜப்பானில் எந்த இடத்திலும் வர்த்தகம் செய்யலாமென்றும், வர்த்தகத்துக் கிசைந்தவாறு வாசஸ்தானங்கள் கட்டிக்கொள்ளலாமென்றும், அக்காலத்திலும் பிற்காலத்திலும் யாதொரு தடையும் இடையூறுமின்றி, வர்த்தகம் செய்துவரலாமென்றும் வாக்குக் கொடுத்து ஒரு நிருபம் விடுத்தனர். அவ்வாறே ஹாலண்டரசன் சில கப்பல்களை ஜப்பானுக்கனுப்ப அயியேஸுவும் அங்கு வர்த்தகஞ்செய்யும் டச்சுக்காரர்களுக்கு ஜப்பானியக் குடிகள் எவ்வித இடையூறும், இம்சையும் செய்யக்கூடாதென்று பொதுவான உத்தரவு பிறப்பித்தனர். இவ்வாறு 1611-ஆம் வருஷத்தில் ஊன்றப்பட்டவிதை, வெகுகாலம் கஷ்டநிஷ்டூரங்களுக் குட்பட்டு வளர்ந்துவரக், கடைசியில் இருவருஷங்களுக்குமுன் டச்சுக்காரர்களேயன்றி, அன்னியதேசத்தாரும் ஜப்பானோடு வர்த்தகம் செய்யலாமென்ற ஏற்பாடு செய்யப்பட்டுப் பலனீன்றது. டச்சுக்காரர்களைப் பார்த்து ஆங்கிலேயர்களும் ஜப்பானியர்களுடன் வர்த்தக சம்பந்தத்தை ஸ்தாபிக்க முயன்றும் டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் ஒற்றுமையுடன் இத்தேசங்களில் வியாபாரஞ் செய்யச் சக்தியற்றவராய்க், கடைசியில் ஜப்பானிய வர்த்தகத்தையே ஆங்கிலேயர் முற்றிலும் கைவிட்டனர்.

1605-ஆம் வருஷம் அயியேஸு சோகுன் அந்தஸ்தை விட்டுவிலகி 1611-ஆம் வருஷம் மரித்த வரையில் தமது வம்சத்தாரே தம் அந்தஸ்தைப் பரம்பரையாய்ப் பெற்றுவரவேண்டுமென்ற எண்ணத்தை நிறைவேற்ற அவசியமான ஏற்பாட்டைச் செய்ததுமன்றித், தமக்குண்டாயிருந்த அவகாசத்தைக் கல்விப் பயிற்சியிற் செலவிட்டு வந்தாரென்று சொன்னோம்.

அக்காலத்தில் கொரியா தேசமே நாகரிகத்தில் மேலான தேசமாயிருந்தபடியால், அங்கிருந்து ஜப்பானியர் அச்சுக் கோர்த்தல் முதலான வித்தைகளைப் பெற்றுக் கற்றனர். கொரியாவைப்போல் சீனாவிலும் அச்சுக் கோர்த்தல் அனுஷ்டானத்திலிருந்தது. ஐரோப்பிய தேசத்தில் அக்காலத்தில் இந்த வித்தையை யறிந்தவர்களில்லை. கொரியா, சீன தேசத்தாருக்கு இந்த வித்தை 1300-ஆம் வருஷத்திலேயே தெரிந்திருந்தது. ஐரோப்பியருக்கோ சுமார் 100 வருஷத்திற்குப் பிற்பாடு தெரிந்தது. ஆயினும் வெகு காலம் வரையில் ஐரோப்பியர் தங்கள் மேலான யுக்தியினாலேயே இந்த வித்தை கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லிக்கொள்ளுவது வழக்கமாயிருந்தது. இந்த அச்சுக்கோர்க்கும் வித்தையை அயியேஸு ஜப்பான் தேசத்திற் பிரபலப்படுத்தினார். அயியேஸு தாம் மரிக்குமுன் ஜப்பான் தேசங்களில் ஆசார அனுஷ்டானங்களை ஸ்திரப்படுத்துமாறு ஒரு சாஸ்திர நூல் செய்து வைத்துப்போனதாகச் சொல்லப்படுகிறது. ஆயினும்



அந்த நூலை யிவர்தாம் செய்தனரோ, அல்லது வேறு எவராகிலும் செய்தனரோ வென்று சந்தேகிக்க விடமிருப்பதாகச் சில ஜப்பானியர் அபிப்பிராயப்படுகிறார்கள். வெகு காலம்வரையில் பரம ரகசியமாக ஷோகுன்களின் ராஜக்கிரகத்தில் வைக்கப்பட்டிருந்த மேற்சொன்ன நூலின் ஒரு பிரதியைச் சில உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் மட்டும் வருஷமொருமுறை பார்வையிடலாமென் றேற்பாடிருந்தது. நமது தேசத்தைப்போலவே ஜப்பானிலும் ஜனங்களது ஆசார அனுஷ்டானங்களை நல்வழிப்படுத்தி நிலைநிறுத்துமாறு பெரியோர்கள் செய்த சாஸ்திரங்களைச் சாமானியப் பொது ஜனங்கள் தங்கள் புத்தியைக்கொண்டு கற்றறிந்து, தேசத்தில் நல்லொழுக்கமானது இயல்பாகவே பரவிவருதல் சாத்தியமில்லாமலிருந்தது. ஏனெனில் அவர்கள் பார்வைக் கெட்டாமலே இந்த நூல்கள் மறைத்து வைக்கப்பட்டு வந்து, கேவலம் சிலர் மாத்திரம் அவைகளைப் படித்துத் தெரிந்துகொள்ளுவதே வழக்கமாயிருந்தது. இப்படிப் படித்துத் தெரிந்த சிலர் சாஸ்திரப்படிக்கும் அவரவருடைய வகுப்பைச் சேர்ந்த பழக்க வழக்கங்களின் படிக்கும் நீதி பரிபாலனம் செய்து குற்றத்தைக் கண்டிப்பதும் குணத்தைப் போற்றுவதுமான ராஜாங்கக் கடமையைச் செய்து வந்தனர். சாஸ்திரங்களேற்பட்டது இப்படிப்பட்ட ஞானவான்களுக்கே யன்றிச் சாமானிய ஜனங்கள் நன்மை பெறும்பொருட்டல்ல. அயியேஸு செய்து வைத்துப்போன சாஸ்திரத்தில் ஒரு பாகம் ஜனங்க

னுசரிக்கவேண்டிய தர்மங்களைப்பற்றிச் சொல்லுகின்றது; ஒரு பாகம், ராஜாங்க விதிகளைப் பற்றியும், ராஜாங்க நிர்வாகத்தைப்பற்றியும் கூறுகின்றது; வேறொரு பாகத்தில் சட்ட சம்பந்தமான விஷயங்கள் குறிக்கப்பட்டு, மிகுந்த இடங்களில் அயியேஸினுடைய சொந்த சரித்திரத்தில் நடந்த சில கதைகள் சொல்லப்படுகின்றன. சீனர்களுடைய கிரந்தங்களைக் கற்று அவைகளிலிருந்தே அயியேஸ் தமது சாஸ்திர விதிகளை யெடுத்துரைத்ததாகச் சொல்லப்படுகின்றன. அக்காலத்திலுடைய இயல்புக்குத் தக்கபடி போர்த்தொழில் அவசியமென்பதையும் அத்தொழில் புரிவோரின் நலத்தைக் காப்பாற்றுதல் அவசியமென்பதையும் தம் புஸ்தகத்தில் அயியேஸ் ஸ்பஷ்டமாக அங்கீகரிக்கின்றனர். தம் புஸ்தகத்தில் ஓரிடத்தில் பின்வருமாறு சொல்லுவதை தமது பூர்வீக ஹிந்து அரசர்கள் மனதில் உறுதியாகக் கொள்ளாமற் போனார்கள். அதாவது:—"எனது இளம் பருவத்தில் விரோதிகளினுடைய தேசங்களை வென்று அடக்கி என் முன்னோர்க்குச் சத்துருக்களாயிருந்தவர்களின் மீது பழிவாங்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டிருந்தேனேயன்றி வேறெண்ணங் கொண்டவனல்லன். ஆயினும் மகாஞானியாயிருந்த யூயோ என்பவர் ஏகாதிபத்தியத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவதே ஜனங்களுக்கு அரசன் செய்யக்கூடிய நன்மையென்கிறார். இந்த விதியானது சரியான பிரமாணத்தை ஆதாரமாகக் கொண்டதென்று நம்பியே அதை நான் தவறாமல்



பின்பற்றி வந்தேன். என் சந்ததியாரும் அந்தப் பிரமாணத்தைப் பின்பற்றி நடத்தல்வேண்டும். அதினின்றும் எவன் விலகுகிறானோ அவன் என் சந்ததியானல்லன், பிரஜைகளை ஏகாதிபத்தியத்துக்கு அடிவாரமாவார்கள்." மற்றுங் குலாசாரங்கள். விஷயமாய் அயியேஸ் சொல்லுவதில் பிரதிமனுஷனும் விவாகம் செய்துகொள்ள வேண்டியதைப்பற்றி விசேஷமாய்க் கூறுகின்றனர். பதினாறு வயதுக்குப் பிறகு ஒருவனும் விவாகமின்றியிருக்கக்கூடாதென்றும், தகுந்த மந்திரத்தைக்கொண்டு விவாகச்சடங்கு செய்விக்கவேண்டுமென்றும், சகோத்திரத்தார்களுக்குள் விவாகம் தகாதென்றும், நல்ல குலத்திலேயே விவாகஞ் செய்யவேண்டுமென்றும், சாஸ்திரப்படி விவாகஞ் செய்துண்டான சந்ததியினால் இறந்துபோன பிதுர்க்கள் நலம் பெறுகின்றனரென்றும், மனுஷஜாதியில் ஒவ்வொரு ஜாதியும் விவாகத்தையே முதல் இயற்கை விதியாகக் கொண்டிருக்கிறார்களென்றும் சொல்லுகிறார். இந்திய தேசத்தில் ஹிந்துக்களுக்குள் இறந்துபோன புருஷருடைய பிரேதத்துடன் ஸ்திரீகள் அக்கினிப் பிரவேசஞ்செய்து உயிர்துறக்கும் வழக்கத்தைப்போல, ஜப்பானியருள் ஒரு எஜமானனுடைய பணிவிடைக்காரர்களும், பரிவாரங்களும், எஜமான் இறந்து போனால் அவருடன் தாங்களும் உயிர்துறந்து விண்ணுலகில் தம் எஜமானனுக்கு வேலை செய்யக்கூடுமென்ற ஒரு பேதை யெண்ணத்தால் உயிர் துறப்பது வழக்கமாயிருந்தது. அயியேஸ் காலத்தில்

அதாவது 300 வருஷங்களுக்கு முன், ஜப்பானில் இத்த வழக்கமிருந்ததென்பதற்கு அத்தாக்ஷியாக அமியேஸ் தம் புஸ்தகத்தில் இந்த வழக்கத்தைக் கடுமையாய்க் கண்டித்தெழுதுகின்றனர். எழுதி அந்தப்பூர்வ வழக்கப்படி எவன் தன் எஜமானனுடன் உயிர் துறக்கின்றானோ அவனுடைய சொத்துக்களை ராஜாங்கத்தார் வசப்படுத்தி, அவன் வம்சத்தையே வறுமையில் ஆழ்த்துவார்களென்று எச்சரிக்கை செய்திருக்கின்றனர்.

அமியேஸ் வம்சத்தார் ஷோகூன் அந்தஸ்தை வகித்து, ஏகாதிபத்திய நிர்வாகத்தைச் செய்துவந்த காலத்திலேயே, ஜப்பானின் பூர்வீகப் பெருமையானது யசோன்னதத்தை யெட்டிற்று. ஜப்பானுக்குற்றமான பெருங்கீர்த்தியையாக்கின அதனுடைய கலைகளும், வித்தைகளும் அக்காலத்திலேயே சிறப்புற்றோங்கின. வெண்கலம் வார்த்தல், எஃகுக் கத்திகள் செய்தல் முதலான திறமான உலோக வேலைகளும், இவைகளைவிட நாகரிகமான சித்திரம்வரையும் வித்தையும், ஆதியில் சீனாவிலிருந்து ஜப்பானுக்கு வந்தபோதிலும், ஜப்பானிலவைகள் வெகு சிறப்பைப் பெற்றுச் செழித்துத் தற்காலத்திலும் உலகத்தார் அவைகளைக் கண்டு மோகிக்கும்படியிருக்கின்றன. பின்னும், மனுஷ சமூகங்களின் நல்லிருப்புக்கு இன்றியமையாத சில வித்தைகளில் ஜப்பானியர் கேவலம் சீனர்களையே அடுத்தவர்களாகையால், சீனரைப்போல இவர்களும் விநோதமான வழக்கங்களையனுஷ்டித்து வந்தார்



கள். நமது தேசத்தில் பூர்வகாலம் முதல் அனுஷ்டானத்திலிருந்துவரும் வைத்திய சாஸ்திரத்துக்கும், ஐரோப்பிய வைத்திய சாஸ்திரத்துக்குமெப்படிப் பேதமிருக்கின்றதோ, அப்படியே, முற்காலத்துச் சீன ஜப்பானிய வைத்திய சாஸ்திர முறைக்கும் தற்கால ஐரோப்பிய வைத்திய முறைக்கும் பெரும்பேதமிருக்கின்றது. அவ்வாறே உலகத்திலுள்ள பற்பல தேசங்களிலும் ஆதிகாலத்தில் அவரவர்கள் புத்திக்குப் புலப்பட்டவாறு வைத்திய சாஸ்திரங்களும் மருந்துகளும் மேற்பட்டு, மன்னுயிர்க்கு இயற்கையாயுள்ள பிணிகள் விலக்கப்பட்டு, ஜனவிருத்தியடைந்திருக்கின்றது. இப்படி யேற்பட்ட சாஸ்திரங்களும் மருந்துகளும் அனேகமாய் மூடபக்தியையும், அறியாமையையும் ஆதாரமாகக்கொண்டு ஜனங்களின் துக்கப்பெருக்கத்துக்குக் காரணங்களாயின வென்றே சொல்லலாம். நமது தேசத்தையே நாம் திருஷ்டாந்தமாக வெடுத்துக்கொண்டாலும் வைத்தியர்களுடைய மருந்துப் பிரயோகங்களாலும் தந்திரங்களாலும் பிணி நீங்கி உயிர்பிழைப்பவர்களைப்போல அவ்வைத்தியர்களது அறியாமையாலும் மூடபக்தியாலும் பிணி நீங்காது மாளுவோர்களு முண்டென்பது புலப்படும். இவ்வாறு மானிடச் ஜீவன்களுக்கு வியாதியும் நோவுகளுளவாயினும், அன்னார்க்குக் கடவுள் இயற்கையாய்ச் சரீரத்திலமைத்திருக்கும் சக்தியினால் புண்கள், பிணிகள் முதலான உபாதிகள் அனேகமாய்த் தாமே விலகிப்போகின்றன. சாஸ்திர யுக்திகளாலும் மருந்துகளாலும் ஜந்துக்கள்

பெறக்கூடிய நன்மைகளில் முக்கியபாகமானது மயும குறித்த இயற்கைச் சக்தியைச் சரிப்படுத்தி வேலைசெய்யத் தூண்டி ஒத்தாசை செய்வதே யாகும். ஜப்பான் தேசத்தில் வைத்திய விஷயமாய் ஒரு விநோதமான வழக்கமிருந்ததாகச் சொல்லப்படுகின்றது: எந்த வைத்தியன் மருந்து கொடுப்பதிலும் மருந்தை உட்கொள்ளும் விதத்தைச் சொல்லுவதிலும் பிசகு செய்கின்றானோ அவனுக்குத் தண்டனையாக மூன்று வருஷம் காவலும், அதிகமான அபராதமும் விதிப்பது வழக்கமாம்; மருந்தில் லேசிலேனும் கலப்பிருந்தாலும், மருந்தைத் தயார் செய்வதில் பிசகு நேரிட்டிருந்தாலும் அந்த வைத்தியனுக்குப் பெருந்த தொகை அபராதத்தோடு 60 அடியும் விதிக்கப்படுமாம். ஆயினும், இந்த விஷயத்தில் பூர்வீக ஸம்பிரதாயங்கள் பிற்காலத்து டச்சுக்கார சகவாசத்தால் நீக்கப்பட்டு நியாய சம்மதமும், சுகமுமான வழிகளுண்டாயின.

# CHAPTER V

## ஐந்தாம் அதிகாரம்.

அன்னிய நாட்டார்கள் தேசத்தன் வைக்காட்டாமல் தடுத்த ஜப்பான் இராஜரீக முறை—நன்மையா, தீமையா—பர்ஷியா, ஈஜிப்ட், சீனா, இந்தியா தேசங்களில் விளைந்தது—மேற் சொன்ன முறையை நீக்கி ஜப்பானில் புக அமெரிக்கர் முயன்றது—அப்போது ஜப்பானின் நிலையும் போக்கு ளையும்—ரஷியக் கப்பல்களும், ஆங்கிலேயக் கப்பல்களும் ஜப்பானில் வியாபாரத்தைக் கோரி வந்தது—அமெரிக்கப் படைகளும் வர, ஜப்பானின் பீதி—முகாமின் அமெரிக்க சேனையும், பிறகு பிரிடிஷார், ருஷியர், டச்சுக்காரருடனும் உடன்படிக்கையாகி, ஜப்பான் திறக்கப்பட்டது—இரண்டொரு விவாதம்—ஹாரிஸ் என்ற அமெரிக்க ஸ்தானிகர் ஜப்பானில் குடியேறியது—அவர் குண விசேஷங்கள்—புது உடன்படிக்கையும், அமெரிக்கரும், மற்ற அன்னிய தேசத்தார்களும் ஜப்பானில் நிலை பெறலும்—அன்னியச் சரக்குகளுக்கு வரியும், அதனால் கஷ்டமும்—அன்னியர்களுக்கும் ஜப்பானியர்க்கும் நேரும் வியாஜ வழக்குகளுக்கு ஏற்பாடு—பிறகு இதைப்பற்றிய விவாதமும் மனஸ்தாபமும்.

இதுவரையில் நாம் சொல்லிவந்தபடி அஷியோக வமிசத்தார் ஷோகுன் அந்தஸ்தைப் பரம்பரையாய் வகித்து ஏகாதிபத்திய பாரம் தாங்கிவர, ஜப்பானிய நாகரிகம் அத்தேசத்துப் பூர்வீக ஆசார அனுஷ்டானங்களையும் ஸ்தாபனங்களையு மதித்து வளர்ந்து, அத்

தேர்ந்த ராஜதந்திரிகளும் தேசாபிமானிகளும் தம் தேசத்தில் அன்னிய தேசத்தார்கள் நிலைபெற்று அதிகாரம் செலுத்தவொட்டாமல் தடுப்பதே தேசத்தின் சுவாதீனத்துக்கும் நன்மைக்கும் இன்றியமையாத முறையென்று நம்பிவந்தார்கள். ஏற்கனவே போர்த்துகீயரும், ஸ்பானியரும் அங்கு வியாபார முகாந்தரத்தைச் சொல்லிப் புகுந்து கிறிஸ்துமதத்தை நாட்டப்பார்த்தார்களென்றும், அப்படி யவர்கள் பார்த்ததை யுணர்ந்து அயியேசு முதலான ஜப்பானிய அரசியல் வல்லோர் சமுசயப்பட்டு அன்னியரான கிரஸ்துமத ஸ்தாபகர்களையும் அவர்களால் கிரஸ்து மதத்தைத் தழுவின ஜப்பானிய ஜனங்களையும் பலவித கொடுமைகட்குட்படுத்தி வேரறுத்து அழித்தன ரென்றும் சொன்னோமல்லவா? அக்காலம் முதல் ஜப்பான் தேசத்தில் அன்னிய நாட்டார்களை வரவொட்டாமல் தடுப்பதே ராஜரீக முறையாக அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. 1853-ம் வருஷத்தில் அமெரிக்கா தேசத்தினின்றும் கமடோர் பெர்ரி யென்ற கப்பற்படைத் தலைவர் அத்தேசக்குடியரசுக்கு நாயகராய் ராஜாங்கம் நடத்திவந்த பிரஸிடெண்டிடத்தில் ஜப்பானியச் சக்கிரவர்த்திக்கு ஒரு நிருபத்தைப் பெற்று, அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் சினேக சம்பந்தத்தையும் வர்த்தக சம்பந்தத்தையும் கோரி, யடோ கடற்கரையை வந்தடைந்தவரையில் மேற்சொன்ன ராஜரீக முறை யனுஷ்டிக்கப்பட்டு வந்தது.



இப்படி யனுஷ்டிக்கப்பட்டு வந்தது ஜப்பானுக்கு நன்மையாக முடிந்ததா, அல்லது தீமையாக முடிந்ததா, வென்ற ஆலோசனைக்கு இட முண்டாகின்றது. அன்னிய நாட்டாரைத் தங்களுடன் அணுகவொட்டாமல், அவர்க ளிஷ்டப்பிரகாரம் தேசத்தில் புகுந்து வியாபாரம் முதலானவை மாத்திரம் செய்ய இடம் கொடுக்கப் பட்டிருந்தால், அந்த அன்னியர்களைப்பார்த்து ஜப்பானியரும் பலவித ஞானவழிகளைக் கற்று அபிவிருத்தி யடைந்திருக்கலா மென்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் தற்காலத்தில் சைனா, பர்ஷியா, முதலான கீழ்த் தேசங்களில் ஐரோப்பியர் புகுந்து; வியாபாரத்தையே நோக்கமாகக் கொண்டதாகப் பேருக்கு மாத்திரம் சொல்லி, அங்குள்ள பொருளாதாரங்க ளனைத்தையும் வசப்படுத்தி, ராஜாங்கநடப்பிலும் மேலதிகாரம் பெற்று, அவைகளின் சுவாதீனத்தையே அழித்து வருவதை நாம்பார்க்கிறோம். பர்ஷியா தேசம் வெகு காலமாக ஷா வென்று பட்டம் பெற்ற மகம்மதிய அரசரால் ஆளப்பட்டிருக்க, ருஷியர்கள் வியாபாரத்துக்காக வென்றே யங்கு புகுந்து, பர்ஷிய அரசனுக்குவேண்டிய கடன்களைத் தாராளமாய்க் கொடுத்து, இருப்புப்பாதைகள் போட்டு, அவைகளை ருஷியர்களே நடத்துவதாக ஏற்பாடுசெய்து, கடைசியில் தாங்கள் கொடுத்த கடன்களுக்கு வட்டிக்கீடாகப் பர்ஷியாவின் கடற்சுங்கங்களை முற்றிலும் தங்கள் ஆதீனத்திலேயே வைத்துக்கொண்டிருக்கின்றனர். பர்ஷியாவாசர் தற்காலத்தில் அன்னிய ராஜாங்கத்தார்கள் எவ

ருடனும் தம் விருப்பப்படி உடன்படிக்கைகள் செய்து கொள்ள இயலாதவ ராய்விட்டனர். அவ்வாறே ஆதியில் ஈஜிப்டு தேசத்தில் அதனரசனான இஸ்மேல் பாசூராவுக்குக் கண்டபடி கடன்களைக் கொடுத்து, அந்த மந்தமதியினன் கிடைத்தமட்டிலும் கடன்கள் வாங்கி வீண்செலவுகள் செய்யக், கடைசியில் கடன்களுக்குத் தவறாமல் வட்டி கொடுக்கத் தன் ராஜ்யத்து வரும்படியே போதாது தவறிப்போனதைச் சாக்காகக்கொண்டு ஐரோப்பியர் இஸ்மேல் பாசூராவைச் சிம்மாசனத்தினின்று நீக்கித், தங்கள் காரியஸ்தர்களைக்கொண்டு ஈஜிப்டின் ராஜாங்கத்தை நடத்த முயன்றதில், பிரிட்டிஷார் முன்னின்று இப்போது அத்தேச ஆக்ஷியை நிர்வகித்து வருகிறார்கள். பேருக்குமாத்திரம் இஸ்மேல் வம்சத்தினரொருவர் மேகத்தால் மூடப்பட்ட சூரியன்போல் விளங்குகின்றனரே யன்றிச் சர்வ அதிகாரத்தையும் பிரிட்டிஷாரே செலுத்திவருகிறார்கள்.

மேலும், "பல்லாயிர,"மாண்டுகளாக ஸ்வாதீன மனுபவித்துத், தனக் குரித்தான நாகரிகத்தைப் பின்பற்றி, விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் ஒப்புயர்வின்றி, அன்னிய தேசத்தார்களை மிலேச்சரென் றவமதித்துத், தேசத்துள் புகவொட்டாமலும் அவர்களுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளாமலுமிருந்து வந்த சீன தேசத்திலும் மேற்கண்டவாறே ஐரோப்பியர்கள் புகுந்து சின்னாபின்னப் படுத்திவருகிறார்கள். வர்த்தகத்துக் கென்றே ஐரோப்பியர்கள் ஆரம்பத்திற் கால்வைப்பது வழக்கம். பிறகு



வேண்டிய கடன்களை வலியக் கொடுப்பார்கள். பிறகு பசுக்கள் போல் தூதர்களாகத் தோன்றும் பாதிரிகளை யனுப்புவார்கள். அடுத்தபடி கொடுத்த கடன்களுக்கு வட்டி கேட்டு, உட்புகுந்த பாதிரிகளைத் தேசச் சனங்கள் இம்சித்தார்களென்று புகார் செய்வார்கள். மத்தியில் சுயமதத்தை அன்புடன் பின்பற்றிவரும் ஜனங்கள் சுயமதத்தை நிந்திப்பதே தொழிலாகக் கொண்டு திரியும் கிரஸ்துவப் பாதிரிகளிடத்தில் அடங்கா வெறுப்பும் கோபமும் கொள்ள, அப்பாதிரிகளிற் சிலரை ஆவேச மேறின உள்நாட்டு மூடஜனங்கள் கொலை செய்து விடுவார்கள். அப்படிக் கொலை செய்ததற்கு அபராதமாகத் தேச ராஜாங்கத்தாரிடம் கோடிக்கணக்கான பொருளைக் கேட்க, அப்படிக் கேட்கப்பட்ட பொருளைக் கொடுக்கையில் முதலில் வாங்கியிருக்கும் கடன்களுக்கு வட்டி கொடுத்தல் கஷ்டமாய் முடியும். வட்டி கொடுக்கவில்லை யென்று தேசத்து வரும்படியை யன்னியர்கள் சுவாதீனப்படுத்திக்கொள்ளுவார்கள். அன்னியர்களின் இம்சை வரவர அதிகரிக்க, ராஜாங்கத்தாருக்கும், உள்நாட்டு உத்தியோகஸ்தர்களுக்கும், பிரஜைகளுக்கும் ஆத்திரம் பொங்கிச், சமீபத்தி லகப்படும் கிரஸ்துவப் பாதிரிகளை வதைத்தும் கொன்றும் பழிவாங்குவார்கள். இவ்வாறே சைனாவில் நேரிட்டுச் சமீபத்தில் பிரிடிஷார், ருஷியர் ஜர்மானியர், அமெரிக்கர் ஜப்பானியர் இவர்களெல்லோரும் தங்கள் தங்கள் படைகளைக் கொண்டு சீனாவின் மீது ஆக்கிரமித்துச் சீனர்களைப் போரில் எளி

தாக அடக்கிச் சீனச் சக்கிரவர்த்தி தாங்கள் கேட்டதை
யெல்லாம் செய்யும்படி யடித்தார்கள். ஆயினும் சீன
ஏகாதிபத்தியத்தின் நற்காலவசத்தால், இந்த அன்னிய
ராஜாங்கத்தார் ஒருவர்மீ தொருவர் பொறாமை கொ
ண்டு, அந்தரங்கத்தில் சீனாவைப் பங்கிட்டுக்கொள்ள
ஆசைப்பட்டவர்க ளெனினும் ஒருவருக் கொருவர்
பயந்து எல்லாரும் விலகியிருக்கின்றனர். இருந்தும்
இதுவரையில் சைனா தேசத்தின் துறைமுகங்களில்
மட்டும் வியாபாரம் செய்யச் சுதந்தரம் பெற்றிருந்
தவர்கள் இனி உள்நாடுகளிலும் தங்கள் சரக்கு
களை யாதொரு வரியும் கொடுக்காம லனுப்பச்
சீனச்சக்கிரவர்த்தியைப் பயப்படுத்தி அனுமதி வாங்கி
விட்டார்கள். இவ்வாறு அனுமதி வாங்கின
படி அன்னியச் சரக்குகள் சீன உள்நாடுகளில்
செல்லும் முறையில் சீன உத்தியோகஸ்தர்கள் பிர
வேசித்து வியாபாரத்தைக் கெடுத்துவிட்டார்க ளெ
ன்று, சீனச்சக்கிரவர்த்தி யிடம் முறையிட்டு நஷ்ட
ஈடாக அளவற்ற பொருள் கேட்கச், சீனச் சக்கிர
வர்த்தி கொடுக்க அசக்தராக, அப்போது ஈஜிப்டி
லும், பர்ஷியாவிலும் சேர்ந்ததுபோலச் சீனாவிலும்
[illegible] வரும்படிகளை ஐரோப்பியர்கள் கைப்
பற்றிச், சீனச்சக்கிரவர்த்தியையும் அவர் மந்திரிகளை
யும் மூலையி லொதுக்கி ஏகாதிபத்திய நிர்வாகம்
செய்துவருவார்கள். இவ்வாறே சீனாவில் நேரிடப்
போகிற தென்று அறிந்தோராகிய பலர் ஊகித்துச்
சொல்லி [illegible]



இவைகளை யெல்லாம்விட நமது இந்தியாவிலே
யே முதல் முதல் போர்த்துகியர் பிரவேசித்ததையும்,
பிறகு பிரிட்டிஷார் வியாபாரத்தை நோக்கமாகச்
சொல்லி இந்தியாவில் புகுந்ததையும், வெகுகாலம் தேச
மன்னர்களுக்கு இவர்க ளடங்கி வினயத்துடன் வியா
பாரம் செய்து ஏராளமான பொருளீட்டி வந்ததையும்,
பிறகு தேசமன்னர்கள் ஒருவருட னொருவர் போர்
செய்ய, அப்போர்களி லிவர்கள் கலந்து, மூடர்களாயும்
ஒற்றுமையில்லாதவர்களாயு மிருந்த நம்மன்னர்களை
ஒவ்வொருவராய்க் கபடத்தாலும் போர்வலியாலும்
கீழ்ப்படுத்திக் கடைசியில் அவர்கள் வலிமைக்கு நம்
மவரை ஆற்றமாட்டாதவர்களாய்ப் பிரிட்டிஷாருடைய
விசுவாசப்பிரஜைகளா யமரத், தற்காலத்தில் பிரிட்டி
ஷார் இந்தியாவில் ஏகாதிபத்தியம் நாட்டி யாண்டு
வருவதையும் இந்தியர்களாகிய நம்மவர்கள் நன் கறி
வார்க ளன்றோ?

ஆகையால் ஜப்பானியர் தம் தேசத்தில் அன்
னிய நாட்டாரைச் சேர்த்தல் தேச சுவாதீனத்
துக்கே மோசமாக முடியு மென்று அவர்களை
யொதுக்கி வைத்திருந்தது சூழ்ச்சிக்குறை வென்று
அவசரமாகச் சொல்லிவிடக்கூடாது. ஜப்பானியர்
அவ்வாறு கருதியிருந்தும் ஐரோப்பியர்கள் அவர்க
ளைத் தனியே விட்டனரல்லர். டச்சுக்காரர்கள் ஜப்பா
னைப்பற்றி ஐரோப்பிய தேசத்தாருக்கு அறிவித்ததால்
போர்த்துகியர், ஸ்பானியர், டச்சுக்காரரிவர்களல்
லாமல், ருஷியர்கள், பிரிட்டிஷார், அமெரிக்கர் இவர்க

ளும் ஜப்பானில் தங்களுக்கு நிலைப்பிடம் உண்டாக வேண்டுமென்று முயன்றனர். அமெரிக்கர்களுக்கு ஜப்பானிய சம்பந்தம் பெறுவது முக்கியமாய் அவசியமாயிற்று. அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் மத்தியிலுள்ள சமுத்திரத்தில் திமிங்கில மீன் பிடிக்கும் தொழிலை வெகு பணம் செலவிட்டு விருத்திசெய்தும், சீனதேசத்தில் அமெரிக்கருக்கு வியாபாரத்துக்கு இடம் உண்டாகியும், சமுத்திரத்தில் அடிக்கடி போக்குவரத்து செய்தல் அவசியமாயினபடியால், ஜப்பான் தீவுகளி லெங்கேனும் அமெரிக்கப் புகைக்கப்பல்களுக்குக் கரி யேற்றும் ஸ்தலமொன்றை ஸ்தாபிக்க வேண்டியதாயிற்று. அன்னியரைச் சேர்ப்ப தில்லையென்று ஜப்பானியர் செய்திருந்த நிச்சயத்தை மாற்றி உலகத்து ஜனசமூகங்களின் ஐக்கியபத்தியத்தில் களங்கமற்ற சித்தத்துடன் பிரவேசித்தாலன்றி அமெரிக்கர் கோரிக்கை நிறைவேறுதல் கஷ்டசாத்திய மாயிற்று. ஆயினும் அமெரிக்கருக்கு மேற்கண்டவாறு ஒரு ஸ்தலத்தை ஜப்பானிய தீவுகளில் ஏற்படுத்திக் கொள்ளாவிடில் வியாபார நஷ்டங்கள் நேரிடுமாகையால், அமெரிக்கர் எவ்வாறேனும் ஜப்பானியரைத் தங்கள் கோரிக்கைக்கு இசையச் செய்வதே சரியென்று முடித்தனர். முடித்து, ஏற்கனவே நாம் சொன்னதுபோல கமடோர் பெர்ரியை ஒரு கப்பற்படையுடன் ஜப்பான் கடலோரத்துக் கனுப்பினார்கள். ஜப்பானியரோடு கூடியவரையில் சமோபாயப் பிரயோகத்தாலேயே தங்கள் நோக்கத்தை நிறை





வேற்றுவது சிறந்ததென்று கமடோர் பெர்ரி அபிப்பிராயப்பட்டிருந்தாலும், அவசியமாயின் தண்டோபாயப் பிரயோகத்தில் பின்வாங்குவதில்லை யென்றவெண்ணத்துடன் அதற்குத் தக்கவாறு படைச் சேர்க்கையுடன் வந்தார்.

வந்த கமடோர் பெர்ரி கப்பற்படையைப்பார்த்து ஜப்பானியர் இயற்கையாகவே அச்சமுற்றனர். தங்கள் நேச சம்பந்தத்தைக் கோரி வந்த அமெரிக்கருடன் அக்கோரிக்கைக் கிசைந்து நேசம் செய்வதா, அல்லது அவர்களை எப்போதும் போல் கிட்ட அண்டாமல் விலக்கிவிடுவதா, வென்று சந்தேகம் ஏற்ப ராடிற்று. அன்னிய நாட்டாரது பழக்கமில்லாமல் ஜப்பானியர் மனசில் சமுசயம் நேரிட்டிருந்ததேயன்றி, நம்பிக்கை தோன்றினதில்லை. சமுசயத்தையே தழுவி அமெரிக்கர் விருப்பத்தை நிராகரித்துவிட்டால், அவர்கள் பலவந்தமாகக் காரியசித்திபெற நிச்சயிக்கும் பக்ஷத்தில், அவர்களை யெதிர்த்து யுத்தம் செய்து வென்று தங்கள் தேசத்தின் சுவாதீனத்தைக் காப்பாற்ற ஜப்பானிய ராஜாங்கத்தாருக்குச் சக்தியுண்டோ வென்று மனதில் குழப்பமும், பயமும் தோன்றின. ஜப்பானியர்களுக்கோ அக்காலத்தில் உபயோகத்தி லிருந்த யுத்தக் கருவிகள் பழமைப் பட்டனவாய், ஐரோப்பியர்கள் சாஸ்திர பூர்வமாக நிர்மாணித்து உபயோகித்த கருவிகளுக்கு ஆற்ற மாட்டுவன வல்லவா யிருந்தன. ஜப்பானியர்களுடைய போர்க்குணங்களும், சுமார் 200 வருஷ காலமாக யுத்தப்பயிற்சியின்றி மழுங்கிப் போயிருந்தன. இதன்றி ஷோகன் வம்சத்தாருக்கு விரோதிக ளநேக ரிருந்தன[illegible] [illegible]சக்கிரவர்த்தியின்

அதிகாரத்தைக் கைப்பற்றி ராஜாங்க நிருவாகத்தை முற்றிலும் ஏற்று வந்த ஷோகனை வெறுத்து, அவர் எவ்விதத்தேனும் சங்கடத்தில் மாட்டிக்கொண்டால் நல்லதென்று விரும்பினர் பலர். இந்தச் சந்தியில் ஷோகன் யாது செயற்பாலதென்று சிந்தித்து அங்கங்குள்ள மாகாணத் தலைவர்களுடன் யோசனை செய்து தக்கதைச் செய்வதே விவேகமென்று நிச்சயித்தனர். நிச்சயத்தபடி ஷோகனுக்கு அமெரிக்கஸ்தானிகர் விடுத்த நிருபமானது அத்தலைவர்களுக்கனுப்பப்பட்டது. பலர் பலவிதமாய் யோசனைகள் சொல்லியும், எதுவும் நிச்சயப்படாமல் யுத்தம் நேரிடும் பக்ஷத்தில் ஜப்பானைக் காக்கவேண்டிய முயற்சிகள் நடத்தப்பட்டுவந்தன. ராஜஸ்தானத்தில் கோட்டைகள் அவசரமாகக் கட்டப்பட்டன. தேவாலயம், மடாலயங்களில் தொங்கிக்கொண்டிருந்த மணிகளும், மற்றும் உலோக சாமான்களும் உருக்கப்பட்டுப் பீரங்கிகளாக வார்க்கப்பட்டன. ஐரோப்பியர்கள் உபயோகப்படுத்தும் ஆயுதங்களை யுபயோகிப்பதில் ஜப்பானியச் சிறுவர்கள் பயிற்சி செய்யப்பட்டார்கள். அனேக விடங்களிலிருந்து போர்வீரர்கள் ஷோகனின் பிரதான ஸ்தானமாகிய யடோவுக்கு வந்து, எப்போது தாங்கள் இந்த அன்னியர்களை விரட்டியடித்துத் தேசத்தைக் காக்கக் கட்டளை பெறுவார்களென்று எதிர் பார்த்திருந்தார்கள்.

இப்படியிருக்க,1853-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் ஷோகன் இறந்துபோனார். அவருடைய மகன் கிரமப்படி பட்டத்துக்கு வந்தும் நடக்கவேண்டிய விஷயங்களில் [illegible] முண்டாக



இல்லை. யடோ கடலிலிருந்து அமெரிக்கப் படைகள் நீங்கின [illegible] ஒரு ருஷியப்படை நாகஸாகி துறைமுகத்தில் வந்து தோன்ற, அ[illegible]யினர்களும் வியாபாரத்துக்காக ஜப்பானியரின் நேசத்தைக் கோரினதாகச் சொன்னார்கள். அவ்வாறே ஆங்கிலேயக் கப்பல்களும் தோன்றின. எந்த வேளையில் இப்படைகளின் தலைவர்கள் ஷோகனைக் கண்டு பேசவேண்டுமென்று சேதி யனுப்புவார்களோ வென்று குழப்ப முண்டாயிற்று. இப்படியிருக்க, அமெரிக்கப் படைகள் மறுபடியும் முன்னிலும் அதிகமா[illegible]டோடு யடோ கடலைச் சேர, அதுதுறையில் தாங்கள் பார்த்திராத மரக்கல வரிசையைக் கண்டு ஜப்பானியர்கள் பீதியுற்றனர் [illegible], 1854-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந் தேதி ஜப்பானிய ராஜாங்கத்தாரும் அமெரிக்க ஸ்தானிகர்களும் பலவிதங்களாகப் பேச்சுக்கள் பேசிக் கடைசியாய் ஒரு உடன்படிக்கையை முடித்துக் கையொப்பமிட்டார்கள். உடனே அந்த உடன்படிக்கை அமெரிக்காவின் ராஜாங்க ஸ்தானமான வாஷிங்டனுக்கு அனுப்பிவிட்டது [illegible] ராஜாங்கத்தாரின் சம்மதம் பெற அனுப்பப்பட்டது. இந்த உடன்படிக்கைப்படி [illegible] அமெரிக்கக் கப்பல்கள் இரண்டொரு ஜப்பானியத் துறைமுகங்களில் [illegible] தங்கவும், கப்பலுடைந்து [illegible] குட்டப்பட்டவர்கள் அங்கு [illegible] சம்ரக்ஷிக்கப்படவும் இரு தேசத்தாருக்குள் வியாபார சம்பந்த நோக்கமாய் இனி [illegible] செய்யப்படவும், ஜப்பானியர் [illegible]புக் கொண்டனர்.

இவ்வாறு அமெரிக்கருக்கு ஜப்பானியர் இடங்
கொடுத்தவுடனே அநேகமாகிரி நிபந்தனைக ளடங்
கிய உடன்படிக்கை யொன்றைப் பிரிடிஷாரும், ருஷி
யரும், டச்சுக்காரர்களும் கேட்க, அதற்கு ஜப்பா
னிய ராஜங்கத்தார் இசைந்தனர்.

இம்மாதிரி அன்னிய தேசத்தார்களுடன் ஷோ
கூன் அதிகாரிகள் உடன்படிக்கைகள் நடத்த, அப்பேர்ப்
பட்ட அன்னியர்களைச் சேர்க்கக் கூடாதென்று
சாதித்து வந்தவர்களும் ஷோகூன் வமிசத்தாருக்கு
விரோதிகளா யிருந்தவர்களும் முன்னைவிடப் பல
விதமான ஆத்திரத்தைக் காட்ட ஆரம்பித்தார்
கள். ஷோகூனுக்கு அன்னிய தேசத்தார்களோடு
வியாபார உடன்படிக்கைகள் செய்ய அதிகார மில்லை
யென்றும், அவர் எப்போதும் ஜப்பானுக்கு அரச
னல்லரென்றும், சக்கிரவர்த்தியினுடைய முக்கிய காரி
யஸ்தரான உத்தியோகஸ்தரேயன்றிச், சக்கிரவர்த்
திக்கு இரண்டாவது அந்தஸ்தைப் பெறக்கூடப் பாத்
தியமுள்ளவ ரல்லரென்றும், ஆகையால் அவர்
செய்த உடன்படிக்கைக்குச் சக்கிரவர்த்தி சம்மதங்
கொடுக்காதவரையில் ஜப்பானியர் கீழ்ப்படவேண்
டியதில்லை யென்றும் சொல்லிக்கொண்டார்கள். ஆயி
னும் ஜப்பானியருக்குள் ஷோகூனுக்குள்ள உண்மை
யான அதிகாரத்தைப்பற்றி என்ன அபிப்பிராயமுண்
டாயிருந்தபோதிலும், அன்னியதேசத்தார் சம்பந்தப்
பட்டவரையில் ஷோகூனே சகல பொறுப்பும் வகித்த
வராகக் கொள்ளப்பட்டார். கொள்ளையடிக்க வந்தவர்
களுக்குச் சொந்த நகையானாலும் இரவல் நகையானா



லும் பேதமில்லாததுபோல, ஜப்பான் தேசத்தில்
பலாத்காரமாய்ப் புகுந்து வியாபாரத்தை ஸ்தாபிக்கத்
தீர்மானித்து வந்த ஐரோப்பிய தேசத்தார்களுக்கு
ஷோகூனுடைய அதிகாரம் எத்தகையதாயினு மென்
ன? ஷோகூனினுடைய அதிகாரம் அக்காலத்தில்
பலஹீனப் பட்டிருந்ததுபோல விராமல், பூர்வம் எதி
ரில்லா திருந்தது போல விருந்தால் அவருக்கு அதி
கார முண்டு, இல்லை யென்கிற பேச்சு நேரா தல்ல
வா? முன் சொல்லப்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம்
அமெரிக்கர் ஹாரிஸ் என்ற ஒருவரை ஸ்தானிகரா
யனுப்ப, அவர் ஷிமோடா வென்னும் நகரத்தில் 1856-ம்
வருஷத்தில் வசிக்க ஆரம்பித்தனர். அவர் பெரு
மையுள்ளவரும், யுக்திசாலியுமா யிருந்தபடியால் ஜப்
பானிய ராஜாங்கத்தார் அவரிடத்தில் நம்பிக்கை
வைத்து அன்னிய தேசங்களைப்பற்றிய சகல விவகா
ரங்களிலும் அவருடைய ஆலோசனையைக் கேட்டுவந்
தார்கள். அவர் ஒரு காலத்தில் வியாதியால் பாதைப்
பட நேரிட்டபோது ஷோகூன் வைத்தியர்களை
யழைத்து, "ஹாரிஸைக் குணப்படுத்தாமல் அவர்
இறந்து போவாரானால் உங்களுக்கே மோசம் வரு"
மென்று ஆக்கினையிட் டனுப்பினாராம். மிஸ்டர் ஹாரிஸ்
ஸினுடைய பிரயத்தனத்தினால் ஜப்பானியரோடு ஒரு
புது உடன்படிக்கை அமெரிக்க வியாபாரத்துக்காக
வும், அமெரிக்கர் வந்து வசிக்கும் பொருட்டும், சில
துறைமுகஸ்தலங்களை விடும்படியாகச் செய்யப்பட்
டது. இந்த முறையை யனுசரித்தே மேன்மே
லும் அன்னிய தேசத்தார்கள் பல நோக்கங்களைக்

கொண்டு நிலைபெறத் தொடங்கினார்கள். ஜப்பானில் இறக்குமதியாகும் அன்னியச் சரக்குகளுக்கும் வரிகள் விதிக்கப்பட்டன. இப்படி விதிக்கப்பட்ட வரிகளால் ஜப்பானிய ராஜாங்கத்துக்கு நஷ்டமேயன்றி லாபம் நேரிடவில்லை. இறக்குமதிச் சரக்குகளுக்கு விதிக்கப்பட்ட வரித்தொகை, அதை வசூல் செய்ய அவசியமான சிப்பந்திகளின் செலவுக்கும் போதுமானதாயிருக்கவில்லை. ஜப்பானியக் கடலோரம் வசிக்கும் அன்னியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் நியாயவழக்குகள் நேரும் பக்ஷத்தில் அன்னிய வாசிகள் பிரதிவாதிகளானால் அந்த அன்னியச் சாதியினர்களே அவ்வழக்குகளைத் தீர்க்கவேண்டுமென்றும், ஜப்பானியர் பிரதிவாதிகளானால் ஜப்பானிய மாஜிஸ்டிரேட்டே தீர்க்கவேண்டுமென்றும் உடன்படிக்கையேற்பட்டிருந்தது. அப்படி யேற்பட்டிருந்ததற்கு ஜப்பானியச் சட்டங்களும், மாஜிஸ்டிரேட்டுகளும், ஐரோப்பியர்களுடைய நம்பிக்கைக்குத் தகாதவைகளென்று ஐரோப்பியர் சாதித்ததே காரணமாயினும், பிற்காலத்தில் ஜப்பானியர் ஐரோப்பிய மாதிரிகளைப் பின்பற்றி நாகரிக முதிர்ச்சி பெற்று மாஜிஸ்டிரேட்டுகளும் சட்டங்களும் ஐரோப்பிய மாஜிஸ்டிரேட்டுகளுக்கும் சட்டங்களுக்கும் சமானமாக ஆய்விட்டபடியால், ஜப்பானில் ஐரோப்பிய வாசிகளுக்கு அலாதியான நியாயத்தீர்ப்பு ஏற்பாடுகள் செய்வது அவசியமல்லவென்று ஜப்பானியர் வாதிக்க, அந்த விஷயமாய் இன்னும் மனஸ்தாபமிருந்துகொண்டு வருகிறது.



# CHAPTER VI.

## ஆறாம் அதிகாரம்.

வெள்ளையர்க்குத் தனி நியாய ஏற்பாடுகளும், அவற்றின் அக்கிரமும்—அன்னியர் புகுந்து நிலைபெறலைக் கண்டு ஜப்பானியர் கலகம் செய்ததும், அதன் விளைவுகளும்—ஜப்பானியத் தூதர்கள் அன்னிய தேசங்களுக்குப் போனதும், அதன் பலன்களும்—அன்னியகாரிகளைக் கொலை செய்ததும், அதன் பயன்களும்—அன்னியர்களுக்கும் ஜப்பானியருக்கும் விரோதமும் சண்டைகளும், கடைசியில் உடன்படிக்கையும்—இவ்வுடன்படிக்கையின் அநியாயமும், "பலமே நியாயம்" என்னும் அன்னியர் கோட்பாடும்.

ஐரோப்பிய தேசத்தார்கள் இக்காலத்தில் உலகத்திலெந்தமூலையிலுள்ள நாட்டிலும் புகுந்து தங்கள் அதிகாரத்தை ஸ்தாபித்துவிடுகிறார்கள். அப்படிப் புகும் நாட்டுவாசிகளை எவ்விதத்திலும் தங்களுக்குக் கீழ்ப்படுத்திவருவதில் அந்நாட்டுவாசிகள் உண்மையில் எவ்வளவு நாகரிக முள்ளவர்களாயினும் ஐரோப்பியர்களுக்குச் சமானஸ்தரல்லரென்று வாயடி யடித்துத், தங்களினத்தாரென்ன குற்றம் செய்தாலும் குற்றத்தை விசாரித்துத் தீர்ப்பு செய்யும் உத்தியோகஸ்தர் ஐரோப்பியராகவே யிருக்கவேண்டுமென்றும், அந்நாட்டாரில் எவரும் தங்கள் நம்பிக்கைக்குத் தகாதவரென்றும், பிடிவாதஞ் செய்து நடத்திவருகிறார்கள். அவ்வாறே நம் தேசத்திலும் எல்லாச்சட்டங்களும்

பிரிடிஷ் துரைத்தனத்தாராலேயே செய்யப்படுவனவாயினும், மாஜிஸ்டிரேட்டுகள் இந்தியரா யிருக்கும் பக்ஷத்தில் அந்தச் சட்டங்களின்படி தங்களுக்கு நியாயத் தீர்ப்பு செய்ய யோக்கியதை யற்றவர்களென்று ஐரோப்பியர் நம்மை யவமதித்துவர, அதை ராஜாங்கத்தாரும் ஒப்பிவருகிறார்கள். சாமானியமான அற்ப ஐரோப்பியனானாலும், அவன்பேரில் ஏற்படுகிற குற்றம் சொற்பமானாலும், அவன் குற்றத்தை விசாரித்து முடிவு சொல்ல ஐரோப்பிய மாஜிஸ்டிரேட்டே வேண்டுமாம். இந்தியர்களுக்கு அவமதிப்பான இந்த அக்கிரமத்தை நீக்கும்பொருட்டு 20 வருஷங்களுக்கு முன் நமக்குக் கவர்னர்ஜனரலா யிருந்த லார்டு ரிப்பன் புதுச்சட்டம் செய்ய முயன்ற போதுதான் அவர் பேரில் ஆங்கிலேயவாசிகள் காட்டுக்கூச்சலிட்டு, அவதூறு சொல்லி நிந்தனைசெய்து, கடைசியில் அச்சட்டத்தைச் செய்யவொட்டாமல் தடுத்தனர். இந்தியாவைப்போல் ஜப்பான் சுவாதீன மிழந்த தேசமல்லவாகையால், அத்தேசத்தில் பொருளீட்டப் போன அன்னியர்கள் தங்கள் விருப்பப்படி ஸ்தாபனங்களை ஸ்தாபித்துக்கொண்டு ஜப்பானிய ஸ்தாபனங்கள் நாகரிகக் குறைவுள்ளவைகளென்று நினைத்தல் நியாயமல்லவாயினும், ஜப்பானியரைவிட அன்னிய நாட்டார்கள் பலவான்களா யிருந்தபடியால் அவர்கள் நினைத்தவாறு செய்து முடித்தல் சாத்தியமாயிற்று. தற்காலத்தில் ஜப்பானிய தேசத்தில் வழங்கும் சட்டங்களும் அவைகளின்படி நீதி செலுத்தும் நியாயாதி

G4



காரிகளும் இளப்பமானவர்களல்லர். ஆகையால், அன்னியர்கள் மேற்சொன்னவாறு ஜப்பானியர்களுக்குட்படாமல் பிரத்தியேகமான நியாயாதிகாரிகளை இன்னும் ஏற்படுத்திக் கொண்டிருப்பது ஜப்பானியர்களுடைய சிநேகத்தைக் கோரும் அவர்களுக்கு லக்ஷணமல்ல.

இவ்வாறு அன்னியர்கள் ஜப்பான் தேசத்தில் புகுந்து நிலைபெற்று வருவதையும் ராஜாங்கத்தார் அதற்குற்றவாறு இசைந்திருப்பதையுங் கண்டு ஜனங்கள் சஞ்சலப்பட்டுக் கலகஞ்செய்யத்தொடங்கினார்கள். மாகாணத் தலைவர்களா யிருந்த சிற்றரசர்களுக்குட்பட்டுச் சிற்றரசர்களுடைய சேவகத்தில் அமர்ந்திருந்த வேலையாட்கள், போர்புரிவோர், முதலாயினர் ராஜாங்கத்தார் மீது கலகஞ்செய்ய நிச்சயித்துத் தங்கள் எஜமானர்களை விட்டுவிட்டுத் தலைவர்களில்லாதவர்களாய்ச் சுயேச்சையுடன் அக்கிரமங்கள் செய்யத் தலைப்பட்டார்கள். இவர்களின் உத்தேசம், அன்னியவாசிகளையும், ஷோகன் ராஜாங்கக்கட்சியைச் சேர்ந்தவர்களையும் நேர்ந்தவிடத்தில் கொலை செய்வதாயிற்று. இதைப் பார்த்து அன்னிய வாசிகள் பயந்து, ஷோகன் ராஜாங்கத்தாரின் அனுமதியின் பேரிலேயே தாங்கள் ஜப்பானில் வந்திருப்பதால் தங்களையும் தங்களின் வர்த்தகத்தையும் அபாயத்தினின்று காப்பது அந்த ராஜாங்கத்தாரின் பொறுப்பென்று மன்றாடினார்கள். 1860-ம் வருஷம் மார்ச்சு மாதம் 23-ந் தேதியன்று இளைஞராயிருந்த ஷோகனுக்குப் பிரதிநிதி-

யாய் ராஜாங்கத்தை நடத்திவந்த முதல்மந்திரியானவர் ஷோகூன் அரண்மனைக்குப் போகும் வழியில், கொல்லப்பட்டார். இவர் இவ்வாறு கொல்லப்பட்டது பின்னால் வந்த ஷோகூன்களின் அதிகாரங்கள் குறைந்ததற்குக் காரணமாயிற்று. இவ்விதம் அங்கங்கே கொலைகள் நடக்க ஆரம்பித்ததைக்கண்டு ராஜாங்கத்தார் அன்னிய வாசிகளை யெச்சரித்தார்கள். எச்சரித்தும் சிலர் கொல்லப்பட்டார்கள். இப்படிக்கொலை செய்யும் துஷ்டர்களை முற்றிலும் அடக்க ராஜாங்கத்தார் சக்தியற்றவர்களாய், அக்தருணத்தில் தேசமிருந்த நிலைமை நோக்கி ஜப்பானியருக்கும் அன்னியருக்கும் புதிதாய்ச் செய்யக் கருதியிருக்கும் உடன்படிக்கையை அப்போது செய்வது யுக்தமல்லவென்றும், ஐந்துவருஷம் பொறுத்து அதற்குள் தேசத்தின் நிலைமை சீர்பட்டால் செய்யலாமென்றும் ராஜாங்கத்தார் கேட்டுக்கொண்டார்கள். புது உடன்படிக்கைப்படி ஜப்பானியத் துறைமுகங்கள் சிலவற்றில் அன்னியர் வந்து வசிக்கும்படியாக ஒப்புக்கொள்ள வேண்டுமென்றதை ஒத்திவைக்கும் நோக்கத்துடன் ஜப்பானிலிருந்து அன்னியதேசங்களுக்குத் தூதர்களனுப்பப்பட்டார்கள்.

அதுவரையில் அம்மாதிரி ஜப்பானியத் தூதர்கள் அன்னிய தேசங்களுக்கு அனுப்பப்படவேயில்லை. அன்னியர்கள் தங்கள் தேசத்தில் வந்து குடியிருக்க இடங்கொடுத்தலே ஆபத்தாய் முடியுமென்று பயந்திருந்தவர்கள் தாங்களாக அன்னிய தேசங்களுக்குப் போய் அவைகளுடன் சம்பந்தத்



தை ஸ்தாபித்துக்கொள்ள முயல்மாட்டார்களல்லவா? ஆயினும் கால வேற்றுமைக்குத் தக்கபடி மனுஷனுக்கானாலும் மனுஷ சமூகத்துக்கானாலும் புத்திவேற்றுமையுமுண்டாகின்றது. ஜப்பானியருக்கு எக்காலமுமில்லாத கவலைகள் நேர்ந்து, புதிய முயற்சிகள் செய்தல் அவசியமானபடியால், பூர்விகப் பழக்கவழக்கங்களையே அனுஷ்டித்துப் புதுமைகளை யகற்றல் தேச நன்மைக்குற்றதல்ல வென்று நிச்சயிக்கும் தேசாபிமானக் கொள்கையை மேற்கொண்டு, 1862-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் யோகோஹாமாவிலிருந்து இந்தத் தூதர்கள் அமெரிக்காவுக்குச் சென்று, அங்கிருந்து இங்கிலண்டுக்கும் உடன்படிக்கையிற் சேர்ந்த மற்ற அன்னிய நாடுகளுக்கும் சென்றார்கள். சென்றவிடங்களிலெல்லாம் ஜப்பானியர் தக்க கண்ணியமும் மரியாதையும் பெற்றதோடு அவர்களின் உத்தேசமும் நிறைவேறிற்று. புதிதான துறைமுகப் பட்டணங்களில் அன்னியர்களுக்கு வசிக்க இடங்கொடுத்தல் பின்னால் நிச்சயிக்கப்படக்கூடுமென்றும், மத்தியில் ஏற்கெனவே அன்னியர்கள் வசிக்கும் ஸ்தலங்களில் அவர்களுடைய வியாபாரத்துக்கு எவ்வித இடையூறும் நேரிடாமல் ஜப்பானிய ராஜாங்கத்தார் காக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஜப்பானியத் தூதர்கள் இவ்வாறு அன்னிய தேசங்களுக்குப் போய்வந்ததில் அப்போதைய உத்தேசம் நிறைவேறினதுமன்றி வேறு முக்கியமான நன்

மைகளும் உண்டாயின. ஜப்பானியர்கள் நாகரிக
மற்ற சாமானிய ஜனங்களென்று அலக்ஷியஞ் செ
ய்து வந்த அன்னிய தேசத்தார் அவர்கள் அப்
பேர்ப்பட்டவர்களல்ல ரென்றும், திறமும் புத்தி
சாலித்தனமும் தேர்ச்சியும் பெற்றவர்களென்றும்,
தூதர்களாக வந்த ஜப்பானியர்கள் ஐரோப்பிய ராஜ
தந்திர முறைகளில் அநுபோக மற்றவர்களாயிருந்
தாலும் ஐரோப்பிய ராஜ தந்திரிகளை விட இளப்ப
மானவர்க ளல்லவென்றும், அறிந்துகொண்டார்கள்.
ஜப்பானியர்களும் ஐரோப்பாவில் தாங்கள் பார்த்து
அறிந்தவைகளால்பிரமத்தையடைந்தார்கள். ஐரோப்
பிய ராஜாங்கத்தார்கள் வைத்திருந்த பயங்கரமான
சைன்னியங்களைப் பார்த்து அன்னருடன் ஜப்பான்
எவ்வாறு போர் புரியக்கூடுமென்று சங்கை யடைந்
தார்கள். சீனரைப்போல ஜப்பானியரும் அன்னியர்க
ளெல்லோரையும் மிலேச்சர்களென்று நிந்திக்கும் வழ
க்கமுள்ளவர்கள். அவ்வாறு அன்னியர்களெல்லோரும்
மிலேச்சர்க ளல்லரென்றும், ஜப்பானியரது கௌர
வத்துக்கும் மதிப்புக்கும் தக்கவர்களென்றும், தங்
கள் தேசத்தார்களிடத்தில் எவ்வித வெறுப்பு மில்
லாததோடு அவர்களை நேசப்பான்மையுடனும் நியாயப்
படிக்கும் நடத்த முற்றிலும் இசைந்திருப்பவர்க
ளென்றும், கண்டுகொண்டார்கள்.

இப்படியிருக்க, ஜப்பானில் அன்னியவாசிகளைக்
கொலைசெய்தல் நிற்கவில்லை. அன்னியரின் கொலை
நேரிட்டபோ தெல்லாம் ஜப்பானிய ராஜாங்கத்தார்



லக்ஷம், புத்து லக்ஷமாக அன்னியருக்கு நஷ்ட
ஈடு பலவந்தமாய்க் கொடுக்கவேண்டிய தாயிற்று.
இப்படி நேரிட்ட கொலைகளில் 1862-ம் வருஷம்
செப்டம்பர் மாதத்தில் ஒரு விசேஷமான கொலை
நடந்து அதனால் பெரும் அனர்த்தங்கள் விளைந்தன.
ஷோகூன் அதிகாரிகளுக்கும் சக்கிரவர்த்தியைச் சுற்றி
யிருந்தவர்களுக்கும் அக்காலம் நிகழ்ந்துவந்த குழப்
பங்கள் சம்பந்தமாய் மனஸ்தாபம் நேரிட்டுவர, அதை
ஒருவாறடக்கித் தேசநிலைமையைச் சீர்படுத்த வேண்டு
மென்று இருதிறத்தாரும் கவலைகொண்டார்கள்.
சக்கிரவர்த்தி கக்ஷியைச் சேர்ந்த ஷீமாஜூ இந்தக்
கருத்துடன் ஷோகூன் ஸ்தானமாகிய யெடோவுக்குச்
சென்று, அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்து, தேசத்
தில் எப்போதும் அமைதி நிலைத்துவர என்னசெய்
யலாமென்று கேட்க, ஷோகூன் தகுந்தபடி பதில்
சொல்லாமல் ஷீமாஜூவை நேரகப் பார்க்கவும் மறுத்
து, அவருக்காக வேண்டிய அலுவல் ஏதேனு முண்
டானால் தம்முடைய சபையாருடன் அவர் யோசிக்கக்
கூடுமென்று அலட்சியமாய்ச் சொன்னார்.

ஷீமாஜூ வெறுப்புற்று, 1862 ம் வருஷம் செப்
டம்பர் மாதத்தில் தம்மிருப்பிடம் திரும்பி வரும்
வழியில் பின்வரும் அனர்த்தகரமான சம்பவமுண்டா
யிற்று. ஷீமாஜூவுடன் அவருடைய பரிவாரங்கள்
சிலர் நடந்தும் சிலர் குதிரைகளின் மேலும் செ
ல்ல, மற்றப்படி பெரிய ராணுவ உத்தியோகஸ்தர்
களும், சிவில் உத்தியோகஸ்தர்களும் பல்லக்குகளிற்

சென்றார்கள். சாமூர்ன் வண்டிகளும் குதிரைகளும்
நீண்ட பெருந்தொடர்ச்சிகளாகப் பின்சென்றன. எண்
ணூறு சாமுராய்கள் ஷிமாஜூவுக்கு மெய்காப்பாளர்
களாகச் சென்றார்கள். இப்பேர்ப்பட்ட சவாரிகள் ஜப்
பான் தேசத்தில் செல்லும்போது மற்றப்பிரயாணிகள்
ரஸ்தாவில் இன்னவிதமாய்ப் போகவேண்டுமென்ற
விஷயமாய்ச் சில வழக்கங்களேற்பட்டிருந்தன. எவர்
களுக்கு வாஹனசம்பந்தமில்லையோ அவர்கள், மேற்
கண்டபடி சவாரிகள் போவதைப் பார்க்கும்போது,
குதிரையிலிருந்து இறங்கி, ராஜாவின் பல்லக்குச் செல்
லுகையில் அதைப்பார்த்துத் தலைவணங்கி மரியாதை
செய்தல் வழக்கம். அப்பேர்ப்பட்ட வழக்கத்தை மற்
றோர் அலட்சியஞ்செய்து கவனிக்காமலிருக்கப்பார்க்
கும்படியான மனநிலையில் ஷிமாஜூவுடன் சென்ற சாமு
ராய் மெய்காப்பாளர்கள் இருக்கவில்லை. முக்கியமாய்
அவர்கள் மனப்பூர்வமாய் வெறுத்துவந்த அன்னிய
வாசிகள் மேற்குறித்தபடி மரியாதை செய்யத் தவறு
வார்களானால், ஆத்திரமும் கோபமும் அதிகமாகப்
பொங்குமேயன்றித் தணியத்தக்க தருணமாயில்லை.
இந்த ஷிமாஜூவின் சவாரி யடோ நகரத்தைவிட்டுப்
புறப்பட்ட அன்று பிற்பகலில், யோகோஹாமாவி
லிருந்து சமீபத்திலுள்ள ஒரு கோவிலைப்போய்ப்
பார்க்கும்படி மூன்று ஐரோப்பியர்களும் ஒரு ஐரோப்
பிய ஸ்திரீயும் கூட்டமாகப் புறப்பட்டுப் போனார்கள்.
கானகாவா வென்ற கிராமத்துக்குச் சமீபத்தில் இந்த
ஐரோப்பியக் கூட்டத்தார் இந்த ஷிமாஜூவின் சவா



ரிக்கு எதிர்ப்பட்டார்கள். மேற்குறித்தவாறு ஷிமாஜூ
வுக்கு மரியாதை செய்யவேண்டியது இவர்களுக்குத்
தெரியாமலிருந்திருக்கக்கூடும்; அல்லது தெரிந்திருந்
தும் அலட்சியமாயிருந்துவிட்டார்களோ தெரியவி
ல்லை. சவாரியின் ஒரு பாகம் போகிறபடி போனபிறகு,
ஷிமாஜூவின் பல்லக்கைச் சூழ்ந்து கொண்டுபோன
துருப்புகளுக்குப் பக்கத்தில் இந்த ஐரோப்பியக் கூட்
டத்தார் சென்றனர். இந்தத் துருப்புகள் கத்திகள்,
ஈட்டிகள் முதலான ஆயுதங்களைத் தரித்துப் பார்க்கப்
பயங்கரமாயிருந்ததோடு, முகத்தில் கோபக்குறி
களும் காண, ஐரோப்பியர்கள் லட்சியஞ் செய்யாமல்
வழக்கப்படி ரஸ்தாவின் ஓரத்தில் ஒதுங்காதது
மன்றி, அந்தத் துருப்புகளின் நடுவேயும் புகுந்து
சென்றார்கள். ஷிமாஜூவின் பல்லக்கண்டை வந்து
இவர்கள் குதிரைகளினின்று மிறங்கவில்லை; மரியா
தைக் குறிகளொன்றும் காட்டவுமில்லை. இந்தக்
கண்டு ஜப்பானியர் வெகுண்டு, அவர்களிலொருவன்
அந்த ஐரோப்பியர்கள் மூவர்களில் ஒருவனைத் தன்
கத்தியால் வெட்ட, அவன் இறந்துபோக மற்றவர்கள்
காயப்பட்டு ஓடித் தப்பினார்கள்.

இந்தச் சம்பவத்தைக் கேட்ட யோகோஹாமா
வின் அன்னியவாசிகள் அடங்காத மனக்கொதிப்
புக் கொண்டார்கள். உடனே அங்கிருந்து சில
ரைத் தயார் செய்து ஹிமாஜூவின் சவாரி
யை ஓட்டமாய் ஓடிப் பிடித்துக் கொலைசெய்தவனை
யும் அந்த ராஜாவையுமே கைதிப்படுத்தவேண்டு மெ

ன்று யோசனை செய்தார்கள், ஆயினும் அப்படி அவசரப்பட்டு இந்த அன்னிய வாசிகள் பழிவாங்கும் செய்கை செய்வார்களானால் ஜப்பானுக்கும் பிரிடிஷ் தேசத்துக்கும் யுத்தம் விளையுமென்று பயந்து, சில புத்திமான்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் அந்த யோசனைப்படி நடத்தாததால், சற்று அமரிக்கை யுண்டாயிற்று. உண்டானாலும் நடந்த கொலைக்குப் பழியாக ஷோகூன் கவர்ன்மெண்டார் ஒரு லக்ஷம் பவுனும் ஷிமாஜூவினுடைய சமஸ்தானத்திலிருந்து ஈடாக வேறு தொகையும் கொடுக்கவேண்டு மென்று பிரிடிஷ் வாசிகள் கண்டிப்பாய்க் கேட்டார்கள். விதித்த அபராதமானது தாங்கக்கூடாததா யிருந்தபடியால் கேட்டபடியே நஷ்ட ஈட்டுத்தொகையைக் கொடுக்கவாவது அல்லது கொலை செய்தவனைப் பிடித்துக் கொடுக்கவாவது ஜப்பான் அதிகாரிகள் சுலபமாய் இணங்கவில்லை. ஆயினும் அன்னியர்களும் விட்டு விடுகிறவர்களா யிருக்கவில்லை. உடனே அன்னியக் கப்பல்கள் துறைமுகத்தில் வந்து அணிவகுக்கப்பட்டுப் பயத்தைக் காட்டி ஏற்பாட்டுப்படி பழிகளை யிறுக்கக் கேட்டனர். இது சமாதானமாக முடியாமல் அந்தத் துறைமுகப் பட்டணமான காகோஷிமான் என்பதைக் கப்பற் பீரங்கிகளால் அன்னியர்கள் தகர்த் திடித்துப் பொடி யாக்கினர். அப்போது அந்தப் பட்டணம் வெகு செழிப்பான நிலையி லிருந்ததாகவும் லட்சத் தெண்பதினாயிரம் ஜனங்கள் அடங்கி யிருந்ததாக



வும் சொல்லப்படுகிறது. இப்பேர்ப்பட்ட பட்டணம் அழிந்துபோனபிறகு ஜப்பானியர்களுக்குப்புத்திவந்து கேட்டபடி தொகையைக் கொடுத்துவிட்டார்கள். கொலைக்காரன் மாத்திரம் அகப்படவில்லை; அவனைப்பற்றி எதுவும் பிற்காலத்தில் சொல்லப்படவில்லை.

இவ்வாறு நிகழ்ந்த வினையின் பயனாக, அன்னியர்களுக்கு உண்டாயிருந்த போர்வலியும் யுத்தத் தளவாடங்களும் தங்களுடைய பழைய காலத்திய உபயோகமற்ற ஆயுதங்களால் எதிர்க்கக்கூடியன வல்லவென்று ஜப்பானியர் மனதில் பதியச்செய்தது. ஐரோப்பியர்களோடு போர்புரிந்து சுவாதீனத்தை நிலைக்கச் செய்யவேண்டுமானால், ஜப்பானியர் ஐரோப்பியர்களுடைய திறமையையும் சாமர்த்தியத்தையும்கற்று அவர்களைப்போலக் கப்பல்களும் ஆயுதங்களும் சம்பாதித்துப் பிரயோகிக்கக்கூடினவர்களானா லல்லவோ அது சாத்தியம்? இவ்வாறு சிந்தனை யுண்டாகவே, காலதாமசஞ் செய்யாமல் மாகாணத்தலைவரி லொருவரான கெளன்ட் தோராஷிமா வென்பவருடன் சில ஜப்பானிய மாணவர்கள் லண்டன் நகரத்துக் கனுப்பப்பட்டு அங்கே அவர்கள் போர்க்கப்பல்களையும் பீரங்கிகளையும் விலைக்கு வாங்கும்படி திட்டஞ் செய்யப்பட்டது. இப்படி லண்டன்நகரம்சென்ற ஜப்பானியச் சிறுவர்கள் மேற்குத் தேசங்களில் ஜனங்கள் அனுபவித்த சுவாதீன சுவதந்தரங்களையும் அவர்களுடைய இடைவிடாத மேற்போக்குக்கு உபாயங்களாக அமைந்திருக்கும்

ஸ்தாபனங்களையும் ராஜாங்க அதிகாரத்தில் ஜனங்கள் செலுத்திவந்த மேற்பார்வையையும் ஜன சமூகத்தின் பற்பல வகுப்பாருக்குள் மேற் குலத்தார், கீழ்க்குலத்தார், பொருளுடையோர், *வறியோர், வர்த்தகர், கிருஷிக ரிவர்களுக்குள் பரஸ்பர சம்பந்தங்களில் தோன்றின ஒற்றுமை, தேசாபிமானம் முதலான நற்குணங்களையும், பிரமிப்புடன் கவனித்து, ஜப்பானுக்குத் திரும்பி வந்தபிறகு அங்கே நேரிட்ட பெருஞ் சம்பவங்களில் தங்கள் அநுபோகத்தைக் காட்டித் தேச நன்மை சித்திக்கக் கருவிக ளாயினார்கள்.

இதன் மத்தியில் அன்னியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கு முண்டாயிருந்த விரோதப்பான்மை அடங்கினபாடில்லை, யடோ நகரத்தில் ஷோகூன் அதிகாரிகளுக்கும், கியோடோ நகரத்தில் சக்கிரவர்த்தியைச் சேர்ந்த ராஜதந்திரிகளுக்கும் விரோதம் வரவர முதிர்ந்து, எப்படியாவது யடோ அதிகாரிகளை அன்னியர்களுடன் போரில் மாட்டவேண்டுமென்று துரெண்ணங் கொண்டவர்களாய்க், "கியோடோ" வாசிகள் செய்த தூண்டுதலின் பேரில், சோஷூ மாகாணத்தலைவன் தான் தயார்செய்திருந்த சில கப்பல்களை நடத்தி அன்னியக் கப்பல்களைத் தாக்கத் துணிந்தான். அமெரிக்கக் கப்பலையும், பிரான்சுக்கப்பலையும், கடைசியில் டச்சுக் கப்பல்களையும்கூட, இவைகள் ஒரு நெருக்கமான ஜலசந்தியில் 'போய்க்கொண்டிருக்கையில், சோஷூவின் கப்பற் பீரங்கிகள் பார்த்துச்சுட,



ஜ கப்பலை ...பற் படைகள் ஒன்று சேர்ந்து சேஷூக் கப்பல்களை உடைத்துத் தா ளாக்கின.

ஷோகூனுடைய விரோதிகள் *கொண்ட எண்ணம் நிறைவேறிற்று. எப்படி யெனில், மேற்சொன்ன போர்க்குறிச் செயல்களை அன்னியர் பராமுகமாய் விட்டுவிடுகிறவர்க ளல்ல ராகையால், உடனே பழைய மாதிரிபோலப் பழிவாங்கும் நோக்கமாய்ப் பலத்த நஷ்ட ஈடுகள் கேட்டார்கள். ஷோகூன் ராஜாங்கத்தார் காங்க ளொன்று மறியோ மென்றனர். என்றும், அன்னியர்கள் கேட்காமல், அவர்களுள் எவ்வித நஷ்டத்தையு மடையாத ஜாதியினர்கூட மற்றவர்களுடன் சேர்ந்து, யோகோஹாமா பட்டணத்திலிருந்து ஷிமோனோசேகி பட்டணத் துறைமுகத்தை யணுகி, அதைத் தாக்கினார்கள். இதைக்கண்டு சோஷூ பயந்து அன்னியர்களைச் சர ணடைந்தான். இப்பேர்ப்பட்ட அனர்த்தங்களை நிறுத்தும்நோக்கத்துடன் ஜப்பானிய மந்திரிகளும் அன்னிய ஸ்தானிகர்களும் கலந்து ஆலோசித்து, 1864-ம் வருஷம் அக்டோபர் மாதம் 22-ம் தேதியன்று ஒரு ஏற்பாடு செய்ய, அதன்படி ஜப்பானியர் அன்னியர்களான நால்வகையார்க்கும் அவர்க ளடைந்த நஷ்டத்துக்காகவும் நேரிட்ட செலவுக்காகவும் 30 லக்ஷம் டாலர் (டாலர் என்பது 3 ரூபாய் கொண்ட வெள்ளி நாணயம்) கொடுப்பதாகவும், தடவைக்கு 5 லக்ஷமாக 6 தடவைகளில் இதைத் தீர்த்துவிடுவதாகவும், ஒப்புக்கொண்டார்கள். இந்தத் தொகையை நால்வரும்

அவரவர்களடைந்த நஷ்டத்துக்கும் செலவுக்கும் தக்கபடி பாகித்துக்கொண்டார்கள்.

இவ்வாறு அன்னிய ராஜாங்கத்தார் கேவலம் தங்கள் சைன்னிய பலத்தினாலே ஜப்பான் ராஜாங்கத்தாரைப் பலவந்தம் செய்து இவ்வளவு பெரிய நஷ்டஈட்டுத் தொகையைப் பெற்றது அக்கிரமமென்றே சொல்லவேண்டும். ஜப்பானிய ராஜாங்கத்தார் மேற்குறித்த மாகாணத்தலைவன் செய்த கலகங்களின் பொருட்டுத் தாங்கள் மிகவும் துக்கித்ததாகவும், அந்தத் தலைவனை யடக்க அவகாசம் கொடுக்கும்பக்ஷத்தில் முயற்சி செய்வதாகவும் சொன்னார்கள். சொல்லியும், இந்த அன்னிய ராஜாங்கத்தார்கள் விதித்த அபராதத் தொகையைக் குறைக்க முற்றிலும் பொருளாசையினாலேயே மறுத்தனர். அன்னிய ஜாதியர் நால்வகையருள் பிரிட்டிஷார் உண்மையில் எவ்விதச் சேதத்தையும் அடைந்தவர்களல்லர்; அல்லாயினும் அவர்களும் மேற்கண்ட நஷ்ட ஈட்டுத்தொகையில் பங்கு பெற்றனர். அமெரிக்கரும் ஜப்பானியக் கப்பல்கள் தாக்கினதால் நேரிட்ட சேதங்களுக்கு ஏற்கெனவே ஈடு வாங்கி விட்டார்கள். வாங்கிவிட்டும் மற்றோர்களைப் போல அவர்கள் இரண்டாம் முறையும் ஜப்பானியரிடமிருந்து பொருள் பறித்தனர். இப்படி உண்மையில் நஷ்டமடைந்தவர்களுடன் நஷ்டமடையாதவர்களும் ஜப்பான் சைன்னிய பலக்குறைவுற்றிருந்த காரணத்தினாலே மாத்திரம் பலவந்தமாகப் பணம்



பிடுங்கினது உலகத்தில் நாகரிகம் பெற்ற இக்காலத்தில் தேசத்தோடு தேசம் பழகுவதில் அனுஷ்டிக்கப்பட வேண்டிய ஒழுங்குகளுக்கு ஒத்ததாகச் சொல்லுவது சாத்தியமல்ல. மேலும், கலகஞ்செய்த சோஷுத் தலைவனை ஜப்பானிய ராஜாங்கத்தினரே யடக்கித் தண்டிப்பதாகச் சொன்னதை அன்னிய ராஜாங்கத்தினர் கவனிக்காமலே அத்தலைவன் மீது பெரும்படைகளை நடத்தி வீண் நஷ்டப் பட்டனர்.

இவ்விதமாக ஐரோப்பியர்கள் கீழ்த்தேச ராஜாங்கங்களோடு சம்பந்தங்கள் நிகழ்த்துவதில் 'பலமே நியாயம்' என்ற மிலேச்சக் கோட்பாட்டையே மேற்கொண்டு, தங்கள் உரிமைகளை முற்படுத்துவதும் ஏஷியா தேசத்தார்களுடைய லாப நஷ்டங்களை அசட்டை செய்வதுமாக நடந்துவருகிறார்கள். சாமானியமாய் ஒரு மனுஷன் மற்றொருவனுக்குத் தீங்குசெய்யும்போது ராஜாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் நியாயாதிகாரிகள் தீங்கிழைத்தவன் பலவானாயினும் அவனைச் சட்டப்படி தண்டிப்பார்கள். பலவான் பலமில்லாதவன், உயர்ந்தோன் தாழ்ந்தோன், தனவான் வறியோன், எவ்வகுப்பாருக்கும் இக்காலத்தில் ஓரே சட்ட மேற்படுத்தப்பட்டு ஏற்றந் தாழ்வின்றி நீதி பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் தேசத்தோடு தேசம் மனஸ்தாபத்தால் எதிர்த்துப் போரிடல் நேரும்போது, மேற்குறித்த பொதுவான சட்ட நிபந்தனைகளாவது பொது நியாயாதி

காரியாவது இல்லாமல், பலவான்களான ஐரோப்பிய ஜாதியார் சொல்லுவதே சரியென்றும், பலக்குறைவுற்ற ஆசிய ஜாதியார் சொல்லுவது தப்பென்றும், புலிக்கும் பசுவுக்கு முள்ள நியாயம்போல ஏற்பட்டிருக்கிறது. இந்த நியாயத்தை அனுசரித்தே ஆசியாவிலுள்ள எல்லாத் தேசங்களும் ஐரோப்பியர்களின் அடாவழிக்கும் வீண்வழக்குக்கும் அஞ்சி இரையாகி விழுகின்றன. ஐரோப்பியர்களுடைய அதிகாரத்துக் குட்படாத தேசம் ஆசியாவில் ஒன்றுமில்லை.

# CHAPTER VII.

## ஏழாம் அதிகாரம்.

ஷோகூனுக்கும் சக்கிரவர்த்திக்கும் மனஸ்தாபம் பெருகியது—சக்கிரவர்த்தி கட்சியார் அன்னியரைத் துரத்தும்படி செய்த வீண் முயற்சிகள்—சக்கிரவர்த்தியும் மந்திரிகளும் அன்னியரோடு உடன்படிக்கையை அங்கீகரித்தது—கடைசி ஷோகூன் நியமிக்கப்பட்டதும் சக்கிரவர்த்தி இறந்ததும், சக்கிரவர்த்தி அதிகாரத்தைப் பலப்படுத்தத் தேசாபிமானிகள் உத்தேசித்ததும்—இதற் கிணங்கி ஷோகூன் விலகியது—மாகாணத் தலைவர்கள் இராஜ்ய பாரம் தாங்களே முன்வந்து நடத்தியது—விலகிய ஷோகூனும் கட்சியாரும் கலகஞ்செய்தது—ஷோகூன் சமாதானப் படுத்தப்பட்டு இயேடோவுக் கழைக்கப்பட்டது.—ஷோகூன் படையோடுவர, இயேடோ வாசிகள் எதிர்த்துத் தோற்கடித்தது—அன்னியர்கள் சக்கிரவர்த்தியை நேரில் பார்த்தது.—பிரிடிஷ் ஸ்தானீகர் பரிவாரம் எதிர்க்கப்பட்டதும், அதனால் ஏற்பட்டதும்—ஷோகூன் போர்க் கப்பல்கள் கலகஞ்செய்து எதிர்க்க, அடக்கப்பட்டது.

இம்மாதிரி அன்னிய ராஜாங்கத்தாரால் விளைந்து வந்த குழப்பங்க ளிருக்க, யடோவில் ஷோகூனுக்கும்

கியோடோவில் சக்கிரவர்த்திக்கும் மனவருத்தங்கள் பெருகிவந்தன. கியோடோவி லிருந்த சக்கிரவர்த்தி பூர்விக அனுஷ்டானப்படி தேசபரிபாலகராயும், யடோவில் ஷோகூன் அவருடைய நிர்வாகக் காரியஸ்தராகவு மிருக்கவேண்டியவர்கள், சக்கிரவர்த்தியையும் அவருடைய அந்தஸ்தையும் பாதுகாத்தல் ஷோகூனுடைய கடமையா யிருந்தும், ஷோகூனின் விருப்பப்படியே ஏகாதிபத்தியத்தை நடத்தல் எப்பொழுதும் சாத்தியமாக இருக்கவில்லை. நாம் சொல்லிவரும் சங்கதிகள் நிகழ்ந்த காலத்தில் ஏகாதிபத்தியாசனத்தில் வீற்றிருந்தவர் இன்று சக்கிரவர்த்தியா யிருப்பவரின் பிதா. அவர் 1847-ம் வருஷத்தில் 17-ம் வயதில் இந்த உன்னத பதவியை யடைந்து, 1867-ம்வருஷத்தில், 37ம் வயதில், காலஞ்சென்றனர். அவர்காலத்தில் அய்யமோசி என்பவர் ஷோகூன். அவர் 1858-ம் வருஷத்தில் பட்டம் பெற்றபோது 10 வயதா யிருந்ததால் அவருக்கு ஒரு போஷகர் நியமிக்கப்பட்டனர். அப்படியிருக்கக் கியோடோவில் சக்கிரவர்த்தியைச் சுற்றிப் பொறாமையும் அதிருப்தியும்கொண்ட யனத்தினர் பலர் சூழ்ந்திருந்தனர். ஷோகூனைச் சேர்ந்தவரும் இருந்தனர். ஷோகூனுக்கு அத்தியந்த நேசனும் எப்போதும் அவர் கக்ஷியையே பேசுபவனுமான ஒயிகூ மாகாணத் தலைவன், சக்கிரவர்த்தியினுடைய அரண்மனைக்குக் காவலனாக ஏற்பட்டுக் கௌரவத்துட னிருந்தனன். அவ்வாறே மற்ற மாகாணத் தலைவர்களும் அவரவர்கள் உத்தியோக



பரிவாரங்களுடனும், பணிவிடையாட்களுடனும், காவல் துருப்புகளுடனும், வந்தமர்ந் திருந்தனர்.

இப்படி அமர்ந்திருந்த மாகாணத் தலைவர்களுக்குள் ஜப்பான் விஷயங்களில் ஒற்றுமையின்றி வேற்றுமைப்பட்டபோதிலும், பொதுவாய்ச் சக்கிரவர்த்தியினுடைய அதிகாரத்தைத் தாங்கி யடோவில் ஷோகூனினுடைய துரைத்தனத்தைக் கீழ்ப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் ஒருமைப்பட்டிருந்தார்கள். அன்னிய வாசிகளை எவ்வாறு துரத்தலாகு மென்பதைப்பற்றி யிவர்களுக்குள் பேச்சுக்கள் நடந்தன. ஜப்பானுடன் உடன்படிக்கை செய்துகொண்டு துறைமுகங்களில் தங்கள் கொடியை நாட்டியிருந்த அன்னியர்களை யப்புறப்படுத்தல் அசாத்திய மென்று நம்ப நிச்சயமான ஆதாரங்க ளிருந்தபோதிலும், சக்கிரவர்த்தியும் அவருடனிருந்தவர்களும் இந்த நோக்கம் கைகூடுமாறு வீண் முயற்சிகள் செய்துவந்தனர். பூர்வம் ஜப்பானில் சக்கிரவர்த்தியை ஷோகூன் நேரில் கண்டு தேச விஷயங்களைப்பற்றி யோசிப்பதா யேற்பட்டிருந்த வழக்கம் மத்தியில் 230 வருஷம் நின்றுபோக, 1863-ம் வருஷத்தில் ஷோகூன் அய்யமோசி கியோடோவுக்குப் போய் நகரத்தெருக்களில் ஏழைகளைப் பார்த்து அளவற்ற திரவியங்களை வாரி யிறைத்ததன்றி, சக்கிரவர்த்திக்கு அருமையான பல வெகுமதிகளைக் கொடுத்து அவருடன் தேசமிருந்த நிலையைப்பற்றி யோசனை செய்தார். இவ்வாறு கியோடோவில் சில காலம் யோசனைகள் நடந்ததின் பலனாகக், கடைசியில்

சக்கிரவர்த்தி ஜப்பானின்று அன்னியர்களைத் துரத்தி விடும்படியாக ஒரு விளம்பரம் தயார் செய்து, ஷோகூனுக்கு அதன்படி நடத்த உத்தரவு செய்தார். ஆனால் ஷோகூனுக்கும் அவர் கக்ஷிக்காரருக்கும் அந்தரங்கத்தில் இப்படிச் செய்வதில் சம்மதமில்லையாகையால், அந்த விளம்பரமானது அன்னிய ஸ்தானிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது மாத்திரமேயன்றி அதன்படி யாதொன்றும் நடத்தப்படவில்லை.

இப்படியிருக்க, சோஷூ நாட்டுத்தலைவன் சக்கிரவர்த்தியைக் கைப்பிடியாகப் பிடித்து அவரைத் தன் நாட்டுக்குக் கொண்டு போய் விடும்படி தந்திரஞ் செய்தான். இப்படித் தந்திரஞ் செய்ததில் இவனுடைய நோக்கமானது அன்னியர்களிடத்தில் நேசப்பான்மை பாராட்டி வந்த ஷோகூனினுடைய வலையிலிருந்து சக்கிரவர்த்தியை விலக்கி விடவேண்டுமென்பது. இதை ஷோகூன் கக்ஷியார் முன்னதாயறிந்து இந்தத் தந்திரம் நிறைவேறாமல் செய்து விட, அது முதல் அன்னிய ராஜாங்கத்தாருடைய சகவாசத்தை வெறுத்த உணர்ச்சி நிற்கவில்லையாயினும், அந்தக் கக்ஷி நின்று போயிற்றென்று சொல்லலாம். சக்கிரவர்த்தியும் அவர் மந்திரிகளும் உடன்படிக்கையின் பலத்தால் தம் நாட்டில் வந்திருந்த அன்னியர்களை நீக்குதல் ஜப்பானுடைய சக்திக்குட்பட்டதல்லவென்றும், ராஜாங்க அதிகாரம் எவ்வளவு ஒற்றுமையாயும் ஒரே மத்திய ஸ்தானத்தினின்று செலுத்தப்படுவதாயுமிருந்தாலும், அப்படியவர்களை





விலக்கல் இயலாதென்றும் முடிவாகத் தெரிந்துகொண்டனர்.

இந்தக் காலந் தொடங்கி ஜப்பானிய சரித்திரம் நவீன முறைமையைப் பின்பற்றிப் பலவிதக் கஷ்டநிஷ்டூரங்களுக்கூடே சென்று, கடைசியில் ஆதிகாலத் தேற்பாட்டைப் போலச் சக்கிரவர்த்தி ஒருவரே ஏகாதிபத்திய பாலகராய் விளங்கி வருவோராயினர்.

சோஷூத் தலைவன் மட்டும் தன்னுடைய அதிகாரம் குறையக்கூடாதென்று சில படைகளைச் சேர்த்துக்கொண்டு கலகஞ் செய்தபோதிலும் அவன் சடுதியில் அடக்கப்பட்டான். கலகஞ் செய்தாலும் சோஷூ மனிதர்கள் பக்ஷத்துடன் நடத்தப்பட, அவர்களுக்கும் அவர்களை அடக்கினவர்களுக்கும் நேச உணர்ச்சி உண்டாயிற்று. இந்தச் சோஷூ சண்டையிலேயே கைடோ டேகியோஷி யென்கிற மகா சாமர்த்தியசாலி சோஷூத் தலைவனுக் கீர்த்தியுடன் உதிக்கலாயினன். சக்கிரவர்த்தியினுடைய பூர்வீக அந்தஸ்தைப் புதுப்பித்ததில் இந்தக் கைடோ வெகு பிரபலஸ்தனாயிருந்தான். இப்படியிருக்க, அன்னிய ராஜாங்கத்தாரோடு செய்திருந்த உடன்படிக்கையானது இதுவரையில் சக்கிரவர்த்தியினுடைய அனுமதி பெறாமலிருக்கவே, அப்படி அனுமதி பெற்றால் அன்னிய சம்பந்தத்தை ஜப்பானியக் குடிகள் அதிகமாக வெறுக்க மாட்டார்களென்ற எண்ணத்துடன், சக்கிரவர்த்திக்கு ஷோகூன் தலைவர் விண்ணப்பஞ் செய்து கொண்டார். உடன்படிக்கைகளுக்குச் சக்கிரவர்த்தி

சம்மதப்படவில்லையென்று அபிப்பிராயம் தேசத்தில் பிரபலமாயிருந்தபடியால், தேச நிர்வாகத்தில் எப்போதுமில்லாத தொந்தரவுகள் நேரிடுகின்றனவென்றும், ஆகையால் சக்கிரவர்த்தி தமது அனுமதியைக் கொடுக்கவேண்டுமென்றும், அப்படிக் கொடுக்காவிட்டால் அயோகோ துறைமுகத்தில் கப்பற்படைகளைக் கூட்டி வைத்திருந்த அன்னியர்கள் டோகியோ நகரத்தின் மேற் சென்று நேராகவே அந்த அனுமதியைக் கேட்பார்களென்றும், இந்த விண்ணப்பத்தில் ஷோகுன் தெரிவித்துக்கொண்டார். இந்த விண்ணப்பப்படி சக்கிரவர்த்தியும் தம் அனுமதியைத் தாமசமின்றி விளம்பரப்படுத்தினார். இந்தச் சமயத்தில் அய்யமோசி ஷோகுன் இறந்துபோக, இதோச்சுபாஷி ஷோகுனாக நியமிக்கப்பட்டார். இவர் அந்த அந்தஸ்தை வகிக்க மனதில்லாதவராயிருந்தும், அக்காலத்தில் ஜப்பானில் தோன்றியிருந்த குழப்பங்களையும் இடையூறுகளையும் அறிந்திருந்ததாலும், சக்கிரவர்த்தியே நிர்ப்பந்தப்படுத்தி அனேக மாகாணத் தலைவர்களும் அவரைத் தாங்குவதாக உறுதி சொன்னபடியாலும் இசைந்தனர். இந்த இதோச்சுபாஷியே ஜப்பான் தேசத்தில் வெகு காலமாக அதிகாரஞ் செலுத்தி வந்த ஷோகுன் வமிசத்தில் கடைசியாயினர். இவருடன் ஷோகுன் ஸ்தானம் முற்றிலும் நீக்கப்பட்டது.

அய்யமோசி இறந்துபோன சில மாதங்களுக்கெல்லாம் 1867-ம் வருஷம் பிப்பிரவரி மாதம் 3-ந் தேதி



சக்கிரவர்த்தியும் அம்மைகண்டிறந்துபோனார். அன்னிய தேசங்களின் சம்பந்தத்தில் அளவற்ற வெறுப்புக் கொண்டிருந்தும் அவைகளுடன் செய்யப்பட்டிருந்த உடன்படிக்கைகளுக்கு அவர் அனுமதி கொடுத்திருந்தபடியால், ஜப்பானியச் சக்கிரவர்த்திகளின் பிறப்பிலமைந்த தெய்வ அமிசம் அவரைவிட்டு நீங்கிப்போய், அவர் அம்மைக் கிரையாயினரென்று ஜனங்கள் சொல்லிக்கொண்டனர். அவர் குமாரர் முட்சுஹிட்டோ அப்போது 15-ம் வயதில் சக்கிரவர்த்தியாகி, இன்னும் ஆண்டு வருகின்றனர். அவர் வமிசத்தில் அவர் 121-வது தலைமுறை.

புதிதாய் ராஜ்யபாரத்தை வகித்த சக்கிரவர்த்தி வாலியப்பருவத்தி லிருந்தபடியால், வழக்கம்போல ஷோகுன் வகையார்களே சகல அதிகாரத்தையும் உண்மையில் செலுத்திவருவார்களென்றும் அன்னிய தேசத்தாரின் உறவை வெறுத்து அவர்களுக்குத் தீங்குசெய்துவந்த டோகியோ வாசிகளின் முறை நின்றுபோய்விடுமென்றும் நம்பியிருந்தவர்கள் ஏமாந்துபோனார்கள். எப்படியெனில், அன்னியர்களின் சம்பந்தத்தை இறுதிப்படுத்த வேண்டுமென்று மாத்திரமல்ல, ஜப்பான் தேசத்தின் ராஜாங்கக் கூற்றையே திருத்திச் சமீபத்தில் நேரிட்டுவந்த குழப்பங்களை நேரிடாமற் செய்யவேண்டுமென்று தேசாபிமானிகள் பேரவாக் கொண்டனர். இது வரையில் ராஜாங்க அதிகாரம் இரண்டு மத்திய ஸ்தலங்களில் பிரிவு பெற்

யிருந்ததைப் போக்கி ஒருதலைப்படுத்த வேண்டுமென்பதும் ராஜதந்திரக் குறியாகக் கொள்ளப்பட்டது. இதற்குச் சாக்ஷியாக டோஸா மாகாணத்தலைவர் 1867-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் ஷோகூனுக்கு ஓர் நிருபம் விடுத்தனர். என்னவெனில் "ஜப்பானின் சங்கடங்களுக்கெல்லாம் ராஜ்யபாரப் பொறுப்பு இரட்டைப்பட்டு ஏகாதிபத்தியத்தின் கண்களும் காதுகளும் ஒரு திசைப்படுவதுபோய் இருதிசை நோக்கி இயங்குவதே காரணம். சமீபத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் நமது ஆதி ஏற்பாட்டை அடியோடு மாற்றிவிட்டன. ஆகையால் அந்த ஏற்பாட்டை இனியும் மேற்கொள்ளுவோமாகில் தேச நன்மைக்கு இடையூறுறும். ராஜாங்க அதிகாரமானது நமது பூர்வாசாரப்படி சக்கிரவர்த்திவசம் ஒப்புவிக்கப்பட்டு ஜப்பானும் உலகத்து மற்றத் தேசங்களுக்குச் சமானமான நிலையை அடையவேண்டியது மிகவும் அவசியம்."

இவ்வாறு விசாலித்த உணர்ச்சிகளையும், ஆழ்ந்த ஊக்கத்தையும் லக்ஷணங்களாகக் கொண்ட டோசா மாகாணத் தலைவன் வெளியிட்ட கருத்துகள் தம் சிந்தையில் அழுந்தப்பெற்ற ஷோகூன், தன் கீழ்ப்பட்ட சிற்றரசர்களுக்குத் தாம் அதிகாரத்தினின்றும் விலகக் கருத்துக்கொண்டிருப்பதால் அதைப் பற்றி அவர்களுடைய அபிப்பிராயம் என்னவென வினவி, விளம்பரப் பத்திரமொன்று பிரசித்தப்படுத்தி



னர். "அன்னிய சம்பந்தங்கள் தினத்துக்குத்தினம் சமீபத்தில் பலப்பட்டு வருவதுபோல் இனியும் வருமாயின் தேசத்துச் சட்டதிட்டங்களை நிறைவேற்றல் அசாத்தியமாகுமென்று எனக்குத் தோற்றுவதால், ஏகாதிபத்தியம் ஒருதலைப்படுவது இன்றியமையாததாகும். ஆகையால் நானும் என் முன்னோரும் செலுத்திவந்த அரசியல் வலியைச் சக்கிரவர்த்தியிடம் ஒப்புவித்து விடுவதாக யோசனை செய்கிறேன். ஏகாதிபத்தியத்தின் உரிமைகளைக் காத்து முற்படுத்தற்கு இதைவிட உசிதமான நெறியில்லை." இப்படி 1867-ம் வருஷம் நவம்பர் மாசம் பிரசித்தப்படுத்தின நிர்யாணப்படி ஷோகூன் செய்து முடித்தனர். அவர் இவ்வாறு ஒப்புவித்தபடி சக்கிரவர்த்தியும் அங்கீகரிக்க, 1603-ம் வருஷம் முதல் 264-ம் வருஷம் இயன்றுவந்த ஷோகூன் வமிச மேம்பாடு இறுதியுற்றது.

ஒருக்கால் சக்கிரவர்த்தியும் அவருக்கு ஆலோசனை சொல்லுவோரும் பொறுப்பு மேற்கொள்ள அஞ்சினவராய்ப் புது ஏற்பாட்டை ஏற்க இணங்காது பழையபடியே நடந்து வரும்படி தீர்மானிக்கக் கூடுமென்று ஷோகூன் தரப்பார் கோரினார்களோ, என்னவோ? கோரினும் வெகு வருஷக்காலமாக ஷோகூன் அதிகாரத்தை முற்றிலும் போக்கவேண்டுமென்று உழைத்துவந்த இனத்தலைவர்கள் நவீன ராஜரீக முறையைத் தாங்களே ஏற்று நடத்தச் சித்தமாயிருந்தனர். இவர்களுடைய ஆலோசனையின்பேரில் சக்கிரவர்த்தி இனித் தேச விவகாரங்

கள் எவ்வாறு இயலப்பாலனவென மாகாணத்தலைவர்களின் புத்திமதியைத் தேடினவராயினர். அது நிச்சயப்படுவதற்குமுன்னதாக, விலகின ஷோகூன் ராஜ்யபாரத்தையும் முக்கியமாய் அன்னியர் சம்பந்தமான காரியங்களையும் எப்போதும்போல் நடத்திவரச் சக்கிரவர்த்தியின் கட்டளை பெற்றனர். இவ்வாறு சொற்ப காலத்துக்கு ஷோகூனுக்கு அதிகாரங் கொடுத்ததினும் மனம் ஒப்பாதவர்களாய் மாகாணத்தலைவர்கள் அதைத் தடுக்கச் சூழ்ச்சி செய்தனர். சக்கிரவர்த்தி இளம்பருவத்தினராயிருத்தலின் அவரை வசப்படுத்தல் துரைத்தன விவகாரங்களை நடத்தற் பேருபாயமென்று கருதி, ஷோகூனுக்கு யாதொரு அதிகாரமுமில்லாமற் செய்து, எல்லா அதிகாரத்தையும் தங்கள் வசமே பிடுங்கிக்கொண்டு, அத்துணைக் காலமாகப் பட்ட பாட்டின் பெரும்பயன் கைகூடுமாறு நிச்சயித்தனர்.

1868-ம் வருஷம் ஜனவரி மாதம் 3-ம் தேதியில் சக்கிரவர்த்தி கட்டளையிட்டதாகச் சொல்லி, மேற்குறித்த மாகாணத்தலைவர்கள் சக்கிரவர்த்தியின் வாசஸ்தலத்தைக் காத்துக்கொண்டிருந்த துருப்புகளைத் துரத்தி, அவர்கள் ஸ்தானத்தில் தங்களுக்குக் கீழ்ப்பட்ட துருப்புகளை நியமித்தனர். மேலும் அவர்கள் சக்கிரவர்த்தி ஷோகூன் ஸ்தானத்தையே நீக்கி விட்டதாக உத்தரவு பிறப்பித்து, ராஜாங்கத்தின் வெவ்வேறு பிரிவுகளை நடத்துமாறு தக்கபடி உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களை நியமித்தார்கள். இனி ராஜ்யபாரம் ஏகாதிபத்திய ஸ்தானாதிகாரிகளாலேயே நடத்தப்படுமென்று ஒரு



உத்தரவும் பிரசுரஞ் செய்தனர். இவ்வாறு நவீனமாக அமைக்கப்பட்ட ராஜாங்கத்தின் முதல் முயற்சி பற்பல மாகாணத் தலைவர்களின் ஒற்றுணர்ச்சியையும் ஆதரவையும் பெறலாயிற்று. அனேக மாகாணத் தலைவர்களின் சொத்துக்களை ஜப்தி செய்திருந்த உத்தரவு நீக்கப்பட்டு, அவைகள் அவர்களுக்குப் பழையபடி கொடுக்கப்பட்டன. தூரஸ்தலங்களுக்கு விலக்கப்பட்டு வரும்படிகளையும் மரியாதைகளையு மிழந்திருந்த உயர் குலத்தார் திரும்ப அவர்கள் வாசஸ்தானங்களுக் கழைக்கப்பட்டு எப்போதும்போல் அவரவர்களின் ஸ்தானங்களில் ஸ்தாபிக்கப்பட்டனர். சோஷு துருப்புக்கள் 1863-ம் வருஷத்தில் ஏகாதிபத்திய ஸ்தானத்தினின்று துரத்தப்பட்டிருக்க, இப்போ தவர்கள் திரும்ப அழைக்கப்பட்டுச் சக்கிரவர்த்தியின் வாசஸ்தானத்தை மற்றத் துருப்புக்களோபோற் காவல் செய்யும் பெருமையைப் பெற்றனர். இப்படி ஏற்கெனவே மானக் கேடுற்றிருந்த மேற்குலத்தோர்களைச் சமரஸப்படுத்தித் தக்க அதிகாரங்களளித்தின முறையின் பலனாக, புது ராஜாங்க ஏற்பாடு வலிபெற்றதுமன்றி, அவர்கள் அரசியல் வல்லோராகி அத்தகைய சங்கடகாலத்தில் அரசைச் சீருடன் நடத்த அருங் கருவிகளாயினர்.

இவ்விதம் ஒரு பக்கம் நிகழ, மற்றொரு பக்கத்தில் அதிகாரத்தினின்றும் விலகின ஷோகூனும் அவரைச் சேர்ந்தவர்களும் கலகஞ் செய்ய ஆரம்பித்தனர். அன்னியவாசிகளைச் சந்தித்து ஷோகூன் தமக்கு நேரிட்ட விரோதங்களைப் பற்றியும் சக்கிரவர்த்தி

யை வசப்படுத்திக் கொண்ட தம் விரோதிகளின் அடாத செய்கைகளைப் பற்றியும் பலவிதமாக முறையிட்டுத் தாம் ராஜ்யபாரம் வகிக்க இணங்கி யிருப்பதாகவும் அன்னியர்களின் சகல லாப நஷ்டங்களுக்கும் தாம் பொறுப்பாளியாய் முன்னிற்கத் தக்கவென்றும் வெளியிட்டனர். இப்படி ராஜாங்கத் தலைமை இரண்டு பட்டிருப்பதை யுன்னி, அன்னிய ஸ்தானிகர்கள் தங்கள் கக்ஷியாரும் தங்களதிகாரத்துக்குட்பட்டவர்களும் இருகக்ஷிகளிலும் சம்பந்தப் படாமல் நடுநிலையில் நிற்கவேண்டுமென்றும், எந்தக் கக்ஷியாருக்கும் போர்க்கருவிகளை விற்று உதவக் கூடாதென்றும் கண்டிப்பான உத்தரவு செய்தனர். இவ்வாறு இருகக்ஷியாருக்கும் கைகலக்கும் போல் தோற்றின சந்தியில், மகா புத்திமான்களான மாகாணத் தலைவர்களில் சிலர் நிலையிழந்த ஷோகூனை நேரில் கண்டு பேசி யவரைச் சமாதானப் படுத்தல் இயலக் கூடுமென்று சிந்தித்து, அந்தப்படியே அவரைக் கண்டு ராஜாங்கத்தில் அவருக்கு உன்னதமான ஸ்தானம் அமைப்பதாகவும், இயோடோவுக்கு அவர் வருவாராயின் சக்கிரவர்த்தி யவரை வரப்பெற்று உபசரிப்பாரென்றும் அறிவித்தனர். அவ்வாறே ஷோகூன் சம்மதித்தபோது அவரைத்தனியே இயோடோவுக்கனுப்புவதில் சமுசயங் கொண்டவர்களாகி, அவருடன் அவரை நாடின தலையார் சிலர் 10,000 துருப்புக்களுடன் செல்லுவதாகப் பிரேரேபித்தனர். அம்மாதிரி பெரும் சைன்னிய பலத்துடன் பழைய ஷோகூன் வருதல் தகாதென்று இயோடோ வாசிகள் மனதில் தேறி



அதைத் தடுக்க நிச்சயித்தனர். சக்கிரவர்த்தியவர்க
ஷோகூனை யழைத்தனரே யன்றி அவர் படை யெடு
புடன் விரோதக் குறியாக வருதல் இயலாதாகையால்
தனியே நேசநோக்கத்துடன் வருதலே ஒக்குமென
அவர் துருப்புடன் வரும் பக்ஷத்தில் அதை யெதிர்
கச் சித்தம் செய்தனர். சித்தம் செய்தபடியே எதிர்
தல் அவசிய மாயிற்று. போர் நேர்ந்து, சக்கிரவர்த்தி
பக்கத்தார் வெற்றி பெற்றனர். இவ்வாறு படை
ஷோகூன் இயோடோவுட் புகச் செய்த முயற்சி கை
கூடாமல், அவர் யடோ போய்ச் சேர்ந்தனர்.

இவ்வாறு நேரிட்ட இடையூறும், ஏனைய இடையூறுகளும், அக்காலத்தில் தேசத்தில் முற்பட்டு வந்த தேசாபிமான வலிமுன் கைகூடாமற்போயின. அன்னிய ஸ்தானிகர்களுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் யாதொரு இடையூறு மூறு வென்றும் அவர்களுக்கு விரோதமாகப் பொல்லாங்கு செய்வோர்கள் கண்டிப்பாய்த் தண்டிக்கப் படுவார்களென்றும் அந்த ஸ்தானிகர்களுக்கு புது ராஜாங்கத்தார் உறுதி பயந்தனர். அன்றியும், இனி ஜப்பான் ராஜாங்க சம்பந்தமான உள் விவகாரங்களும் அன்னிய விவகாரங்களும் சக்கிரவர்த்தியினுலேயே நடத்தப்படு மென்றும், அவர்களுடன் செய்யப்பட்டிருந்த உடன்படிக்கைப்படி நடக்க நேரிடும் சகல அலுவல்களையும் பார்ப்பதற் கவசியமான உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுவார்களென்றும், அவ்வாறு நிகழ்த்தப்பெற்ற வேற்றுமைகளைத் தங்கள் தங்கள் ராஜாங்கத்தார்களுக்கு அறிவிக்கவேண்டு மென்று

கோரியும் அறிக்கை செய்வித்தனர். இப்படித் தாம் புதிதாக வகித்த வசுதேச அதிகாரத்தின் உண்மையை நிரூபிக்கும் பொருட்டு அன்னிய ஸ்தானிகர்கள் 1868-ம் வருஷம் மார்ச்சு மாதம் 23-ந்தேதி புது ராஜாங்கத்தாரை வந்து பார்க்கும்படி அறிவிக்கப் பட்டனர்.

இப்படிச் சக்கிரவர்த்தியானவர் அன்னியர்கள் தம்மை நேரில் பார்க்கும்படி அனுமதி கொடுத்து வேண்டிக்கொண்டது அதுவரையில் ஜப்பான் சரித்திரத்தில் எப்போதும் நடந்திராத புதுமையாதலால், அன்னியர்களுக்கு அளவற்ற ஆச்சரியத்தை யுண்டாக்கியது. சூரிய வமிசத்தில் உதித்த தெய்வப் பான்மை பூண்ட ஜப்பானியச் சக்கிரவர்த்திகள், இகழ்ச்சிக் குரிய அன்னியர் தம் சன்னிதானத்தில் தோன்ற அன்னிய அரசர் தமக்கு நிகரென ஏற்றல் அதுவரையில் நிகழ்ந்த சம்பவமன்று. ஆயினும் 19-ம் நூற்றாண்டின் ஜப்பானியர் மத்தியகாலங்களில் வசித்த ஜப்பானியரைப் போன்றவர்க ளல்லர். அன்னியர் கூட்டுறவால், அதாவது, தம் தேசத் துறைமுகங்களில் வசித்த அன்னியர்களுடன் பழகவும், ஜப்பானியப் புத்திமான்கள் அன்னிய தேசங்களுக்குச் சென்று அங்கு நிகழும் அரசு முறைகளையும் நாகரிக ஸ்தாபனங்களையும் கண்ணுற்றுச் சிந்தையிற் கொள்ளவும், ஜப்பானியர் புது அனுபோகத்தைப் பெற்றவர்களாகிப் புராதன அனுஷ்டானங்கள் தற்காலத்தில் பயன்படாவென மனத்தேற்ற முற்றனராயினர். ஆனதால் சக்கிரவர்த்தியின் விருப்பப்படி அன்னிய ஸ்தானிகர்கள் அவரை நேரிற்



பார்ப்பதில் எவ்வித விரோதமும் பாராட்டப்பட வில்லை. மார்ச்சு மாதம் 23-ந்தேதியில் முன்னேற் பாட்டின்படி, பிரான்சு, ஹாலண்டு ஸ்தானிகர்கள் சக்கிரவர்த்தியைப் போய்க் கண்டு தக்க உபசாரங்களை பெற்று யாதொரு யிடையூறு மின்றித் திரும்பினர். ஆனால் பிரிடிஷ் ஸ்தானிகரான ஸர் ஹென்றி பார்க்ஸ் தம்மிருப்பிட மிருந்து ராஜக்கிருகத்திற்குச் செல்லு கையில் இரண்டு போக்கிரிகள் வீராவேசங்கொண்டு, அவருடன் சென்றவர்களில் ஒன்பது பேரைத் தாக்கிக் காயப்படுத்தினர். அந்தப் போக்கிரிகளிலொருவன் அங்கேயே கொல்லப்பட்டு இன்னொருவன் பிடிபட்டான். ஸர் ஹென்றி பார்க்ஸுக்கு எவ்விதத் தீங்கும் நேரிடாமல் அவரும் அவருடன் சென்றோரும் திரும்பித் தங்கள் விடுதி யடைந்தனர். இவ்வாறு நேரிட்ட சம்பவத்தைக் கேட்டு ராஜாங்கத்தார் மனக் கிலேசங்கொண்டவராய், ஸர் ஹென்றி பார்க்ஸை அவரிருப்பிடத்தில் கண்டு சக்கிரவர்த்திக்கு நேரிட்ட பெருந்துக்கத்தை யறிவித்தனர். பிறகு தக்க ஏற்பாடுகள் செய்து மறுநாள் பிரிடிஷ் ஸ்தானிகர் சக்கிரவர்த்தியைப் பார்க்கும்படி நேமனம் செய்ய, அவ்வாறே சக்கிரவர்த்தி பிரிடிஷ் ஸ்தானிகரை வரப்பெற்று உபசரித்தனர். இவ்வாறு தகாத பொல்லாங்குகள் நேரிடுவதைக்கண்டு, அன்னியர்களுடன் ஷோகன் காலத்தில் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் சக்கிரவர்த்தியால் உறுதிசெய்யப்பட்டபடியால் அவர்களுக்கு நேரிடும் தீங்குகளுக்கு சக்கிரவர்த்தியே உத்தரவாதம் ஏற்றனர். ஆகையால் அவர்களுக்குச் சாமுராய் எவனே

னும் இடையூறு செய்வானாயின், அவன் அவனந்தஸ்தினின்றும் தாழ்த்தப்பட்டு அவனுக்கு ஹாராகிரி யென்கிற தற்கொலை செய்துகொள்ளும் சுதந்தரம் நீக்கப்படுமென்றும், சாமானியக் குற்றம் செய்தவர்களைப்போலவே அவனும் சிரசாக்கினைக் குட்பட்டு அவன் குலத்துக்கு அவமானமாக அவன் தலை எவரும் பார்க்குமாறு தூக்கித் தொங்கவிடப்படுமென்றும், உத்தரவு செய்யப்பட்டது. அவ்வாறே பிரிடிஷ் ஸ்தானீகர் பரிவாரத்தைத் தாக்கிக் காயத்துடன் பிழைத்த சாமுராய் தண்டனைக் குட்படுத்தப் பட்டான்.

இந்தச் சமயத்தில் ஜப்பான் ஏகாதிபத்திய அதிகாரத்தைச் சக்கிரவர்த்தியே முற்றிலும் ஏற்பதா, அல்லது ஷோகூனுக்கும் ஏதேனும் அதில் பங்குண்டாவென்று ஜனங்கள் மனதில் சந்தேகமிருந்துகொண்டிருந்தபடியால், நீக்கப்பட்ட ஷோகூனும் அவரைச் சேர்ந்தவர்களும் சிலகாலம் கலகம் செய்து நிறுத்தப்படாமல், ஷோகூன் அதிகாரத்திலிருந்த சில போர்க்கப்பல்கள் சக்கிரவர்த்தியால் நியமிக்கப்பட்ட கப்பற்படைத் தலைவருக் குட்படாது எதிர்த்துப் போர்க்கு நின்றன. 1869-ம் வருஷம் ஜூலை மாதத்திற் சண்டை நேரிட்டு ஷோகூன் படைத்தலைவர்கள் சிறை செய்யப்பட்டாலும் அவர்கள் போரில் காட்டின சௌரியத்துக்காக மன்னிக்கப்பட்டார்கள்.

67

# CHAPTER VIII.

## எட்டாம் அதிகாரம்.

ஏகாதிபத்தியத்தைக் காலத்துக்கேற்கச் சீர்ப்படுத்த முயன்றது—இந்தியாவிலும் மற்றக் கீழ்த்திசைத் தேசங்களிலும் அரசர்கள் தன்மை—ஏகாதிபத்திய ஸ்தானம் கியோட்டோவிலிருந்து யெடோவுக்கு மாற்றப்பட்டது—சக்கிரவர்த்தியின் திருமணம்—கிரஸ்து மதத்துக்கு விரோதமாய் விளம்பரம் செய்யப்பட்டது—ஐந்து நிபந்தனைகளடங்கிய இராஜாங்க சாசனமும் ஆலோசனைச் சபை கூட்டப்பட்டதும்—மாகாணத் தலைவர்களின் புகழத்தக்க நடத்தை—அவர்களுக்குத் தக்க உத்தியோகங்கள்—அவர்களுக்குப் பென்ஷன்—ஸ்தல சபைகள் ஸ்தாபித்து ஜனப்பிரதிநிதிகளைப் பயிற்றல்—இராஜாங்க அமைப்பின் எழு அங்கங்கள்—மோரி யென்னும் தேசாபிமானி கொலையுண்டது.

இச்சம்பவங்களின் மத்தியில், கியோட்டோவில் ஏகாதிபத்திய ஸ்தானத்தில் சக்கிரவர்த்தியும் அவர் மந்திரிகளும் சும்மாயிருந்தனரல்லர், காலநிலைக்குத் தக்கபடி ஏகாதிபத்தியத்தை எவ்வாறு அமைத்தலாகுமென்கிற பெரும் யோசனையை மனதில் கொண்டு, ஒருவித

மாக அதைப் பாகுபாடு செய்தனர். ஏகாதிபத்தியமானது பல வகுப்புகளால் அமைக்கப்பெற்று, ஒன்று ஏகாதிபத்திய நிர்வாகத் தலைமை நடத்தவும், ஒன்று ஜப்பானிய மதமாகிய ஷிண்டோ மத பரிபாலனத்தை வகிக்கவும், ஒன்று தேச உள்வர்த்தமானங்களையும், மற்றொன்று அன்னிய வர்த்தமானங்களையும், மற்றவை யுத்தம், அரசிறை, நீதிபரிபாலனம், சட்டநிரூபணம் இவைகளையும், கண்காணித்து நிகழ்த்தவும், எட்டு வகுப்புகளாக வகுக்கப்பட்டது. இவ்வாறு கூறுபாடு செய்யப்பட்ட அமைப்பு அப்போதைப்போது மாற்றப்பட்டபோதிலும், வெகுகாலம் வரையில் அதையே ஸ்திரமாக அங்கீகரிக்கத் தக்கதென்றே ராஜதந்திரிகள் கருதிவந்தனர். இவ்வாறு படிப்படியாக ஜப்பானின் துரைத்தன நிலைமை சீர்ப்பட்டு ஸ்திரமடைந்து வருமாறு சக்கிரவர்த்தி சர்வ அதிகாரத்தையும் தற்கால நவீன சம்பவங்களை முன்னிட்டு வகித்துவிட்டபடியால், அவருடைய பழக்க வழக்கங்களும் சம்பந்தங்களும் காலானுகூல முற்றவைகளாயிருக்கவேண்டுமென்று மந்திரிகள் நிச்சயித்து, சக்கிரவர்த்தியின் காலப்போக்கு வழிகளை வேறுபடுத்த முயன்றனர்.

இந்தியாவிலும் மற்றக் கீழ்த்திசைத் தேசங்களிலும் அரசர்களை தேவதாம்சமாக ஜனங்கள் பயபக்தியுடன் மதித்து, அவர்கள் மற்றச் சாமானிய மனிதர்களைப்போல வல்லரென்றும் அவர்களுடைய நடையுடை பாவனைகளும் சகவாசங்களும் வேறாக விருக்க



வேண்டுமென்றும், நம்புவதுண்டு. ஆகையால் அரசர்கள் தங்கள் பிரஜைகளாகிய சாமானிய ஜனங்கள் பார்க்கக்கூடியவாறு அடிக்கடி வெளிவரக்கூடாதென்று, தங்கள் ராஜக்கிரகத்துக்குள்ளே யடைபட்டுத் தங்களுக்கு ஆலோசனை சொல்லும் மந்திரிகளன்றித் தங்கள் சிற்றின்பங்களுக்குச் சகாயபூதர்களான அல்ப மனிதர்களுடனும் சகவாசம் பண்ணுவது வழக்கம். அவர்கள் உலக விவகாரமே விசேஷமாக அறிந்தவர்களல்லர். தங்கள் பிரஜைகளின் நன்மைகளுக்கு வேண்டின வேண்டாதவை இன்னவென்றறியார். தங்கள் அந்தப்புரவாசிகளாகிய ஸ்திரீகளும், ஆசியக்காரர்களும், இச்சகம் பேசுவோரும், கிட்டின பந்துக்களாயிருந்து சூது, மோசம், சதி, இவைகளைச் செய்வோரும், ஆகிய இன்னோர் சொல்வதைக்கேட்டுத் தங்கள் சிம்மாசனத்துக்கும் தேச நன்மைக்கும் விரோதமாகவே நடந்து நாசமுறுவார்கள். எக்காலமும் இவ்வாறே நடந்து வந்ததென்பது நமது அபிப்பிராயமல்ல. இந்திய அரசர்கள் பலர் பூர்வகாலத்தில் யுத்தத்தில் பராக்கிரமசாலிகளாயும், ராஜதந்திரத்தில் நிபுணர்களாயுமிருந்தார்களென்று நாம் சரித்திரமூலமாயறிகிறோம். ஆனால் எவ்வெக் காலங்களில் தேசத்தில் அமைதி குடிகொண்டு போர் கலகம் முதலானவைகளால் அரசனுக்குக் கவலையுண்டாகாமலிருந்ததோ, அக்காலங்களில் அரசன் நாட்டுவளப்பத்தைக் கருதாமல் தன் அரண்மனையிலேயே வசித்து உலகத்தை யறியாத மூடனாயிருந்த தரிதல்ல. தற்காலத்து நமது ஜமீன்தார்களுடைய

நிலைமையைக் கவனித்தாலும் நாம் சொல்லுவதின் உண்மை விளங்கும்.

ஜப்பான் சக்கிரவர்த்தியும் மேற்குறித்த நிலைமையி லிருந்தனரென்று சொல்லப்படுகிறது. ராஜாங்கக் கவலையெல்லாம் ஷோகுன் உத்தியோக வமிசத்தார் பொறுக்கப், பேருக்குமாத்திரம் சக்கிரவர்த்தி ஒருவர் ஜப்பானியரால் தெய்வமெனக் கும்பிடப்பட்டு வந்தபடியால், தேசத்திற் பெருங் காரியங்களில் புகுந்து அவைகளை நிருவகித்தும் ஜயாபஜயங்களை யடைந்தும் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனங்கள் செய்தும், பிரஜைகளுக்குப் பொல்லாங்கு நேரிடாமல் காத்தும், தமது சாமர்த்தியத்தையும், அறிவையும், குணங்களையும் சிறப்படுத்தும் படியான அவகாசங்கள் சக்கிரவர்த்திக்கு நேரிட்டதில்லை. இப்பேர்ப்பட்ட நிலையி லிருந்துவந்தவரது வமிசத்தி லுதித்த முற்சிஹிடோ சக்கிரவர்த்தியும் தம் முன்னோர்களைப் போலவே யிருந்தனர். இருந்தாலும், ஜப்பான் தேசத்தின் ஸ்திதியானது அன்னியர்களின் சகவாசத்தால் முற்றிலும் வேற்றுமைப் பட்டு வந்த காலத்தில் ஜப்பான் முழுமையும் தம்மொருவர் அதிகாரத்திற் குட்படுத்தி நேராக ஆட்சி செய்து வந்த சக்கிரவர்த்தி, சாமர்த்தியத்திலும், உலக அறிவிலும், ராஜ்ய பாரம் தாங்குவதிலும், தேசாபிமானத்திலும் தம் முன்னோர்களை விடச் சிறந்தவரா யிருக்க வேண்டியது மகா அவசியமாயிற்று. அவசியா-



படியால், சக்கிரவர்த்தியை யவரது பழைய சகவாசங்களினின்றும் சம்பந்தங்களினின்றும் விலக்குவது அவசியமென்று புத்திமான்க ளுணர்ந்தனர். அவ்வாறே 1868-ம் வருஷத்தில் ஸாசுமாவைச் சேர்ந்த ஒகுபோடோஷிமிச்சி என்ற மகா சாமர்த்தியவானான அரசியலாளர் சக்கிரவர்த்திக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பி, அதில் இனிச் சக்கிரவர்த்தியானவர் முற்காலத்து அனுஷ்டான ஆசாரங்களைப் பின்பற்றாமல் நேராகவே முன்வந்து ஆளவேண்டுமென்றும், அப்பெரும் நோக்குடன் ஏகாதிபத்திய ஸ்தானமானது புது ஸ்தலத்தில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும், ஒஸாகா தக்க இடமென்றும் அறிவித்தனர். இந்த யோசனையானது கூடவிருந்த மற்றப் பெரியோர் மனதில் விந்தையையும் ஆச்சரியத்தையும் உண்டுபண்ணின போதிலும், சக்கிரவர்த்தி அதன் நலத்தை யுணர்ந்து அதை அங்கீகரித்தனர். சக்கிரவர்த்திகூட இளம் பருவத்தால் அநுபோகமற்றவராயினும் காலத்துக்கேற்ற புதுமைகளை வெறுத்தன ரல்லர். ஆகையால் கியோடோவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஏகாதிபத்திய ஸ்தானம், டோஷிமிச்சி சொன்னபடி ஒஸாகாவிற்கு மாற்றப்படாவிட்டாலும், முன்னூறு வருஷக்காலமாக ஷோகுன் வமிசத்தார் ஆட்சி செலுத்திவந்த யடோ நகரத்துக்கு மாற்றப்பட்டு, அந்த யடோ நகரம் டோகியோவென்று பெயரிடப்பட்டது.

1869-ம் வருஷத்தில் சக்கிரவர்த்தி, பழைய ஸ்தானமாகிய கியோடோவுக்குப் போய்த் தம் பிரா-

தின் சமாதி ஸ்தானத்தில் செய்யவேண்டிய உத்தரக் கிரியைகளை நடத்தியது மன்றி, அங்கு தங்கியிருந்தபொழுதே ஜப்பான் தேசத்து உயர் குலங்களுள் உன்னதமாய் விளங்கின இச்சிஜோ குலத்தைச் சேர்ந்த பெண்ணை மணம் புரிந்தனர். கியோடோ ஜனங்கள் தம் மத்தியில் வெகு நாள் வீற்றிருந்த சக்கிரவர்த்தியைப் பிரிய மனமொப்பினவர்களாகாமல் சக்கிரவர்த்தியை அங்கேயே நிறுத்த மனக்கொதிப்புக் காட்டினபடியால், புது மணமகளான சக்கிரவர்த்தினியை அங்கே விட்டுச், சக்கிரவர்த்தி மாத்திரம் டோகியோ நகரத்துக்குத் திரும்பினர்.

இவ்வாறு ஜப்பானில் புது நாகரிகம் மேற்றிசையாரின் சம்பந்தத்தோடு புகுந்து பரவிவந்த காலத்திலும், மேல் நாட்டாரது மதமாகிய கிரஸ்து மதத்தில் ஜப்பானியர் அபிமானங் கொள்ளவில்லை. பதினேழாம் நூற்றாண்டில் ஜப்பானில் கிரஸ்துமதம் பரவிவர, அதை ஜப்பான் ராஜாங்கத்தார் பலவிதமான கொடுங் கருமங்களால் பூண்டறுத்தனரென்று சொன்னோம். அறுத்தும் அங்கங்கு சிற்சில கிரஸ்தவ மதத்தினர் இருந்து வந்தார்கள். இப்போது 1868-ம் வருஷத்தில் கிரஸ்தவ மதத்தைத் தழுவியிருந்த ஜப்பானியர், தேசத்தை விட்டுப் போய்விட வேண்டுமென்றும் எவரேனும் பதுங்கியிருந்தால் அவரைக் காட்டிக்கொடுப்போருக்கு வெகுமதி கொடுக்கப்படுமென்றும், கிரஸ்தவ மதமானது ஜப்பானில் ஆதரிக்கப்படமாட்டாதென்றும், ஒரு விளம்பரம் செய்யப்பட்டது. இந்த



விளம்பரத்தைக் குறித்து அன்னியஸ்தானிகர் பலமாய் ஆக்ஷேபித்தனர். ஆக்ஷேபித்தாலும், மதசம்பந்தமான விவகாரங்கள் ஜப்பான் ராஜாங்கத்தாரின் சுவதந்தரத்துக்கு அடங்கினவையாகையால் அன்னியஸ்தானிகர் அவைகளில் தலையிட நியாயமில்லையென்று தங்கள் விளம்பரத்தை அப்போது உறுதி செய்தபோதிலும், பின்னால் நாலு வருஷம் கழித்து 1872-ம் வருஷத்தில் அன்னிய ஸ்தானிகர்களின் தாக்ஷிணியத்துக்குட்பட்டே அதை ராஜாங்கத்தார் அடித்துவிட்டனர்.

1869-ம் வருஷம் மே மாதத்தில் சக்கிரவர்த்தி தமது மந்திரிமார்களையும் மாகாணத் தலைவர்களையும் சபையாகக் கூட்டி, அவர்கள் முன்பாக ராஜாங்க சாசனம் ஒன்று செய்து, அதைப் பிரமாண பூர்வமாக அங்கீகரித்தனர். இதில் ஐந்து நிபந்தனைகளிருந்தன. முதலாவது, ஆலோசனைச் சபையொன்று ஸ்தாபிக்கப்பட்டுச் சட்டதிட்டங்களனைத்தும் பொது ஜன அபிப்பிராயத்தை ஒட்டி நிச்சயிக்கப்படுமென்றும், இரண்டாவது, ஜப்பானில் மேற்குலத்தார் கீழ்க்குலத்தாரனைவரும் சமூக அபிவிர்த்திக்கும் ராஜாங்கச் சீருக்கும் சம்பந்தமான சாஸ்திரவிதிகளை வெகு கவலையுடன் கற்கக்கடவரென்றும், மூன்றாவது, சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் நன்னோக்கங்கள் எவையானாலும் அவைகளுக்கனுகுணமாக ஒழுகவிரும்பும்போது அவருக்கு ஏனையோர் உதவிசெய்யக்கடவரென்றும், நான்காவது, பூர்வகாலத்து அவிவேகமான சாம்பரதாயங்களைக்,

கைவிட்டு இயற்கையையாதாரமாகப் பெற்ற நிகழ்ச்சிகளில் என்றும் நீதியும் பக்ஷபாதமின்மையுமே பிரமாணமாகக் கொள்ளத் தக்கனவென்றும், ஐந்தாவது, ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரங்கள் எக்காலமும் அசையாமல் உறுதிபெற்று நிலைக்கும் நோக்கமாய் உலகத்தில் எப்பாகமாயினும் அப்பாகத்தில் அறிவும் திறமையும் தேடத்தக்கவையென்றும், இத்தகைய மகோன்னதமான சமூக தருமங்கள் ஜப்பானின் நவீன நாகரிகத்தில் மேற்கொள்ளலாயின. இவ்வாறு சாசனம் அங்கீகரிக்கப்பட்ட 1869-ம் வருஷத்திலேயே மேற்குறித்த ஐந்து பிரமாணங்களுள் முதலாவதை யனுசரித்து, பார்லிமெண்டு என்று பொருள் கொள்ளும் கோகிஷோ ஆலோசனைச் சபையானது கூட்டப்பட்டது. கூட்டப்பட்டபோது ஜனங்கள் ஏதோ தங்கள் தேசத்துக்கு அருமையான நன்மைகள் விளையப்போகின்றனவென்று வெகு உற்சாகத்துடன் கோரினர். அந்தப் பார்லிமெண்டு சபையில் ஜப்பான் உயர் குலத்தாரின் பிரதிநிதிகள் அமர்ந்திருந்தனர். ஆயினும் பிரிடிஷ் பார்லிமெண்டு சபையாரைப் போல ராஜ்ய நிருவாகம் செய்யப் புகாமல், சக்கிரவர்த்திக்கு வேண்டிய ஆலோசனைகளைச் சொல்லும் நோக்கத்துடன் மட்டும் இந்தச் சபை சேர்ந்தது. இச்சபையார் பற்பல விஷயங்களைக் குறித்து ஆலோசனை செய்த போதிலும், விசேஷமான புதுமைகளைக் கைக்கொள்ள இஷ்டப்பட்டிருந்தவர்களாகக் காட்டவில்லை. ஆயினும் இந்தச் சபை பிற்காலத்தில்



மேற்றிசைத் தேசங்களைப் போலப் பிரதிநிதி ஸ்தாபனங்களின் மூலமாய் ராஜாங்கம் நடத்தும் முறை ஸ்திரப்படுதற்கு ஆரம்பமாயிற்று.

ஜப்பான் தேசத்தில் பற்பல பாகங்கள் சிற்றரசர்களுடைய ஆட்சியிலிருந்ததாக ஏற்கெனவே சொன்னோம். அவர்கள் ஷோகூன் அதிகாரத்துக்கும் சக்கிரவர்த்தியின் அதிகாரத்துக்கும் பேருக்கு அடங்கினவர்களாயிருந்தபோதிலும், உண்மையில் ஸ்வாதீன அரசர்கள் போலவே தங்கள் சொத்துக்களை ஆண்டுவந்தார்கள். இவ்வாறு வெகு காலங்களாக மேலதிகாரிகளுக்கு உத்தரவாதம் செய்யக் கட்டாயப்பட்டவர்களல்லராதலால், இவர்களுடைய ஆளுகையினால் ஜனங்களுக்கு நன்மை தீமைகள் உண்டானாலும், இவர்களே சிற்றின்பப் பிரியர்களாய்ச் சீரழிந்துபோயிருந்தாலும், கேட்பாரில்லை. ஆகையால் இவர்கள் கால அளவில் தங்களுக்குரிய ஆட்சிப்பொறுப்பைத் தங்கள் காரியஸ்தர்களுக்கு ஒப்புவிக்கலாயினர். ஆதியில் சக்கிரவர்த்தியின் பலஹீனத்தால் ஷோகூன் அதிகாரிகள் தலைப்பட்டது போலவும், ஷோகூன் அதிகாரிகளின் பலஹீனத்தால் அவர்களின் கீழுள்ள காரியஸ்தர்கள் ராஜாங்க அதிகாரம் முழுமையும் தங்கள் கைப்படுத்தி நடத்திவந்ததுபோலவும், அங்கங்கே உள்நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சிற்றரசர்கள் தலைமுறை தத்துவமாய் இயற்றி வந்த அதிகாரத்தைக் கைநழுவ விட்டுக் காரியஸ்தர்கள் ஆட்டிவைத்தபடி யாடின பொம்மைகள்போலாயினர். இந்த ஸ்திதியில்

ஜப்பான் தேசத்து ஆளுகையானது பற்பல மத்திய ஸ்தலங்களில் சிதறுண்டு கிடந்தது நீங்கித், தேச பரிபாலனத்தின் மூலஸ்தானமாகிய சக்கிரவர்த்தியின் ஏகதேச அதிகாரத்தில் அடங்கியிருக்க வேண்டுமென்று தேசாபிமானிகள் செய்த ஏற்பாட்டுக்கு மேற்குறித்த மாகாணப் பிரபுக்களின் நிலைமை ஒவ்வாததாகவிருந்தது. அவர்கள் வெகு காலம் அனுபவித்து வந்த சுவாதீன அதிகாரத்தை அவர்களிடமிருந்து ஒடுக்கி, அவர்களின் விஸ்தாரமான பூஸ்திதிகளைப் பொது ஜனங்களுக்குக் கொடுத்து, மாகாணத் தலைவர்கள் சொத்துக்களும் அதிகாரங்களும் இழக்கும் பக்ஷத்தில் அவர்களுக்குத் தக்க ஈடுகள் செய்து, அவர்களைத் தேசப் பொதுக் காரியங்களை நிருவகிப்பதில் உபயோகப்படக்கூடியவர்களாக்குவது எப்படியென்று வெகு கவலையுடன் சிந்தனை செய்யப்பட்டது. அவர்களைச் சைன்னிய பலப் பிரயோகத்தால் அடக்கக் கூடுமென்றால் அது முற்றிலும் உற்ற யோசனையாகத் தோற்றவில்லை. கேவலம் தேசாபிமானத்தால் தூண்டப்பட்டுத் தங்கள் சொத்துக்களைத் தாங்களாகச் சக்கரவர்த்தியிடம் ஒப்புவிக்கவும், இந்தியா தேசத்து ஜமீன்தார்கள் போலப் பொருட்பெருமையில் மாத்திரம் திருப்தியடைந்திருக்கவும், இஷ்டப்படுவார்கள் என்று நினைத்தலும் மனித சுபாவத்துக்கு விரோதமாயிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஜப்பானுக்கு நல்ல காலத்திற்குக் காரணங்களில் ஒன்றாக மாகாணத் தலைவர்களில் சிலர் தங்கள் ஜனனபூமியின் பிற்கால க்ஷேமத்தையும் பெருமையையும் மனதிற்



கொண்டு, அவைகள் தங்கள் சொந்தப் பெருமையையும் க்ஷேமத்தையும்விட மேற்பட்டவைகளென்றுணர்ந்து, தங்கள் பூசொத்துக்களையும் இதர உரிமைகளையும் சக்கிரவர்த்திக்கே கொடுத்துவிடச் சித்தமாயிருப்பதாகவும் சக்கிரவர்த்தி அவைகளை அங்கீகரிக்கவேண்டுமென்றும் ஒரு மனு செய்துகொண்டார்கள். இவ்வாறு இவர்கள் பேரறிவுடன் செய்ததைப்பார்த்து மாகாணத் தலைவர்களில் மற்றவர்களும் அவ்வாறே மனு செய்தனர். அவ்வாறு மாகாணத் தலைவர்கள் மனு செய்து தெரிவித்துக்கொண்ட விருப்பப்படியே சக்கிரவர்த்தியும் ஏற்று, அவர்கள் பூசொத்துக்களின் வரும்படிகளை ஏகாதிபத்தியப் பொக்கிஷத்தில் சேர்த்து, அவர்களையெல்லாம் குவாஜோகு என்கிற மேன்மக்கள் என்று பொருள்கொள்ளும் அந்தஸ்துக்குரிய ஓர் வகுப்பினராக்கினர்.

இவ்வாறு மாகாணத் தலைவர்களான சிற்றரசர்கள் பிரிடிஷ் தேசத்தில் லார்ட்ஸ், டியூக்ஸ், என்னும் மேன்மக்களைப் போலவே ஆய்விட்டபடியால், மாகாணங்களை நிருவகிப்பதற்காக வேறு உத்தியோகஸ்தர்களை நியமித்தல் அவசியமாயிற்று. அவ்வாறே பிறப்புப் பேரந்தஸ்தாலுண்டான சிபார்சை நீக்கித், திறமையும், யோக்கியதையுமே பெரும் பொறுப்புப் பெறுவதற்குச் சிபார்சென விதிக்கப்பட்டது. மேற்குலத்தில் பிறந்த காரணத்தால் மட்டும் எவர்க்கும் யோக்கியதை உண்டாவதில்லை. அநேகமாய் அப்பேர்ப்பட்ட பிறப்பைக்கொண்டு சிறுவர்கள் பற்பல அயோக்கியதைகளை யுடையவர்க

ளாகத் தற்காலத்தில் நாம் கண்டு மிருக்கிறோம். உயர் பிறப்பாற் சிற்சில மேற்குணங்கள் உண்டாகக் கூடியனவென்பது உண்மையாயினும், பொதுக் காரியங்களை நிருவகிக்கும் சாமர்த்தியமானது படிப்பினாலும், சகவாசத்தினாலுமே உண்டாகக்கூடியது. தாழ் பிறப்புடையவனும் உயர் குணங்களைப் பெறலாம். ஆயினும் உயர்குலத்தாருக்கு எப்படி இயற்கையாகவே சில உயர்குணங்கள் அமைகின்றனவோ, அவ்வாறே இழிபிறப் புடையானுக்கும் சில இழிகுணங்கள் அமைதலைக் காண்கிறோம். ஆகையால் பொதுஜன நன்மை நோக்கிப் பொறுப் பேறப்பெற்ற உத்தியோகங்களுக்குக் கல்வியும் ஒழுக்கமுமே போதுமான சிபார்சுகளாக ராஜாங்கத்தார் அங்கீகரிக்கக் கூடுமாயினும், இவைகள் மேற்பிறப்புடன் கலந்தமைந்திருக்குமாயின் அப்படியிருத்தலே சிரேஷ்டமான யோக்கியதையென உலகத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. இந்த வழக்கத்தை முன்னிட்டே, ராஜாதிராஜாகி உலகெங்கும் ஒரு குடைக்கீழ் ஆளும் நம் சக்கிரவர்த்தி யானவர் கவர்னர் ஜனரல்களையும் கவர்னர்களையும் நியமிக்கும் போது, ஜனங்களைக் கட்டியாளும் சாமர்த்தியமும் அனுபோகமுமுள்ள உயர் குலத்தாரையே நியமிக்கிறார்.

மேற்கண்டவாறு மாகாணத் தலைவர்கள் சுவாதீனஸ்தர்களாயிருந்ததினால் நேரிட்ட சங்கடமானது நிவர்த்தியாய் விட்ட போதிலும், அவர்களுக்கும் அவர்கள் காரியஸ்தர்களுக்கும் சடுகள் செய்வதில் ராஜாங்கத்தார் கஷ்டப்பட்டுப் போனார்கள். எப்படியெனில்,



[illegible]களின் ஆண்டான வரும்படிகள் சக்கிரவர்த்தியின் பொக்கிஷத்தைச் சேர்ந்தனவாகத் தீர்மானித்து விட்டபடியால் அவர்களின் அந்தஸ்துக்குத் தக்க யோக க்ஷேமங்களை யமைத்தல் அவசியமாயிற்று. ராஜாங்கத்தார்கள் என்ன செய்தார்களென்றால், மாகாணத் தலைவர்களுக்குக் கிடைத்த மொத்த வரும்படியில் பத்திலொரு பாகத்தை அவர்களுக்குப் பென்ஷனாகச் செய்து, அந்தப் பென்ஷன் சுமார் 10, வருஷங்களுக்கு என்ன மொத்தத் தொகையாகக் கூடுமோ அதை ஒரே தடவையாகக் கொடுத்து, அந்தத் தொகையைக் கவர்ன்மெண்டு பத்திரங்களாக மாற்றி, அப்பத்திரங்களுக்குள்ள கவர்ன்மெண்டு வட்டியை மாகாணத் தலைவர்க்குக் கொடுத்து வந்தார்கள். இப்படிக்கொடுத்து வந்ததில் மாகாணத் தலைவருக்குத் தங்கள் மாகாணங்களை நிருவகிப்பதில் நேரிட்டு வந்த சைனியச் செலவு முதலான செலவுகளை அவர்களையே கொடுக்கும்படி செய்யாமல், ராஜாங்கத்தார் பொறுப்பாய் ஏற்றுக்கொண்டனர். இவ்வாறு ராஜாங்கத்துக்குப் பிரமாதமான பொறுப்புகள் நேரிடவே, அதற்குப் பெருந்தொகைகளைக் கடனாக வாங்கிச் சமாளித்தனர்.

ஜப்பானின் அபிவிருத்திக் கிசைந்த பல சம்பவங்களில் இவ்வாறு மாகாணத் தலைவர்களின் பாடு ஒழிந்தது விசேஷமான தொன்று. பிறகு பற்பல விதங்களாய் நேரிட்ட சம்பவங்களை யிங்கு எடுத்துக் கூறுதல் அநாவசியம். ஆயினும் இவைகளது நிகழ்ச்சியின் மத்தியில் ஜப்பான் ராஜாங்கமானது சக்கிரவர்த்

தியினது ஏகதேச விருப்பப்படி நடத்தப்பட்டு வருவது நவீனகால நிலைக்கு ஏற்றதல்ல வென்றும், சக்கிரவர்த்தியானவர் மந்திராலோசனைச் சபையொன்று ஸ்தாபித்துச் சகல சட்டதிட்டங்களும் பொது அபிப்பிராயப்படி தீர்மானிக்கப்படுமென்று கொடுத்தவாக்குப்படி நடப்பிக்க வேண்டுமென்றும், சிலர் கக்ஷி சேர்ந்து முயற்சி செய்ய லாயினர். இப்படிச் சக்கிரவர்த்தி கொடுத்த வாக்குப்படி ஆளுவது அசம்மதமில்லை யாயினும், ஏகாதிபத்திய விவகாரங்களைக் கூடி ஆலோசித்து உசிதப்படி தீர்மானிக்க ஜனப்பிரதிநிதிகள் வல்லவ ராயினரோ வென்ற சமுசயம் ஆள்வோர் மனதில் உதித்திற்று. ஆயினும் அப்பேர்ப்பட்ட ஜனப்பிரதிகளைப் பயிலுவிக்கும் உபாயமாக 1878-ம் வருஷத்தில் அங்கங்கு ஸ்தலச்சபைகள் நியமிக்கப்பட்டன. இவைகள் நமது முனிசிபாலிடிகளையும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளையும் போன்றவை; அவ்வவ்விடங்களில் வசிக்கும் ஜனங்களுக்குரிய நன்மைகளைச் செய்யப் பொறுப்புப் பெற்றவை. இப்பேர்ப்பட்ட ஸ்தல ஸ்தாபனங்களில் சில காலம் ஜனத்தலைவர்கள் பயிற்சிபெறும் பக்ஷத்தில் பிற்பாடு ஏகாதிபத்திய மந்திராலோசனைச் சபையை நடத்த யோக்கியதைபெற்ற பிரதிநிதிகள் கிடைக்கக்கூடுமென்ற நம்பிக்கை யுண்டாயிருந்தது. இப்படி உண்டான நம்பிக்கையை யனுசரித்து 1889-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 11-ந் தேதி சக்கிரவர்த்தியானவர் தமது மந்திரிகளையும் உத்தியோகஸ்தர்களையும் சுற்றியிருக்கச் செய்து, அவர்கள் முன்பாகத் தமது பிரஜைகளின் பரிபால



னத்தின் பொருட்டு அவர்களுக்கே சில சுவதந்தரங்கள் அளித்து, தாமும் அவர்களும் ஏகோபித்து ஏகாதிபத்திய நிருவாக நிகழ்ச்சிக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள பார்லிமெண்டுகளைப்போல் ராஜாங்க அமைப்பொன்றை ஸ்தாபித்து, அதற்கிசையத் தாம் ராஜாங்கம் நடத்துவதாகப் பிரமாணஞ்செய்து கொடுத்தனர். இவ்வாறு ஸ்தாபித்த ராஜாங்க அமைப்பு ஏழு அங்கங்கள் கொண்டிருந்தது. அவையாவன :—

முதலாவது, சக்கிரவர்த்தியைக் குறித்தது;

இரண்டாவது, பிரஜைகளது சுவதந்தரங்களையும் கடமைகளையுங் குறித்தது;

மூன்றாவது, ஏகாதிபத்தியப் பிரதிநிதிச் சபையைக் குறித்தது;

நான்காவது, ராஜாங்க மந்திரிகளையும், சக்கிரவர்த்தியின் மந்திராலோசனைச் சபை (Privy Council) யையுங் குறித்தது;

ஐந்தாவது, நீதி பரிபாலன முறையைக் குறித்தது;

ஆறாவது, வரி வசூல் செலவுகளைக் குறித்தது;

ஏழாவது, மற்ற விஷயங்களைக் குறித்தது.

அப்போதே, இவ்விதம் ஸ்தாபிக்கப்பட்ட சபையானது 1890-ம் வருஷத்தில் கூட்டப்படு மென்றும், அப்படிக் கூட்டப்பட்ட தேதி முதல் மேற்குறித்த ராஜாங்க அமைப்பு நடைபெறு மென்றும் சக்கிரவர்த்தி வாக்குறுதி யளித்தனர்.

இவ்வாறு ஜப்பானியரின் பிற்கால நன்மை திசைகளுக்கு ஆதாரமாகக் கருதப்பட்ட நூதன முயற்சி

கள் நிகழ்ச்சி பெறுங்கால், அத்தேசத்தில் எவ்விதப் பெரு முயற்சி செய்யப்பட்டாலும் பெரியோ ரொருவரது உயிர்ச்சேதம் நேரிடாமல் செய்யப் படுவதில்லையென்று சொல்லும் வண்ணம், மகா தேசாபிமானியான வைகௌண்ட் மோரி அரி நோரி யென்பவரை அவரின் விரோதி யொருவரின் தூண்டுதலால் ஒரு பாதகன் கொலை செய்தான். தமது தேசம் தற்கால நாகரிகப் பெற்றிகளில் முற்பட்டு வருவதைக் கண்டு பெருமையும் திருப்தியு மடைந்த தேசாபிமானி மோரியை விட வேறியாரு மிருந்ததில்லை. கீர்த்தியும் பெருந்தன்மையுங் கொண்ட எந்தக் காரியம் ஜப்பானில் நடத்தப்பட்டாலும் அதற்குத் தலைவராக நிற்கு மியல்புள்ளவராய்ச் சதாகாலமும் தம் தேச க்ஷேமத்தையே நாடின இவர், இவ்வாறு சமயத்தில் கொலையுண்டது, உலகத்தில் மேலான கருமம் நிறைவேறுதலில் சகஜமா யுண்டாகும் இடையூறுகளைக் குறிக்கும் துக்ககரமான சம்பவமென்றே நினைக்கப் படல்வேண்டும்.

## CHAPTER IX.

## ஒன்பதாம் அதிகாரம்.

கீழ்த்திசையாருக்கும் மேற்றிசையாருக்கும் இராஜரீகத்தில் வித்தியாசம்—ஜப்பான் மேற்றிசை இராஜரீகத்தை யனுசரித்து முற்பட்டதற்குக் காரணங்கள்—இந்தியா ஜப்பான்போல் முற்படாததற்குக் காரணங்கள்.

கீழ்த்திசைச் சாதியார்களுக்கு அரசியற்று முபாயங்களில் சாமர்த்திய மெப்போது மிருந்ததில்லையென்றும், அவர்க ளெக்காலத்திலும் சகல அதிகாரங்களையும் வகித்து மனம்போனபடி தேசத்தை யாளுகிற அரசனுக்கு அடிமைகள்போ லடங்கித் தம் சுவதந்தரங்களை யறியாதவர்களாக வாழ்வோரென்றும், பிரதிநிதி ஸ்தாபனங்களாவது பிரதிநிதி ராஜாங்கமாவது அவர்கள் சரித்திரங்களி லுண்டானதேயில்லையென்றும், இப்பேர்ப்பட்ட ஸ்தாபனங்களும் ராஜாங்கங்களும் மேற்குச் சாதியாரே, முக்கியமாய்ப் பிரிடிஷ் ஜாதியாரே, ஆதியி லுண்டாக்க அவர்களைப் பார்த்து மற்றத் தேசத்தார் அவைகளைப் படிப்படியா யனுஷ்டித்து வருகிறார்களென்றும், ஆங்கிலேய

யாது கொள்கை. ஆஷியா தேசங்களின் சரித்திரங்களைச் சோதிக்கும் போது, மேற்கண்ட ஆங்கிலேயரின் அபிப்பிராயம் உண்மையாகவே காணப்படுகின்றது. இந்தியா, சீனா, பெர்ஷியா, துர்க்கி, ஈஜிப்ட் இவை வெகு புராதன தேசங்களாயும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே விசேஷ நாகரிகத் தேர்ச்சியை யடைந்தவைகளாயும், அரசர்கள் தாம் நினைத்ததே சட்டமாகக் கொண்டு ஜனங்களை யாண்டு வந்ததாகவும் தெரிகின்றதே யன்றி, ஜனப்பிரதிநிதிகளுக்கு ராஜாங்க வதிகாரங் கொடுத்து அவர்களபிப்பிராயங்களுக் கிசைய ராஜ்யபாரம் செலுத்தினதாகத் தெரியவில்லை. நம் தேசமாகிய பரத கண்டத்தில், நம் முன்னோர்கள் வளர்த்து வந்த நாகரிகஸ்தாபனங்களையும், அவர்களது சாஸ்திரம், கலை, ஒழுக்கம் முதலானவைகளையும் இக்காலத்தில் அறிந்து வியப்புறாதவர்களில்லை யாயினும், நமது சரித்திரத்தி லெக்காலத்திலேனும் அசோகன், போஜன், விக்கிரமாதித்தன், நந்தன், விஜய நகரச் சக்கிரவர்த்திகள், தமிழரசர்கள், இவர்களெவரேனும் தங்கள் ராஜ விவகாரச் சபைகளில் ஜனப்பிரதிநிதிகளை யமர்த்திப் பிரிட்டிஷ் பார்லிமெண்டு போன்ற சபையை ஸ்தாபித்து அரசு நடாத்தியதாகத் தெரியவில்லை. இம்மாதிரியே, சீனாவும், பெர்ஷியாவும், ஈஜிப்டும், கல்வி, கலை, சைன்னிய பலம், வர்த்தகம், தொழில், பொதுவான நாகரிகம், இவைகளில் பெருங் கீர்த்தியை யடைந்திருந்தனவா



யினும், அரசனாகிய ஒருவனது மனப்போக்கின்படித் தேசக்காரியங்கள் நிருவகிக்கப்பட்டு வந்தன. அரசன் கடவுளம்சம் பெற்றவனென்றும், அவனது ஆக்கினைக்கு மீறாது கீழ்ப்படிந்து நடக்கத் தாம் கடமைப்பட்டவர்களென்றும், ஜனங்கள் நம்பியிருந்தார்கள்.

இவ்வாறு கீழ்த்திசைத் தேசங்களனைத்தும் ஒரே யரசன் வழிப்பட் டொழுகினவையா யிருக்க, ஜப்பான் மட்டும் சொற்பகாலத்தில் ஐரோப்பியர்களைப் போல அரசியற்றவும், சைன்னியம், வர்த்தகம், கைத்தொழில், இன்னும் மற்ற ஜனசமூக அபிவிருத்திக் கவசியமான பல வழிகளில் அவர்களைப் போலவே அனுஷ்டித்து வரவும், நேர்ந்தது எந்த விசேஷக் காரணங்களா லென்று சிந்தித்தல் அவசியமெனலாம். கடவுள் சிருஷ்டியில் எந்தத் தோற்றமாயினும் காரண மின்றி யுண்டாவதில்லை யென்று சர்வசாத்திரானுபவங்களின் சித்தாந்தமா யிருப்பது போல, மனித சமூகங்களது வளர்ச்சியிலும் எந்த மாறுதலாயினும் போதுமான காரணமின்றி யுண்டாவதில்லை. வெகு நூற்றாண்டுகளாக ஜப்பான் தேசமானது உலகின் மற்றத் தேசங்களுடன் எவ்விதச் சம்பந்தமும் பெறாமல் முன்னோரனுஷ்டானங்களை பிரமாணமாக மேற்கொண்டு வாழ்ந்த தேசமே யன்றி, அன்னியரின் சகவாசத்தாற் புதுமைகளை யங்கீகரித்துத் தேர்ச்சி பெறப் போதுமான முகாந்தரங்கள்

பெற்றிருக்கவில்லை. அந்நாட்டிலும் அரசன் தெய்வப் பிறப்பாகக் கருதப்பட்டு அவனிட்டதே சட்டமாக ஜனங்கள் நம்பியிருந்தார்கள். நூற்றுக் கணக்கான சிற்றரசர்கள் தங்கள் நிலை பெற்றுக் குடிகளை யிம்சித்து இறைகொண்டு தீத்தொழில் புரியு மியல்பினரா யிருந்தனர். இந்தியாவி லிருப்பதுபோல ஜாதி வேற்றுமை யில்லையாயினும், அந்தஸ்து வேற்றுமைகளால் வலியோன் எளியோனை வருத்தி நாட்டில் அமைதியும், ஒழுங்கும், ஒற்றுமையு மில்லாமலேயிருந்தன. மகம்மதிய மதத்தைப் போல ஜனங்களுக்குச் சுவாபிமானத்தையாவது தேசாபிமானத்தையாவது போதித்த மதமும் ஜப்பானில் பரவியிருந்ததாகத் தெரியவில்லை.

ஆயினும் ஒரு பெரும் விஷயத்தில் மட்டும் ஜப்பான் தேசமானது அருமையா யதிர்ஷ்டம் பெற்றிருந்தது. அத்தேசத்துக்குச் சரித்திர மேற்பட்ட காலம் முதல் பல்லாயிரம் வருஷக்காலமாக ஒரே ராஜவம்சத்தார் ஆட்சிபுரிந்து வந்தனர். இவ்வளவு காலமும் ஜப்பானின் மீது அன்னியர்கள் படையெடுத்து வந்ததில்லை. அத்தேச விஷய விவகாரங்களில் அன்னியர் தலையிட்டது மில்லை. ஜப்பான் சக்கிரவர்த்தியை யேற்கெனவே நாம் சொல்லி யிருப்பது போலத் தெய்வமெனக் கருதி, அவரையே முதற் றெய்வமாக ஜனங்கள் வணங்கி வந்தார்கள். சக்கிரவர்த்தி தெய்வமாகை



யால் அவர் சரீரம் பூஜார்க்க மென்றும், அவர் மனம் கோணினால் பாபம் சம்பவிக்கு மென்றும், அவர் விருப்பப்படி நடத்தலே பிரஜைகளின் கடமையென்றும், இவ்வாறாக ஜப்பான் தேசத்து ஜனங்களெல்லோரும் தங்கள் சக்கிரவர்த்தியாகிய ஒரே வஸ்துவினிடத்தில் தங்கள் பக்தி, விசுவாசம், அன்பு, ஆசை, முதலிய வுணர்ச்சிகளை நாட்டினவர்களா யிருந்துவந்தார்கள். இந்த ஒரு காரணத்தினாலேயே ஜப்பானியர் ஒருவாறு ஒற்றுமைப்பாடுற்றிருந்தனர். தங்கள் சக்கிரவர்த்திக்கு எவன் சத்துருவோ அவன் தேசத்துக்கும் சத்துருவே, சக்கிரவர்த்தியை மேன்மைப் படுத்துவதே தங்கள் மதமும் தேசாபிமானமும். இப்பேர்ப்பட்ட வுணர்ச்சிக்குப் பிற்காலத்தில் விரோதம் நேரிட்ட போது, உடனே ஜப்பானியர் கண் விழித்துத் தங்கள் தேச நிலைமையை யுணர்ந்து, நேரிட்ட ஆபத்தின் காரணங்களைச் சோதித்துக் களைந்து, தங்கள் சக்கிரவர்த்தியைக் காக்கும் ஆவேசம் பூண்டு தற்கால நிலையைப் பற்றினர். அதிர்ஷ்ட வசமாய் ஜப்பானியருக்கு இந்த வுணர்ச்சி யுண்டான காலத்தில் சக்கிரவர்த்தியா யிருந்தவரும் ராஜ தந்திரச் சூழ்ச்சி பூண்டவராய்த் தம் பிரஜைகளின் க்ஷேமத்தைத் தம் பெருமையை விட உயர்ந்ததாக மன்றிற் கருதிக் காலத்துக் கிசைந்த வேற்றுமைகளை யனுஷ்டிப்பதில் பின்வாங்காதவரா யிருந்தார்.

1868-ம் வருஷத்தில் புது ஏற்பாட்டு எத்தனங்கள் முதிர்ச்சி பெற்று வந்த சமயத்தில் இரண்டொரு

சிற்றரசர்களு மினத்தாரும் தேசாபிவிருத்தியி லபிமானம்வைத்தவர்களாய்ச், சக்கிரவர்த்தியி னதிகாரத்தை ஷோகூன் வகையினர்கள் ஆக்கிரமித்துக் கைப்பற்றச், சக்கிரவர்த்திக் கியாதொரு அதிகாரமும் செல்வாக்கும் இல்லாமற் போனதை யுணர்ந்துகொண்டு, தேச க்ஷேமத்துக்கு இரட்டைப் பாடான ராஜாங்க முறை விரோதமாகையால் எப்படியேனும் நடுவில் வந்த ஷோகூன் இனத்தார்களைத் தொலைத்துப் பூர்வம் போற் சக்கிரவர்த்தியே சர்வ அதிகாரத்தையும் பூணவேண்டுமென்று முயன்று, ஷோகூனுக்கு விரோதமாகக் கிளம்பி அவரை மடித்தனர். அந்தத் தருணத்தில் இவ்வாறு பலத்தவர்களான சில சிற்றரசர்கள் தேசாபிமானிகளாய் முன் வந்ததையும் ஜப்பானின் தற்கால உன்னத நிலைமைக்கு ஒரு காரணமாகச் சொல்லலாம்.

இதுவுமன்றி யின்னொரு காரணமு முண்டு. 1868-ம் வருஷத்துக்குச் சில காலம் முன்னதாகப் பல ஐரோப்பிய ஜாதியார் வியாபார நோக்கங்களை முற்கொண்டு ஜப்பானிற் புகுந்து, ஷோகூன் தயவைச் சம்பாதித்துத், தேசவிரோதமான செய்கைகளைச் செய்து வந்ததாகச் சொன்னோம். இவர்களுடைய மேம்பாடானது வரவர வூறிற்று. ஜப்பான் ராஜாங்கச் சுவதந்திரத்தை யிழந்து விடும் போலத் தோற்றின குறிகளைக் கண்டு ஜப்பானிய தேசாபிமானிகள் வெட்கப்பட்டும் வெருண்டும், தம் தேசமானது ஷோகூன் ஒரு பக்கம் சக்கிரவர்த்தி யொரு பக்கமாக ராஜாங்க வேறுபாட்டால் எப்போதுமே சீரழிந்திருக்கும் பட்சத்தில், மண்



ணாசை பொருளாசைகளா லேவப்பட்டுத் தம் தேசத்திற் பிரவேசித்திருக்கு மன்னியர்கள் தம் இச்சைகளை நிறைவேற்றல் எளிதாகு மென்றும் நிச்சயமென்றும் பயந்தார்கள். ஷோகூன் ஸ்தானத்தையே நீக்கிச் சக்கிரவர்த்தி யொருவரையே தந்தேச ராஜாங்கத்துக்குத் தலைவராக அங்கீகரித்து, அவரும் அவர் மந்திரிகளும் விசாரித்து நடத்தும் முறைமைகளால் ஜப்பான் உட் கலகங்களும் வேற்றுமைகளும் நீங்கித் தேச க்ஷேமத்தி லொருமைப்பட வேண்டுமென்று கருதப்பட்டது. 1868-வருஷத்தில் அவ்வாறே இத்தேசாபிமானிகள் செய்து முடித்தார்கள்.

இந்தியாவில், இவ்வாறு அன்னியர்கள் புகுந்து தேசத்தைச் சின்னாபின்னப்படுத்தித் தங்க ளதிகாரத்தை ஸ்தாபிக்க எத்தனித்த காலத்தில் நமது சிற்றரசர்களும் பிரபுக்களும் ஜப்பானியரைப் போல ஒருங்கு கூடித் தேசத்தின் சுவாதீனத்தைக் காக்கக் கருதினவர்களல்லர். இந்தியாவில் தேசாபிமானிகள் தோன்றினதேயில்லை. மகா விஸ்தாரமான தேசமானபடியாலும், ஜனங்கள் வெவ்வேறு மதங்களாலும் பாஷைகளாலும் ஜாதி வித்தியாசங்களாலும் பிரிக்கப்பட்டிருந்தபடியாலும், ஜப்பானியர் மாதிரி நம்மவர் செய்வ தசாத்திய மாயிற்று. பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்

காரர்களு முட்புகுந்து போட்டிபோட்டு இந்தியாவைக் கட்டிக்கொள்ளப் பார்த்தபோது, நம் தேச ஜனங்கள் என்ன நிலைமையிலிருந்தார்களோ, அந்த நிலைமையில் ஜப்பானியரிருந்திருப்பார்களேயானால் ஜப்பானும் அன்னிய தேசத்தாருக் கிரையாயிருக்கும். அப்படியில்லாமல் ஜப்பானியர் ஐக்கியப்பட்டு முன்னுக்கு வரவேண்டிய புது ஏற்பாடுகளைக் கைக்கொள்ளத் தகுதியான நிலைமையிலிருந்தார்கள். எப்படியென்றால், வெகுகாலமாக ஜப்பான் உட்பிரிவுகளான மாகாணங்களைச் சுவாதீனஸ்தர்களாக ஆண்டுவந்த சிற்றரசர்கள் தங்கள் துர்நடத்தையாலும் மதியின்மையாலும் துர்ப்பலர்களாய், எப்படிச் சக்கிரவர்த்தி ஷோகுன் கைக்கீழடங்கினவராயினரோ, அப்படி அவ்வரசர்களும் தம்மைச் சுற்றியிருந்த சதியாளர்களுக்குட்பட்டனராயினர். இவர்களிடத்தில் மதிப்பற்றுப் போய், இவர்களாற் தேச நன்மைகளையு முண்டாகத் தக்கனவல்லவென ஜனங்கள் நம்பியிருந்தார்கள். ஆகையா லிவர்களை யசட்டைசெய்து ஜனங்களுட் டலைமை வகித்த தலைவர்கள் தங்கள் விருப்பப்படி செய்தல் சாத்தியமாயிற்று. இந்தச் சிற்றரசர்கள் நம் தேச ஜமீன்தார்களைப் போலவே கடனில் முழுகி, கடன் கொடுத்தவர்கள் மிக்க பொருள் சேர்க்க, இவர்களுக்கே நாட்டிற் சகல செல்வாக்கும் நடந்து வந்தது. தேசத்திற் புது ஏற்பாடுகள் நடந்தேற வேண்டுமென்ற எண்ணம் ஜனித்தபோது அவ்வெண்ணத்தை நிறைவேற்ற இந்தப் பொருள் படைத்தோர் சாமர்த்தியம் பெற்றனரே யன்றிச், சிற்



றரசர்களால் எக்காரியமும் நடத்த முடியவில்லை, எதையும் தடுக்கவும் அவர்கள் சக்தி பெற்றிருக்கவில்லை. நமது தேசத்துப் பூர்வ வழக்கத்தைப்போல ஜப்பானிலும் வர்த்தகம், தொழில்கள் செய்யும் வகுப்பினர் ஜன சமுதாயத்தில் மதிப்புப் பெற்றவர்களல்லராயினும், சிற்றரசர்களழிந்து சீர் கெட்டுப் போன்படியால், அவர்களுடைய பொருள் வர்த்தகர்கள் பெட்டியிற் பெருகிப் பொது நன்மைக்குபயோகப்படலாயிற்று. இவ்வுலகத்திற் பொருளுடையோரே பெரியோரானபடியால், இளப்பமாக நினைக்கப்பட்ட வியாபாரிகள் முதலாயினோர் பொருளுடைமையால் மேன்பாடடைந்தனர். பொருளிலும் அந்தஸ்திலும் மேன்பாடடையவே கல்வியிலும் அறிவிலும் மேன்பாடுற்றனர். அன்றியும் இவர்களுக்குக் கீழ்ப்பட்ட சாமானிய ஜனங்களும் பூர்வீக அறிவின்மையை நீக்கி யறிவுடையோராயினர். அச்சமயத்தில் ஜப்பான் தேசத்தில் ஜனங்களிற் பெரும்பாலார் தம் தேச வர்த்தமானங்களைக் கவனித் தறியவும், தேசத்தின் லாப நஷ்டங்களை யுணர்ந்து அவைகளை யெடுத்துரைக்கவும் சக்தி பெற்றனராயினர். தம் தேசத்தின் நிலைமை வரவர மெலிந்து வருகிறதென் றுணர்ந்தும், அப்படி வருவதைத் தடுத்து நன்னிலையை காட்ட வகையறியாதவர்களாய் ஜனங்கள் மனதிற் குழப்பமுண்டாய் வந்தது. இர்

நிலையில் ஐரோப்பியர்கள் தோன்றினர். தோன்றவே உலர்ந்த விறகில் நெருப்பு வைத்தது போல, ஜனங்களின் தேசாபிமானத்தா லுண்டாகி மங்கியிருந்த பேரவாவானது வெளிப்பட்டுப் பெரு நெருப்பாய்ப் பரவித் தேசம் முழுமையும் அடங்காக் கொந்தளிப்புண்டாகி, ஐரோப்பியர்களைக் கொலைசெய்வதும், ஷோகூனை விலக்குவதும், ஷோகூன் கக்ஷியை ஆதரித்தவர்களைத் தொலைப்பதும், சக்கிரவர்த்தியை விசேஷமாயுபசரிப்பதுமான குறிகள் விளங்கின. ஜப்பான் இந்தியாவைவிட விஸ்தீரணத்திற் குறுகி, அதில் ஜனத்தொகையும் மிதமாயிருந்ததாலும், சுவராஜ்ஜியப் பேறு பெற்றிருந்ததாலும் அபிமானிகள் கோரின பலம் பக்குவ காலத்திற் கைகூடலாயிற்று. ஜப்பானியருக் குண்டாயிருந்த அனுகூலங்கள் இந்தியராகிய நமக் கேற்பட்டா லல்லவோ அவர்களுடைய நிலைமை நமக்குஞ் சித்திக்கக்கூடும்? ஜப்பானியர் தற்காலத்தில், இங்கிலாந்து, ருஷியா, ஜர்மனி முதலிய அன்னிய ராஜ்ஜியங்களால் மதிக்கப்பட்டு அப்பேர்ப்பட்ட தேசங்களுக்குச் சரிசமானமாக அங்கீகரிக்கப்பட்டுப் பெருவாழ்வுற்றது முப்பத்தைந்து வருஷங்களுக்குள்ளாகவே சாத்தியமானதுபோல வேறெந்தேசச் சரித்திரத்திலுஞ் சாத்தியமானதாகப் புலப்படவில்லை.

# CHAPTER X.

## பத்தாம் அதிகாரம்.

ஜப்பானில் சக்கிரவர்த்தியின் ஸ்தானமும், அதன் அதிகாரம், மகிமை, பெருமையும்—ஜப்பானியருக்குச் சக்கிரவர்த்தி பாற் பக்தி, விசுவாசம், அபிமானமும்.

ஜப்பானில் சக்கிரவர்த்தியின் பதவி மகோன்னதமானது. ஜப்பானியரின் மதக் கோட்பாடுகளில் ராஜ விசுவாசமானது அதிக முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது அன்றிக், கல்விச்சாலைகள் தோறும் மாணாக்கர்கள் குறித்த வேலைகளில் சக்கிரவர்த்தி சக்கிரவர்த்தினியாரி னுருவப்படங்களை வணங்குவது மோர் பாடமாகக் கருதப்பட்டிருக்கின்றது. தொன்று தொட்டு ஜப்பானியர் தெய்வத்தைப் போலவே சக்கிரவர்த்தியையும் பக்தியுடன் வணங்கிவந்திருக்கிறார்கள். நாட்டில் வழங்கும் சட்டங்கள் பலவற்றிலும் சக்கிரவர்த்தியின் ஆக்கினையே மிகவும் கௌரவமுடையதாகின்றது. சக்கிரவர்த்தியும் அவரின் அரண்மனை உத்தியோகஸ்தர்களும் ஜனங்களோடு கலக்காமலொதுங்கி வாழ்ந்திருப்பதே இதன் முக்கிய

காரணமாகுமெனக் கருதப்படுகின்றது. இரு வருடங்களுக்கு முன் சில விரியை யுயர்த்த வென்று பிரபுக்கள் சபையில் ஓர் மசோதா கொண்டுவரப்பட்டதில் பெரும்பான்மையோர் மசோதாவை யங்கீகரிக்காது வெறுத்துப்பேசியும் சக்கிரவர்த்தியானவர் இந்த மசோதாவை யங்கீகரிக்கப் போகிறாரென்று எதிர்பார்த்திருப்பதாகச் சமாசார மெட்டிய வுடனே, பிரபுக்க ளெல்லோரு மொருங்கே அதைச் சட்டமாக்கி முடித்தார்களென்றால், சக்கிரவர்த்தியிடம் ஜனங்கள் கொண்டிருக்கும் அபிமானத்தை வேறெடுத் துரைக்கவும் வேண்டுமோ? சட்ட நிருமாண சபையும் இன்னும் பற்பல ஏற்பாடுகளும் மற்றத் தேசங்களைப் போலவே ஜப்பானிலும் 1889-ம் வருஷத்தி லேற்படுத்தப்பட்ட பிறகும், சக்கிரவர்த்தியின் அபிப்பிராயமே அனைத்து நிருவாகச் சபைகளெல்லாவற்றினுடைய தீர்மானத்துக்கும் மேலெனக்கொள்ளப்படல் நியாய விரோதமாகத் தோன்றக் கூடியதாயினும், அங்ஙனம் மேன்மை பெற்ற சக்கிரவர்த்தி சிறந்த குணவானாக விருக்க நேரிட்டவிடத்து, இதனால் யாது தீங்கு விளையக் கூடியதாகும்? இங்ஙனம் சக்கிரவர்த்தியிடம் ஜனங்கள் கொண்ட சிறந்த அன்பே தேசவளப்பத்துக் காதாரமா யிருக்கிறதென்று சொல்லப்படுகின்றது. சக்கிரவர்த்திக்கு விரோதமா யெப்பொழுதும் யாரும் பேசுவதே யில்லை. ஜனங்



கள் அவரிடம் பக்தியும் விசுவாசமும் பெருகப் பெற்றிருக்கின்றார்கள். நாக்குழறல், உடல், நடுக்கம் முதலியவின்றி அவருடன் சந்தித்துப் பேசத்துணிவோர் மூன்று, அல்லது நான்கு ஜப்பானியர்களே. வருஷத்தில் நவம்பர் மாதம் மூன்றாந் தேதி தோறும் சக்கிரவர்த்தி செய்யும் தோட்டக்கச்சேரிச் சபையிற் கூடும் பெரும்பான்மையோர் சக்கிரவர்த்தியின் சிங்காதன மிட்டிருந்த விடத்திலுள்ள மண்ணை வாரிக்கொண்டு போய் வைத்துக்கொண்டு ஜனங்களுக்கு எந்த வியாதிவந்தாலும் நன் மருந்தாய்க் கொடுத்து வருவார்களாம். இதுவுமன்றி ஜனங்களுக்கு இந்தத் தோட்டக்கச்சேரியில் சக்கிரவர்த்தி யளித்த சிற்றுண்டிகளி லெஞ்சியவற்றைக் கொண்டுசென்று தத்தம் வீடுகளில் பூஜாக்கிருகங்களில் வைத்துப் பிரசாதமாகப் புசித்து வருவார்களாம். சக்கிரவர்த்தி யடிக்கடி வெளியே சவாரி போகாவிடினும் எப்பொழுதாவது வெளியேபோக நேர்ந்தால் "சக்கிரவர்த்தியின் சவாரித்தோழர்" என்ற கௌரவப்பட்டம் பெற்ற இரண்டு முதியவர்களிலொருவரே யெதிராசனத்திலிருக்கலா மென்றாலும், அவரும் சக்கிரவர்த்தியைக் கண்ணெடுத்துப் பாராது தலைகுனிந்திருப்பாராம்.

சக்கிரவர்த்தியாலுள்ள பக்தி விசுவாசமே ஜனங்கள் சக்கிரவர்த்தினியாலு முடையவராயினும், சக்கி[illegible] வர், [illegible] யினி வரும் சக்கிரவர்த்தியின் தா[illegible]யாத[illegible]

பற்றித் தெய்வத் தன்மையினராகக் கொண்டாடப்படுகிறார். சித்திரவேலை, சங்கீதம் முதலிய சாஸ்திர வாராய்ச்சிச் சாலைகளுக்கு அடிக்கடி சென்று வருவதுண்டு. ஜப்பான் இளவரசர் சென்ற சில வருடங்களாகச் சரீர அசௌக்கிய மடைந்திருந்து இப்போது திடகாத்திரராகித் தேசத்தெல்லாரு மொருங்கே களித்துக் கொண்டாட வோர் நன்மகவைப் பெற்றார். இவ்விளங்குமரர் பிறந்து ஒரு மாதஞ் செல்லவே, நாட்டு வழக்கத்திற் கிணங்க அரண்மனை யுத்தியோகஸ்தர்களி லொருவர் இச்சிறுவரைத் தம் பாட்டனாரா யிப்பொழு தரசாண்டுவருஞ் சக்கிரவர்த்தியா லெடுத்துச் சென்று காண்பித்தபோது, அவ்வுத்தியோகஸ்தர் இனி யரசாள விருக்கும் சிறுவர்மேல் சுவாசம் விடக் கூடாதென்று தம் வாயைத் துணியால் மூடிக் கட்டிக்கொண் டிருந்தனராம்.

சக்கிரவர்த்தியே நாட்டிலுள்ள ராணுவங்கள் பலவற்றிற்கும் தலைமை வகித்தவராவர். இவர் தமக்குக் கீழ் பல ராணுவங்களுக்கும் வெவ்வேறு தலைவர்களை நியமித்து ராணுவ ஒழுங்குகளை யெல்லாம் தாமே நேரிற் செய்து வருவார்.

துரைத்தனத்தாரின் அதிகார பலமும் சக்கிரவர்த்தியின் அதிகார பலமும் இத்தன்மையவென வரையறுக்கப்பட் டிருப்பினும், துரைத்தனத்தார் பலவருடங்களாகப் பாடுபட்டுச் செய்து முடிக்கு மேற்



பாடுகள் தமது ஒரு பேச்சால் முற்றிலும் மாறுபடும்படியான செல்வாக்குப் பெற்றுத், தேர்ந்த மதியூகிகளான ராஜ தந்திரிகளும் முதியோர்களிடம் சிறந்த மதிப்புக் கொண்ட சக்கிரவர்த்தியின் தயவாலன்றி, நிபுணரான விளையோர் மதிப்புப் பெறுவதில்லை. சமீபகாலத்தில் ராஜ தந்திர நிபுணரிலொருவரான மிஸ்டர் ஹோஷி இறக்கப், பல தடவை ஜப்பான் மந்திரியா யிருந்து மேல் நாடெங்கும் நன்மதிப் படைந்திருந்திருக்கும் மார்க்குவிஸ் ஐடோ வென்பவர் இறந்தவரின் பொருட்டு உபசாரத்துக்கு ஏகி அதே யுடுப்புடன் ராஜ சமூகம் சென்றனராம். அப்படிச் சென்றதைப் பூபாலனிடம் அபசாரம்காட்டியதாக்கருதி, அவரை யேன் குத்திக் கொன்றுவிடல்கூடா தென்று பல பத்திரிகைகள் ஜனங்களைத் தூண்டின வென்றால், ராஜ சமூகத்தை ஜனங்கள் எங்ஙனம் கருதுகிறார்களென்றும் சக்கிரவத்தியின் க்ஷேமத்தில் ஜனங்களுக் கிருக்கும் கவலையும் நன்கு புலப்படுமன்றோ? இவ்வித எண்ண முண்டாகத் தக்க போதனைகள் பாடசாலைகளிற் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வருகின்றனவாம். சக்கிரவர்த்தி கல்வியைப்பற்றிச் செய்திருப்ப தோர் பிரசங்கத்தைப் பாடசாலை ஓய்வு நாட்களி லெல்லாம் சிறுவர்களுக்குப் படித்துக் காட்டி வருவதால், அவர்கள் சிறந்த நல்லொழுக்கங்களை யடைந்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. இப்பிரசங்கத்திற் சிறுவர்கள் கல்வி கற்றுத் தேர்ந்து நல்லொ

ழுக்கங்களை யுடைந்த ராஜபக்தி, பரஸ்பர அன்னி யோன்னியம், முதலிய சிறந்த குணங்க ளேற்று முதிர்ந்து வருதல் நாட்டிற்குப் பொதுவாய்ப் பல நன்மைகளை யளிப்பது மன்றி, ஜனங்களையும் மேன் மைப் படுத்துகிறதென்ற விஷயம் வற்புறுத்தப்பட் டிருக்கிறது.

“அரசன் ஆயிரங்காலம் வாழ்” வென்றர்த்தங் கொண்ட பான்ஸே (Bånzai) என்று ஜனங்கள் சக்கி ரவர்த்தியைக் காணும்போதும் வேறு பலப் பொதுக் கூட்டங்கள் கூடிக் கலையும்போதும் கூச்சலிட்டுக் களிப் பார்களாம். ஓராயிரம் வருஷங்களி லடையக்கூடிய பல நன்மைக ளெல்லாம் சென்ற பதினைந்து வருஷங்களுக் குள் கிடைக்கப்பெற்ற இந் நாட்டார் “அரசர் ஆயிரங் காலம் வாழ்” வென்று களிகூர்வ தியல்பே யாகும்.



# CHAPTER XI

## பதினொன்றாம் அதிகாரம்

*ஷோகன் அந்தஸ்து, அதன் தன்மை, யுற்பத்தி வரலாறும், முடிவும்—ஜப்பானியரின் தேசாபிமானம்.*

ஜப்பானிய சக்கிரவர்த்திகள் இந்துக்களது பூர் வகாலத்துச் சூரிய வமிச அரசர்களைப்போலத் தெய் வப் பிறப்பினர்களாக ஜனங்களால் மதிக்கப் பட்டன ரென்று ஏற்கெனவே சொல்லியிருக்கி றோம். இந்தச் சக்கிரவர்த்தி வமிசமானது ஆதி யில் கிறிஸ்து பிறக்க 660-வருஷங்களுக்கு முன் னால், அதாவது 2,563 வருஷங்களுக்கு முன்னால், ஸ்தாபிக்கப்பட்டு, அப்படி ஸ்தாபித்தவர் முதல் இப்போது கீர்த்தியுடன் ஜப்பானை யாண்டுவரும் சக்கிரவர்த்தி ஈறாக, 123-சக்கிரவர்த்திகள் ஒரே வரி சையாய் நடுவில் ஸந்ததி அறுமல் ஆண்டுவந்திருக்கி றார்கள். இப்படிச் சுமார் 2,600 வருஷகாலம் ஒரே வமிச பரம்பரையினர் இடையூறின்றி எத்தேசத்திலும் அரசு புரிந்துவந்ததாகத் தெரியவில்லை. இந்த விஷ

யத்தில் ஜப்பான் உலகத்தில் எத்தேசத்தையும் விடப் பாக்கியம் பெற்றதாகவே மதிக்கத்தக்கது. இதற்கும் இந்தியாவிற்கும் எவ்வளவு பேதமென்பதை நந் தேசத்துச் சரித்திரம் அறிந்தோருக்கு எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. இந்த ஒரு முக்கியமான விஷயத்தில் ஜப்பானியருக்கும் நமக்கும் நேரிட்ட வேற்றுமையினாலேயே ஜப்பானியரது சரித்திரத்திற்கும் நமது சரித்திரத்திற்கும் உள்ள தாரதம்மியத்தை யறிந்து கொள்ளலாம். இந்தியாவில் ஒரே மத்தியஸ்தானத்தில் ஒரே ராஜவம்சத்தினர் தேசம் முழுமையும் தமது ஆட்சியுள் அடக்கி, மத்தியில் கலகம் குழப்பம் முதலான ஆபத்துக்களால் வம்சமற்றுப் போகாதரசியற்றிலாமல், அடிக்கடி ராஜவம்சங்கள் அழிந்து வெவ்வேறு வம்சத்தினர் மாறி மாறி ஆட்சிசெய்து வந்தபடியால், அரசர்களுக்கும் பிரஜைகளுக்கும் அன்னியோன்னிய முண்டாகாமல் இருதிறத்தாருக்கும் தேசத்தின் ஸ்வாதீனத்திலும் க்ஷேமத்திலும் கவலை பிறக்காமற் போயிற்று. ஜப்பானிலோ அநாதிகாலந்தொட்டு ஒரே குலத்தில் உதித்த மன்னர்கள் பிரஜைகளால் தெய்வாம்சமென்று மதிக்கப்பட்டு வந்தபடியால், மன்னனும் தேசமும் ஒன்று என்ற கருத்து குடிகள் மனதில் ஊன்றி, மன்னனுக்கேனும் தேசத்திற்கேனும் நேரிடும் ஆபத்துக்களும் நிந்தைகளும் அக்குடிகள் தொழும் தெய்வத்திற்கே நேரிட்டனபோல் கருதப்பட்டுவர, தேசாபிமானம்



என்கிற மகா மேன்மையான குணமானது ஜப்பானியர் பிறப்பிலேயே அமைந்ததாயிற்று.

ஜப்பானிய சக்கிரவர்த்திகளின் பூர்வகால சரித்திரம் இந்துக்களின் பூர்வகால சரித்திரத்தைப்போலவே தெளிவாய் விளங்காமல் கட்டுக்கதைகளில் மறைந்து கிடக்கின்றது. முன்னொரு அதிகாரத்திற் சொல்லியபடி, சக்கிரவர்த்தியைச் சுற்றியிருந்த சாமர்த்தியசாலிகள் அவரது அதிகாரத்தைப் பிடுங்கித் தாங்களே செலுத்தி வந்ததாகத் தெரிகின்றது. அவர்களே பிற்காலத்தில் ஷோகுன் என்ற பட்டத்தைப் பெற்றனர். மிலேச்சர்களை அடக்கும் பெரும் போர்வீரர் என்று பொருள்படும் அந்தப் பட்டத்தைப் பெற்றவர்களே 1868-ம் வருஷம் வரையில் ஜப்பானை யுண்மையாயாண்டுவந்த தலைவராக இருந்துவந்தனர். இப்படி சுமார் 300-வருஷகாலம் ஜப்பானை யாண்டுவந்தபடியால், அவர்கள் காலத்தில் ஜப்பானுக்கு நேரிட்ட நன்மை தீமைகளைச் சுருக்கமாகத் திரட்டிச் சொல்லுதல் நலமென்று நினைத்து இந்த அதிகாரத்தில் அவ்வாறே சொல்லுவோம்.

சக்கிரவர்த்தியை யொதுக்கி ஷோகுன் ராஜாங்க அதிகாரத்தைச் செலுத்திவந்தாலும், ஷோகுனும் தம் மதிகாரத்தை வில்லங்கமின்றிச் செலுத்தப் பாக்கியம் பெறவில்லை. அவருக்கு விரோதமாய் அப்போதப்போது பலாட்டியர்கள் கிளம்பித், தேசத்தில் அடிக்கடி தலைவரோடு தலைவர் போர்செய்து பொதுவாய்க் குழப்பத்தை யுண்டுபண்ணினர். பௌத்தமத

பரிபாலகரா யிருந்த ஷோகூனுக்கு அந்த மத பீடாதிபர்களின் ஆதரவு அற்றுமாறு நோபுநாகா என்பவன் கலகம் செய்து, ஷோகூன் அதிகாரத்தைப்பற்றிக் கொண்டு, கிரஸ்தவப் பாதிரிகள் புகுந்து பரவச்செய்த கிரஸ்தவ மதத்தை யாதரித்தான். அவனுக் கடுத்தாற்போல் ஷோகூன் ஆஸனம் ஏறின ஹிதயோஷி கிரஸ்தவர்களை யாதரிப்பதால் தன் அதிகாரம் பலப்படுமென்ற எண்ணத்தைவிட்டு, அவர்களைப் பலவிதமாய் இம்சை செய்து வேரறுத்தனன். ஹிதயோஷிக்குப் பிறகு அதிகாரம் வகித்த டோகுகவா ஐயேசுவும் அவன் சந்ததியாருமே பிற்காலத்தில் ஷோகூன் ஸ்தானமே நின்றுபோன வரையில் 250-வருஷம் சக்கிரவர்த்திக்குப் பதிலாகத் தேசபாலர்களாய் இருந்தனர்.

ஐயேசுவும் அவனுடைய பேரன் ஐயமிச்சுவும் மகாமதியூகிக ளானபடியால், தேசத்தில் இங்குமங்கும் பல விடங்களில் ஸ்தாபனம் பெற்றிருந்த சிற்றரசர்களின் வலிமையைத் தொலைத்தாலன்றி, அல்லது அவற்றைத் தக்கபடி அடக்கிவைத்தாலன்றித், தங்கள் வமிசத்திற்கே பிற்காலத்தில் கேடு நேரிடுமென்று நினைத்துக்கொண்டனர். கியோடோவில் வீற்றிருந்த சக்கிரவர்த்தியைத் தாமே வசப்படுத்தி அவர் தங்கள் வமிசத்தாருக்கு விரோதிகளான சிற்றரசர்கள் கையி லகப்படாமல் காத்து, ஏகாதிபத்திய நிருவாகமனைத்தையும் தாங்களே நடுநாயகராகச் செலுத்திவர



வேண்டுமென்றும் நிச்சயித்தனர். அப்படி நிச்சயித்த முறையைக் குறைவற ஜப்பானுக்கும் உலகத்தில் மற்ற எத்தேசத்துக்கும் போக்குவரத்துச் சம்பந்தம் கூடாதென்று தடுத்து, ஜப்பானில் அன்னியர் வசித்தலும் தகாதென்றும், ஜப்பானிய னெவனேனும் வெளித்தேசம் சென்றால் அவனுக்கு மரணதண்டனை யென்றும் விதித்து, கிரஸ்துமதத்தை யடியோடு களைந்து பௌத்தமதத்தை யாதரித்து, ஷோகூன் வமிசத்தாரின் தனித்தலைமைக்கு எக்காலமும் தீங்கு நேரிடாதபடி சூழ்ச்சி செய்தனர். ஐயேசு டோகியோ நகரத்தைத் தமக்கு முக்கிய ஸ்தானமாக நிருமாணித்து, பூபதிகளான மேற்குலத்தோர் தம் ஸ்தானத்திலேயே வருஷம் மாறி வருஷம் வசிக்கவேண்டுமென்றும், அப்படி வசிக்காத வருஷத்தில் அவர்களுடைய சன்னடத்தைக்குத்தரவாதமாக அவர்கள் மனைவி மக்களை டோகியோவில் விட்டுவைக்க வேண்டுமென்றும் கட்டளை யிட்டிருந்ததால், இம் மேற்குலத்தார் டோகியோவில் தங்களுக்கு வாச யோக்கியமான மாளிகைகள் கட்டியும் மற்ற விதங்களாய்த் தங்கள் பொருளை அங்கேயே செலவு செய்தும் வர, டோகியோ நகரமானது சக்கிரவர்த்தியின் வாசஸ்தானமாகிய கியோடோவை மீறிச் சிறப்பும் வளமும் மிகச் சோபிக்கலாயிற்று.

ஆயினும், ஷோகூன் சக்கிரவர்த்திக்கு இரண்டாவர், சக்கிரவர்த்தி பேராலேயே ஷோகூன் அதிகாரம் செல்லல் வேண்டும் என்ற கற்பனை நிற்க

யில்லை; சக்கிரவர்த்தியே சகல அதிகாரத்திற்கும் சட்டதிட்டங்களுக்கும், அந்தஸ்து, வெகுமானம் இவைகளுக்கும் மூல பூதன் என்ற அநாதியான நம்பிக்கையும் தளரவில்லை; தேசத்திற்கு ஷோகன் பாலகனாயினும், சக்கிரவர்த்தியின் தெய்வாமிசத்திற்கு எவ்வித ஊறணியுமில்லை; அவரே நியாயமான சக்கிரவர்த்தி, அவர் அந்தஸ்துக்கு எதிரில்லை. சக்கிரவர்த்தியைச் சுற்றியிருந்த மேன்மக்கள் சக்கிரவர்த்தியைப்போல வலியற்றவரா யிருந்தும், சக்கிரவர்த்தி வமிசத்துடன் அவர்களுக்கு உதிர சம்பந்த முண்டென்று கூறி, அவர்கள் பெருமைக்கும் செல்வத்திற்கும் சக்கிரவர்த்தியையே யெதிர்பார்த்தவர்களாக விருந்தபடியால், சிற்றரசர்க ளவர்களையும்விட இம் மேன்மக்களே யுயர்ந்தவர்களாக ஜனங்கள் தங்கள் மனதில் நினைப்பா ராயினர்.

ஜப்பான் தேசம் அரச வலியில் முற்பட்டுப் பெருமை யுறுவதற்கு உள்நாட்டில் சுவாதீன ஆட்சி இயற்றின வலியாளர்களான பூபதிகள் முக்கியமான இடையூறாக நின்றனரென்பது நாம் கீழே சொன்ன வரலாறுகளால் விளங்கி யிருக்கக்கூடும். இந்தச் சிற்றரசர்களில் 260-பேர் இருந்தனர். ஆதியில் அப்போதப்போது போர் நடத்தப்பட்டுப் புதியநாடுகள் சேர்க்கப்படுகையில், அப்படிச் சேர்க்கப்பட்ட நாடுகள் இச் சிற்றரசர்களுக்குள் பாகிக்கப்பட, அவ்வாறு பாகம்



பெற்றவர்கள் சக்கிரவர்த்திக்குவேண்டியபோது சைனியவுதவிசெய்யக் கடமைப்பட்டிருந்தனரென்று முன்பு சொல்லியுள்ளோம். இவ்வாறு ஷோகன் ஒருவர்மட்டும் ஏகாதிபத்தியப் பரப்பில் மூன்றிலொரு பாகத்தைத் தம் சொந்தச் சொத்தாகச் சேர்த்துநிருவகித்துவந்தனர். மிகுந்ததைப் பங்குகளாகப் பெற்ற குறு மன்னர்கள் தங்களுக் குட்பட்டவர்களாக மற்றவர்களைப் பெரும் ஜமீன்களைக்கொடுத்து நிலைப்படுத்தினர். இவ்வாறு படிப்படியா யமைக்கப்பட்ட தலைவர்கள் பெருஞ்சேனைகளை வைத்துக்காக்கவேண்டியவர்களாயினர். மேற் குறித்த 260-தலைவர்களில் ஒவ்வொருவரும் சுவாதீன அதிகாரம் பெற்றவரா யிருந்ததுமன்றி, அவர்களிட மிருந்த சாமுராய் என்கிற க்ஷத்திரியத் தொழில்புரிவோர், தங்களை ரக்ஷிக்கும் தலைவர்க்கே யடங்கினவர்களாய், அத்தலைவரின் பொருட்டு எந்த நிமிஷத்திலேனும் தங்கள் உயிரைத் துறக்கவும் போரில் மடியவும் அஞ்சாதவர்களா யிருந்தபடியால், அந்தத் தலைவர்களின் வலிமை சுளுவாக அடக்கத் தக்கதாகவில்லை. இந்தச் சாமுராய்கள் பிற்காலத்தில் ஜப்பான் சரித்திரத்தில் செய்த பெருஞ் செய்கைகளைக் குறிப்பிட்டிருக்கிறோம். தற்காலத்தில் ஜப்பானுக்குப் பெரும்பேர் கிடைக்கச்செய்த பேர்போன ராஜதந்திரிகள் இந்த வகுப்பினைச் சேர்ந்தவர்கள்.

டொக்குகாவா வமிசத்தினர் 250-வருஷம் ஷோகன் அதிகாரத்தைச் செலுத்திவந்த காலத்தில், ஜப்

பானில் ஒழுக்கும அமெரிக்கையும் குடிகொண்டிருந்தன. அவர்கள் குடும்பத்துச் சொத்து அளவற்றதாயிற்று. அவர்களுடைய சைன்னிய பலமோ மற்றெந்தச் சிற்றரசர்களுக்குமில்லை. அச்சிற்றரசர்களுள் மிக்க சொத்தும் பலமுமுள்ளவர்கள் ஷோகூன் வமிசத்தில் சம்பந்தம் செய்தவர்களா யிருந்தார்கள். ஆகையால் ஷோகூனின் அதிகாரம் ஜப்பானின் எந்த மூலை முடுக்கிலும் தடையின்றிச் செல்லுவதாயிற்று. ஜனங்களுள் சாமான்னியர்களும் கீழ் வகுப்பினரும் சுகமாகவே வாழ்ந்து வந்தனர். சக்கிரவர்த்தி யொருவர் தங்கள் தேசத்தில் மூலதெய்வம்போல் எல்லோராலும் பூசிக்கப்பட்டு எல்லாருக்கும் மேலாக வீற்றிருக்கின்றனரென்று ஜனங்கள் மனதில் மருளுணர்ச்சி இருந்தபோதிலும், ஷோகூனே அனுபோகத்தில் அவர்களது முன்னறிதெய்வமாக விளங்கிவந்தனர். இப்படி விளங்கிவந்த ஷோகூன்களின் காலம் எக்காரணங்களால் எவ்வாறு முடிவுபெற்றதென்று ஏற்கெனவே சொல்லி யிருக்கிறோம். எவ்வளவு பெருமையுடன் ஷோகூன்கள் ராஜ்யம் நடத்திவந்தாலும், அவர்கள் உண்மையாக அப்படி நடத்தும் பாத்தியத்தைத் துராகிருதத்தால் கட்டிக்கொண்டார்கள் என்ற எண்ணம் ஜனங்கள் மனதை விட்டு முற்றிலும் நீங்கியதன்று.

ஐயேயசுவினுடைய பேரன் காலத்தில் ஜப்பானில் எப்பக்கத்திலும் வித்துவான்களும் ஆழ்ந்த நூ



ணறிவினரும் ஷோகூன் மாகாணத்தில் வந்து வசித்தனர். அவர்களால் ஜப்பானிய சரித்திரமொன்று வரையப்பட்டு அதில் சக்கிரவர்த்தி ஒருவரே உண்மையான அரசனென்றும், ஷோகூன் அவரது சைன்னிய பலத்தால் அக்கிரமமாக ஆட்சியைக் கைப்பற்றி யிருந்தும் மற்றச் சிற்றரசர்களைப்போல அவர் ஒருவரே தவிர அவர்களைவிட உயர்ந்தவரல்லரென்றும், இந்த நூலில் சொல்லப்பட்டிருந்தது. இந்நூலானது அப்போது அச்சிடப்படவில்லையாயினும் கையெழுத்துப் பிரதியாகவே மதிநுட்பர்கள் ஆவலுடன் படித்தனரென்றே நினைக்கவேண்டும். அதேமாதிரியாக 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மற்றோர் நூலும் வரைந்து முடிக்கப்பெற்று, அதிலும் ஷோகூன் அந்தஸ்துக்கு யாதொரு நியாயமான ஆதாரமும் இல்லையென்று காணப்பட்டிருந்தது. இந்த இரண்டு நூல்களும் புத்திமான்கள் பலரால் படிக்கப்பட்டபடியால் சக்கிரவர்த்தியின் அதிகாரத்திற்குப் போட்டியாக மேம்பாட்டை நோக்கின ஷோகூன் அந்தஸ்தினிடத்தும் மாகாணத்தலைவர்களான குறுமன்னர்களிடத்தும் விரோதமான உணர்ச்சி பொதுவாய் ஜனிக்கலாயிற்று. இவ்வாறு கல்விமான்கள் ஜப்பான் ராஜாங்க அதிகார மூலாதாரங்களைப் பரிசோதித்து வந்த காலத்தில், ஜப்பானின் பூர்வ மதமாகிய ஷின்டோ மதம்—(அதாவது ஜப்பான் புண்ணிய பூமியானது தேவதைகளால் நிருமாணிக்கப்பட்டது; அந்தத் தேவதைகளின் வமிசத்தில் உற்பவித்

தவர் சக்கிரவர்த்தியே யென்று போதித்த மதம்)—கொஞ்ச காலம் அடங்கியிருந்து மறுபடியும் தலையெடுக்க ஆரம்பித்தது.

இவ்வாறு சரித்திர பரிசீலனையும் மதாபிமானமும் ராஜரீக நியாயங்களுடன் கலந்து ஷோகூன் அதிகாரத்திற்கு ஆபத்தை விளைவித்தன. அவர்பேரில் பொறாமையும் விரோதமும் பாராட்டிவந்த சிற்றரசர்கள் ஷோகூனைச் சைன்னிய பலத்தாலாவது அடக்க வேண்டுமென்று நிச்சயித்து சமயம் நேரிடவேண்டியதை யெதிர்பார்த்திருந்தனர். அப்பேர்ப்பட்ட சமயமானது 1854-ம் வருஷத்தில் அன்னியர்கள் கடற்கரையிற் றோன்றித் தங்களுக்குத் தேசத்துட் பிரவேசிக்கச் சுதந்தரம் வேண்டுமென்று கேட்டு அப்படிக் கிடைக்காவிட்டால் ஷோகூன் எதிர்க்கமுடியாத படைப் பலத்தைக் கொண்டு தாங்கள் கோரினதை நிறைவேற்றுவதாகப் பயமுறுத்தினபோது, நேரிட்டது. அன்னியர் படைப்பலத்தை ஷோகூன் தம் படைகளைக் கொண்டு வெல்லச் சக்தியற்றவரா யிருந்தபடியால் அன்னியர்கள் அடாவழியாய்க் கேட்டதற்கு இணங்கினார். அப்படி இணங்கவே தேசமெல்லாம் கொல்லென ஆரவாரம் கிளம்பி, ஜப்பான் புண்ணிய பூமியில் அன்னிய மிலேச்சர்கள் காலடி வைத்து அதன் பெருமை அழியப்பார்த்திருந்தா ரென்று ஷோகூன் பேரில் பொதுவான மனக்கொதிப்பு உண்டாயிற்று. இந்த மிலேச்சர்களை வெளிக்கிளப்பி இழந்த பெரு



மையைத் தேசத்திற்கு மறுபடியுமுண்டாக்கிச் சக்கிரவர்த்தியையே ஏகநாயகராக நிலைநிறுத்த வேண்டுமென்ற உத்தேசத்துடன் போர்தொடங்கத் தீர்மானித்த சில பலவான்கள் ஒரு கக்ஷியாய் முற்பட்டனர். தொடங்கின போர் முடிந்தபொழுது அந்தக் கக்ஷியாரின் உத்தேசமும் முற்றிலும் நிறைவேறவே, ஷோகூன் ஸ்தானமானது கடைசியாக நீக்கப்பட்டது.

நீக்கப்பட்டாலும், சக்கிரவர்த்தியின் நிலைமை எப்போதும் இருந்தபடி இருக்கும் பக்ஷத்தில் ஜப்பானுக்கு விளைந்த பொது ஆபத்தைக் கடக்கச் சக்கிரவர்த்திக்குத் தக்க பலங்கள் இல்லையென்று தேசாபிமானிகள் கவலைப்பட்டனர். ஆயினும் ஷோகூனுக்கு விரோதமாகக் கொடியேற்றினவர்கள் தங்கள் சொந்த நன்மையைப் பொருட்டாக நினைக்காமல் தேசத்துப் பெருமையையே நோக்கமாகக் கொண்டவர்களாதலால், ஆபத்தைக் கடக்கச் சுலபமாகவே வழி கிடைத்தது. மாகாணத் தலைவர்கள் அன்னியர்களின் மேற்போக்கைத் தகையுமாறு, ஜப்பான் ராஜாங்கத்தைச் சீர்ப்படுத்த லவசிய மென்றும், அந்த விஷயத்தில் தாங்கள் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் நேரிட்டாலும் பொறுக்கச் சித்தமா யிருப்பதாகவும், சக்கிரவர்த்திக் கெழுதிக் கொடுத்ததை யேற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். இவ்வாறு மாகாணத் தலைவர்களின் தேசாபிமானத்தாலுண்டான பலத்தையே அஸ்திவாரமாகக்கொண்டு ஜப்பானின் சுவாதீனமும் பெருமையும் இடைஞ்ச

கள் நீங்கி நிலைபெறலாயின. இத்தலைவர்கள் தேசாபிமானிகளாக மட்டுமிராமல், தங்கள் தேசாபிமானம் கோரின நற்பலனை யடையும்பொருட்டு இன்றியமையாத நவீனாசாரானுஷ்டானங்களை யனுசரிக்கவும் பின்வாங்காதவர்களாயிருந்தனர்கள். இந்தியர்களைப் போல் பூர்வாசாரமே சதாசாரமென்கிற வீண் கொள்கையைத் தழுவித் தேசத்தைப் பாழாக்க ஒப்பவில்லை. தேசத்து மேன்மக்கள் வெகு காலமாக அனுபவித்து வந்த உரிமைகளை யிழந்ததுமன்றித், தங்களுடைய சொந்த வழக்கங்களையும் சக்கிரவர்த்தி அந்தஸ்தைச் சுற்றி வெகு காலமாயேற்பட்டிருந்த வழக்கங்களையும் காலவித்தியாசத்தை யுத்தேசித்துத் தைரியமாய் மாற்றத் தயங்கவில்லை. சமுத்திரங்கடந்து அன்னியதேசங்களுக்குப் போய், அங்கு தங்கள் தேசாபிவிருத்திக்கு உற்ற அறிவையும் அனுபவத்தையும் அடையும்பொருட்டு வெகு ஊக்கத்துடன் முன்வந்தனர். வெகு நூற்றாண்டுகளாக ஜப்பான் ராஜாங்கம் நடந்து வந்த முறைகளை உத்தமமானவைகளென்று புத்திஹீனத்தால் நம்பியிராமல், சந்தர்ப்ப பேதங்களை மனதிற் கொண்டு, அன்னிய முறைகளை யேற்கவும் தாமசம் காட்டினவர்களல்லர். அவ்வாறே மேற்குலத்தோர் கீழ்க்குலத்தோர் இவர்களின் சம்பந்தா சம்பந்தங்களின் லட்சணங்களைப் பழக்கத்தில் மாற்றியே விட்டனர். வர்த்தகம் தொழில் முதலானவைகளை யனுசித வழக்கம்போற் செய்துவந்தவர்கள் புது வழக்கம் அவசியமென்று உணர்ந்து, அவ்



வாறே தங்கள் சீவனோபாயங்களை நடத்த இசைந்தனர். இவ்வாறு தேசத்தில் சக்கிரவர்த்தி முதல் தொழிலாளிகள் வரையில் எல்லா வகுப்பார்களும் தேசம் முற்பட வேண்டுமென்ற ஒரே பிடிவாதத்தைக் கொண்டு, மற்ற சுய நஷ்டங்கள் நன்மை தீமைகள் இவைகள் எவையாயினும் பொருட்டாய் நினைக்காமல் ஒருமைப்பாடுற்றனர். அக்காலம் முதல் ஜப்பானியருக்குத் தேசாபிமானமே வேதம்போல் முன்னின்று அவர்கள் நடத்தைக்கும் செயலுக்கும் முயற்சிக்கும் சாஸ்திரப் பிரமாணமாக விளங்கி வருகின்றது. சரித்திரங்களில் தேசாபிமானாவேசங் கொண்ட ஜனங்கள் எண்ணிக்கையிற் குறைவாயினும், பக்கபலம் குன்றினவர்களாயினும், வேறு எவ்விதக் குறைகளவர்களுக்கிருந்தாலும், அவர்கள் பிரமாதமான காரியங்களைச் செய்து முடிக்கவல்லவென்பதற்கு அநேக திருஷ்டாந்தங்களைக் காண்கிறோம்.

இந்த ஜப்பானிய அபிமானிகளின் நோக்கில் சுதேசமான இந்தியாவினுடைய பரிதாபமான நிலைமையானது இருந்துகொண்டே இருந்தது. இந்தியரைப் போலத் தாங்களும் தங்கள் தேசத்தினரும் ஜாதிவித்தியாசங்களால் பிரிவினைப்பட்டுத் தேசப் பொது நன்மையைக் கைநழுவவிட்டால், இந்தியாவைப் போலவே இழிநிலையில் அழுந்தக் கூடுமென்று பயங்கொண்டிருந்தனர். இந்தியாவை ஐரோப்பிய தேசத்தார் பலர் வசப்படுத்தப் பார்த்துக் கடைசியில் பிரிடிஷார் அதையாளு

வோராயினதுபோல, ஜப்பானில் அதேமாதிரியான கெட்ட எண்ணத்தோடு தோன்றின அன்னியர்களில் ருஷியர் கடைசியில் தனித்து ஜப்பானாட்சியைக் கவரக்கூடுமென்றும் அச்சமுற்றனர். அவ்வாறு ருஷியாவுக்கு ஒருக்கால் ஜப்பான் வசப்படுகிற பட்சத்தில், ருஷியர் அளவற்ற புஜபல பராக்கிரமும் தந்திரோபாயங்களும் கற்றவர்களாகையால், ஜப்பானியர் பிற்காலத்தில் எவ்வளவு தேசாபிமானம் பொங்கிச் சுவாதீனத்தைத் திரும்பப் பெற ஊக்கப்பட்டபோதிலும் அவ்வாறு சித்தித்தல் சுலபமானதல்லவென்று சிந்தையிற் கொண்டு, மோசம் வருமுன்னரே, வேறு எவ்வித யோசனையும் செய்யாமல், தேசத்தின் சுவாதீனத்தைப் பத்திரப்படுத்த வேண்டுமென்ற மகா யூகமான நிச்சயத்தைச் செய்தனர்.

பிரதி மனிதர்களுடைய ஆயுளும் கால அளவுக்கு அடங்கியிருந்தபோதிலும், தேசஜன சமூகத்தின் ஆயுள் அத்தகைய அளவுக்குட்பட்டதல்லவன்றோ? அரசர்கள், பிரபுக்கள், கற்றோர், மற்றோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், எவரானாலும் சமூகத்திற்கு அழிவில்லாமலும், தாழ்ச்சி, நிந்தனை, பலக்குறைவு முதலியவைகள் உண்டாகாமலும் காப்பதில், உடல், உயிர், உரிமை, இவைகளை இழந்தாலுமென்ன? தேசம் சுவாதீனத்துடன் க்ஷேமமுற்றிருக்கும் பட்சத்தில், ஒரு காலத்தில் இழந்தவைகளை மற்றொரு



காலத்தில் திரும்பப் பெறல் அசாத்தியமல்லவே. உடலில் உயிரைக் காக்கும் நிமித்தம் ஒரு அவயவத்தை ஊனப்படுத்தலும், குடும்பத்தைக் காக்கும் பொருட்டுக் குடும்பத்தாருள் ஒருவனை கஷ்டப்படுத்தலும், ஒரு ஊரைக் காக்கும் பொருட்டு ஒரு குடும்பமே இடையூறுறுதலும், நியாயமென்றும் சில சமயங்களில் தீராத அவசியமென்றும் அங்கீகரிக்கப்படுவதுபோலக், கோடிக்கணக்கான ஜனங்களது உயிர், பொருள், பெருமை, அபிவிருத்தி, ஆகிய இவைகளைத் திரட்டி அமைக்கப்பெற்றிருக்கும் சமூகத்தையும் சமூகாதாரனான சக்கிரவர்த்தியையும் காத்துப் பிற்காலம் நேரிடக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்க்கும் அளப்பரிய மேன்மைதாங்கிய கருமத்தில் எவ்வளவு மனிதர்களானாலும், எவ்வளவு குடும்பங்களானாலும் சேதப்படுதல் பெருமையேயன்றிச் சிறுமையல்ல. இந்தப் பெருமையை யுணராத ஜனங்கள் க்ஷீணகதியையடைகிறார்கள். சில சமயங்களில் சலியாத மகா சூரர்களால் நடத்தப்பட்டுப் புலிகள்போல் தேசத்தைக் காக்கப் பொருவோர்களும் தம் பெரும் நோக்கம் சித்திக்காமல் தோல்வியுற்றுத், தேசப் பிரஷ்டர்களாய்ச் சிதறுண்டு போகிறார்கள். அவ்வாறே தென்னாபிரிக்கா போவர்களுக்கு நேரிட்டதைக் கண்டோமாயினும், அப்பேர்ப்பட்ட சூரர்கள் சுவாதீனத்தையிழந்து அன்னிய ராட்சிக்குப் பலவந்தமாய்க் கட்டுப்பட்டிருப்பதைவிட, எவ்விதக்கேடு நேரிட்டாலும்

அதை யனுபவித்தலே பெருமை யென்று நிச்சயித்துத், தங்களைவிடப் பத்துமடங்கு பலவான்களான பிரிடிஷாரோடு எதிர்த்து நின்றதை யுலகத்தில் வியக்காதவர்கள் எவர்? ஆயினும் போரவர்களுக்கு நேரிட்டதுபோல் ஜப்பானியருக்கு நேரிடாமல், அவர்கள் தக்க காலத்தில் கண்ணை விழித்துப் பார்த்துத் தங்கள் முன் தோன்றின அபாயங்கள் முற்றிப் பெருகுவதற்கு முன், தீர்க்க புத்தியுடன் முன் ஜாக்கிரதைகள் செய்து, ஜப்பானை யுலகத்துச் சுவாதீன தேசங்களுள் ஒன்றாக உயர்த்தியது, அத்தேசத்தாரது பெருமையைப் பழிவற நாட்டினது மன்றி, சீனா, இந்தியா முதலான ஏஷியா தேசங்களது பிற்கால நன்மைக்குச் சூரிய னுதயத்தை முற் குறிக்கும் செவ்வானம்போல் விளங்குகின்ற தென்போம்.

# CHAPTER XII.

## பன்னிரண்டாம் அதிகாரம்.

ஜப்பானியத் தலைவர்கள்—மார்க்விஸ் ஹிரோ பூமி ஐடோ அவருக்குள்ள மதிப்பும் பெருமையும், அவர் சரித்திரமும் ஜப்பானுக்குச் செய்த நன்மைகளும்.

உலகில் ஒவ்வொரு தேசமும் அத்தேசத்தினரும் ஓங்கிச்செழித்து நன்மைகள் பல வடைந்து முற்படுவதற்கு அவ்வவர் தலைவர் காரணமா யிருத்தல் நாமறியாததல்ல. முன் அதிகாரத்தில் ஜப்பான் தற்கால தேசமாக முற்பட்டதற்கான காரணங்கள் பல வரைந்ததில் தலைவர்களைப்பற்றிச் சுருங்க வுரைத்துள்ளோம். அத்தலைவர்களுள் மார்க்விஸ் ஹிரோ பூமி ஐடோவே முதன்மையானவ ராதல்பற்றி, அவரின் பற்பல நற்குண நற்கருமங்களையுரைத்துப் பின்னர் ஏனைய தலைவர்களைப் பற்றியும் சிறிது எழுதுவோம். மேற்றேசத்திய துரைத்தனத்தார் பலரும் முக்கியமாய் மார்க்விஸ் ஹிரோ பூமி ஐடோ ஒருவரையே ஜப்பானிற் றலைவராக அறிவார்கள். சொற்பக்காலத்துக்கு முன் வரையில் ஜப்பானும் சீனாவைப்போலவே ஒரு தேசமென்றும், ஜப்பானியர் சீனரினின்றும் சிற்சில வேறுபா டுடையவ

ரேயன்றி மிகுந்த நாகரிகத்தேர்ச்சியுடையவ ரல்லரென்றும் எண்ணியிருந்த மேற்றேசத்தார் வியப்படையும்படி, 1895-96-ம் வருஷங்களில் ஜப்பானுக்கும் சீனாவுக்கும் யுத்தம் நேர்ந்து, அதில் ஜப்பானியர் காட்டிய வீரத்தன்மை, ராணுவ ஒழுங்கு, முதலியவற்றால், அன்ன புதுப்பெருமைக் கெல்லாம் முக்கியகர்த்தரா யிருந்த ஐடோ பிரபு சாமானிய ரல்லரென வுலகில் கியாதி பிறக்கலாயிற்று. அது முதல் எப்பொழுது மவரைப்பற்றிப் பத்திரிகைகள் பல பற்பல விதமாய்ப் புகழுவதையும், அவருக்கு ஏனைய நாட்டிலுள்ள ராஜதந்திர நிபுணரும் பொது ஜனங்களும் காட்டிவரும் மரியாதைகளையும், செய்துவரும் உபசாரங்களையும், பலர் அறிந்து மிருக்கிறார்கள். இவரைப்போலவே ஜப்பானில் இன்னும் இனொயி, ஒகுமா, யாமகாடா, மட்ஸுகாடா வாகிய அதிபுத்திசாலிகள் புராதன நாகரிகத்தேர்ச்சி யாதாரமாகவே ஜப்பான் முற்போகுவதற்குத் தக்க வழிகாட்டியவர்களாகி, ஐடோ பிரபு வடைந்திருக்கும் கியாதியிற் களிப்புறுவதோடு, அவர்களில் ஒருவர் "ஐடோ பிரபுவாலேயே ஜப்பான் தேசத்தின் தற்காலத்தியதும் இனிவருங் காலத்தியதுமான நன்மை கைகூடவேண்டு மெனப் புகழ்ந்து, "தேசத்தில் துரைத்தனச் சங்கடங்களெவை நேரிடினும் அவற்றை நிவர்த்திக்க ஐடோ பிரபுவன்றி வேறு யாருமில்" லென வற்புறுத்திக் கூறியுள ரென்றால், ஐடோவின் சிறந்த பதவியை வேறெடுத்து விளக்க வேண்டுவ தவசியமோ?



ஐடோ பிரபு மந்திரியா யிருந்தாலுஞ் சரி, வேறு மந்திரி துரைத்தனம் செய்யுங் காலமாயினுஞ் சரி, ஜப்பானியர் ஐடோ பிரபுவின் கருத்தையே பின்பற்றி வருகிறார்கள். ஏனைய மந்திரியின் துரைத்தனக் காலமாயிருந்தாலும், ஐடோ பிரபுவே மந்திரியா யிருப்பதுபோல அவருக்குச் செல்வாக் குண்டு. நம்மிந்தியாவிலும் மற்றத் தேசங்களிலும் தேசப் பொதுநன்மையை நாடி யுழைப்போர்களைச் சிற்சிலர் யாதும் தக்க காரண மின்றியே குறைகூறித் திரிவதுபோல, ஜப்பானிலும் சில சாமானிய பத்திரிகைகள் ஐடோ பிரபுவை ஒவ்வோர்காலத்திற் குறைகூறிடினும், தேசத்துக் கெவ்விதக் குழப்பம் நேரிட்டபொழுதும் ஜப்பானியர் ஒருமிக்க ஐடோ பிரபு வொருவரையே தமது தலைவராக நம்பி அக்குழப்பத்தை விலக்கிக் கொள்ளுவார்கள். ஜப்பான் சக்கிரவர்த்தி ஐடோ பிரபுவிடம் மிகுந்த நம்பிக்கையுடையவரா யிருப்பதோடு, அவரால் தேச மடைந்திருக்கும் மேம்பாட்டையும் நன்கு தெரிந்துகொண்டவரே. முன் அதிகாரங்களிற் றெரிவித்ததுபோல ஜனங்கள் தெய்வத்தன்மையின ரென மதித்துப் பூசிக்கும் சக்கிரவர்த்தியே யிவரைக் கனப்படுத்தி, எக்காலத்தும் சக்கிரவர்த்தியின் வழி சத்தினரே பெற்றுவந்த கௌரவப்பட்ட மொன்றும் ஐடோ பிரபுவுக் களித்தன ரென்றால், அங்ஙனம் கௌரவப்படுத்தப்பட்ட ஐடோ பிரபுவிடம் ஜனங்கள் கொண்ட மதிப்பு எத்தன்மைத்தா யிருக்குமெனத் தெரிந்துகொள்ளல் கூடும்.

பிரான்ஸ் தேசத்தை யுயர்பதவிக்குக் கொண்டு வந்த நெபோலிய னென்ற ரணவீரனென்ன, அல்லது ஜர்மனிதேசத்தையுலகத்தோர் கொண்டாடச்செய்த பிரவீணரான பிஸ்மார்க் என்ன, இவர்கள் தம் தேசங்களை யுன்னத பதவிக்குக் கொண்டுவந்ததில் பலவாறு கலகங்க ளேற்கெனவே யேற்பட்டிருந்தும், வெகு காலம் பாடுபட்டே தம் நோக்கங்களை நிறைவேற்றி யிருக்க, கவின ஏற்பாடுகள் யாவுமின்றிப் புராதனப் பழக்க வழக்கங்களையே மேற்கொளாக் கொண்டு கிழக்குக் கோடியிற் கிடக்கும் ஜப்பான் தேசத்தைச் சுமார் 30-வருஷங்களுக் குள்ளாகத் தற்கால நாகரிகங்கள் முழுமையிலுந் தேர்ச்சி யடையச்செய்த இடோ பிரபுவுக் கீடாக மேற்குறித்த இரண்டு கீர்த்திவான்களைச் சொல்லலாகா தென்றும், மேனாட்டில் எந்த ராஜதந்திர நிபுணரையும் அவருடன் ஒப்பிட்டுப் பேசக்கூடவில்லை யென்றும் சில ஐரோப்பியக் கல்விமான்களே யபிப்பிராயப்படுகிறார்கள்.

இவர் 1841-ம் வருஷத்தில் பிறந்து, சுமார் இருபத்திரண்டு வயதுவரையில் தம் நாட்டிலுள்ள சாதாரணக் கல்விச்சாலைகளிற் கற்று, 1863-ம் வருஷத்தில் இனொயி பிரபுவுடன் இங்கிலண்டிற்குக் கல்விகற்கும் நோக்கத்துடன் சென்று, சிறிதுகாலம் அங்கு தங்கித் தம் நாட்டுக்குத் திரும்பினபொழுது, ஷிமோனஸேகி யென்ற ஜப்பானுக்குச் சொந்தமான கோட்டையொன்றை யன்னிய ராஜாங்கத்தார் முற்றுகைபோட்டுத்



தகர்த்துக்கொண்டிருக்க, அவ் வன்னிய ராஜாங்கங்களின் மந்திரிகளுடன் கலந்து பேசவேண்டிய விஷயங்களி லெல்லாம் இடோ பிரபுவே, அக்காலத்தில் சிறிய வயதினரே யாயினும், ஜப்பானின் பிரதிநிதியாய்ச் சக்கிரவர்த்தியால் பொறுக்கப்பட்டு விளங்கினாரெனக்கேட்க, இத்தனை சிறுவயதில் இவர் இத்தகைய ராஜ தந்திரப்பயிற்சி யடைந்த தெங்ஙனமென எவர்க்கும் வியப்பே யாகின்றது. கலகம் ஓய்ந்து நாட்டிற் சமாதானம் பரவியவுடனே, அன்னிய நாட்டாரின் கோபி என்ற துறைமுகத்தை யடுத்த ஹியாகோ மாகாணத்துக்குக் கவர்னராக 1868-ம் வருஷம் இருபத்தேழாவது வயதில் இடோ பிரபு நியமிக்கப்பட்டா ரென்றால், அவர் சாமர்த்தியத்துக்கும் விவேகத்துக்கும் வேறு திருஷ்டாந்தம்வேண்டியதில்லை. அவரையன்றி அன்னிய ராஜாங்கத்து மந்திரிகளோடு கலந்து பேசிக் காரிய முடிவு செய்யச் சாமர்த்தியவான் வேறியாரும் ஜப்பானி லில்லையென்றே ஜப்பான் சக்கிரவர்த்தி யிவரைத் தெரிந்தெடுத்து நியமித்தார். இந்த ஸ்தானத்தி லிரண்டு வருஷக்காலமிருக்க, 1870-ம் வருஷத்தில் இவரைத் தேசத்திய அரசிறை உதவி மந்திரியாக நாட்டின் க்ஷேமத்தைக் கருதி நியமிக்கவேண்டியதாயிற்று. உடனே இவர் அமெரிக்காவுக்குச் சென்று ஒரு வருடக் காலந் தங்கி அரசிறை விஷயமாய்க் கற்கவேண்டியதெல்லாங் கற்றுத் திரும்பச்சிலநாட் செல்லவே, அப்படி 1873-ம் வருஷத்தில் திரும்பினபோது

மாமத்திலாகா மந்திரியாக மந்திரிகளின் சபையில் நியமனம் பெற்றுப் பன்னிரண்டு வருடங்கள் அந்த இலாகாவின் மந்திரியாயிருந்து தக்க அனுபவமடைந்த பிறகு, 1885-ம் வருஷத்தில் முதற்றடவை தாமே முக்கியமந்திரியாய் மந்திராலோசனைச் சபையைக் கூட்டினர். அவர் கூட்டின சபை மூன்றுவருஷங்களின் பிறகு மாறினலும், அதற்குப்பிறகு கூட்டப்பட்ட மற்றொரு மந்திரிச் சபையிலும், இவரில்லாதிருக்க முடியாதெனச் சக்கிரவர்த்தியே கருதியபடி, இவர் ஒருவராயிருந்து நிருவகித்தார். அன்றி அவர் பல இலாகாக்களின் தலைவராக உத்தியோகம் பெற்றிருந்து, மறுபடியும் 1892-ம் வருஷத்தில் தாமே முதன் மந்திரியாக மந்திரிச் சபையை நியமித்துக்கொண்டார். இந்தச் சபை 1896-ம் வருஷம்வரையிலும் துரைத்தனஞ்செலுத்திவந்த காலத்திலேயே ஜப்பானுக்கும் சீனவுக்கும் கலகம் நேர்ந்து யுத்தம் நடந்தது. இந்த யுத்த காலத்தில் இவர் காட்டிய சாமர்த்தியத்தை மெச்சி, இவரைச் சக்கிரவர்த்தி மார்க்விஸ் பட்டத்தினராக்கினர். மறுபடியும் இவரே 1898-ம் வருஷத்திலும், பிறகு 1900-ம் வருஷத்திலும், மந்திரிச் சபையை மூன்றாவது, நான்காவது தரமாக ஏற்படுத்திச் சில மாதங்கள் துரைத்தனம் நடத்திவந்தார். இங்ஙனம் இவர் ஜப்பான் தேசத்தில் பலதடவைகளில் முதன் மந்திரியாகவும், மற்றும் பல காலங்



களில் பல இலாகாத் தலைவராகவுமிருந்துவந்ததன்றி; அன்னிய தேசங்களுக்குச் சென்று ஜப்பானுக்குச் சில சாதகங்கள் பெறவேண்டியிருந்த காலங்களிலெல்லாம் சக்கிரவர்த்தி இவரையே தெரிந்தெடுத்தனுப்புவது வழக்கமாயிருந்தது.

அப்படி மேற்குத் தேசங்களுக்கு ராஜரீகக் கருமவசத்தினாலனுப்பப்பட்ட பல சமயங்களுள், 1882-ம் வருஷத்தில் அன்னிய தேசங்களின் ஸ்தாபனங்களையும் அனுபோகங்களையுஞ் சோதித்தறிந்து, ஜப்பான் தேசத்துக் கெவ்வித அமைப்புத் தக்கதாகுமென நிச்சயித்து, அத்தேசத்தின் அரசுமுறையமைப்பைக் கற்பிக்குமாறு அனுப்பப்பட்ட சமயத்தைவிடப் பெரிதொன்று நேரிட்டதில்லை. அப்போது ருஷிய சக்கிரவர்த்தி மூன்றாவது அலக்ஸாண்டருக்கு முடி சூட்டு நடக்க, ஐடோ அங்கு ஜப்பான் பிரதிநிதியாய் விளங்கினர். ஜப்பானுக்குத் திரும்பிவந்து, 1865-ம் வருஷத்தில் கொரியா விவகாரச் சம்பந்தமாய்ச் சீனவுக்குச் சென்றனர். காலஞ்சென்ற விக்டோரியா மகாராக்கினிக்கு 1897-ம் வருஷத்தில் டைமண்ட் ஜூபிலி நடந்தபொழுது, ஜப்பான் பிரதிநிதியாகச் சென்ற சக்கிரவர்த்தி குமாரருடன் இங்கிலண்டுக்குப் போயினர். சமீபத்தில் ஐந்தாவது முறை ஐரோப்பிய தேசங்களைப் பார்த்துத் திரும்பியும் வந்திருக்கின்றார்.

இவ்வாறு இயல்பா யமைந்த பேரறிவுடன் பல தேசங்களைச் சுற்றிப்பார்த்து அங்கங்குள்ள புதுமைகளையுங் கற்றுணர்ந்து புத்தி விசாலமும் பேரவாவும் எழப்பெற்ற மகா புருஷர்க ளல்லவோ தம் பிறப்புநாட்டின் பெருங்கருமங்களை வகித்துக், கதியற்ற மானிட கோடிகளை யுய்விக்க வல்லவ ராவர்? அன்றி, கடல் கடந்தவன் கடவுள் வெகுளிக்குப் பாத்திரனென்று சாதிவிலக்குச் செய்யும் புல்லறிவினோர் வாழு மித்தேசத்தில் மார்க்விஸ் ஐடோ போன்ற லோகோபகாரிகள் தோன்றல் எங்ஙன மியலும்? பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நிலைபெற்ற பிறகு, இந்தியர்கள் அன்னிய தேசங்கள் சென்று சுதேச நன்மைகளை முற்படுத்தற்குற்ற பெருந் தருணங்கள் ஜப்பானுக்கு நேர்ந்ததுபோல இந்தியாவுக்கும் நேர்ந்திருக்கின்றன. நேரிட்டா லென்ன? தன்னலம் வெறுக்குந் தேசாபிமானிகளுக் கல்லவோ அத்தகைய தருணங்கள் நோக்கப் பெருமை யுற்றனவாகும்? ஸர். டி. மாதவ ராவ், வி. ரங்காசார்லு, ஸர். டி. முத்துசாமி அய்யர், மகாதேவ கோவிந்த ரானடே, ஸர் அமராவதி சேஷய்ய சாஸ்திரி, ஆகிய பெரியோர்கள், உற்ற சமயங்களில் இங்கிலண்டுக்குப் போகும்படி ராஜாங்கத்தாராலே கேட்டுக்கொள்ளப்பட்டும், சாதிவிலக்குக்குப் பயந்து, தம் நாட்டுக் கழியாத நன்மை செய்யவாய்த்த அச்சமயங்களை யொழித்தனர். ஐடோவைப்போல



நம் தேசத்திலும் முன் வந்துழைக்கும் பெரியோர்கள் தோன்றுகிறவரையில் இந்தியாவின் க்ஷேமம் நிலைப்பட்டுப் பெருகக் கோரல் வீண் பகற்கனவென்போம்.

மேற்சொன்னவாறு மார்க்விஸ் ஐடோ ராஜாங்க நிருவாகத்திற் பெற்ற வுன்னத ஸ்தானங்களாலே மட்டும் அவருடைய தேசாபிமானம் வெளிப்பட்டதன்று. எவ்விதத்தால் தம் தேசத்தின்பொருட்டு உழைக்கக் கூடுமோ அவ்விதத்தால் ஓயாமலுழைத்து வருகிறவரானதால், ஜப்பானியர் மார்க்விஸ் ஐடோவைத் தேசாபிமானிகளுள் மகோன்னத பதவியில் வைத்து மதிக்கிறார்கள். ஜப்பானியர் அன்னிய தேசத்தார்களுடைய நோக்கத்தைத் தடுக்குமாறு அவ்வன்னியர தபாயங்களையே பிரயோகஞ் செய்ய வேண்டுமென்று துணிவுற்றகாலத்தில், மார்க்விஸ் ஐடோ அவர்களுடன் உற்ற துணைவராக நின்று தேசத்தின் முற்போக்குக்கு இன்றியமையாத மகா சிரேஷ்டமான சகாயஞ் செய்தனர். இவருடைய செல்வாக்கினாலேயே ஜப்பானியர் மேனாட்டுக் கருத்துக்களை யங்கீகரிக்க லாயினர். ஆயினும் ஜப்பானிய அபிமானிகள் தேச க்ஷேமமே தங்கள் எல்லா முயற்சிகளுக்கும் முடிவில் நோக்க மென்பதை மறந்தனரல்லர். இவ்வாறு ஜனங்களின் மனச்சார்பைப் பண்படுத்தி, 1873-ம் வருஷத்தில் ஜப்பான் ராஜாங்க அமைப்பு முறையையும் வரைந்து, மனதே பிரமாணமாக இயற்றப்பட்டு வந்த அரசு முறையை ஜனப்பிரதி

நிதி முறையாக வெகு எளிதாய் மாற்றினர். அனேக
ஆயிரம் வருஷங்களாக அரசன் தன் நெஞ்சே ஆணை
யாக ஆட்சி செய்து வந்த ஜப்பானில் அரசனுடைய
விருப்பு வெறுப்புக்களும் மனோபீஷ்டங்களும் ஜனப்
பிரதிநிதிகளின் அபிப்பிராயத்தின் சார்புபெற ராஜாங்
கத்தை மாற்றுவது ஒப்புயர்வற்ற மகாமதியூகிகளால்
கூடியதே யன்றி மற்றோரா லன்று. நவீன ஏற்பாடுக
ளைக் குற்றமற வரைந்துவைத்தல் கஷ்டமல்ல. எவ்
வாறு அவற்றைத் திக்கு விளையாமல் ஜனங்கள் அனுஷ்
டிக்கத் தக்கதோ, அவ்வாறு அவற்றை யமைத்தல்
ஆழ்ந்த ராஜதந்திரிகளாலேயே முடியும். இந்தியா
தேசத்தில் சட்டச் சபைகளைத் திடீரெனப் பிரதிநிதிச்
சபைகளாக, பிரி[illegible]து, நமது முனிசிபாலிடிகள் முதலிய
ஸ்தலச் சபை[illegible]ல் அங்கத்தினர்களா யுள்ளவர்களை
யப்பிரதிநிதிச் சபைகளுக் கங்கத்தினர்க ளாக்கி, ரா
ஜாங்க விவகாரங்களி லப்போதப்போது தோன்றும்
பிரசினைகளைப்பற்றி அபிப்பிராயங்கொடுக்கச் சுதந்தரம்
பெற வைத்தால், அவர்கள் ஆரம்பத்தில் எவ்வாறு
தவறுதல்களை செய்வார்க ளென்பதை நாம் ஊகிக்கக்
கூடு மல்லவா? புத்தியில் நம்மவர்களைப்போ லிருந்த
ஜப்பானியர் பெருந்திங்கு விளைக்குந் தவறுகளைச்
செய்யாமல் மொத்தத்தில் தேச நலத்துக் குற்றவாறு
தம் சுதந்தரத்தைச் செலுத்தினது. மார்க்விஸ்
ஐடோ போன்ற தேசாபிமானிகளின் தீர்க்கபுத்தியை
யும் தலைமைத் திறமையையுங் காட்டுகின்றது.

98



தேசத்தில் ஐரோப்பியர்களுடைய சகவாசத்
தால் இந்துக்களது பூர்வாசாரங்களும் அனுஷ்டானங்
களும் மாறித் தளர்வடைகின்றன வென்று பலரஞ்சு
வதுபோல், ஜப்பானிலும் அஞ்சுவோர் பல
ருண்டு. ஆயினும் மார்க்விஸ் ஐடோ போன்ற புத்தி
மான்கள் அன்னியரின் சகவாசத்தால் மதம், ஆசா
ரம், கலை, ஒழுக்கம் முதலியவைகளில் மேலார்ந்த
வேற்றுமைகள் எவைதோன்றினும், அவைகளது உட்
புறமும் வேரும் தேசச்சார்பைப் பெற்று நிற்கு
மென்று அபிப்பிராயப்படுகிறார்கள். அவ்வாறே ஆதி
யில் பௌத்தமதம், கன்பூஷியமதம், (Confucianism)
கலை, முதலியவைகள் அன்னிய தேசங்களிலிருந்து ஜப்
பானிற் புகுந்தபோதிலும், கால அளவில் அவைகள் ஜப்
பானிய உருவமே யடைந்தன. கிறி[illegible] போதகர்
கள் எங்கும்போல் அங்கும் செய்யு[illegible]போதக முயற்
சிகள் பயன்படாமையால், அங்கு அ[illegible]போர்களிடத்
தில் மிக வெறுப்பைக் காட்டிவருகிறார்கள். மார்க்விஸ்
ஐடோவும் இம்மதாசாரியர்கள் ஜப்பானியரைப் பல
விதமா யிகழ்ந்துவருவதால் அவர்களிடத்தில் ஒற்
றுணர்ச்சி யற்றவரா யிருக்கின்றனர். "தருமம் சரா,"
"ஸத்தியம் வதா" என்கிற ஹிந்துக்க ளறிந்த வேத
வாக்கியங்களைப் போல, நல்லசெயலும் நியமவிலக்
கலுமே ஜப்பானியருக்கும் போதுமான மத மென்
றும், மூடபக்தி யுருக்கொண்ட கிறிஸ்துமத முதலியன
ஜப்பானியருக் கனாவசிய மென்றும் மார்க்விஸ் ஐடோ
சொல்லுவது வழக்கமாம்.

ஐரோப்பிய தேசங்களிலும் அமெரிக்காவிலும் மார்க்விஸ் ஐடோ சென்ற ராஜஸ்தானங்களி லெல்லாம் முடிமன்னரும் ஆட்சியதிபரும் வெகு சிறப்புடன் உபசரிக்கப், பிரிட்டிஷ் மகாராஜா மாட்சிமை தங்கிய ஏழாவது எட்வர்ட் தமது வாசஸ்தானத்துக்கு இந்தச் சிரோங்கு ராஜியல்வல்லோனை வரவேற்க விரும்பி, அவ்வாறே வரப்பெற்றுப் பெரும்பட்ட மொன்றைப் பூட்டிக் கனப்படுத்தினர். ஜப்பானில் மார்க்விஸ் ஐடோவைவிடப் பெரியோ ரில்லை: தற்காலத்தில் உலகத்தி லில்லை யெனலுந் தகும்.



## CHAPTER XIII.

## பதின்மூன்றும் அதிகாரம்.

ஜப்பானில் இன்னொரு தேசாபிமானி—பாரன் ஷிபுஸாவா அவர் நோக்கங்களும் உழைப்பும், அன்னியதேசம் போனதும்—வேறு சிலர்.

மார்க்விஸ் ஐடோவினது பெருந்தன்மையுந் தேசாபிமானமும் எத்துணை உயர்ந்தனவாயினும் முற்றிலும் ஒருவர் முயற்சியினாலேயே தேசாபிவிருத்தி சித்திபெறல் சாத்தியமல்ல வாகையால், இவருடன் வேறு துறைகளில் பெரியோர் மற்றோரும் உடனுழைத்துத் தம் தாய்ப் பூமியின் தற்கால பிற்கால க்ஷேம லாபாதிகளை நிலைநாட்டி வருகின்றனர். மார்க்விஸ் ஐடோ துரைத்தன விவகாரங்களில் நேரே புகுந்து வகித்தவர், பாரன் ஷிபுஸாவா (Baron Shibusawa) என்ற பேரபிமானி ராஜாங்க ஜோலிகளிற் சம்பந்த முறாமல் விலகிநின்று தேசத்தின் பொருட்பெருக்கத்திற் கவலையேற்று வருகின்றனர். துரைத்தன மெவ்வாறு சீர்ப்பட்டிருப்பினும் செல்வப்பெருக் கில்லையாயின் அபிவிருத்திக்குக்

குந்தகம் நேரிடக்கூடியது விசிதமல்லவா? அத்தகைய
செல்வப்பெருக்கில்லா தல்லவோ நம் மருமன்னை
இந்தியா நாகரிக ராஜாங்கப் பேறுபெற்றிருப்பினும்
முற்போக்குக் கிசைந்த அனுகூலங்களின்றித் தத்தளிக்
கின்றது. செல்வமும் வர்த்தகமும் தேச சுபிக்ஷத்துக்
கின்றியமையாதன என்பதை யாதிமுத லுணர்ந்தவ
ராய் பாரன் ஷிபுஸாவா தாமேற்றிருந்த அரசிறைஉதவி
மந்திரி ஸ்தானத்தை யொழித்து, வர்த்தகக் களத்
திற் புகுந்தனர். ஜப்பானின் தனபிவிருத்திக்காகச்
சமீபத்தில் படிப்படியாய்ச் செய்யப்பட்டுவந்த பற்பல
முயற்சிகளில் இவர் சம்பந்தப்படாத தொன்றுமில்லை.
அவருக்குத் தற்காலம் அறுபத்துமூன்று வயதாயி
னும், சுமார் ஐம்பது பெரிய கம்பெனிகளில் அவர்
அத்தியக்ஷர்களி லொருவரா யிருப்பது மன்றித் தம்
ஜனங்களது நாணயத்தையும் கௌரவத்தையும் பலப்
படுத்தற் கியைந்த ஊக்கப்பா டொவ்வொன்றிலும்
பங்கு பெற்றுள்ளர். அவர் விரும்பினால் மந்திரிகளி
லொருவராகச் சக்கிரவர்த்தியால் நியமிக்கப் பெறுவது
சுலபமாயினும், மந்திராலோசனைச் சபையிற்சேராமல்
ஒதுங்கியிருப்பதனாற் றேசத்துக்கதிக நன்மைசெய்யக்
கூடுமென்கிற நம்பிக்கையா லேவப்பட்டு வர்த்தக
விரிவிலெப்போதுங்கொண்ட கவலையை நெகிழவிடாம
லிருக்கின்றனர். மேலும் ஜப்பான் ராஜாங்க ஒழுங்குப்
படி மந்திரிகள் சாமானியக் கம்பெனிகளில் அத்தியக்ஷ
ராயிருத்தல் தடுக்கப்பட்டிருக்கிறபடியால், அவ்வாறு





அந்த மந்திரி யுத்தியோகத்தை யேற்றல் அவர் சம்பந்
தப்பட்டுநடத்திவரும்அனேகக்கம்பெனிகள் தடுமாறிப்
போவதற் கேதுவாகு மாதலால், தேசாபிமானிகளும்
எல்லோரு மாசைப்படத்தக்க அந்தப் பெரிய அந்தஸ்
தை வேண்டா தொழித்திருக்கின்றனர். இவ்வாறு
பொருளாதார நெறிகளில் வேலைசெய்து வருவதன்றி
மற்றெவ்வாறு தம் ஜனங்களுக்கு நன்மை செய்து
வரக்கூடுமோ அவ்வாறெல்லாஞ் செய்ய முன்னிற்
போராயு மிருக்கின்றனர். அனேக தருமசாலைகள்
கட்டி அவைகளுக்கு வேண்டிய நிதிகளையு மேற்படுத்தி
யிருக்கின்றனர். இவரா லேற்படுத்தப்பட்ட வித்
தியாசாலைகளும் பல வுண்டு. கம்பெனி யென்கிற
கூட்டு வியாபார முறை இவரே ஜப்பானியர்க்கு
ஆதியிற் போதித்தவர்.

1868-ம் வருஷத்து நவீன ஏற்பாட்டிற்கு முன்
அனேக ஜப்பானியச் சிறுவர்கள் ஐரோப்பிய தேசங்
களுக்கும் அமெரிக்காவுக்குஞ் சென்று அங்கே பல
வித்தைகளைக் கற்றும் ஸ்தாபனங்களைச் சோதித்தும்,
அனுபோகங்களைப் பெற்றும், திரும்பித் தம் பிறப்பு
நாட்டில் தற்கால நாகரிக நிலைப்பாட்டுக்குக் காரண
பூதர்களானார்க ளென்று சொல்லியுள்ளோம். அப்படிச்
சென்ற சிறுவர்களில் பாரன் ஷிபுஸாவாவும் ஒருவ
ராகி, இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்குஞ் செல்ல
அங்கே வெகு கௌரவமா யுபசரிக்கப்பட்டனர். ஜப்
பானை விட்டு இவ்வன்னிய தேசங்களுக்குப் புறப்படும்

பெற்றுத் தம் மக்களிடத்திலுள்ள மற்ற ஜப்பானியர்களைப் போலப் பூர்வ வழக்கத்தை யொட்டி யுடை யுடுத்துப் புறப்பட்டாரெனவும், இரண்டு பக்கங்களிலு மிரண்டு கத்திகள் வழக்கம்போற் றொங்கின தாகவும், பிரான்ஸ் தேசம்போனதும் தாம் சேப்பாஸ்தான கோக்கங்களுடன் யாத்திரை செய்வதை யுணர்ந்து கத்தி யேந்தல் தகாதென் றறிந்து, பிரெஞ்சு கனவான்களைப் போற் றமதுடையை மாற்றினதாகவும் சொல்லப்படுகிறது. சாமானியமாய்க் கருதின், இப்படி மாற்றினது ஒரு பெரும் காரியமாகச் சொல்லத்தகா தெனினும், அக்கால விசேஷத்தை நாடி நோக்குமிடத்தில், இது ஜப்பானிய ஜாதித் தலைவர் சமயோசிதமாகத் தங்கள் பூர்விகப் பழக்க வழக்கங்களை மாற்றுவதில் வீண் சங்கை கொண்டவர்களல்ல வென்பதைக் காட்டுகிறபடியால், இதை யொரு விசேஷ சம்பவமாக இங்கெடுத் துரைக்கலாயிற்றும். தாம்புது வுடுப்புத் தரித்தவாறு, பிரெஞ்சு நாட்டில் தம்மைப்போலப் புகைப்பட மொன்றெடுத்து, அதை ஜப்பானில் அவர் குடும்பத்தார் பார்த்து இவ்வாறு தம் குடும்பத்துக்கு இளப்பம் நேர்ந்ததே யென்று துக்கித்துக் கண்ணீர் விட்டனராம். அதாவது, பாரம்பரையாய்ப் பெரிய அந்தஸ்தான குடும்பத்தைச் சேர்ந்த பாரன் ஷிபுஸாவா ஐரோப்பாவுக்குப் போய் அங்கு உடை மாற்றினதுமன்றிக் கத்திகளையுங் களையலாயிற்றே யென்று மனம் நொந்தனர் போலும். ஜப்பானிய ரல்லாத நாம்



இவரின் குடும்பத்தாரின் உணர்ச்சியை யறியாமல் அது முற்றிலும் மதிக்குறுக்கக் குறியாகக் கொண்ட போதிலும், நம்முள்ளும் நாம் கண்டிப்பா யனுஷ்டித்து வருஞ் சில வாசாரங்களி னின்றும் நழுவி நடக்குஞ் சிலரைக் கண்டு நம்மனோர் வெகுளுதலும் ஜப்பானியருக்கும் மற்றோருக்கும் அவ்வாறே மதிக்குறுக்கமெனத் தோன்றுமென்ப தறிக. ஆயினும் நீண்ட காலம் அனுஷ்டானத்தி லிருந்த வொழுக்கங்களினின்றும் ஒருவாறு நழுவிப் புதுமைகளை யேற்பது அபிவிருத்திக் கின்றியமையாத தாகையால், தேசாபிமானிகள் சாமானிய ஜனங்களது இகழ்ச்சி புகழ்ச்சியைக் கருதாது, தேச நன்மைக் குற்றனவற்றை மேற்கொள்ளலிற் பின்வாங்க மாட்டார்கள். பாரன் ஷிபுஸாவா உண்மையான தேசாபிமான தீரரானதால் மேற்றிசை நாகரிகத்தில் எவை நன்மை பயக்கத்தக்கனவோ அவற்றை யேற்க முன் வந்தோர்களுக்குத் தலைவராய் நின்றனர். பாரன் ஷிபுஸாவா, பொருளுளோர் பொருளிலார், பெரியோர் சிறியோ ரனைவராலும் மதிக்கப்பட்டவராய், ஜப்பானி லெங்கு சென்றாலும் அவரைப் பற்றியோ ரவச்சொல்லையாவது அவர் தகாத காரியஞ் செய்ததாகவாவது கேட்ட லரிதாக இருக்கிறது.

மார்க்விஸ் ஐடோ, பாரன் ஷிபுஸாவா இவர்களுக்குச் சற்றேறக்குறைய நிகராகத் தற்காலம் ஜப்பானில், கௌண்ட் இநோயி (Count Inouye), கௌண்ட் ஒகுமா (Count Okuma), கௌண்ட் மட்ஸு

காடா (Count Matsukata), மார்க்விஸ் யாமகாடா (Marquis Yamagata), ஆகிய இன்னோரையுஞ் சொல்லலாம்.

கௌண்ட் இனோயி வயது முதிர்ந்த ஜப்பானியப் பெரியோரில் ஒருவர். வயதில் முதிர்ந்தவராயினு மவருடைய எண்ணங்களும் நோக்கங்களும் யௌவனப் பிராய முள்ளோரது தைரியத்தையும் பரபரப்பையும் கொண்டிருக்கின்றன. அநேக பெரிய உத்தியோகங்களை வகித்துப் பேர்வாங்கி, இப்போது விலகி யிருக்கின்றார். இப்போதும் சக்கிரவர்த்திக்கு நம்பிக்கையான முதிர்ந்த மந்திரி வேண்டுமென்று கௌண்ட் இனோயியைத் தருவித்தால் அவர் மறுபடியும் உத்தியோகம் வகிக்கத் தடையில்லை. இவரும், மார்க்விஸ் ஐடோவும், வேறு நால்வரும் ஆதியில் ஐரோப்பாவுக்குச் சென்று அங்கு பரவியிருக்கும் நாகரிகத்தைக் கற்றுத்திரும்பினார்கள். முதலில் இவர் அரசிறை உதவி மந்திரியாகவும் பிற்பாடு அன்னிய மந்திரியாகவு மிருந்தார். ஜப்பான் அன்னிய தேசங்களோடு உடன்படிக்கைகள் செய்துகொண்டபோது, இவரே மந்திரியாயிருந்தார். ஜப்பான் தேசத்துப் பொருளாதார நிலைமையைப்பற்றிக் கௌண்ட் இனோயிக்குத் தெரிந்த அளவு மற்றொருவருக்கும் தெரியாது. அன்னிய மந்திரியா யிருந்தது மல்லாமல், அரசிறை மந்திரியாகவும் முதல் மந்திரியாகவும் இருந்தவராகையால் கௌண்ட் இனோயி காலஞ்சென்ற கிழமந்திரியாகி ஜப்பானியரது புதிய சரித்திரத்தில் நேரிட்ட அநேக சங்கதிகளைக்



கதைபோலச் சொல்லிக் கேட்போரை யுற்சாகப் படுத்துகின்றார்.

கௌண்ட் ஒகுமா ஜப்பானிய அபிமானிகளிற் பேர் போன மற்றொருவர். ஐரோப்பிய நாகரிகத்தைத் தம் நாட்டில் ஸ்தாபிக்கிற விஷயத்தில் மகா ஊக்கங் கொண்டவர். அப்படி ஊக்கங் கொண்டிருப்பதாலேயே அவரை யொரு ஆக்கிரங்கொண்ட மூடன் 1889-ம் வருஷத்தில் அவர்மீது வெடிகுண்டு ஒன்று போட்டுக் கொல்லப் பார்த்தான். அதுவலது காலிற்பட்டுக் காயஞ் செய்தபோதிலும் உயிர்ச்சேதம் நேரிடாமல் கௌண்ட் ஒகுமா தப்பினார். வலது காலைத் துண்டித்து விடும்படி நேரிட்டது. அவர் சில காலம் அரசிறை மந்திரியாயும் முதல் மந்திரியாயு மிருந்தார். அவரைவிடப் பேச்சிற் சதுரர் ஜப்பானியரு ளில்லை. எப்போதும் தம் தேசம் முற்படுவதிலேயே கவலை கொண்டிருப்பவர். அவருக்கு ஆங்கில பாஷை தெரியாவிட்டாலும் தம் தேச விஷயமாக அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு வியாசங்கள் அடிக்கடி யெழுதியிருக்கின்றார்; கல்வியை யபிவிருத்தி செய்வதில் இடைவிடாத நோக்கங் கொண்டவர். பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் கல்விச் சாலைகள் ஸ்தாபித்துத் தாமே நடத்திவருகின்றார். அநேக அயல் நாட்டுப் புஸ்தகங்களை ஜப்பான்பாஷையில் மொழிபெயர்ப்பதற்கும் ஒருசங்கம் ஸ்தாபித்திருக்கின்றார். கௌண்ட் இனோயி எப்படியோ அப்படியே கௌண்ட் ஒகுமாவும் வயதில் கிழத்தன்மை யடைந்

இருப்பினும் நோக்கங்களிலும் எண்ணங்களிலும் கிழத்தனத்தை யறியாதவர்.

கௌண்ட் மட்ஸுகாடா (Count Matsukata)வும் மார்க்விஸ் யாமகாடா *(Marquis Yamagata)வும் வயது முதிர்ந்த ராஜதந்திரிகளைச் சேர்ந்த இருவர். மட்ஸுகாடா ஜப்பானிய அரசிறை விஷயங்களில் வெகு பரிசிரமப்பட்டவர். பாலியத்தில் பிரான்சு தேசத்துக்குச் சென்று அத்தேசத்து அரசிறை முறைகளையும் மற்றத் தேசங்களது முறைகளையும் கற்று, தம் தேசத்தில் தாம் கற்றவைகளுக்குப் பலனைக் கண்டார். மார்க்விஸ் யாமகாடா 65 வயதானவர். ஜப்பானிய ராஜதந்திரிகளில் மகா கியாதி பெற்றவர். மார்க்விஸ் ஐடோவைவிடச் சாமர்த்தியசாலி யென்று சிலர் சொல்லுகிறார்கள். பலமுறை முதல் மந்திரியா யிருந்திருக்கிறார். ஜப்பானிய சைனியமானது ஐரோப்பியர்களால் புகழப்படும்படியான நிலைமையி லிருப்பது அவருடைய சாமர்த்தியத்தின் வேலைதான். ஐரோப்பிய தேசங்களில் அந்தந்தத் தேசத்திலுள்ள ஆண் பிள்ளைகளில் ஒவ்வொருவரும் கௌமார தசையில் சில வருஷம் சைனியத்தில் சேர்ந்து யுத்தப்பயிற்சி பெறவேண்டுமென்று கட்டாயமான ஒழுங்கிருப்பதுபோல, ஜப்பானிலும் அவர் ஒரு ஒழுங்கு ஏற்படுத்தினார். வெகு காலம் மார்க்விஸ் யாமகாடா சைனியத்துக்குத் தலைவரா யிருந்தார். சக்கிரவர்த்திக்கு இவரிடத்தில் மகாப் பிரியமென்று சொல்லப்படுகிறது. ஜனங்களுக்கும் இவ



ரிடத்தில் அளவற்ற மதிப்புண்டு.

சுமார் முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன் ஐரோப்பியர்களால் பழிக்கப்பட்டு வந்த ஜப்பானியர் இந்தச் சொற்ப காலத்துக்குள் அவ்வைரோப்பியர்களாலேயே தங்களுக் கொப்பாக அங்கீகரிக்கப்பட்டதும், அவர்கள் ஜப்பானியருடைய நேசத்தையும் சகாயத்தையும் நாடி வருவதும், ஐரோப்பிய ராஜாங்கத்தாருள் வன்மையும் கீர்த்தியு மேறப்பெற்ற ஆங்கிலேயர்கள் சமீபகாலத்தில் பரஸ்பர உரிமைகளின் காப்பின் பொருட்டு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டதும், இப்பெரியோர்களது ஓயாக் கவலையாலும் சலிக்கா வுழைப்பாலு மன்றோ சாத்திய மாயின?

# CHAPTER XIV.

## பதினான்காம் அதிகாரம்.

*ஜப்பானின் வியாபாரம், அதன் பெருக்கும் தற்கால நிலையும்—இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் வித்தியாசம்—செயற்கைச் சரக்குகளை விருத்திசெய்ய முயற்சியும், சாதக பாதகங்களும்.*

ஜப்பான் தற்கால நிலைமையை யொட்டி ஐரோப்பிய தேசங்களைப்போல விருத்திக்கு வரத் தொடங்கிச் சொற்பகாலமே யானபடியால் அத்தேசத்தின் வர்த்தகம் விசேஷமா யதிகரித்திருக்காதென்று நம்புதல் கூடும். 1868-ம் வருஷத்தில் புது ஏற்பாடு ஸ்தாபனமான பொழுது, அதன் இறக்குமதி ஏற்றுமதி வியாபாரமானது சொற்பமாகவே யிருந்தாலும், படிப்படியாய் முப்பத்தைந்து வருஷங்களுக்குள்ளாக வொன்றுக்கு நான்கு பங்கு பெருகிப்போ யிருக்கிறதென்றால், ஜப்பானியர் ராஜாங்கச் சீர் உண்டா யிருக்கும் வேகத்தைப்போலவே வியாபாரத்தை விஸ்தரிப்பதிலும் ஊக்கங் கொண்டவர்களெனத் தெரிகிறது.

ஜப்பான் தேசம் விசேஷமாக இங்கிலண்ட், ஜர்மனி, அமெரிக்கா முதலான தேசங்களைப்போலச் செயற்கைச் சரக்குகள் (manufactures) செய்து அன்னிய தேசங்களுக் கனுப்புவ தில்லை யாகையாலும்,



புது நாகரிகத்தை யேற்க அத்தேசத்தாருக்கு ஐரோப்பியச் சாமான்கள் அதிகமாக வேண்டியிருந்தபடியாலும், தாங்கள் ஏற்றுமதி செய்யுஞ் சாமான்கள் குறைவாயும் இறக்குமதியாவன அதிகமாயுமிருந்து வருகின்றன. ஏற்றுமதி யிறக்குமதிகளி லிருக்கும் வித்தியாசத்தால் ஜப்பானியருடைய பணம் தேசத்தை விட்டு வெளித்தேசங்களுக்குப் போய் விடுகின்றது. இந்தியாவிலும் நம் தேசத்துப்பணம் இங்கிலண்டுக்கு வாரிக்கொண்டு போகப்படுவதாக இடைவிடாது நாம் முறையிடுகிறோம். ஆயினும் ஜப்பானைப்போ லல்லாது நமது ஏற்றுமதிச் சரக்குகளே யிறக்குமதிச் சரக்குகளைவிட அதிகப்படுகின்றன. நாம் வெளியேற்றுஞ் சரக்குகளும், நாட்டி லிறங்குஞ் சரக்குகளும் மதிப்பிற் சரிக்கட்டிப்போய்விட்டால் தேசத்துக்கு வெளிநாட்டு வியாபாரத்தால் சுகசௌக்கியங்கள் மேலிட்டுச் சுலபமாய்க் கிடைக்கக் கூடியவாயினும், பண நஷ்டம் நேரிடவில்லை யென்று பொருள்படும். அப்படிச் சரிக்கட்டாமல் ஜப்பானுக்கு வெளிநாட்டிலிருந்து அதிகச் சரக்குகள் வாங்கவேண்டி யிருப்பதால் அது வெளிப்படுத்துஞ் சரக்குகளின் மதிப்புக்கு மிஞ்சின இறக்குமதிகளின் மதிப்பானது அன்னிய வியாபாரிகளின் கையிற் றங்கு மாதலால், அது ஜப்பானின் பண நஷ்டத்தைக் காட்டும். அப்படியன்றி இந்தியாவைப்போல் வெளியேற்றுஞ் சரக்குகள் மதிப்பில் ஜாஸ்தியாகும்போது அந்த மதிப்பின்

தொகை நமது கைக்கிட்டேறுமானால் நமக்கு லாபந் தருவதாகும். உண்மையி லவ்வா றிட்டேறாமல் வெளி யேற்றுஞ் சரக்குகளின் மிஞ்சின மதிப்புத் தொகை யானது நாம் இங்கிலண்டுக்கு வருஷவாரி யனுப்ப வேண்டிய சுமார் 130 லக்ஷம் பவுனுக் கீடாக அங்கேயே நிறுத்திக்கொள்ளப்படுகிறபடியால், அவ் வளவும் நமக்கு நஷ்டமாய் விடுகின்றது.

ஜப்பான் தனது தற்கால நிலைமையில் திருப்தி கொண்டிராமற் செயற்கைச் சரக்குகள் செய்வதில் வெகு ஊக்கத்துடன் பிரவேசித்திருப்பதாற் சமீப காலத்தில் இப்பேர்ப்பட்ட செயற்கைச் சரக்குகள் வெளி யேற்றப்பட்டு அது லாபம் பெறு மென்பதிற் சந்தேக மில்லை. கீழ்த்தேசங்களி லொன்றாகையால், ஜப்பான் தன் னருகிலுள்ள கீழ்த்தேசங்களினுடனே தன் வியாபாரத்தை வளர்த்த லியல்பாகும். கப்பற் போக்குவரத்துச் செலவு ஐரோப்பிய தேசங்களுக்கு அதிகமாயும் ஜப்பானுக்குக் குறைவாயு மிருக்கு மாகையாலும், ஜப்பானில் வேலைக்காரர்களின் கூலி இந்தியாவி லிருப்பதுபோலத் தாழ்வாயிருப்பத[illegible] ஜப்பான் சரக்குகளை, கொரியா, சீனா, பிலிப்பைன் தீவுகள், இந்தியா, ஸைபீரியா, மஞ்சூரியா முதலான தேசங்களில் மலிவாய் விற்கமுடியும். குணத்திலும் அச்சரக்குகள் ஐரோப்பியச் சரக்குகளைவிட இளப்ப மா யிருக்குமென நினைக்க நியாயமில்லை. ஆயினும் ஐரோப்பிய, அமெரிக்க வியாபாரிகளுடன் போட்டி



செய்வதில், ஜப்பானுக்குத் தற்காலத்திற் சில தடைக ளிருக்கின்றன. புதிதாய் முன்வருந் தேசமாகை யால், வெகு காலமாய் வியாபாரத்திற் றேர்ச்சி பெற்று வந்திருக்குந் தேசங்களைப் போல யந்திரப் பிரயோக முதலான தந்திரங்களில் இன்னும் பிற்பட்டே யிருக் கின்றது. ஜப்பானிய வேலைக்காரர்களும் தக்க படிப் பும் அநுபோகமு மில்லாதவர்களானபடியால் மேற் றேசத்துவேலைக்காரர்களைப் போலக் குறுகிய காலத் தில் பெருகிய வேலைசெய்தல் சாத்திய மல்ல. அப்படிச் சாத்தியமாவதற்கு இரண்டு மூன்று தலைமுறைகளா வுஞ் செல்லும். அக்காலம் வருகிறவரையில் ஜப்பா னியர் அரைகுறையாய்ச் செய்த சரக்குகளையே வெளி யேற்றல் லாபந்தரத் தக்கதென்று அமர்ந்து கொள்ளு வர். ஜப்பானில் நிலக்கரி விசேஷமாகக் கிடைக்கின் றது. ஏகாதிபத்தியமும் பற்பல தீவுகள் சேர்ந் தமைந்ததா யிருப்பதால் நீர்வழியாகவே சரக்குப் போக்குவரத்துச் சுலபமாகின்றது. இந்தச் சாதகங் களால் [illegible]த்து வருடங்களுக் குள்ளாகப் பஞ்சுச் [illegible]கள் செய்யுந்தொழில், பம்பாயில் விருத்தியா யிருப்பதுபோல, ஜப்பானில் விருத்தியாயிருக்கின்றது. ஜப்பானுக்கும் ஆஸ்திரேலியாவுக்குஞ் சீக்கிரத்தில் வியாபார சம்பந்தம் நிலைக்கும்படியா யிருக்கிறது. தற் காலத்தில் ஆஸ்திரேலியாவிலிருந்து விசேஷமான உரோமமும் உரோமச் சரக்குகளும் [wobl and.

woollen goods) ஜப்பானுக்கு வருகின்றன. இவை களுக்குப் பதிலாக ஜப்பானியர் தங்கள் கடலோரங் களிற் கிடைக்கு மேராளமான மீன்களை ஆஸ்திரே லியாவி லுணவுப்பொருளாக அனுப்ப அவசியமான ஏற்பாடுகள் செய்துகொண் டிருக்கிறார்கள். ஜப்பா னுக்கு வடக்கேயுள்ள ஸைபீரியா வென்ற விஸ்தார மான நாட்டில் தற்காலம் ருஷியாவிலிருந்து வருஞ் சரக்குகளை விட ஜப்பானியச் சரக்குகள் விலை சரச மாக விற்கப்படக் கூடியனவென்று கருதி, அந்தப்படி நிறைவேற்றவும் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. சமீபத்தில் ஜப்பானியர் சிலர் ஸைபீரியா வியாபாரம் பெருகும்படி என்ன வுபாயங்கள் செய்யலாமென்று சோதித் தறியுமாறு அங்குச் சென்று தங்க ளபிப் பிராயங்களையும் வெளியிட் டிருக்கிறார்கள். வெகு காலமாக ஸ்பெயின் ராஜாங்கத்தாரின் கொடுமைக ளால் சோர்ந்து மெலிந்து வந்த பிலிப்பைன் தீவார் அவைகளைச் சகிக்கமாட்டாது சமீபத்திற் கலகஞ் செய் தெழும்ப, அத்தீவாருக் குதவியாக அமெரிக்கர் பிர வேசித்து ஸ்பானியரையடித்துத் துரத்தி அத்தீவைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டு, அத்தீவாரின் ஐசு ருட்பெருக்கத்தைத் தூண்டுவதையே தங்கள் கடமை யாகக் கருதியிருத்தற் கிசைய, அத்தீவில் தொழில் வி ருத்தியின் பொருட்டு வருஷம் ஒன்றுக்கு ஐம்பதி னாயிரம் டன் நிலக்கரி ஜப்பானிய ரனுப்புவதாக அவர் களோ டுடன்படிக்கை செய்திருக்கிறார்கள். தற்காலம்



பிலிப்பைன் தீவின் முக்கிய ஸ்தலமாகிய

வில் ஜப்பானிய காரியஸ்தரொருவ ரிருந்து தம் தேச வியாபாரப் பெருக்கத்துக் கவசியமான முயற்சி கள் செய்து வருகிறார். மொத்தத்தில் கீழ்த்தேசங்க ளின் வியாபாரத்தை ஜப்பானியரே தங்க ளுரிமை யெனச் சாதிப்பாரென்று நினைக்க நியாய மிருக்கின் றது. அதை மீறி ஐரோப்பிய தேசத்தார் தங்க ளுரிமைகளை நாட்டப்பார்த்தல் தீங்காய் முடியும்.

## CHAPTER XV.

## பதினைந்தாம் அதிகாரம்.

***காலத்துக் கிணங்கக் கல்வி யபிவிர்த்தி செய்ய ஜப்பானியரின் முயற்சிகள்—ராஜாங்கச் செலவில் ஜப்பானியர்களை வெளித் தேசங்களுக் கனுப்பியதும், புது வித்தியாசாலைகள் ஸ்தாபித்ததும்—அன்னிய ருதவியை நாளடைவிற் குறைத்துச் சுதேசிகளை முற்படுத்தினது, இவ்விஷயத்தில் இந்தியாவில் மாறுபாடு.***

இதுவரையில் ஜப்பான் சரித்திரத்தைச் சுருக்கமாய்ச் சொல்லிவந்ததில், அத்தேசத்தார் அவர்களது சக்கிரவர்த்தியே தெய்வமாகக் கருதிப் பூசித்து நடந்துவந்ததாலும், பொதுவாய் மேல்வகுப்பார் கீழ் வகுப்பார் சகலரும் தம் சுய நன்மையை நாடாமல் தேசப் பொது நன்மையையே முக்கியமாய் மனதிற்கொண்டு ஒருமைப்பாடுடன் உழைத்துவந்ததாலும், பூர்வீக வழக்கங்களையும் கொள்கைகளையும் காலத்துக்குத் தக்கபடி அவசியமானமட்டும் மாற்றிவந்ததாலும், அத்தேசத்தார் தற்கால நிலைமையை யடைந்தாரென்று விளங்க வைக்க முயன்றோம். ஆயினும் எப்பேர்ப்பட்ட நற்குணங்கள் அமைந்திருந்தாலும், கல்விப் பயிற்சியால் பகுத்தறிவும் தீர்க்காலோசனையும் உண்டாகி அக்குணங்களைத் தக்கவாறு பிரயோகப் படுத்தாவிட்டால் அவைகள் பயன்படாதனவாகும். இந்த உண்மையை யறிந்து புது ஏற்பாடு நிலை பெற்ற நிமிஷத்திலேயே ஜப்பானியருக்குத் தற்காலத்



துக் குற்றபடி எவ்விதம் கல்வி பயிற்றுவிக்கலாமென்று ராஜதந்திரிகள் சிந்திக்கலாயினர்.

ஜப்பானின் சரித்திரம் உலகத்து அன்னியர் சம்பந்த மில்லாமல் எப்போதும்போல் தனித்து வளர்ந்தா யிருந்தால், அத்தேசத்தார் பெற்றுவந்த கல்விப் பயிற்சி எப்போதும் போதுமானதாகும். ஆனால் அன்னியதேசங்களுடன் சம்பந்தத்தைப்பூர்த்தியாயேற்று தலைத்தேசங்களோடு ஒரு தேசமாக விளங்கிவரும் பெருமையையும் பொறுப்பையும் ஜப்பான் ஏற்றபடியால், அவற்றைத் தாங்கி நிருவகிப்பதற்குத் தகுந்த சாதனமுறைமைகளமைந்த கல்விப் பயிற்சி அவசிய மாயிற்று. இந்தியாவிலும் அப்படியே அவசியமா யிருக்கிறதல்லவா? இந்தியருக்கு ஆங்கிலேயர் சம்பந்தமும் அவர்கள் சம்பந்தமாக மற்ற உலகத்தாரது சம்பந்தமும் ஏற்பட்டிராவிட்டால் நாம் நம் முன்னோரது கல்வியையே கற்றுவருவோமல்லவா? தற்காலம் இந்தியர்கள் ஆங்கில பாஷையைத் தங்கள் தாய்ப்பாஷையைவிட அதிகக் கருத்துடன் கற்று ஆங்கிலேயருக்குச் சமானஸ்தர்களாக முயலுதலும், தேசத்தில் அழிந்துபோய்க்கொண்டுவரும் பற்பல தொழில்களைப் பிழைப்பிக்குமாறு தொழிற் படிப்பு வேண்டுமென்று நாம் ஆசைப்படுவதும், நம் தேசத்து வியாபாரம் முழுமையும் ஆங்கிலேயர் வசப்பட்டு நம் பொருள் அபரிமிதமாக அன்னிய தேசத்திற்குக் கொண்டுபோகப்படுவதைக் கண்டு துக்கித்து அந்த வியாபாரம் எல்லாத் தேசத்திலு முள்ளது

போலத் தேசவாசிகளாகிய நம் கையில் இருக்க வேண்டுமென்று கோருவதும், நமக்கு அன்னிய நாட்டார் சம்பந்த முண்டான காரணத்தா லல்லவோ?

ஜப்பானில் அன்னியநாட்டார் பிரவேசிக்க ஆரம்பமானதுமுதல் ஜப்பானியருக்கு இந்தியரைப்போலவே அன்னிய நாட்டார் சரக்குகளை யுபயோகப்படுத்தவேண்டுமென்ற விருப்ப முண்டாயிற்று. நாட்டிற் செய்த சரக்குகளிடத்தில் பிரியம் குறைந்து வெளிச் சரக்குகளையே வாங்கி உபயோகிக்கத் தலைப்பட்டனர். நாட்டுத் தொழிலாளிகளுக்கு இதனால் தொழில் போனதுமன்றி, ஜனங்கள் விரும்பும் சாமான்களை யவர்கள் விருப்பப்படி செய்து கொடுக்கத் தெரியாதவர்களா யிருந்தபடியால், அநேகமா யெல்லாச் சாமான்களும் அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியவாயின. ராஜாங்கத்தாருக்குத் தேவையான யுத்தத்தளவாடங்கள் முதல் சாமானியக் குடியானவனுக்கு வேண்டிய அற்ப வஸ்துக்கள் வரையில் அன்னியரால் செய்யப்பட்டுத் தருவிக்க வவசியமானால், ஜப்பானில் தொழில்கள் நசித்து, இந்தியாவைப்போல் வறுமையே குடிகொள்ளுமென்று தேசாபிமானிகள் கவலைகொண்டு, எப்பொழுது ராஜரீக முறைமைகள் ஐரோப்பிய மாதிரிகளைப் பின்பற்றி அமைக்கப்பட்டனவோ,



அப்பொழுதே ஜனங்களது க்ஷேமாபிவிருத்திக்கு வேண்டிய வியாபாரம், வர்த்தகம், தொழில் முதலியவைகள் சம்பந்தமான முறைமைகள் அம்மாதிரிகளையே பின்பற்றி ஏற்பட்டாலன்றி, ராஜரீக முறைமை ஒருபாலும் ஜனங்களின் க்ஷேமலாபங்களின் பெருக்கம் ஒருபாலுமாய்ப் பேதப்பட்டு, சமூகப்பொதுநன்மைக்குத் தடைகள் நேரிடுமென உணர்ந்து, ராஜரீக முறைமைக்கொத்தவாறு ஜனங்களின் பொருளாதாரப்பெருக்க முறைமையை மாற்றுவதே யுசிதமெனத் துணிந்தனர்.

துணிந்து வீண்கால தாமதம் செய்யாமல், தேசத்திலுள்ள முதியோர், இளைஞர் இருவகுப்பாரிலும் தக்கவர்களைப் பொறுக்கி, ஐரோப்பிய நாடுகளுக்கு ராஜாங்கச் செலவில் அனுப்பி, அங்கு உயர்தர நூற்பயிற்சியையும் சாஸ்திர ஆராய்ச்சியையும் பொதுநாகரிகத்தையும் உத்தேசித்து நாட்டப்பட்டிருக்கும் ஸ்தாபனங்களை யறிந்துகொண்டு அவைகளை ஜப்பானிற் பெயர்த்து நட நிச்சயித்தனர். அவ்வாறே செய்து ஜப்பானில் சொற்பகாலத்தில் புதிய அநேக வித்தியாசாலைகள் ராஜாங்கத்தார் செலவில் ஸ்தாபிக்கப்பட்டு வந்தன. ராஜாங்கத்தாருக்கு வேண்டிய விலைபெற்ற பெரும் சாமான்களைச் செய்யும்படியாக அநேக தொழிற்சாலைகளை, அவைகளால் உண்டாகும் செலவையும் அவைகளை நடத்தும் கஷ்டத்தையும் கவனிக்காமல், ராஜாங்கத்தாரே ஸ்தாபித்தனர். ஆரம்பத்தில் ஐரோப்பியக் கல்விமான்களுடைய ஒத்தாசை அவசியமா

யிருந்தபோதிலும், ஜப்பானிலிருந்து வெளிப்போன புத்திமான்கள் திரும்பிவரவர ஐரோப்பியர்களுடைய ஒத்தாசை அனாவசியமாயிற்று. எங்கெங்கு ஐரோப்பிய வித்வான்களை நியமித்தல் அவசியமோ, அங்கங்கு, ஜர்மனி, இங்கிலாண்டு, பிரான்ஸு, அமெரிக்கா, கொரியா, ருஷ்யா, இடலி, முதலான இடங்களிலிருந்து பெரும் சம்பளங்கள் கொடுத்து வரவழைத்து நியமித்தனர். 1899-ம் வருஷத்தில் ஜப்பான் வித்தியாஸ்தாபனங்களில் இவ்வாறு 52 அன்னியர்கள் ஆசிரியர்களாயிருந்தனர். அன்னியர்களைத் தம் நாட்டில் நியமித்து அத்துடன் ராஜாங்கத்தார் சும்மா விருந்துவிடவில்லை. ஜப்பானியப் போதகர்கள் பலரைத் தெரிந்தெடுத்து ஜர்மனி முதலான அன்னிய நாடுகளுக் கனுப்பினர். வித்தியார்த்திகளான சிறுவர் பலரையும் அவ்வாறே யனுப்ப, 1900-வருஷம் மார்ச்சுமாதக்கடைசியில் 100 ஜப்பானியர்கள் வரையில் அன்னிய நாடுகளில், முக்கியமாய் ஜர்மனியில், கல்வி கற்பவர்களாயிருந்தனர். ஆகையால் கால அளவில், ஜப்பானியப் போதகசாலைகளில் அன்னிய உபதேசகர்களைக் குறைத்து ஜப்பானியர்களையே நியமித்தல் சாத்தியமாயிற்று. இவ்வாறு ஜப்பானிய ராஜாங்கத்தார் மேனாடுகளைப்போல உயர்தர சாஸ்திரங்கள் கலைகள் முதலியவற்றை ஜப்பானியருக்கே கற்றுக்கொடுத்து, அவர்கள் மூலமாகவே பொருளாதாரநிலைச் சிறப்பிற்குச் சாதகங்களை யுண்டாக்கிவரும் நெறியானது, தற்
ப்பிய நாட்டார். பலரும் அமெரிக்கா, ச



நாட்டார்களும் தொடர்ந்துவரும் நெறியை யன்றி வேறல்ல.

எப்படி பிரதி மனிதனும் முக்கியமாய்த் தன் முயற்சியினாலேயே முன்னுக்குவருதல் சாத்தியமோ, அப்படியே எந்த ஜனமும் தம் சொந்த முயற்சியினாலேயே பெருமை யடையவேண்டியதென்கிற உண்மையை ஜப்பானியர் முற்றிலும் உணர்ந்தனராயபடியால், தம் தேசத்தாரை மூடர்களாக்கிவிட்டு அன்னியர்கள் தேசத்துப் பொருளையும் அறிவையும் சாமர்த்தியத்தையும்கொண்டு ஜப்பானின் மூலங்களைப் பண்படுத்தி விரித்துக் கிடைக்கும் ஊதியங்களை யவர்களே கொண்டுபோக, தேச ஜனங்கள் அன்னோர் கைக்கீழ் வேலைக்காரர்களாக அமர்ந்து பெறும் கூலிகளே போதுமென்று திருப்தியடைய மனமொப்பவில்லை. இந்தியாவை யாண்டுவரும் பிரிட்டிஷார் எந்த நோக்கங்களைக் கொண்டோ, அல்லது எந்தக் காரணங்களாலோ, இந்தியர்களுக்கு அவசியமான மேற் படிப்பு சொல்லிவைக்காமல், இந்தியர்கள் பிரவேசித்து நடத்த வேண்டிய தொழில்களை யன்னியர்கள் செய்யவும், இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்து அங்கேயே மரிக்கும்படியான இந்தியர்களுக்கே சொந்தமா யவர்களே அனுபவிக்கப் பாத்தியம்பெற்ற இந்தியப்பொருள்களை யந்த அன்னியர்கள் வாரிக்கொண்டு போகவும், மனம் நோகாமல் பார்த்து வருகிறார்கள்.

இந்த விபரீதமான அரசு முறையா லல்லவோ தற்காலம் இந்தியர்கள் தாம் உபயோகப்படுத்தும் சகல சாமான்களும் அன்னிய நாட்டார் செய்தனுப்ப, அவைகளை விலைக்கு வாங்கவேண்டியவர்களாகி வழியோ ராகிறார்கள்? இவ்வாறு அவர்கள் விலைக்கு வாங்க நேரிடும் சாமான்கள் நம்மாலேயே செய்யக் கூடினவைகளே யன்றி, வெளியினின்று வரவேண்டியவைகளாக வில்லை. இந்தியா மகா விஸ்தாரமான தேசமாயிருப்பதுமன்றி, 30 கோடி ஜனங்கள் வசிக்கிற தேசமாயு மிருக்கின்றது. மேலும் சீதோஷ்ண வேற்றுமைகளும், பூசாரங்களின் ஏற்றத் தாழ்வும் நீர்வளம், நிலவளம், பலவும் இந்தியாவின் விஸ்தாரமான எல்லைகளுக்குள் இயற்கையாகவே யமைக்கப்பெற்றிருக்கிறபடியால், இங்கே யுண்டாகக்கூடிய பதார்த்தங்கள் சிலவும் வெளியிலிருந்தே சிலவுமாக வித்தியாசம் நேரிட்டிராமல், இந்தியர்களாகிய 30 கோடி ஜனங்களுக்கும் அவசியமான உடைமைப் பொருள்களென்ன, சரீர சுக சௌக்கியங்களுக்குரிய சாமான்களென்ன, மனதில் இன்பத்தை யுண்டாக்கும் கலாஞ்ஞான பிரயோகத்தால் நிருமாணிக்கப்படும் அருமையான விசித்திர சாமான்களென்ன, இவைகளனைத்தும் செய்ய அவசியமான சகல இயற்கைப் பொருள்களும் இந்தியாவிலேயே கிடைக்கக்கூடியன. ஜனங்களோ கேவலம் மந்தபுத்தி யுள்ளவர்களல்லர். சுமார் 150 வருஷங்களுக்கு முன்னால், பிரிடிஷ் தேச



புகுந்து தமது (இந்தியர்) தொழில்கள், வித்தைகள், ஆகிய பொருள் மூலங்களனைத்தையும் அழித்ததற்கு முற்பட்ட காலத்தில், இந்தியர்கள் தங்களுக்கு அவசியமான சகல தொழில்களையும் வித்தைகளையும் பெற்று உலகத்தோரனைவராலும் புகழப் பெற்றிருந்தனரேயன்றி, கேவலம் மிலேச்ச ஜாதிகளைப்போலக் காட்டிற் காய் கிழங்குகளைப் பறித்தும் மிருகங்களைக் கொன்றும் தின்று பிழைத்தன ரல்லர். ஆகையால் பிரிடிஷ் ராஜாங்கத்தாருடைய ஒற்றுணர்ச்சியும் ஒத்தாசையும் கிடைக்குமானால், மறுபடியும் இந்தியர்கள் முன்போலத் தங்களுக்கு அவசியமான பொருள்களைத் தக்க தொழில்களைச் செய்து தாமே பெற்று அனுபவிப்பதிற் சந்தேகமில்லை.

இந்த விஷயத்திலும் இந்தியாவின் நிலைமையைப் பார்த்து ஜப்பானியர் விவேகிகளாயினர். ஜப்பானியரையே தக்கபடி பயிற்சி செய்வித்து, அவர்களைக் கொண்டே வேண்டிய சகல சாமான்களையும் செய்வித்து நாட்டுத்தொழில்களை வளர்த்து, அவைகளாலுண்டாகும் லாபங்களை ஜப்பானியர்களே யனுபவிக்க வல்லவர்களாக்கித், தேசத் துபயோகத்திற்கு வேண்டிய பொருள்கள் போக மிகுந்தவைகளை யன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்து, அவ்விதமாயும் தேசத்திற்கு லாபத்தை யுண்டுபண்ணி, ராஜாங்க விஷய

மாய்த் தேசசுவாதீனத்தை ஸ்தாபித்ததுபோலப் பொருட் பெருக்கச் சம்பந்தமாயும் தேசமானது அன்னியரை யண்டியிராமல் சுவாதீனத்தைப்பெறச் செய்யாவிட்டால், இந்தியாவைப்போலவே ஜப்பானும் தரித்திர ஸ்திதியை யடையுமென்று தேசாபிமானிகள் தேர்ந்து அந்தப் பெரும் நோக்கம் கைகூடுமாறு சகல முயற்சிகளையும் செய்து வருகிறார்கள்.

# CHAPTER XVI.

## பதினாறும் அதிகாரம்.

கீழ்த்திசையில் ஜப்பானின் உன்னதம்—மேனாட்டாருக்குத் தடையாயும் கீழ்நாட்டாருக்குக் காப்பாயும் ஜப்பான் இருப்பதும், அதன் நியாயமும் பொருத்தமும்—இப்படி இருப்பதில் ஜப்பானுக்குள்ள இயற்கை வசதிகளும் சாதகங்களும்.

ஐரோப்பிய ஜாதியாரும் அமெரிக்கரும் தங்கள் பேராசையால் உலகெங்கும் மேன்மை பெற்று அதிகாரத்தை ஸ்தாபித்திருக்கின்றனரென்று சொன்னோம். ஏஷியாவைச் சேர்ந்த பர்ஷியா, இந்தியா, ஸையாம், சீனா, பஸிபிக் தீவுகள் இவைகளில் அவ்வாறே தங்களதிகாரத்தை ஸ்தாபித்து அத்தேசங்களை ராஜ்யமுறையிலும் வியாபாரத்திலும் ஆக்கிரமித்திருக்கின்றனர். இருந்தும், தற்காலம் ஜப்பான் அடைந்திருக்கும் வலிமையும் செல்வாக்கும் ஐரோப்பியர்களது பேராசையைக் கட்டுப்படுத்த, ஜப்பானியர் அக்கம் பக்கத்திலிராயுள்ள மேற்குறித்த தேசத்தார்களுக்குள் தங்களுக்குரிய மேம்பாட்டுக்குக் குந்தகமின்றிக் காத்துவருகின்றனர். ஐரோப்பியர்களை புகுந்து இத்தேசங்களிலுள்ள சகல பொருள்மூலங்களையுமபகரிப்பாராயின் ஜப்பானியருக்கு நியாயமாய்க் கிடைக்கக்கூடிய லாபங்களும் பெருமையுங் குறையுமாகையால், இத்தேசங்களின் சார்பாக ஜப்பானியர் தலையிட்டு அவைகளைக் காத்தல் அவர்களுடைய க

மையாகச் செலுத்தப்படுகின்றது! இந்த எண்ணத்தைக்கொண்டே, பிரிட்டன், ஜர்மனி, ருஷியா, அமெரிக்காவாகிய தேசங்கள் மற்றக் கீழ்ப்பட்ட தேசங்களிற் றலையிட்டுத்தங்கள் தங்க ளதிகாரத்தையே ஸ்தாபிக்கப் போட்டிபோட்டுப் போராடி வருகின்றனர். ஈஜிப்டைப் பிரிட்டிஷார் கைக்கொண்டனர். பெர்ஷியாவில் ருஷியர் பிரவேசித்து அனேகமா யதைத் தங்களுக் குட்படுத்திவிட்டன ராயினும், பிரிட்டிஷார் தங்களுடைய அதிகாரமு மங்கு நிலைக்கவேண்டுமென்று ருஷியரோடு மன்றாடி வருகின்றனர். அங்ஙனமே மகாவிஸ்தாரமான சீன ஏகாதிபத்தியத்திலும் ஐரோப்பாவின் முக்கிய ராஜாங்கத்தார் அனைவரும் அமெரிக்கரும் சமமான ஆதிக்கத்தை நாட்டி, அதனுரிமைகளைச் சின்னபின்னப்படுத்தி வருகின்றனர். தங்களுக்கு வெகு தொலையிலுள்ள வித்தேசங்களிற் பிரவேசித்த ஐரோப்பியர் தங்களது சைன்னிய பலத்தாலும் நாகரிக முதிர்ச்சியாலும் நியாய முண்டென்று சாதிக்கும்பொழுது, ஸையாம், சீனு; பிலிப்பைன் தீவுகள், கோரியா வாகிய இவைகள் ஜப்பானைக் கருகாமையி லிருப்பனவுமன்றி, இத்தேசங்களின் சரித்திரங்களிலும் நாகரிக வளர்ச்சியிலும் ஆதிமுதல் ஜப்பானியர் சம்பந்தம் பெற்றிருக்கிறபடியால், ஜப்பானியருக்கு ஐரோப்பியர்களைவிடப் பலமான நியாய முண்டென்று வாதிப்பது ஒக்குமெனல் வேண்டும். மற்ற முதலந்தஸ்து பெற்ற ஜாதியாருடன் ஜப்பா



னிய - ருடன்படிக்கை மூலமாய் ஏற்கெனவே சுதந்தரம் பெற்றிருக்கின்றனர். ஆகையால் ஐரோப்பியர்களுக்குள்ள இவர்களுக்கு முள்ள தன்றோ? ஐரோப்பியர்கள் தங்களுக்குள்ளேயே செய்துகொள்ளும் விவகாரங்களில் ஜப்பானியர் தலையிட நியாயமில்லை யாயினும், கீழ்த்திசை நாடுகளி னுரிமைகள் சம்பந்தமான பிரசினைகளைப்பற்றி, ஜப்பானியர் பேச முதன்மையான பாத்தியம் பெற்றிருக்கிறார்கள்.

ஆதிகாலம் தொட்டு, கீழ் ஆஷியாவின் முக்கியமான தேசங்களாகிய இந்தியா, சீனு, பர்மா, ஸையாம், திபெத், கொரியா, முதலான நாடுகளின் நாகரிகத்துக்கும் மதக்கோட்பாடுகளுக்கும் ஜப்பானுடைய நாகரிகத்துக்கும் மதக்கோட்பாடுகளுக்கும் நேர் சம்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. மேற்சொன்ன தேசங்களில் இந்தியாவைத் தவிர மற்ற நாடுகளில் பௌத்த மதம் பிரபலமா யிருக்கின்றது. ஏற்கெனவே இந்த நூலில் நாம் சொல்லியிருக்கிறபடி, பௌத்தமதம் இந்தியாவில் உற்பத்தியானது. முதலில் சீனு தேசத்தார்கள் இந்தியாவுக்கு வந்து பௌத்த மதாசாரியர்களிடத்தில் உபதேசம் பெற்றும், அம்மதம் செழித்து வந்த முக்கிய ஸ்தலங்களைக் கண்டும், பௌத்த கிரந்தங்களைச் சேகரித்துக்கொண்டும் போயினர். சீனுவில் பௌத்தமதம் ஸ்தாபிக்கப்பட, அங்கிருந்து கொரியாவுக்கும், கொரியாவிலிருந்து ஜப்பானுக்கும் அது வியாபித்து மேலே குறிக்கப்பட்ட மற்றத் தேசங்

களிலும் நிலைபெற்றது. ஆகையால், எப்படி ஐரோப்பிய ராஜாங்கத்தார் கிறிஸ்து மதத்தைத் தழுவினோர்க்குக் காவலராகி, அந்தக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களல்லாதவர்களால் இடுக்கணுறும்போது, பரிந்து முன் வருகிறார்களோ, அவ்வாறே ஜப்பான் தேசம் பௌத்தமதத்தைத் தழுவிவாழும் தேசத்தாருக்குத் தான் காவலனாக முன் வரலாமல்லவா? கிறிஸ்துமதப் பிரவேசமுள்ள நாகரிகத்தை யெப்படி ஐரோப்பிய ஜாதியார் ஆதரிக்கச் சுதந்தரம் கூறுகிறார்களோ, அப்படியே கிறிஸ்தவ நாகரிகத்தைவிட எவ்வளவு நூற்றாண்டுகளோ புராதனமான ஹிந்து, பௌத்த மதங்கள் பிரவேசமான கீழ் ஏஷிய நாகரிகத்துக்கு ஜப்பானியர் ஆதரிப்போராகப் பாத்தியம் கொண்டாடலாம்.

மேலும் மேற்குறிப்பிட்ட தேசங்களுக்கும், ஆஸ்ட்ரேலியா, பிலிப்பைன் தீவுகள்போன்ற பஸிபிக் சமுத்திரத் தீவுகளுக்கும், ஜப்பான், ஐரோப்பிய தேசங்களைவிட, வெகு சமீபமாயிருக்கின்றது. நெருக்கடியான சமயங்கள் நேரிட்டால், ஜப்பான் சடுதியில் முன்வந்து ஆபத்து விளையாமல் காக்கக்கூடியதுபோல, பிரிடிஷ் நாட்டினாலாவது அமெரிகாவினாலாவது முடியாது. ஆகையால், கீழ்த் தேசங்களில் உரிமைகளை நாட்டியிருக்கும் ஐரோப்பிய ராஜாங்கங்களுக்கு ஜப்பானின் சகாயம் விரும்பத்தக்கது. பிலிப்பைன் தீவுகள் இப்போது அமெரிக்காவின் ஆதீனமாகிவிட்டன.



அவைகளின் ராஜாங்கஸ்தானம் மானிலா (Manilla) என்பது. மானிலாவுக்கும் அதற்குச் சமீபமான அமெரிக்கத் துறைமுகமாகிய ஸான் பிரான்ஸிஸ்கோ (San Francisco) வுக்கும் 14 முதல் 20 நாள் கடல் யாத்திரையுண்டு. அவ்வாறே இங்கிலண்டுடன் சம்பந்தப்பட்ட ஆஸ்ட்ரேலியாவுக்கு நேரிட்ட சமயங்களில் ஆங்கிலக் கடற்படைகள் வரவேண்டுமானால், எப்போதும் அப்படைகள் வைக்கப்பட்டிருக்கும் தென்னாபிரிகா, கனடா, இங்கிலண்ட் முதலான இடங்களிலிருந்து வரவேண்டும். ஜப்பானிலிருந்தோ 10-நாளில் கப்பல்கள் வந்துவிடக்கூடும். இந்தோ-சீனா (Indo-China)வென்கிற பிரதேசத்தில் பிரான்சியருக்குச் சுதந்தரங்களுண்டு. அவர்களும் ஜப்பானியரை விடத் தூரத்திலிருக்கிறார்கள். இவ்வாறு மேற்கத்தி ராஜாங்கங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கும் கீழ் ஏஷிய நாடுகள் ஜப்பானுக்கு அருகாமையிலிருப்பது அதற்கு அனேக சௌகரியங்களுக்குக் காரணமாயிருக்கின்றது.

இதுவுமன்றி, ஜப்பானுடைய படைப்பலம் தற்காலம் விசேஷமாக வளர்ந்திருக்கின்றது. இங்கிலண்டைப்போல ஜப்பான் சமுத்திரத்தால் சூழப்பெற்ற தீவுகள் அடங்கிய தேசம். அன்னியர்கள் அதைத் தாக்கி வெற்றிபெறுவது கஷ்டம். ஜப்பானியருக்கு, பிரிடிஷாரைப்போல, கடற்படையே முக்கியமானது. இந்தக் கடற்படையைச் சமீபகாலத்துக்

குள்ளாக ஜப்பானியர் பலப்படுத்திவிட்டார்கள். உல
கத்தில் இங்கிலண்டைவிட வேறெந்தேசமும்,
அமெரிக்கா கூட, இந்த விஷயத்தில் ஜப்பானி
யருக் கீடல்ல. ஜப்பான்மீது அன்னியர்கள் படை
யெடுக்காமல் காக்க, எப்படியோ, அப்படியே
கடலைத் தாண்டி அன்னிய நாட்டாருடன் வியாபாரம்
நடத்தவும், ஜப்பானுக்குக் கப்பற் படைப்பலம்
விசேஷமாக வேண்டும். அப்படி யில்லா விட்டால்,
மற்றத் தேசத்தாருடன் போட்டிபோட்டுச் சமாளித்
தல் முடியாது. அமெரிக்கா, பிரான்சு, ருஷியா, ஜர்மனி,
எல்லாத் தேசங்களும் தங்கள் தங்கள் கடற்படை
களை யதிகரித்துக்கொண்டு வருகின்றன. இங்கிலண்
டோ, கடற்படையே தன் ஜனத்துக்கு உயிர்நிலை
யென்று நம்பி, அன்னியர் புதிதாகப் பத்துக் கப்பல்
செய்தால், தான் இருபதுகப்பல் செய்கின்றது. இப்
படி அன்னிய தேசத்தார் செய்வதைப் பார்த்து, அவ
ருக்குச் சரிசமானமான பதவியை யெட்டிப்பிடித்த
ஜப்பானும் அப்படியே செய்யக் கடமைப்பட்டு
வெகு பணம் செலவுசெய்து முதற்றரமான போர்க்
கப்பல்கள் செய்திருக்கின்றது. தங்கள் தேசத்தை
யடுத்த கடலாகிய பஸிபிக் கடலில் தங்களைவிட உயர்வு
பெற்றோரிருத்தல் கூடாதென்று, சக்கிரவர்த்தி முதல்
சாமானிய ஜனங்கள் உள்பட, எல்லோரும் உற்சாகத்
துடன் மனங்கலந்து வேண்டியவைகளைச் செய்து
வருகிறார்கள். சமீபத்தில் ஜப்பான் கடற்படைகளை



யணிவகுத்துச் சக்கிரவர்த்தியானவர் பார்வையிட்ட
போது, அச்சமயம் கூடவிருந்த ஆங்கிலேயர் முத
லான பல தேசப் பிரதிநிதிகளும் அப்படைகளின்
தோற்றத்தையும், பலத்தையும், அவைகளை நடத்து
வதில் ஜப்பானியத்தலைவர் காட்டின சாமர்த்தியத்தை
யும், பொதுவாய் விளங்கின தேசாபிமானத்தையும்,
வாய் கொள்ளாமற் புகழ்ந்தார்கள்! இதற் கேற்றாற்
போல், ஜப்பானில் வேண்டிய நிலக்கரி யகப்படுகின்ற
தாம். நிலக்கரி யில்லாமல் புகைக்கப்பல்கள் ஓடமாட்
டாவல்லவா? அன்னிய நாட்டாருக்குப் பஸிபிக் கட
லில் கப்பல்களுக்காகக் கரி வேண்டியிருக்கும் பட்சத்
தில், ஜப்பான் வேண்டுமான கரி கொடுக்கச் சித்தமா
யிருக்கின்றதாம். அமெரிக்கக் கப்பல்கள் பஸிபிக்
கடலி லிருக்கும்போது கரி செலவாய்விட்டால், எங்
கிருந்து கரி கொண்டுவர முடியும்? ஜப்பானுடைய நேச
மிருந்தால், அதைச் சொற்ப காலத்தில் தருவித்தல்
கூடு மல்லவா? இந்த சௌகரியத்தையுத்தேசித்தே
யேற்கென்வே யிவ்விஷயமா யிவ்விரு தேசங்களுக்கும்
ஒரு உடன்படிக்கை யேற்பட்டிருக்கிற தென்பதை
முன்னொரு அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

இப்படிக் கப்பற்படையில் பலம் பெற்றிருப்பது
மன்றித், தரைப் படையிலும் ஜப்பான் பிற்பட்டிருக்க
வில்லை. எந்த நிமிஷத்திலும் 5 லட்சம் துருப்புக்கள்
சண்டைக்கு ஆயத்தப்படுத்தக்கூடும். போவர்களைப்
போல ஜப்பானியரும் மகா சுறுசுறுப்புடன் இடம்

விட்டு இடம் பெயரும் சாமர்த்தியங் கொண்டவர்கள். சீனாவில் 1901-வருஷம் நேரிட்ட பாக்ஸர் கலகத்தில் ஜப்பானியத் துருப்புக்கள் காட்டின சௌரியத்தை ஐரோப்பியர்களும் பார்த்து வியந்தார்கள் அவர்களுடன்கூடிக் கலகத்தை யடக்கப் போர்செய்த ஐரோப்பிய ராஜாங்கத்தார்மட்டும் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் இஷ்டப்படி செய்வதில் அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி யிராவிட்டால், இன்னும் அவர்கள் சாமர்த்தியத்தைக் காட்டியிருப்பார்கள். அவ்வளவு பயிற்சியும் சௌரியமு முள்ள சைனியமானது கடலாற் சூழப்பட்ட ஜப்பானைக் காக்க உள் நாட்டில் வேண்டியிரா தாகையால், முழுமையும் அயல் நாடுகளில் உபயோகப்படுதல் சாத்திய மாகும். ஜப்பானைச் சத்துருக்கள் தொந்தரவு செய்யாமற் கப்பற்படைகள் கடலிற் காக்கு மாகையால், தரைப்படைகள் பஸிபிக் கடலோரத்து நாடுகளில் எங்கேனும் பிரவேசித்தல் எளிது. இப்பேர்ப்பட்ட முதற் றரமான படைகளே யன்றி, ஐரோப்பியர் வெகு தொலையினின்று போர் நடத்த வேண்டியதா யிருக்க, ஜப்பானியர் சமீபத்தி லிருப்பதும் அவர்களுக் கமைந்திருக்கும் பெரும் நன்மையாகும்.

இப்படிப் போர் நடத்துவ தல்லாமல், கேவலம் சாமோபாயத்தை யனுஷ்டித்து நிருவாகம் செய்ய வேண்டியதா யிருக்கும் பட்சத்திலும், கீழ்த்திசையில் ஜப்பானியருக் குள்ள வசதி ஐரோப்பியருக்



கில்லை. எப்படி யெனில், தற்காலம் முக்கியமாய்ச் சீனதேச சம்பந்தமாகவே ஐரோப்பிய ராஜாங்கத்தார் தங்கள் தங்கள் உரிமைகளைச் சொல்லி, லாபம் பெற முயற்சி செய்கிறார்கள். சீன ராஜாங்க அதிகாரிகள் ஐரோப்பிய ரிடத்தில் முழு நம்பிக்கையும் வைத்துக் கபடமின்றிச் சமாதானம் நடத்த மன மொப்பாதவர்களா யிருக்கிறார்கள். ஜப்பானியரிடத்தில்மட்டும் சீனருக்கு நம்பிக்கை யுண்டு. ஏனெனில், இருதேசத்தாரும் ஒருவரை யொருவர் பல நூற்றாண்டுகளாக அறிவார்கள். ஒருவரது அந்தரங்க மனோபாவங்கள் மற்றோருக்கு நன்றாய்த் தெரியும். அல்லது சீன சம்பந்தமாய்த் தரையிலோ கடலிலோ போர்நடந்த நேரிட்டாலும், ஜப்பானியருக்கு நெளிவு தெரியும். வியாபார விஷயமாய் என்னென்ன சரக்குகள் சீனருக் குபயோகப்படும், சீனச்சரக்குகள் என்னென்ன வெளி நாட்டாருக்கு ஏற்றவைகள், என்பவும் ஜப்பானியருக்குத் தெரிந்ததுபோல ஐரோப்பியருக்குத் தெரிய நியாய மில்லை.

இந்தக் கீழ்த்தேசத்தில் ஜப்பானியர் இலகுவாக வியாபாரம் செய்யக்கூடியதுபோல ஐரோப்பியர் செய்யமுடியாது. ஜப்பானியர் சொற்பச் செலவு செய்ய வேண்டிய சாமான்களை விற்றல்முடியும். என்னென்ன சரக்குகள் இந்நாடுகளில் விலையாகக் கூடியன வென்றும் அவர்களுக்குத் தெரியும். மேலும்

சாமான்களைக் கப்பலேற்றி அன்னிய நாட்டிற்குக் கொண்டுபோய் விற்பதில், ஜப்பான் சமீபத்திலிருப்பதால், கப்பற்கூலி லாபமாயிருக்கும். ஐரோப்பியச் சரக்குகள் கப்பலில் வருவதில், தூரமதிகமாகையால் கூலி யதிகம் பிடிக்கும். ஆகவே, ஜப்பானியர் தங்கள் சரக்குகளைச் சீனா, இந்தியா, ஆஸ்ட்ரேலியா, கொரியா, பிலிப்பைன் தீவுகள் ஆகிய பெருந் தேசங்களில் நயமாக விற்கக்கூடியபடியால், அவர்களது வியாபாரமே செழிக்கும். தற்காலத்து யந்திரங்களைச் செய்து பிரயோகிப்பதில், ஜப்பானியர் இப்போது மேனாட்டாருக்குநிகரல்லராயினும், மகாபுத்திமான்களான ஜனங்களானதால், அப்பேர்ப்பட்ட வித்தையையும் வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளக் கூடியவர்கள். இந்தியர்களாகிய நம்மைப்போலவே 50 வருஷத்துக்கு முன்னால் கையினாலே செய்துவந்த சரக்குகளை ஜப்பானியர் இப்போது ஐரோப்பியரைப்போல யந்திரங்களைக் கொண்டு செய்துவருகிறார்கள். இந்தியாவிலேயே அவர்கள் செய்த சரக்குகள் விலையாகி வருகின்றன. மேலே குறித்த நாடுகளில் ஐரோப்பிய வர்த்தகர்கள் ஜப்பானியருடன் போட்டிசெய்தல் எப்போதும் முடியாது.

இப்படி உலகத்துக் கீழ்ப்பாகத்தில் ஒரு பலமான ராஜ்யமானது மதிப்பேறின உரிமைகளை வளர்த்துக் காத்து வருவதால், மேல் நாட்டார் சீனாவின் பேரில் கண்வைத்து அதைப் பாகம் போட்டுக் கொள்ள விருப்பமுள்ளவர்களாயிருந்தாலுங்கூட,



அவர்கள் மனம் போனபடி சைனியபலத்தால் செய்ய முடியாது. ஏனெனில், அன்னியரை முந்தவிடுதல் ஜப்பானுக்கு நஷ்டத்தை யுண்டுபண்ணும். ஜப்பானியரெதிர்த்துத் தடுக்க முயலுவார்கள். சீனா ஏகாதிபத்தியமானது நன்றாயாளப்பட்டு, அமரிக்கையும் சாவதானமும் குடிகொண்டு, ஜனங்கள் நல்ல நிலையிலிருக்கவேண்டுமென்பதே ஜப்பானின் கோரிக்கை. சீனா க்ஷேமமாயிருந்தால், ஜப்பான் வியாபாரம் செய்து லாபம் பெறலாம். அப்படியே எல்லாச் சாதியாருக்கும் உள்ளது. முக்கியமாய்ப் பிரிடிஷ் நாடும் அமெரிக்காவும் இதே யெண்ணத்தைக் கொண்டிருக்கின்றன. இருக்கின்றபடியாலேதான், ஜப்பானானது இவ்விரண்டு தேசங்களுடன் நேசப்பான்மை பாராட்டி அவைகளுடன் ஒத்துநடக்க ஆசைகொண்டிருந்தது. பிரிட்டன் மட்டும் போன வருஷம் ஆரம்பத்தில் செய்த உடன்படிக்கையால், ஜப்பானுக்கு இயற்கையாக ஏற்பட்டிருக்கும் விசேஷ சாதகங்களை யங்கீகரிக்கலாயிற்று. அப்படியே அமெரிக்காவைச் சேர்ந்த ஐக்கிய மாகாணங்களும் செய்யவேண்டும். எல்லாத் தேசத்தாருக்கும் உலகத்தையே தங்கள் வசப்படுத்திச் சர்வ லாபங்களையு மனுபவிக்க வேண்டுமென்ற அவா உண்டாகக் கூடியதாயினும், அவரவருக்கு அமைந்திருக்கும் சாதகங்களும் வசதிகளும் வேறுபடுவதால், ஒரு தேசத்தார் ஒரு பாகத்தில் மேம்பாடு ஸ்தாபித்தால், மற்றொரு தேசத்தார் மற்றொரு

பாகத்தில் நுங்கிச் செழிப்பதிலு மற்றோர் விரோதம் செய்யக்கூடாது. ஆனாலால் அமெரிக்காவும், அது ஜப்பானுக்கு இதுவரையில் எவ்வளவோ விஷயங்களில் நேசப்பான்மைகாட்டி யுதவினதுபோல, இந்த விஷயத்திலும் அத்துடன் ஒத்து அதனுடைய இயற்கை ஸ்தானத்தைப் பலப்படுத்தி, சீனாவுக்கும் அடுத்த மற்றத் தேசங்களுக்கும் க்ஷேமம் உண்டாவதில், பிரிட்டனைப்போல, சகாயமாயிருக்கு மென்று நம்பத்தக்கது.

முற்றிற்று.